K.R. No 288 A

Issued 8-7-1965

21 JUL 1965

# MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

# OFFICIAL REPORT

TUESDAY, 23RD MARCH 1965

VOLUME XXVIII—No. 6

CONTENTS


| | PAGES |
|---|---|
| I Questions and Answers .. .. .. .. .. .. .. | 413–427 |
| II Privilege Matter—Publication in 'Nava Sakthi' .. .. .. .. .. | 428 |
| III Announcement—Nomination to Business Advisory Committee .. .. .. | 428 |
| IV Voting on Demands for Grants for 1965-66—*cont.* | |
| (1) Demand No. XVI—Agriculture .. .. .. .. | 429–447 |
| (2) Demand No. XVIII—Animal Husbandry .. .. .. | 429–447 |
| (3) Demand No. XXXIX—Capital Outlay on Agriculture .. | 429–447 |
| (4) Demand No. XLVII—Capital Outlay on Schemes of Government Trading .. .. .. .. .. .. .. | 429–447 |
| (5) Demand No. I—Land Revenue Department .. .. .. | 447–493 |
| (6) Demand No. IV—Stamps Administration .. .. .. | 447–493 |
| (7) Demand No. XXXI—Famine Relief .. .. .. .. | 447–493 |
| (8) Demand No. XXXVII—Compensation to Zamindars .. | 447–493 |
| V Papers laid on the table of the House .. .. .. .. | 494 |


© GOVERNMENT OF MADRAS 1965

*Legislative Assembly Department Madras.*

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Tuesday, 23rd March 1965.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

V 211, 31 N65
N65 . 2 . . 6

## STARRED QUESTIONS.

**சட்டங்களை மொழி பெயர்த்தல்**

* 303. **கேள்வி.—திரு. மு. கருணாநிதி :** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) சட்டங்களைத் தமிழில் மொழி பெயர்ப்பதற்காக தனியாக ஏதேனும் குழு ஒன்றை அரசாங்கம் அமைத்துள்ளதா ?

(இ) ஆம் என்றால், அந்தக்குழு இதுவரை எந்தெந்த சட்டங்களைத் தமிழில் மொழி பெயர்த்திருக்கிறது ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** (அ) ஆம்.

(இ) சட்டங்களைத் தமிழில் மொழி பெயர்ப்பதற்கான சட்ட வார்த்தைகளில் "A" யிலிருந்து "N" வரை தொகுக்கப்பட்டுள்ள முதல் தொகுதி முடிவடையும் தருவாயிலிருக்கிறது. சட்டச் சொல்லகராதியின் வேலை முடிந்தவுடன் சட்டங்களைத் தமிழில் மொழி பெயர்ப்பதற்கான வேலை துவங்கப்படும்.

64902

(*a*) Yes.

(*b*) The first consolidated volume of the Glossary of Legal terms in Tamil from A to N is likely to be completed shortly. The work of translating the Acts has to be taken up only after the completion of the Glossary

**திரு. செ. மாதவன் :** இந்தச் சட்ட சொல் அகராதி [illegible]பிலே மத்திய சர்க்கார் ஏதாவது பங்கு ஏற்றிருக்கிறதா ? மத்திய சர்க்கார் குழு ஒன்று நம்முடைய சர்க்காரிடத்திலே ஆலோசனை கேட்க வந்ததா ? அப்படியிருந்தால் அதன் விவரம் என்ன ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** மத்திய சர்க்காரும் இதிலே ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுடன் இந்த அரசாங்கம் விவாதிப்பதுண்டு. மேலும் விவரம் வேண்டுமென்றால் தனிக் கேள்வி வேண்டும்.

**புலவர் கா. கோவிந்தன் :** தனிப்பட்டவர்கள் யாரேனும் சட்டங்களை மொழி பெயர்த்திருக்கிறார்களா ? அப்படி மொழி பெயர்க்கப்பட்ட நூல்கள் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா ? அந்த நூல்கள் உண்மையிலேயே நல்ல நூல்கள் என்று அரசாங்கத்திற்குத் தோன்றுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நூல்கள் மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றன. அரசாங்கத்தின் கவனத்திற்கும் கொண்டுவரப்பட்டிருக்கின்றன.

[23rd March 1965

**திரு. முனு ஆதி:** சென்னை உயர் நீதி மன்றத்திலே தமிழிலே வழக்காடுவதற்கும், தமிழிலே வழக்குகளை நடத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க அரசாங்கத்திற்கு எண்ணம் உண்டா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இப்பொழுது அந்தப் பிரச்னை எழவில்லை.

**திரு. ஜே. மாதா கவுடர்:** இந்தத் துறையில் [illegible] யார் யார் என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** [illegible] தனிக் கேள்வி வேண்டும்.

**திரு. செ. மாதவன்:** [illegible] பொதுவான சட்ட [illegible] இந்தக் குழுவினர் [illegible] சட்ட [illegible] இந்த [illegible] ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அப்படி ஒன்றும் இல்லை.

*Evening Colleges*

*304 Q.—SRI M. KALYANASUNDARAM: } Will the Hon.
SRI V. SANKARAN: }
the Chief Minister be pleased to state—

(a) whether there is any proposal for the opening of Evening Colleges; and

(b) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) Yes.

(b) It is proposed to start three Evening Colleges in 1965-66 in the following Government Colleges:—

(i) Government Arts College, Madras—Evening College for Men.

(ii) Queen Mary's College, Madras—Evening College for Women.

(iii) Government Arts College, Coimbatore—Evening College for Men.

**திரு. வை. சங்கரன்:** வேலையிலிருந்துகொண்டே படித்து பட்டம் வாங்கவேண்டுமென்று விரும்புகிற மக்கள் அனைவருக்கும் சென்னையில் மட்டும் அல்லாமல் ராஜ்யத்திலுள்ள எல்லா மாவட்டங்களிலும் மாலைநேரக் கல்லூரி ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இந்த ஆண்டிலே மூன்று மாலை நேரக் கல்லூரி ஆரம்பிக்க அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. இந்த அனுபவத்தைப் பார்த்து மாவட்டங்களில் விஸ்தரிப்பதைப்பற்றி யோசிக்கலாம்.

**திரு. செ. மாதவன்:** இந்த மாலை நேரக் கல்லூரிகளுக்கு எந்த ஆசிரியர்களைப் பயன் படுத்துவார்கள். இருக்கின்ற ஆசிரியர்களையே பயன் படுத்துவார்களா அல்லது புதிதாக ஆசிரியர்களை அமர்த்துவார்களா?



23rd March 1965]

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இதைப்பற்றி இன்னும் முடிவு செய்யவில்லை.

**திரு. வை. சங்கரன்:** ஏற்கெனவே உள்ள கல்லூரிகளிலேயே மாலை நேரக் கல்லூரியை நடத்துவார்களா அல்லது தனியாக ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** ஏற்கெனவே உள்ள கல்லூரிகளிலேயே தனியாக ஏற்பாடு செய்யப்படும். மாலை நேரக் கல்லூரி படிப்பு ஒரு ஆண்டு அதிகமாக இருக்கவேண்டும் என்பது. புகுமுகவகுப்பு என்றால் இரண்டு ஆண்டுகள். டிகிரி வகுப்பு என்றால் மூன்று ஆண்டிற்கு பதிலாக நான்கு ஆண்டுகள் படிக்கவேண்டும். ஒரு ஆண்டு அதிகமாக இருக்கவேண்டுமென்று பல்கலைக் கழகம் முடிவு செய்து அந்த வகையிலே அவை நடத்தப்படும்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** சென்னைக்கு அடுத்தபடியாக உள்ள நகரம் மதுரை. ஆகையால் அங்கே விசேஷமாக இந்த ஆண்டிலேயே ஒரு மாலைநேரக் கல்லூரியை ஆரம்பிப்பதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அப்படி உத்தேசம் ஒன்றும் இல்லை.

**திரு. ஜே. மாதா கவுடர்:** மாலை நேரக் கல்லூரிகளிலே எல்லாப் பாடங்களும் சொல்லிக்கொடுக்கப்படுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** மாலை நேரக் கல்லூரியில் படிக்கின்ற மாணவ மாணவிகள் என்ன பாடங்களைப் படிக்கப்போகிறார்கள் என்பதைப் பொறுத்துத்தான் இருக்கிறது.

**திரு. வை. சங்கரன்:** இப்பொழுது கனம் முதலமைச்சர் அவர்கள் அளித்த பதிலில் இப்பொழுதுள்ள கல்லூரிகளில் சேர்த்துத்தான் மாலை நேரக் கல்லூரி ஆரம்பிக்கப்படும், தனியாக ஒன்றும் அமைக்காது என்று தெரிவித்தார்கள். இட வசதி [illegible] வசதி போதுமான அளவு இருந்தால் தனியாக மாலை நேரக் கல்லூரி [illegible] ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** மாலை நேரக் கல்லூரிக்கென்றே தனியாக கட்டடம் கட்டவேண்டிய அவசியம் இல்லை. இருக்கிற கட்டடத்திலேயே அமைப்பது என்பது அரசாங்கத்தின் யோசனை.

**திரு. ம. கமலநாதன்:** வேலையில் இருந்துகொண்டே மாலை நேரத்தில் கல்லூரியில் படிக்கும் மாணவர்கள் அவர்களுடைய படிப்பு முடியும்வரை வேறு இடங்களுக்கு மாற்றப்படமாட்டார்கள் என்று அரசாங்கம் உத்திரவாதம் அளிக்குமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இது வேறு விஷயம். இதுபற்றி அரசாங்கம் ஒன்றும் சொல்வதற்கில்லை.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்:** மாலை நேரக் கல்லூரியிலே சேருகிறவர்களுக்கு வயதிலே சலுகை அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** வயது வரம்பு இருக்கிறது.

**திரு. வை. சங்கரன்:** மாலை நேரக் கல்லூரியில் ஆசிரியர்களாக அமர்த்தப்படுகிறவர்கள் ஏற்கெனவே உள்ளவர்களை அமர்த்துவார்களா அல்லது தனியாக இதற்கென்று ஆசிரியர்கள் அமர்த்தப்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** தனியாக அமர்த்தப்படுவதென்பது சுலபம் அல்ல. ஏற்கெனவே பணியாற்றுகின்ற ஆசிரியர்கள் இதற்கும் அமர்த்தப்படுவார்கள்.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** மாலே நேரக் கல்லூரிகளில் போஸ்ட் கிராஜுவேட் படிப்பிற்கு ஏதாவது வகை செய்யப்பட்டிருக்கிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இன்னும் அதை அரசாங்கம் எடுத்துக்கொள்ளவில்லை.

*Accommodation to school teachers*

*305 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether there is any proposal to provide residential accommodation to all school teachers in the State; and

(b) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) & (b) There is a scheme in the Third Five-Year Plan for the construction of 750 quarters for Women Teachers in rural areas.

(அ) & (இ) கிராமப் பகுதிகளில் உள்ள ஆசிரியைகளுக்கு 750 புதுக் குடியிருப்புக்கள் கட்டித் தரும் ஒரு திட்டம் மூன்றும் ஐந்தாண்டுத் திட்டத்தில் உள்ளது.

**திரு. வை. சங்கரன் :** இந்த 750 வீடுகளோடு நின்றுவிடுமா அல்லது கொள்கை அடிப்படையிலே எல்லா ஆசிரியர்களுக்கும் படிப்படியாக கட்டட வசதி அளிக்கவேண்டுமென்ற முறையிலே வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கொள்கை அடிப்படையிலே ஆசிரியர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்கவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம். இதிலே பெண் ஆசிரியர்களுக்கு முதன்மையாக கவனம் செலுத்தப்பட்டு கட்டடத்தை கட்டிக் கொடுப்பது என்பது அரசாங்கத்தின் யோசனை. இதிலே முன்னோடி திட்டமாக மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்திலே கிராமத்திலுள்ள பெண் ஆசிரியர்களுக்கு 750 வீடுகள் கட்டவேண்டும் என்பதுதான் [illegible] திட்டம்.

**புலவர் கா. கோவிந்தன் :** [illegible] தனியார் பள்ளி நிர்வாகிகள் ஆசிரியர்களுக்கு குடியிருப்பு வசதிகள் கொடுத்துவந்தார்கள். ஆனால் அரசாங்கம் [illegible] கொடுக்கும் நிலை வந்த பிறகு அவர்களுக்கு குடியிருப்பு வசதிகள் கொடுக்கப்படவில்லை என்பது உண்மையா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** என்னிடம் தகவல் இல்லை. தனிக் கேள்வி வேண்டும்.

**திரு. ம. கமலநாதன் :** பெண் ஆசிரியர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு ஒரு பள்ளிக்கூடம் கட்டப்பட்டு வருகிறது. பெண் ஆசிரியர்கள் சாதாரணமாக தனியாக இருப்பதில்லை. திருமணமான ஆசிரியைகள் அந்த வீட்டில் தம்பதிகளாக குடியிருப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பெண் ஆசிரியர்களுக்கென்றுதான் வீடுகள் கட்டப்படுகின்றன. இதில் அவர்களுடைய சுற்றத்தாரோ உறவினரோ அவர்களுடன் குடியிருக்கலாம்.

**திரு. செ. மாதவன் :** பஞ்சாயத்து யூனியனிலுள்ள பள்ளி ஆசிரியர்களுக்கு பஞ்சாயத்து யூனியன் மூலமாக வீடுகள் கட்டி தரும் திட்டத்தை அரசாங்கம் பரிசீலிக்குமா ?





**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அதைப்பற்றியும் யோசிக்கப்பட்டு வருகிறது. இதில் பஞ்சாயத்து யூனியன் அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும். குறிப்பிட்ட பஞ்சாயத்து யூனியன் திட்டம் அளித்து அரசாங்கத்தின் உதவியை நாடினால் அது கவனிக்கப்படும்.

**திரு. து. ப. அழகமுத்து :** மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தில் 750 வீடுகள் கட்டுவதில் இப்போது எவ்வளவு வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

**திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை :** ஆசிரியர்களுக்கு ரூபாய் 5,000 செலவில் கட்டுவதற்கு போட்டிருக்கும் டைப் டிசைனை கொஞ்சம் மாறுதல் செய்தால் நலம். ஆசிரியர்கள் தனியாக குடியிருப்பதற்கு கஷ்டமாக இருக்கிறது. அதையொட்டி இரண்டு ஆசிரியர்கள் குடியிருப்பதற்கு டைப் டிசைனை மாற்றுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இப்பொழுது இரண்டு வீடுகள் சேர்ந்து ட்வின் முறையாக கட்டப்பட்டு வருகிறது.

**திரு. வை. சங்கரன் :** பொதுவாக இதுபோன்ற அமெனிடீஸ், பெனிபிட்ஸ் கொடுக்கும் போது, நம் ராஜ்யத்தில், கிராமங்களில் மொத்த பெண் ஆசிரியர்கள் எண்ணிக்கையை கணக்கிட்டு அந்த அளவுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கவேண்டும். அப்படிச் செய்தால் நல்லது. அப்படி கொள்கை வகுக்காமல், வெட்டு மொத்தமாக 750, 1,000 வீடுகள் என்று கட்டப்படுகிறதா ? எத்தனை தேவையோ, அவ்வளவு வீடுகள் கட்டிக்கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** 750 வீடுகள் என்பது சிறிய திட்டமாகும். எல்லா ஆசிரியர்களுக்கும் வீடு கட்டவேண்டும். நான்காவது ஐந்தாண்டு திட்டத்தில் எந்த அளவு இதை பூர்த்தி செய்யலாம் என்பது இப்போது பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

**திரு. க. தா. பெருமாள் ராஜு :** தாளவாடி போன்ற மலை பிராந்தியங்களில் வீடு கட்ட முதலிடம் கொடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** தாளவாடி போன்ற மலை பிராந்தியங்களில் வீடு கட்டுவதில் முதன்மை கவனம் செலுத்தப்பட வேண்டியதுதான்.

**திரு. ஜே. மாதா கவுடர் :** இந்தத் திட்டம் தனியார் பள்ளிக்கூடங்களில் வேலை செய்கின்ற ஆசிரியைகளுக்கும் பொருந்துமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இது பஞ்சாயத்து யூனியன் பள்ளிக்கூடங்களுக்குத்தான் பொருந்தும்.

**திரு. எஸ். நஞ்சுண்ட ராவ் :** கிராமங்களில் வீடு வசதி இல்லாமல் குடி இருப்பதற்கு வசதி இல்லை. அதனால் பள்ளிகளில் வேலை பாதிக்கப்படுகிறது. ஆகவே கட்டட வேலையை இந்த நிதி ஆண்டுக்குள்ளாகவே அரசாங்கம் செய்யுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இந்த விஷயத்தை நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் தயாரிக்கப்படும் நிலையில் கவனிக்கப்பட்டு வருகிறது.

**திரு. கே.ஆர். ஆர்.எம். கரியமாணிக்கம் அம்பலம் :** கிராமங்களில் குடியிருப்பதற்கு வீடுகள் கிடைப்பது இல்லை. அதனால் ஆசிரியர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே தனியாக இதற்கு பணம் ஒதுக்கி எல்லா கிராமங்களிலும் வாத்தியார்களுக்கு வீடு இருக்கக் கூடிய நிலையில் கட்டடங்கள் கட்ட சென்னை அரசாங்கம் உத்தேசிக்குமா ?

[23rd March 1965

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அந்த வகையில்தான் நான் கவனம் செலுத்திகொண்டு வருகிறேன் என்று முன்பு கூறினேன். நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் தயாரிக்கப்படும் நிலையில் இந்த விஷயம் கவனிக்கப்பட்டு வருகிறது.

**திரு. எஸ். முருகையன் :** இந்த 750 வீடுகளும் மாவட்டவாரியாக கட்டப்பட்டு இருக்கிறதா அல்லது சர்க்காருக்கு உத்தேசமான இடங்களில் கட்டப்பட்டு இருக்கின்றனவா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** 750 வீடுகள் வட்டார ரீதியில், ஒரு வட்டாரத்திற்கு 2 வீடுகள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்களுக்கு குறிப்பிட்ட இடங்களில் வீடு கட்ட வேண்டுமென்ற கோரிக்கை அவ்வப்போது கவனிக்கப்பட்டு வருகிறது என்று சொல்லப்படுகிறது. பல்வேறு துறைகளிலிருக்கும் உத்தியோகஸ்தர்களுக்கும் வீடுகள் தேவைப்படுகின்றன. குடியிருக்க வீடு கட்டுவதற்கு இந்த அரசு கணக்கிட்ட தொகை முழுவதும் பயன்படுத்தப்பட்டுவிட்டதா ? மீதி தொகை பெறவேண்டி இருக்கிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பொதுவாக வீடுகள் கட்டும் திட்டத்திற்கு பணம் ஒதுக்குகிறார்கள். பல்வேறு துறையினருக்கும் வீடுகள் வேண்டி இருக்கின்றன. மொத்தத்தில் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மத்திய அரசாங்கம் எவ்வளவு ஒதுக்கி இருக்க வேண்டுமென்றதோ அதற்கு மேல் இந்த அரசாங்கம் செலவு செய்திருக்கிறது. வீடுகள் கட்டுவது முக்கியமானது. எதற்கு முதலாவது, எதற்கு இரண்டாவது, எதற்கு மூன்றாவது ஸ்தானம் என்பது கவனிக்கப்பட வேண்டும். சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கும் வீடுகள் கட்டிக்கொடுக்கவேண்டும். முதன்மையாக ஆசிரியர்கள், டாக்டர்கள், நர்ஸ்களுக்கு வீடு கட்டிக்கொடுக்க வேண்டும். ஆசிரியைகளுக்கு முதலில் கட்டிக்கொடுக்க வேண்டியிருக்கிறது. இந்த வகையில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** தலைவர் அவர்களே, நம் கனம் முதல் அமைச்சர் பதில் சொல்லும்போது, பெண் ஆசிரியைகளுக்கு தனி சலுகை கொடுக்கப்பட்டு வருகிறது என்று சொன்னார்கள். அதை நாங்கள் வரவேற்கிறோம். கிராமப்புறங்களில் கல்யாணம் ஆகாத பெண் ஆசிரியர்கள் வீட்டு வசதி இல்லாமல் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஒரு பிளாக்கில் 1 அல்லது 2 வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவதற்குள்ளேயே இந்தப் பெண் ஆசிரியைகளுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் பிரச்னை முடிவு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பெண் ஆசிரியைகளுக்கு, அதிலும் மணம் ஆகாதவர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்கத்தான், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதிக்குள் வட்டாரத்திற்கு இரண்டு வீடுகள் என்று 750 வீடுகள் கட்ட திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எவ்வளவு அதிகமாக நிதி ஒதுக்கலாம், ஒதுக்கி வீடு கட்டிக்கொடுக்கலாம் என்பதை இப்போது மத்திய அரசாங்கமும், மாநில அரசாங்கமும் பரிசீலனை செய்து வருகிறது.

### நாகப்பட்டிணத்திலிருந்து மதுரைக்கு அரசாங்க பஸ் விடுதல்

*306 கேள்வி.—திரு. பி. முருகையன் : கனம் கைத்தொழில் மந்திரி தயவு செய்து கீழ்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) திருச்சி தெற்கு மாவட்ட வளர்ச்சி கமிட்டி, நாகப்பட்டிணத்திலிருந்து மதுரைக்கு அரசாங்க பஸ் விடக்கோரிய தீர்மானங்கள் அரசாங்கத்துக்கு வந்தனவா ?



23rd March 1965]

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** (அ) 1964 ஜூன் மாதத்தில் திருச்சி தெற்கு மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் அரசாங்க பஸ் போக்குவரத்துத் துறை நாகப்பட்டிணத்திலிருந்து மதுரைக்குப் புதிய பஸ் வழி ஒன்றைத் தொடங்கும்படி அங்கத்தினர் கருத்து தெரிவித்தார். அக் கருத்தினை திருச்சிராப்பள்ளி கலெக்டர் தமிழ்நாடு அரசாங்க பஸ் போக்குவரத்துத் துறை நெறியாளருக்குத் தெரிவித்தார்.

(இ) அந்த வழி சுற்றி வளைத்து செல்வதாலும், நாகப்பட்டிணத்திலிருந்து நாகர்கோயிலுக்கு மதுரை வழியாக புதிய பஸ் வழி ஒன்றைத் தொடங்கத் திட்டமிருப்பதாலும், அந்தக் கருத்தினை ஏற்க இயலாதென்று நெறியாளர் கலெக்டருக்கு அறிவித்தார். 1964 அக்டோபரிலிருந்து நாகப்பட்டிணம்-நாகர்கோவில் (மதுரை வழி) புதிய பஸ் வழி இரண்டு பஸ்களுடன் இப்போது திறக்கப்பட்டுவிட்டது.

**திரு. ஆ. கு. சுப்பையா :** நடப்பு ஆண்டில் எத்தனை பஸ்கள் நாகப்பட்டிணத்திலிருந்து விடுவதற்கு அரசாங்கம் உத்தேசித்து இருக்கிறது.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இதை எல்லாம் "டிமாண்டின்" போது எழுதிக் கொடுத்து இருக்கிறேன். இப்போது அது ஞாபகம் இல்லை. கனம் உறுப்பினர் என் அறிக்கையைப் பார்த்தால் எல்லா விவரங்களும் இருக்கும்.

**திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை :** இப்போது பஸ் சர்விஸ்கள் மக்களுக்கு உபயோகமாக இருக்கிறது. ஆனால் 25 மைலுக்கு குறைந்து நிறுத்தக்கூடாது என்று சொல்லுகிறார்கள். ஒரே ஸ்டாப்பிங் நாகப்பட்டிணத்திலிருந்து திருவாரூர்வரை. நாலு ரோடுகள் சந்திக்கும் கொரடாச்சேரியில் ஸ்டாப்பிங் வைக்க சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இருபத்தைந்து மைலுக்கு ஒரு இடத்தில்தான் நிறுத்த முடியும். அப்படி இல்லை என்றால் அது எக்ஸ்பிரஸ் பஸ் இல்லை. சாதாரண பஸ்ஸாக போய் விடும். ஏதாவது ஒரு இடத்தில் அவசியமாக நிறுத்த வேண்டுமென்று கனம் உறுப்பினர் எழுதி அனுப்பினால், நான் அதைப் போக்குவரத்து இலாகா டைரக்டர் அவர்களை பரிசீலனை செய்யச் சொல்கிறேன்.

### *Two buses from Krishnagiri to Madras*

*307 Q.—SRI C. KOTHANDARAMA BAGAVATHAR : Will the Hon. the Minister for Industries be pleased to state with reference to the answer given to question No. 65 on 22nd January 1965, whether there is any proposal to put two buses between Krishnagiri and Madras (via) Ambur, Vellore and Arcot?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** ஆம்.

**திரு. வை. சங்கரன் :** இதை எப்போது ஆரம்பிப்பதாக உத்தேசம் ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இதற்கு நோடிபிகேஷன் எல்லாம் போட்டாய் விட்டது. எந்தத் தேதி என்று குறிப்பிடவில்லை. ஆனால் இதற்கு வேண்டிய பூர்வாங்க நடவடிக்கை முடிந்துவிட்டது.

**திரு. எஸ். முருகையன் :** 120 மைலுக்கு அப்பால் உள்ள இடங்களுக்கு எல்லாம் சர்க்காரே நடத்தும் என்று சொல்லப்பட்டது. இப்படி சொல்லி நான்கு மாதங்களாகியும் பஸ் செல்லாமல் இருக்கிறது. உடனே இந்த ரூட்களை எடுத்து பஸ் விட சர்க்கார் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

[23rd March 1965

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** எனக்குக் கூட உடனே விடுவதற்கு இஷ்டம்தான். ஆனால் சர்க்கார் கூட சட்டத்திற்கு உட்பட்டு, விதிகளின் படி நடக்க வேண்டி இருக்கின்றனை. ஒரு ரூட் "ஓபன்" செய்யவேண்டுமென்று சொன்னால் எப்படி தனியாருக்கு விதிகள் இருக்கிறதோ, அதே போல் சர்க்காருக்கும் விதிகள் இருக்கின்றன. நோடிபிகேஷன் செய்யவேண்டும். அப்ஜெக்ஷன்ஸ கேட்க வேண்டும். பப்ளிகேஷன் செய்ய வேண்டும். அதற்குப் பிறகு தான் "ஓபன்" செய்ய முடியும். இந்த நெருக்கடி ஹைகோர்ட்டு தீர்ப்பினால் ஏற்பட்ட நெருக்கடி. எவ்வளவு துரிதமாக முடியுமோ அதைச் செய்வதற்கு முயற்சி செய்து வருகிறோம். இருந்தாலும் சட்டத்திற்கு, விதிகளுக்கு உட்பட்டு தான் நடக்கவேண்டுமென்று தெரிவிக்க விரும்புகிறேன்.

**புலவர் கா. கோவிந்தன் :** சென்னைக்கும், கிருஷ்ணகிரிக்கும் இடையே காஞ்சீபுரம், திருவத்திபுரம், ஆரணி, போளூர், செங்கம், ஊத்தங்கரை, மத்தூர் ஆகிய இடங்கள் வழியே பஸ் விடவேண்டுமென்று அரசாங்கத்திற்கு தகவல் வந்திருக்கிறது. ஆறு மாதமாகியும் பஸ் விடவில்லை. உடனடியாக விடுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** இந்த பிரபோஸல் 1964 அக்டோபர் 6-ம் தேதியில் வேண்டிய உத்தரவு 'சாங்ஷன்' போட்டு விட்டோம். பப்ளிகேஷன் செய்யவேண்டும். அப்ஜெக்ஷன்ஸ கேட்க வேண்டும். இந்தக் காரணத்தால், இதை இன்றும் எடுக்கவில்லை. சீக்கிரமே துவக்கப் படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ம. கமலநாதன் :** அரசாங்க பஸ் நேராக போவதில்லை. சுற்றி வளைத்து போகிறது. குறிப்பாக காஞ்சீபுரம், திருவத்திபுரம் வழியாக நீண்ட தூர பிரயாணம். நான் கிருஷ்ணகிரி போவதாயிருந்தால் இந்த பஸ்ஸில் போவதில்லை. காஞ்சீபுரத்திலிருந்து சென்னைக்கு வாணியம் பாடி, வேலூர், ராணிப்பேட்டை வழியாக சென்னைக்கு நேராக பஸ் விட முயற்சி எடுக்கப்படுமா ?

**கனம் திரு ஆர். வெங்கட்டராமன் :** சர்க்கார் பஸ் பல்வேறு கருத்துகளைக்கொண்டு போகவேண்டி இருக்கிறது. கனம் அங்கத்தினர் அவருக்கு நேராக கிருஷ்ணகிரியிலிருந்து சென்னைக்கு பஸ் விட்டால் அவருக்கு சௌகர்யம். ஆனால் காஞ்சீபுரத்தில் உள்ளவர்கள் எங்கள் ஊர் வழியாக பஸ் சென்றால்தான் சௌகர்யம் என்று சொல்கிறார்கள். திருப்பத்தூரில் இருப்பவர்கள் அவர்கள் ஊர் வழியாக சென்றால் சௌகர்யமாயிருக்கும் என்று சொல்கிறார்கள். பல பேர் சௌகர்யங்களை கருத்தில் கொண்டுதான் இந்த ரூட்களை எல்லாம் தீர்மானிக்க வேண்டி இருக்கிறது.

**திரு. வை. சங்கரன் :** கிருஷ்ணகிரியிலிருந்து செல்லும்போது அந்தந்த ரூட் பஸ்களை பெங்களூர் வரை நீடிக்க சர்க்காருக்கு உத்தேசம் இருக்கிறதா ? அப்படி இருந்தால் எப்போது ஆரம்பிக்கப்படும் ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** சென்னை ராஜ்யத்திற்கும், மைசூர் ராஜ்யத்திற்கும் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டு இருக்கிறது. அந்த ஒப்பந்தம் அமுல் ஆவதற்கு அவர்கள் சட்டத்தின்கீழ் பல நடவடிக்கைகள் எடுக்க வேண்டியிருக்கின்றன. அந்த ஒப்பந்தம் அமுலுக்கு வந்தால், பெங்களூரிலிருந்து, நாம் எந்தப் பகுதிக்கு வேண்டுமானாலும் நம் பஸ்ஸை விடலாமென்றும், கோயம்புத்தூரிலிருந்து அவர்கள் பகுதிக்கு, உரிமை அளித்து, அவர்கள் பஸ் விடலாம் என்றும் ஒரு ஒப்பந்தம் செய்யப்பட்டு இருக்கிறது.

### தொழிற் பயிற்சி நிலையங்கள் (தென்னாற்காடு)

* 308. **கேள்வி.—திரு. தா. சின்னசாமி :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1964–65-ல் தென்னாற்காடு மாவட்டத்தில் அரசினர் தொழிற் பயிற்சி நிலயங்களில் எத்தனை மாணவர்கள் பயிற்சி பெறுகிறார்கள்?



23rd March 1965]

(இ) அவர்களில் ஹரிஜன மாணவர்கள் எத்தனை பேர் ? இதர வகுப்பு மாணவர்கள் எத்தனை பேர் ?

(உ) அவர்களில் ஹரிஜனரல்லாத மாணவர்கள் எத்தனை பேர் ? சர்க்கார் உபகாரச் சம்பளம் பெறுகிறார்கள் ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** (அ) 518 மாணவர்கள்.

(இ) ஹரிஜன மாணவர்கள் 65 பேர். இதர வகுப்பு மாணவர்கள் 453 பேர்.

(உ) 136 பேர்.

**திரு. தா. சின்னசாமி :** எங்கள் கள்ளக்குறிச்சி வட்டாரத்தில் தொழில் பயிற்சிப் பள்ளியில் படிக்கும் மாணவர்கள் ஏழையாக இருப்பதால் எல்லா மாணவர்களுக்கும் இலவசமாகப் படிக்க வசதி செய்து கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அதற்கு நிதி வசதி போதாது. இப்போது மூன்றில் ஒரு பங்கு மாணவர்களுக்குத் தான் இந்த ஸ்டைஃபண்ட் ஸ்காலர்ஷிப் எல்லாம் கொடுப்பது என்று ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஹரிஜன மாணவர்களுக்கு 16 சத வீதம், பாக்வேர்ட் க்ளாஸுக்கு 25 சத வீதம் என்று ஸ்காலர்ஷிப்பில் தனியாக ஒதுக்கப் பட்டிருக்கிறது.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, இந்தப் பள்ளியில் படிக்கும் காஸ்ட் ஹிண்டுஸுக்கு உதவித் தொகை கொடுக்கவில்லை என்ற புகார் இருக்கிறதே, அது உண்மையா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** பொதுவாகக் கேட்டால் எப்படிச் சொல்ல முடியும். யாருக்குக் கொடுக்கவில்லை என்று குறிப்பிட்டு எழுதினால் அதைப் பற்றிப் பார்க்கலாம். சர்க்காருக்கு இருக்கும் தகவல் எல்லோருக்கும் கொடுக்கப்படுகிறது என்பது தான்.

**திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை :** சபாநாயகர் அவர்களே, தொழில் பயிற்சிப் பள்ளிகளில், கார், பஸ் ஓட்டுவதற்குப் பயிற்சி அளிப்பது உபயோகமாக இருக்குமாதலால், அம்மாதிரிப் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்வார்களா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கார், பஸ் ஓட்ட இப்போது பயிற்சி இல்லை. ஆனால் ஆட்டோமோபைல் வொர்க்ஷாப் ட்ரைனிங் என்ற பகுதியில் யந்திரங்களை பழுதுபார்ப்பது, ரிப்பேர் செய்வது என்ற முறையில் யந்திரங்கள் பற்றிய தொழில் நுட்பப் பயிற்சி அளிக்கப்படுகிறது. கார் ஓட்டுவது சம்பந்தமாக ஏதாவது வசதி செய்து கொடுக்கவேண்டும். ஏனென்றால் இப்போது டிரான்ஸ்போர்ட்டில் ஏராளமாக ஆக்ஸிடெண்டுகள் நடந்துகொண்டிருக்கின்றன என்று சட்ட சபையிலே சொல்லப்படுகிறது. அதை சர்க்கார் பரிசீலிக்கும் என்று சொல்லியிருக்கிறேன்.

**திரு. நா. இராசாங்கம் :** இண்டஸ்ட்ரியல் இன்ஸ்ட்டிட்யூட்டில் மோல்டிங் எடுத்து பாஸ் செய்கிறவர்களுக்கு 100-ல் 90 பகுதியினருக்கு வேலை கிடைக்கவில்லை என்ற புகார் இருக்கிறதே. அந்த வேலைக்கான இடங்கள் உண்மையிலேயே இல்லையா ? என்ன காரணத்தினால் அவர்களுக்கு வேலை கிடைக்க வழியில்லாமல் இருக்கின்றது என்று அறியலாமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** நான் திருநெல்வேலி ஜில்லாவிற்குச் சென்றிருந்தேன். மோல்டர்கள் கிடைக்கவில்லை, போதிய அளவுக்கு இல்லை என்று அங்கு இருக்கின்ற தொழில் அதிபர்கள் சொன்னார்கள். இன்றைக்கு ராஜ்யத்தில் மோல்டர்கள் கிடைப்பது போதிய அளவு இல்லை என்ற நிலைமை தான் இருக்கிறது. அந்த ஜில்லாவிலே மோல்டர்கள் வேலை இல்லாமல் இருந்தால், டைரக்டர் ஆஃப் எம்ப்ளாய்மெண்ட் அண்ட் டிரைனிங் அவர்களுக்கு எழுதினால் அவர்கள் பெயர்களை மாற்றி வேறு ஜில்லாவில் பதிவு செய்ய முடியும்.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, தென் ஆற்காடு மாவட்டத்தில் சின்ன சேலத்தில் நான் தொழிற் பயிற்சிப் பள்ளி இருக்கிறது என்று தெரிகிறது. அதை மேலும் விஸ்தரிக்க திண்டிவனம் தாலூகாவில் ஒரு தொழிற் பயிற்சிப் பள்ளியை ஆரம்பிக்க சர்க்கார் முன் வருமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** தென் ஆற்காடு ஜில்லாவில் உளுந்தூர்ப்பேட்டை, கடலூர் ஆகிய இரண்டு இடங்கள் இருக்கின்றன. இதை இன்னும் விஸ்தரிக்க இப்போது திட்டம் இல்லை.

*Development of fruit production*

309 Q. SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether there are any schemes for increasing the production of fruits in the State ; and

(b) if so, the details thereof?

**கனம் திரு. பூ. கக்கன் :** (அ) ஆம்.

(இ) பழ உற்பத்தியைப் பெருக்குவதற்கான ஒரு திட்டம், இம் மாநிலத்தில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், உழவர்களுக்கு நீண்ட காலம், குறுகிய காலக் கடன்கள் அளிக்க உத்தேசிக்கப்படுகிறது. விஞ்ஞான முறைகளிலும் நவீன முறைகளிலும் பழங்கள் பயிரிடுவதை பழம் பயிரிடுவோர்க்கு நேரில் விளக்கும்பொருட்டு மாதிரி பழத் தோட்டம் பழச் செடி வளர்ப்புப் பண்ணை ஒன்றை அமைக்கும் மற்றொரு திட்டமும் உள்ளது. இதன்கீழ் வேளாண்மைத் துறையின் நிர்வாகத்தில் பழச் செடிப் பண்ணைகள் சில உள்ளன ; இவைகளும் பழச் செடிகளை வழங்குகின்றன. வேளாண்மைத் துறைப் பண்ணைகள், பழச் செடி, கொடி இவை சம்பந்தமான தேவைகளை முழு அளவுக்கும் பூர்த்தி செய்ய முடியாது. எனவே, நற் பெயரும் தகுதியும் பெற்ற தனியார் பழச் செடிப் பண்ணைகள், கடன் பெறுவோருக்குப் பழவகைச் செடிகளை வழங்குவதற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளன. மேற்கொண்டும் பழச் செடிப் பண்ணைகளைத் துவக்குவதன் மூலம் அதிகரித்து வரும் தேவையைச் சரிக்கட்ட வேளாண்மைத் துறையினரின் பழச் செடிப் பண்ணைகளில் பழச் செடிகளை மேன்மேலும் வைத்துக் பயிரிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், வாழை உற்பத்தியைப் பெருக்கவும் உள்ளூர்ச் சந்தையில் வாழைப் பழத்தின் விலை அதிக அளவு ஏற்றமடைவதைத் தடுக்கவும் பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யுமளவிற்கு வாழைப்பழ உற்பத்தியைப் பெருக்கவும் ஒரு திட்டம் உள்ளது.

**திரு. வை. சங்கரன்:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ராஜ்யத்திற்கே சப்ளை செய்யும்படியான மலை வாழைப் பழங்கள் கோடைக்கானல் மலையிலும், பழனி மலையிலும் இருப்பதால், மற்ற பழங்களும் வளர அங்கு வாய்ப்பு இருப்பதால், கோடைக்கானல் மலைப் பகுதியிலே ஒரு பழ மரப் பண்ணையையும், பழ ஆராய்ச்சிப் பண்ணையையும் ஆரம்பிக்க சர்க்கார் உத்தேசிக்குமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** அது பற்றிப் பரிசீலனை செய்யப்படும்.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவைத் தலைவர் அவர்களே, தமிழக மாநிலத்தைப் பொறுத்த வரையிலும் அன்னியச் செலாவணி தேடித் தரும் அளவுக்கு எவ்வளவு பழம் அனுப்பப்படுகிறது என்று அறியலாமா? அன்னியச் செலாவணியை இன்னும் அதிகமாகப் பெறக் கூடிய அளவுக்கு பழ உற்பத்தியைப் பெருக்கும் திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றனவா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** ஏற்கெனவே இதைப் பற்றி இந்த மன்றத்தில் பதில் சொல்லியிருக்கிறேன். வாழைப் பழ உற்பத்தியை நல்ல முறையில் அபிவிருத்தி செய்ய, மோரெஷியஸ் வர்க்கத்தை



அதிகரிக்க 2,000 ஏக்கரில் வட ஆற்காடு மாவட்டத்தில் பயிரிட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. திருச்சியில் பூவன் வெரயட்டி பயிரிட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மதுரை, கோயம்புத்தூர் ஜில்லாவில் இந்தத் திட்டத்தை அமலாக்கி அங்கேயும் வாழைப் பழ உற்பத்தியை அதிகரிக்க ஏற்பாடு செய்ய அரசாங்கம் பாடுபட்டுக்கொண்டிருக்கிறது.

**திரு. கோ. சி. மணி :** நவீன முறை என்றால் என்ன ? விஞ்ஞான முறை என்றால் என்ன ? அமைச்சர் விளக்குவாரா ?

**கனம் திரு பூ. கக்கன் :** சுருக்கமாகச் சொல்லப் போனால் இரண்டும் ஒன்று தான் என்று சொல்லிக்கொள்கிறேன்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** இந்த பழ உற்பத்தியைப் பெருக்குவதில் தனிப்பட்டவர்களுக்கு, வாழை போடுகிறவர்களுக்கு எவ்வளவு கடன் கொடுக்கப்படுகிறது ? திராட்சை போடுகிறவர்களுக்கு எவ்வளவு கடன் கொடுக்கப்படுகிறது ? இதர, பழங்களான ஆரஞ்சு, சாத்துக்குடி போன்றவைகளுக்கு எவ்வளவு கடன் கொடுக்கப்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** திராட்சைக்கு ஒரு ஏக்கருக்கு 600 ரூபாய் கொடுக்கப்படுகிறது. இதர பழச் செடிகளுக்கெல்லாம் ஏக்கருக்கு 300 ரூபாய் கொடுக்கப்படுகிறது. தனிப்பட்ட முறையில் மேலும் கடன்வாங்குவதாக இருந்தால் 2,000 ரூபாய் வரை வாங்கலாம். திராட்சைக்குக் கூட 6,000 ரூபாய் வரை கடன் வழங்க ஏற்பாடு செய்திருக்கிறோம்.

**திரு. ம. கமலநாதன் :** உழவர்களுக்குக் கொடுக்கும் நீண்ட காலக் கடன்களில் அவர்கள் தங்களுடைய நிலத்திலே பழச் செடிகள் வைக்க வேண்டுமென்றால் அப்ரூவ்ட் நர்சரியிலிருந்து செடிகளை வாங்கி வைக்க வேண்டுமென்று அரசாங்க உத்திரவு இருக்கிறது. தோட்டத்தில் நல்ல செடியாக வைக்க வேண்டுமென்று தான் விவசாயி விரும்புவான். கட்டாயமாக அப்ரூவ்ட் நர்சரியிலிருந்து வாங்கவேண்டுமென்று இருப்பதால் மட்ட ரகச் செடிகளைக் கூட அவர்களுக்குக் கொடுத்து வாங்கிய கடனைக் கூட கொடுக்க முடியாத நிலைமை இருக்கிறது. அதை மாற்றி தன் இஷ்டப்படி செடிகளை வாங்கி நீண்ட காலக் கடனைக் கொடுக்கும் முறையில் முறையை மாற்றி அமைப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** ஒரு நர்சரியிலிருந்து பழச் செடிகளை வாங்கி வைக்கும்போது அவர்கள் பார்த்து நல்ல முறையில் இருந்தால் தான் சர்ட்டிபை செய்து கொடுக்கிறார்கள். அந்தப் பண்ணையில் வாங்க விவசாயிக்கு இஷ்டமில்லை என்றால் வேறு ஒரு பண்ணையில் வாங்கிக் கொள்ள இடம் இருக்கிறது. அல்லது அரசாங்கப் பண்ணையிலிருந்து வாங்கிக்கொள்ள இடம் இருக்கிறது.

**திரு. டி. கர்ச்சா கவுடர் :** நவீன முறையில் பழ உற்பத்தியை அதிகப்படுத்துவது நல்ல திட்டம் தான். இன்றைக்கு ஆரஞ்சு மரங்கள் பூச்சியினால் பாதிக்கப்பட்டு அழிந்து வருவதைத் தடுக்க அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** நீலகிரி மட்டுமல்ல, கோடைக்கானல் பகுதியிலேயும் ஆரஞ்சுப் பழத் தோட்டங்கள் சிறிது சேதம் அடைந்திருக்கின்றன. அந்த நோயைப் போக்க அரசாங்கம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. சர்க்கார் இதைப் பற்றி மேலும் ஒரு பரிசீலனை செய்யும் என்று சொல்லிக் கொள்ளுகிறேன்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** இந்தப் பழ உற்பத்தியைப் பெருக்குவதில் குறிப்பாக திராட்சைப் பழம் சத்துள்ள ஆகாரம் என்று கூறுகிறார்கள். பூச்சி விழுந்துவிட்டால் பாதி விலையில் அவர்களுக்கு மருந்து கொடுப்பதில்லை. அவர்களுக்குப் பாதி விலையில் கொடுக்க ஏதாவது வழி உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : அதற்குத் தனியாக ஒரு கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

9-00 a.m. திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : ஸ்டேட் லெவலில் ஏதாவது "புரூட் ஸ்டேஷன்" புதியதாக ஆரம்பிப்பதற்கு திட்டம் இருந்துகொண்டிருக்கிறதா ?

கனம் திரு. பூ. கக்கன் : ஏற்கனவே போளூர்-திருக்குப்பம் ரிஸர்ச் ஸ்டேஷன் இருக்கிறது. ஆடுதுறை, கல்லார், பர்லியார் போன்ற இடங்களில் பரிட்சார்த்தமாக பரிசீலனை செய்வதற்கு ஏற்பாடு செய்யுமாறு மத்திய சர்க்காரைக் கேட்டிருக்கிறோம். பதிலை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

திரு. ம. கமலநாதன் : அப்ரூவ்டு நர்ஸரி என்று சொல்லுபவர்கள் 10 செடி, 15 செடி கூட வைத்து அப்ரூவல் வாங்கிக்கொள்ளலாம். பழத்தோட்டங்கள் வைக்கிறவர்களுக்கு கன்யாகுமரி வரையிலும் எங்கள் பகுதியிலிருந்து விதைச் செடிகள் போகின்றன. லட்சக்கணக்கான செடிகள் ரயிலில் போகும்பொழுது வீணாகிவிடுகின்றன. அப்ரூவ்டு நர்ஸரிகள் பிரைவேட் பார்டி மூலம் வாங்கி விற்கிறார்கள். தனிப்பட்ட விவசாயிகள் பழத்தோட்டங்களுக்கு நல்ல செடிகள் வாங்கவேண்டுமென்று விரும்பினால், அப்ரூவ்டு நர்ஸரிகளிலிருந்து மட்ட ரகத்தை வாங்கமாட்டார்கள். அவர்களுக்கு கடன் கொடுத்து இஷ்டம்போல் பிளாண்டு பண்ணுவதற்கு ஏற்பாடு செய்ய முடியுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : அந்த முறை இப்பொழுது இல்லை.

திரு. வை. சங்கரன் : கோடைக்கானல் போன்ற இடங்களில் ஆரஞ்சுத் தோட்டங்கள் வெற்றிகரமாக நடைபெறவில்லை என்று சௌ-சௌ தோட்டமாக மாற்றுவதற்கு ஏற்பாடு செய்கிறார்கள். இதை சர்க்கார் சீக்கிரம் உணர்ந்து ஆரஞ்சுச் செடிகளுக்கு வரும் நோயைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : ஏற்கனவே அதிகாரிகள் கவனம் செலுத்தி வருகிறார்கள்.

*Loans for orchards*

* 310 Q.—SRI K. NARAYANASWAMI PILLAI : Will the Hon. the Minister for Home be pleased to state the amount disbursed as long-term loans, and short-term loans for the establishment of new orchards and for old orchards during 1964?

கனம் திரு. பூ. கக்கன் : 1964-ம் ஏப்ரல் முதல் 1964 டிசம்பர் முடிய புதிய பழத் தோட்டங்கள் ஏற்படுத்துவதற்காக நீண்ட காலக் கடன்களாக 2,98,449 ரூபாயும், பழைய பழத் தோட்டங்களைச் சீர் செய்வதற்காகக் குறுகிய காலக் கடனாக 50,795 ரூபாயும் வழங்கப்பட்டுள்ளன.

புலவர் கா. கோவிந்தன் : இந்த மன்றத்திலும் சரி, மாவட்ட வளர்ச்சி மன்றங்களிலும் சரி, தோட்டங்களுக்கு எவ்வளவு கடன் கொடுக்கப்பட்டது என்று கணக்கு கொடுக்கிறார்கள். வாங்கிய கடன்களை அவர்கள் எந்த அளவுக்கு பயன்படுத்தியிருக்கிறார்கள், வைத்த செடிகள் எந்த அளவுக்கு உயிரோடிருக்கின்றன என்ற அளவுக்கு கணக்கு கொடுப்பதில்லை. கொடுத்த கடன் எந்த அளவுக்கு பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பது குறித்து ஆராய்ச்சி இல்லை. ஆகவே, அதற்கு ஒரு குழுவை அமைத்து ஆராய்ச்சி செய்வதற்கு தக்க வழிவகைகள் செய்யப்படுமா ?





கனம் திரு. பூ. கக்கன் : அம்மாதிரி குழு அமைக்கவேண்டிய அவசியமில்லை. விவசாயப் பெருங்குடி மக்களுக்கு பழச் செடி வைப்பதற்கு கடன் கொடுத்து 10 வருஷ தவணையில் வாங்குவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது.

திரு. ஆ. துரையரசன் : கொடுக்கப்பட்ட கடன்கள் பெரும்பாலும் ஒழுங்காக செலவழிக்கப்படுவதில்லை. பல இடங்களில் செடிகளை நடாமலேயே கூட, பணத்தை வாங்கி சொந்த உபயோகத்திற்காக பயன்படுத்தியிருக்கிறார்கள் என்று ஏதாவது அரசினருக்கு புகார் வந்திருக்கிறதா ?

கனம் திரு. பூ. கக்கன் : அப்படியும் சமுதாயத்தில் ஒரு சில பேர்வழிகள் இருப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கோ. சி. மணி : நீண்டகாலக் கடன், குறுகிய காலக்கடன் கொடுப்பதற்கான தொகை மாவட்ட வாரியாக ஒதுக்கப்பட்டிருக்கிறதா ? அல்லது தோட்டங்கள் எங்கே அதிகமாக இருக்கிறதோ அந்தப் பகுதிகளைப் பார்த்து தரப்படுகிறதா ?

கனம் திரு. பூ. கக்கன் : எங்கெல்லாம் பழச்செடிகள் வைப்பதற்கு விவசாயப் பெருங்குடி மக்கள் முன்வருகிறார்களோ, அதைப் பார்த்து அனுசரித்து கடன் கொடுக்கப்பட்டு வருகிறது.

*Cause-way under Albert Victor Bridge, Madurai*

* 311 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether there is any proposal to open a cause-way road under he Albert Victor Bridge, Madurai City, connecting Alwarpuram and the road in front of Panagal Buildings; and

(b) if so, the details thereof?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) ஆம்.

(இ) மதுரை—திண்டுக்கல் சாலையின் 298-2 மைலில் வைகை ஆற்றின் குறுக்கேயுள்ள ஆல்பெர்ட் விக்டர் பாலத்தின் வடக்குப் பக்க வழியில், ஆழ்வார்புரம் சாலையையும் கிளைச்சாலையையும் (கல்பாலம்) இணைக்க, நகராட்சி மன்ற நிதியிலிருந்து தாம்போகி (Cause-way) ஒன்றைக் கட்ட மதுரை நகராட்சி மன்றம் உத்தேசித்துள்ளது. இதனால் கோரிபாளையம் சந்திப்பில் போக்குவரத்து நெரிசல் குறையும். இத் திட்டத்திற்காக 2,76,850 ரூபாய்க்கு நிர்வாக முறையில் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இவ்வேலையை "டிபாசிட்" வேலையாக எடுத்து நிறைவேற்றும்படி (நெடுஞ்சாலை, கிராமப் பணிகள்) தலைமைப் பொறியாளர் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

திரு. வை. சங்கரன் : எப்பொழுது இந்த வேலை எடுத்துக்கொள்ளப்படும் ? எப்பொழுது முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அட்மினிஸ்டிரேடிவ் சாங்ஷன் கொடுக்கப்பட்டு, வேலை செய்வதற்கு பி.டபிள்யு.டி. மூலம் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. எப்பொழுது வேலை ஆரம்பிப்பார்கள் என்ற திட்டமான தகவல் என்னிடம் இல்லை.

*Honorarium to Municipal Councillors*

* 312 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether the Government have proposed to permit Municipalities to pay its councillors, honorarium or atleast sitting fees on the days of meeting; and

(b) if so, the details thereof?

[23rd March 1965

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. வை. சங்கரன் :** மதுரை போன்ற முனிசிபாலிடிகளில் இது போன்று வேண்டுகோள் விடுத்து, அரசாங்கத்திற்கு தீர்மானம் போட்டு அனுப்பியும்கூட, அதை மறுப்பதற்குக் காரணம் என்ன ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** 1960-ம் வருஷத்தில்கூட முனிசிபல் சேர்மன்ஸ் கான்பெரன்ஸில் இதைப் பற்றி தீர்மானம் பாஸ் பண்ணி சர்க்காரின் கவனத்திற்கு வந்தது. தேசீய நெருக்கடி காரணமாக இப்பொழுது அதை புனர் பரிசீலனை செய்வதற்கு காரணம் இல்லை என்று சர்க்கார் கருதுகிறது.

**திரு. வை. சங்கரன் :** சாதாரணமாக நகராட்சி மன்ற உறுப்பினர்கள் தினமும் ஒரு சில மணி நேரமாவது மக்களுக்காக, பொது நலனுக்காக செலவிடவேண்டியிருப்பதால், ஓரளவுக்கு அவர்களுக்கு கௌரவ ஊதியம் கொடுப்பதில் என்ன கஷ்டம் ? அதற்காக நகராட்சி மன்றம் ஒரு சில லட்ச ரூபாய் செலவழிக்க தயாராக இருக்கிறார்கள். ஆகவே, அரசாங்கம் இதைத் கொடுப்பதற்கு மறுப்பதற்கு அடிப்படை காரணம் என்ன ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** கௌரவ வேலைக்கு தேர்ந்தெடுக்கப் பட்டுவரும்பொழுது டி.ஏ., ஹானரேரியம் என்று கேட்டுக்கொண்டிருந் தால் அது கௌரவப் பதவி ஆகாது என்பதை கனம் அங்கத்தினர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன்.

**திரு. இராம. அரங்கண்ணல் :** மாதத்திற்கு இவ்வளவு தொகை என்று கொடுக்கப்படாவிட்டாலும், அவர்கள் கலந்துகொள்கிற கூட்டங்களுக்கு ஏதாவது அலவன்ஸ் வழங்கப்படுமா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** முன்பு அளித்த பதில் தான்.

**திரு. வை. சங்கரன் :** தற்பொழுது எம்.எல்.ஏ. போன்றவர்களுக்கு கௌரவ அலவுன்ஸ் கொடுக்கப்படவில்லையா ? இவர்களுக்குக் கொடுத் தால் அடிப்படை தத்துவத்தில் என்ன கெடுதல் ஏற்பட்டுவிடும் ? ஏன் இதில் மட்டும் அரசாங்கத்திற்கு இவ்வளவு பிடிவாதம் ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** சர்க்கார் எப்பொழுதுமே அப்படி இருந்தது கிடையாது என்பதை கனம் உறுப்பினர் அறிவார்கள். சட்ட மன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் நூற்றுக்கணக்கான மைல்களுக்கு அப்பால் போய் பணி செய்யவேண்டியிருக்கிறது. முனிசிபல் கவுன்சிலர்களுக்கு அந்த நகர ஏரியாவுக்குத்தான் வேலை செய்யவேண்டி யிருக்கும். அதற்கு ஹானரோரியம் அவசியம் இல்லை என்று சர்க்கார் கருதுகிறது.

**திரு. முனு: ஆதி :** யூனியன் சேர்மனுக்கு பிக்ஸட் டி.ஏ. ரூ. 100 கொடுக்கப்படுகிறது. அதே மாதிரி கவுன்சிலர்களுக்கும் கொடுக்க என்ன தடங்கல் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** தனிக் கேள்வி போடவேண்டும்.

**திரு. நா. இராசாங்கம் :** ஹானரரி வேலை செய்வதற்கு அலவன்ஸ் கேட்பது பெருமைக்கு வழியில்லை என்று அமைச்சர் அவர்கள் சொல் கிறார்கள். ஹானரரியாக வேலை செய்வதற்கு ஒரு பகுதி பணம் கொடுத் துத்தான் ஆகவேண்டும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஹானரேரியம் என்பது கம்பல்ஸரி ஹானரேரியம் இல்லை.



23rd March 1965]

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** ஏற்கனவே ஒன்றும் இல்லை என்று சொல்ல முடியாது. கன்வேயன்ஸ் வைத்திருந்தால் அலவன்ஸ் கொடுக் கிறோம். ஜட்கா, குதிரை வைத்திருந்தால், அதற்கு தனியாக ரூ. 20 கொடுக்கிறோம். செலக்ஷன் கிரேடு முனிசிபாலிடி, செகண்டு கிரேடு முனிசிபாலிடி இப்படி தரவாரியாக அந்த முனிசிபாலிடிக்கும் தகுந்த மாதிரி " கன்வேயன்ஸ் அலவன்ஸ் " கொடுக்கிறோம். கார் வைத்திருந் தால் அலவன்ஸ் கொடுக்கிறோம். மதுரை போன்ற பெரிய முனிசிபாலிடி களில் கார் வைத்திருந்தால் அதற்கு கன்வேயன்ஸ் அலவன்ஸ் கொடுக்கி றோம். ஆகையால், ஹானரேரியம் கொடுக்கவேண்டிய அவசியமில்லை என்று சர்க்கார் கருதுகிறது.

**திரு. எம். எஸ். மணி:** நகரமன்ற உறுப்பினர்கள் கௌரவமான பதவி வகிக்கிறவர்கள் என்று டி.ஏ. கொடுக்காத காரணத்தினால் அவர்கள் வேறு வழியிலே பெறுவதற்கு முயற்சி செய்கிறார்களா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** நகராட்சித் துறை சம்பந்தமாக வேலைகள் இருந்தால், அலுவல்கள் இருந்தால், அதற்கு டி. ஏ. வாங்கிக் கொள்ளலாம் என்று சர்க்கார் உத்தரவிட்டிருக்கிறது. மற்ற வேலைகளுக்கு இல்லை.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** சிறு சிறு ஊர்களிலே பொது அலுவல்களுக்கு சென்று வருவதில் அதிகச் செலவு ஏற்படாது. சென்னை, மதுரை, கோவை போன்ற பெரிய நகரங்களில் பொது அலுவல்களுக்காக போய்வருவதற்கு போக்குவரத்துச் செலவு கட்டாயம் ஏற்படும். ஆகவே, அவர்களுக்கு அலவன்ஸ் வழங்குவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** ஏற்கனவே தேசீய நெருக்கடி காரணமாக இது " ஷெல்வ் " செய்யப்பட்டது என்று முன்பு கேள்விக்கு பதில் அளித்தேன். இப்பொழுது ஒன்றும் இந்த விஷயம் பரிசீலனையில் இல்லை. கனம் அங்கத்தினர் எழுதி அனுப்பினால் அது பரிசீலிக்கப்படும்.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** பஞ்சாயத்து யூனியன் தலைவருக்கு ரூ. 100 அலவன்ஸ் கொடுக்கிறார்கள், ஆனால் முனிசிபல் தலைவர்களுக்கு ரூ. 75 தான் கொடுக்கப்படுகிறது. இந்த நிலைமையை மாற்றி அவர்களுக்கு அலவன்ஸை ரூ. 100-ஆக உயர்த்துவது பற்றி அரசாங்கம் ஆலோசிக்குமா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** நகராட்சி சம்பந்தப்பட்டவரையில் ரூ. 75 தான் கொடுக்கிறோம். பஞ்சாயத்து யூனியன் அதிகமான ஏரியா உள்ளது. நன்றாக பரிசீலனை செய்து, திட்டமிட்டுதான் இம்மாதிரி வழங்கப்படுகிறது.

**திரு. இராம. அரங்கண்ணல் :** வெளியூர்களில் இருக்கிற பஞ்சாயத்து யூனியன் தலைவர்களுக்கு அலவன்ஸ் வழங்கப்படுகிறது. சென்னைமா நகரில் பத்து வட்டங்களுக்கு ஒரு ஸர்கிள் கமிட்டித் தலைவர் இருக்கிறார். பஞ்சாயத்து யூனியன் தலைவரைப்போலத்தான் இவரும். எனவே இவருக்கும் இந்த ஊதியத் தொகை அளிக்கப்படுமா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** ஐந்தாண்டுத் திட்டம் சம்பந்தமாக அதிக வேலைகளை அவர்கள் செய்கிறார்கள் என்ற காரணத்தினால் அது அளிக்கப்பட்டது. பல வருஷ காலமாக இதே முறையில் நன்றாக செயல்பட்டு வருகிறது. அதை இப்பொழுது மாற்றுவதற்கில்லை என்று சர்க்கார் கருதுகிறார்கள்.

**கனம் சபாநாயகர் :** கேள்விகள் முடிவடைந்தன.

[Note.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## II.—PRIVILEGE MATTER.

### Publication in "Nava Sakthi".

MR. SPEAKER: I have received notice of a Privilege matter given by the hon. Member, Sri T. P. Alagamuthu, regarding the following headlines given to a news item in the "Nava Sakthi":—

"காங்கிரஸ் பொருட்காட்சிக்கு தீயிட
திட்டம் போட்டிருந்தனர்.

துக்கதினம் அனுஷ்டிக்க தி. மு. க.
செய்திருந்த 'அதிசய' ஏற்பாடுகள்.

அசம்பிளியில் திரு. எம். பக்தவத்சலம் தகவல்".

This heading is, of course, misleading and it is not correct. But what is given in the body of the news item is correct and is in accordance with the statement made by the Hon. Chief Minister. But the heading is creating a wrong impression in the minds of readers. Therefore, I think, *prima facie* there is a case. But the point is, whether we can ask the newspaper to apologise and give a correction or deal with it otherwise.

SRI V. R. NEDUNCHEZHIYAN: Sir, we can ask the paper to apologise and give a correction.

MR. SPEAKER: Yes, let us ask the paper to do that and wait for a reply.

## III.—ANNOUNCEMENT.

### Nomination to Business Advisory Committee.

MR. SPEAKER: Under Rule 193 (1) of the Madras Legislative Assembly Rules, I hereby nominate the following hon. Members to be the Members of the Business Advisory Committee:—

Sri K. PARTHASARATHY.

The Hon. Sri M. BHAKTAVATSALAM.

The Hon. Sri V. RAMAIAH.

The Hon. Sri P. KAKKAN.

Sri P. RAMACHANDRAN.

Sri V. R. NEDUNCHEZHIYAN.

Sri SAW GANESAN.

Sri M. KALYANASUNDARAM.

Sri K. R. NALLASIVAM.

Sri T. P. ELUMALAI.

**The Speaker is the ex-officio Chairman of the Committee.**



## IV.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR 1965-66—*cont.*

(1) DEMAND NO. XVI—AGRICULTURE.

(2) DEMAND NO. XVIII—ANIMAL HUSBANDRY.

(3) DEMAND NO. XXXIX—CAPITAL OUTLAY ON AGRICULTURE.

(4) DEMAND NO. XLVII—CAPITAL OUTLAY ON SCHEMES OF GOVERNMENT TRADING.

**கனம் திரு. வெ. ராமையா:** கனம் சபாநாயகர் அவர்களே, நேற்றைய தினம் இந்த மானியத்தின்மீது நடந்த விவாதத்திற்கு, கனம் உள்துறை அமைச்சர் பதில் சொன்னாலும், உணவு தானியம் வாங்கும் கொள்கை சம்பந்தமாக ஒரு சில கனம் அங்கத்தினர்கள் எழுப்பிய சில பிரச்சினைகளுக்கு நான் பதில் சொல்ல விரும்புகிறேன். நேற்றைய தினம் எல்லா ஜில்லாக்களிலிருந்தும் வந்திருக்கக்கூடிய கனம் அங்கத்தினர்கள் பங்கு எடுத்துக்கொண்டிருந்தாலும், திருநெல்வேலி ஜில்லாவிலிருந்து வந்த அங்கத்தினர் அவரேதான் திருநெல்வேலியிலிருந்து வருவதாகச் சொன்னார்கள். எங்கே நாமெல்லோரும் மறந்துவிட்டோமோ என்று ஸ்ரீமான் கோசல்ராம் அவர்கள் சொன்னார்கள். கன்யாகுமரி அங்கத்தினரும்—அவர்களுக்கும் சந்தேகம், நாம் எங்கே மறந்துவிட்டோமோ என்று—ஞாபகப்படுத்துகிறேன் என்று சொன்னார்கள். இந்த கனம் அங்கத்தினர்கள் இரண்டு பேர்களும், கனம் எதிர்க் கட்சித் தலைவர் பேசிக்கொண்டிருக்கும்போது சொன்னதுபோல, ரூ. 40 கோடியை வாங்கிக்கொண்டு போகிறீர்களே என்று, மற்றவர்கள் மறந்து விட்டார்களோ என்று எடுத்துக் கூறினார்கள். அவர்கள் இரண்டு பேர்களும், தங்கள் தங்கள் கருத்துக்களை, தங்கள் தங்கள் ஜில்லாக்களில் இருக்கும் நிலைமைக்குத் தக்கப்படி சொன்னார்கள். நாற்பது கோடி, 50 கோடி என்று வாங்கிக்கொண்டு போய்விடவில்லை. அந்தப் பணம் தானியத்தை விற்பனை செய்தபிறகு, திருப்பிக் கொடுக்கிறோம். அதேபோல நேற்றைய தினம் கடைசியாகப் பேசிய எதிர்க் கட்சி அங்கத்தினர் புலவர் கோவிந்தன் அவர்கள், விவசாயத் துறையில் இருக்கும் பல்வேறு கஷ்டங்களையும், நாம் எடுத்திருக்கும் முயற்சிகளையும், அதிலிருக்கும் சிரமங்களையும் எடுத்துச் சொல்லி, கடைசியாக உட்காருவதற்கு முன்பாக, இவ்வளவெல்லாம் கஷ்டப்பட்டு விவசாயிகள் பண்டங்களை உற்பத்தி செய்து மார்க்கெட்டுக்கு எடுத்து வந்தால், அதற்கு ஏதேனும் நிர்ணயிக்கப்பட்ட விலை இருக்கிறதா என்று பார்த்தால், திண்டாட்டம்தான் என்கிற தோரணையில் சொல்லி முடித்தார்கள். நான்கூட சற்று உற்றுக் கவனித்துக்கொண்டே இருந்தேன். இந்த வருஷம் யாரேனும் அங்கத்தினர் விவசாயிகளுக்கு உற்சாகம் ஏற்படும் வகையில், நாம் விவசாயிகளுக்கு பாதுகாக்கப்பட்ட விலையை, எகனமிக் விலையை, ஸப்போர்ட் ப்ரைஸைக் கொடுத்திருப்பது பற்றி ஒரு வார்த்தை சொல்லுவார்களா என்று பார்த்தேன். ஆனால் புலவர் கோவிந்தன் தவிர மற்றவர்கள் யாரும் அதைப் பற்றிக் குறிப்பிடவில்லை. காரணம், இதற்கு முன்பு இந்த சட்ட மன்றத்திலும், மற்றபடி விவசாய வளர்ச்சியிலும் அக்கறை கொண்ட அத்தனை பேரும், தொடர்ந்து விவசாயிகளுக்கு இருக்கும் பிரச்சினைகளையும், இன்னல்களையும் மனதில் கொண்டு, பல ஆலோசனைகளை நடத்தி, கடைசியாக சென்ற வருஷம் இந்திய அரசாங்கம், விவசாயிகளுக்கு "ஸப்போர்ட் ப்ரைஸ்" கொடுப்பது என்கிற முடிவுக்கு வந்தது. சென்ற வருஷம் அக்டோபர் மாதம் அது அமுலுக்கு வந்தவுடனே, சென்னை அரசாங்கத்தைப் பொருத்த மட்டில், கண்டிப்பாக அதை அமுல் நடத்த முன் வந்தார்கள். ஆனால், அந்த நேரத்திலே விலைவாசிகள், நாம் கட்டுப்படுத்திய விலையை விட அதிகமாக இருந்ததால், வியாபாரிகளுக்குக் கஷ்டம் வராமல் இருக்கக்கூடிய முறையில், க்ரேஸ் டைம் கொடுத்து செய்யப்பட்டது. விலைக் கட்டுப்பாடு செய்த பிறகு, அந்தப் பண்டங்கள் வெளியிடங்களுக்கு போகும் கட்டுப்பாடு இல்லாததால், என்னவாயிற்று என்று தெரியும். அதனால், சரித்திரத்தில் முதல் தடவையாக, விவசாயிக்கு பாதுகாக்கப்பட்ட விலை கொடுத்தது இப்பொழுதுதான். தஞ்சை ஜில்லா அங்கத்தினர்கள் கூட அதைக் குறித்துப் பேசாததற்கு காரணம்,

தஞ்சை ஜில்லாவிற்கு நான் போய்ப் பார்த்து வந்திருக்கிறேன். அங்கே இருக்கும் கோரிக்கையெல்லாம் விவசாயிகளிடத்திலிருந்து அரசாங்கம் வாங்குவதில் லெவிபோல் [illegible] நேரடியாக இருந்தால் போதும் என்பதுதான். அதேபோல பாதுகாக்கப்பட்ட கட்டுப்பாடு இருந்தால் போதும் என்பதுதான் விவசாயிகளிடமிருந்து வருகிறது. ஆகையினால், முதல் தடவையாக விலை நிர்ணயம் செய்திருக்கிறோம்.

அதே நேரத்திலே இன்றைய ஒரு சில கனம் அங்கத்தினர்கள், வட ஆர்க்காடு, செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு முதலிய மாவட்டங்களிலிருந்து வருபவர்கள், தஞ்சை ஜில்லாவில் போல, இவர்களும் சொன்ன யோசனை என்னவென்றால், நீங்கள் விலை நிர்ணயம் செய்தது சரியோ, ஆனால், அதே விலைக்கு வாங்காமல் நஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே, கட்டாயமாக வாங்கவேண்டும் என்று அங்கத்தினர்கள் சொன்னார்கள். அந்த நிலை அரசாங்கத்திற்குத் தெரியும். இந்த விலைக் கட்டுப்பாடு, நிர்ணயம் செய்த பிறகு, பாதுகாத்த கட்டுப்பாடு ஏற்படுத்தினதற்குப் பிறகு, இந்த வருஷம், சம்பா மகசூல் ஏற்பட்டவுடனே, என்னென்ன கஷ்டங்கள் ஏற்பட்டன என்பதையெல்லாம் அரசாங்கம் தொடர்ந்து கவனித்து, அவற்றைத் தீர்க்க முயற்சி எடுக்கிறது.

குறிப்பாக கனம் அங்கத்தினர் கோசல்ராம் பேசும்போது, ஏதோ நாங்கள் பொறுப்பு எடுத்துக்கொள்ளாமல், எல்லாம் அதிகாரிகள் கையில் விட்டு விட்டு, அதிகாரிகள் விவசாயிகளை அப்படியே கசக்கிப் பிழிகிறார்கள், தொந்தரவு கொடுக்கிறார்கள் என்று, தான் கேட்டதைச் சொன்னார்கள். ஏனென்றால், அவருடைய ஜில்லாவில் இன்னும் கொள்முதல் ஆகவில்லை. இப்பொழுதுதான் அறுவடை ஆகும் காலம். ஆகையினால், தஞ்சை ஜில்லாவிலிருந்து யாரோ சொன்னதைக் கேட்டுவிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். கனம் அங்கத்தினர் கோசல்ராம் சபையில் இப்பொழுது இல்லை, அவரைப் பற்றி அதிகமாகப் பேச மனது வரவில்லை. ஆகவே, அவர்கள் சொன்னது யாரோ சொன்னதைக் கேட்டுச் சொன்னது. அப்படி என்றால், தஞ்சை ஜில்லா அங்கத்தினர்கள் அல்லது இப்பொழுது நாம் தீவிரமாக வாங்கும் வட ஆர்க்காடு மாவட்ட அங்கத்தினர்கள் அல்லது தென் ஆர்க்காடு மாவட்டத்திலிருந்து வந்திருக்கக்கூடிய அங்கத்தினர்கள் அல்லது செங்கற்பட்டிலிருந்து வந்திருக்கக்கூடிய அங்கத்தினர்கள், [illegible] பாதிக்கப்பட்ட பகுதியிலிருந்து வந்திருக்கக்கூடிய அங்கத்தினர்கள், ஸ்ரீமான் கோசல்ராம் அவர்களையும் விட அதிகமாகப் பேசியிருப்பார்கள். உண்மை வாங்கும் கொள்கை தவிர, வேறொன்றும் பேசியிருக்க மாட்டார்கள். அப்படிப் பேசாததற்குக் காரணம், அரசாங்கத்தின் கொள்கையை நல்ல முறையிலே அதிகாரிகள் அமுல் நடத்துகிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. அதிலே இருக்கக்கூடிய சமீப கால நிலைமையை உங்களுக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இந்த வருஷம் நவம்பர் அல்லது டிசம்பர் மாதங்களில் இந்த வருஷத்திற்குத் தேவையான buffer ஸ்டாக்கை வாங்கவேண்டும், அதற்கு எந்த முறையில் வாங்கவேண்டும் என்றெல்லாம் நாம் மேல் மட்டத்தில், மாகாண ரீதியாக இருக்கும் அதிகாரிகளை வைத்துக்கொண்டு பேசினோம். நாம் இப்பொழுது விலை நிர்ணயம் செய்ததற்குப் பிறகு buffer ஸ்டாக் எந்த முறையில் வாங்கவேண்டும் என்று பரிசீலனை செய்தோம். ராஜ்யத்திலே இருக்கக் கூடிய மார்க்கெட்டபிள் ஸர்ப்ளஸ் ஸ்டாக்கை வாங்குவது பற்றி அப்பொழுது அவர்கள் யோசனை சொன்னார்கள். ஒரு விவசாயி தன்னுடைய தேவை போக, தன்னுடைய மற்ற தேவைகளுக்கு விற்பனை செய்யக்கூடிய நெல்லை அரசாங்கம் நிர்ணயம் செய்திருக்கும் விலையில் வாங்கிவிடுமானால், நமக்குப் போதுமான buffer ஸ்டாக் கிடைக்கும். அதை வாங்கிவிட்டால் போதும் என்பது ஒரு நிலை. அப்படி இப்பொழுதிருக்கும் புள்ளி விவரப்படி கணக்குப் போட்டுப் பார்த்தோமானால் இந்த சம்பா மகசூலின் போது, ராஜ்யத்திலே ஏறத்தாழ எட்டு அல்லது ஒன்பது லட்சம் டன் வாங்க முடியும். இன்னும் கொஞ்சம் அதிகமாகக் கூட வாங்கலாம். அந்த அளவுக்கு நாம் வாங்கவேண்டும் என்றாலும் கூட, இதிலே இருக்கக் கூடிய கடுமையான கஷ்டத்தை உணர்ந்து ஒவ்வொரு மாவட்டக் கலெக்டரும், தங்கள் தங்களுடைய மாவட்டத்தில் இருக்கும் உபரியை வாங்க





வேண்டும் என்றால் என்ன என்ன தடங்கல் இருக்கும் என்பதை ஆராய்ந்து பார்த்து, " நாங்கள் எங்களுடைய மாவட்டங்களில் உள்ள எல்லா ஸர்ப்ளஸையும் வாங்குவது கடினம், அதை வாங்கத் தயாராயில்லை, அப்படி வாங்குவோமானால் விவசாயிகளிடத்திலே பீதியும் பயமும் ஏற்படும், அதனால், குறைவாக வாங்குவதற்கு அனுமதி கொடுக்க வேண்டும் " என்று கேட்டுக்கொண்டார்கள். அந்த அடிப்படையிலே எத்தனைதான் வாங்க ஆதாரம் இருந்தபோதிலும், திட்டவட்டமாக எவ்வளவு உற்பத்தி ஆகும் என்று நமக்குத் தெரிந்த போதிலும், நாம் அவ்வளவையும் வாங்கவேண்டும் என்று சொல்லாமல், மார்க்கெட்டபிள் ஸர்ப்ளஸில் ஓரளவை மட்டும் வாங்கினால் போதும் என்று ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நிர்ணயம் செய்திருக்கிறோம். சேலம் ஜில்லாவில் இவ்வளவு வாங்கவேண்டும், வட ஆர்க்காடு ஜில்லாவில் இவ்வளவு வாங்கவேண்டும் என்று ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நிர்ணயம் செய்திருக்கிறோம். இதில் எல்லாம் மொத்தமாக நாம் இந்த சம்பா அறுவடை காலத்திலே ஏறத்தாழ ஐந்து லட்சம் டன் வாங்கினால் போதும் என்றுதான் எதிர்பார்க்கிறோம். இந்த வருஷம் பூராவும் இன்னும் இரண்டு லட்சம் டன் வாங்கலாம் என்ற முறையிலே கணக்கு நிர்ணயம் செய்திருக்கிறோம். அந்த அடிப்படையில் வாங்கும்போது, நவம்பர் அல்லது டிசம்பர் மாதத்திலே அரசாங்கம் கொள்முதல் செய்வது என்றாலே ஒரு பயம்போல் இருக்கிறது. அதனால் ஒவ்வொரு ஜில்லாவிலும் இருக்கக்கூடியவர்கள் " எங்கள் ஜில்லாவில் நிறையக் கஷ்டம் " என்று நினைப்பது சகஜம். நேற்றையதினம் பேசிய கனம் அங்கத்தினர் திரு. கோசல்ராம் அவர்கள், தங்களுடைய ஜில்லாவில் வாங்கத் தொடங்குவதற்கு முன்னாடியே ஒரு அச்சத்தை அவரே கற்பனை செய்துகொண்டார் என்று நினைக்கிறேன். அல்லது நியாயமாக ஏற்பட்ட ஒரு அச்சமா என்றும் தெரியவில்லை. அது வேறு பிரச்னை. " எங்களுடைய ஜில்லாவில் நிறையக் கஷ்டம் " என்று சொன்னார்கள். இப்பொழுது சட்டசபையில் விவாதமாகச் சொல்லக்கூடிய கொள்கையை இரண்டு மாதங்களுக்கு முன்பே சொல்லியிருப்பேனானால், ஒரு ஜில்லாவிலும் வாங்க அனுமதி கொடுத்திருக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன். ஏனென்றால், ஜில்லாக் கலெக்டருக்கே அந்தப் பயம் இருக்கிறது. நாம் வாங்குவது மார்க்கெட்டபிள் ஸர்ப்ளஸைத்தான். அதை எப்படியும் அவர்கள் விற்பனை செய்துதான் ஆகவேண்டும். அதை வாங்கித்தான ஆகவேண்டும் என்ற நிலையும் இருக்கிறது. அந்த முறையில் பல ஜில்லாக்களிலும் உள்ள மார்க்கெட்டபிள் ஸர்ப்ளஸை வாங்க முயற்சிக்கின்றோம். இன்றைக்கிருக்கும் நிலைமை இன்னும் அதிகமாக இருக்கிறது. " நாங்கள் உற்பத்தி செய்யக்கூடிய பொருளைக் கொண்டுபோய் விற்கவேண்டும், எங்காவது விற்கவேண்டும், வியாபாரிகள் எங்களுக்கு நல்ல விலை கொடுக்கவில்லை " என்று சொல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. கனம் எதிர்க்கட்சி உறுப்பினர் திரு. புலவர் கோவிந்தன் அவர்களே அப்படிச் சொல்கிறார்கள். ஆக, விவசாயிகளிடத்தில் இருக்கும் நெல்லை விற்கவேண்டும். அதற்கு நிரந்தரமான விலை கொடுக்க வேண்டும். அவை அரசாங்கம் " காரண்டி " செய்யவேண்டும். அது தான் இப்பொழுது இருக்கக்கூடிய பிரச்னை. நாம் உபரித் தானியத்தை வாங்கும்போது, ஆரம்பத்தில் ஒவ்வொரு ஜில்லாவில் இருக்கும் அதிகாரிகளும் கொஞ்சம் அச்சம் தெரிவித்தபோதிலும், நடைமுறையில் அதிகமாக சிக்கல்கள், கஷ்டங்கள், தொந்தரவுகள் இல்லாமலே நாம் நிர்ணயம் செய்திருக்கக்கூடிய அளவை வாங்க முடிந்திருக்கிறது என்று பார்க்கும்போது மற்ற இடங்களிலும் அப்படியே வாங்க முடியும் என்பதில் சந்தேகமே இல்லை.

கனம் உறுப்பினர் திரு. கோசல்ராம் அவர்கள் பேசும்போது, " தஞ்சை ஜில்லாவிலும் இன்னும் ஒரு சில இடங்களிலும் ஏராளமாகத் தேக்கம் ஏற்பட்டுவிட்டது. அதை வாங்காமல் எங்கோ போய்க் கஷ்டப்படுகிறீர்களே ? " என்றார்கள். தேக்கம் ஏற்பட்டிருப்பது உண்மை. ஆனால், தஞ்சை ஜில்லாவில் ஏன், எப்படி, எதற்காகத் தேக்கம் ஏற்பட்டது ? விவசாயிகளுக்கு இரண்டு மாதங்களுக்கு முன்பே உறுதி சொல்லியிருக்கிறோம். " உபரியாக இருக்கும் அத்தனை தானியத்தையும் அரசாங்கம் நிர்ணயித்திருக்கும் ஸப்போர்ட் ப்ரைஸில் வாங்கும்.

அவசரப்பட்டு விற்பனை செய்யவேண்டாம் " என்று சொல்லியிருக்கிறோம். தஞ்சை ஜில்லாவில் எவ்வளவு மார்க்கெட்டபிள் ஸர்ப்ளஸ் என்பதை நாம் துல்லியமாகச் சொல்வதற்கில்லை. சென்ற வருஷமும், அதற்கு முந்திய வருஷமும் அந்த ஜில்லாவிலிருந்து நெல் வெளியே போயிருக்கக் கூடிய அளவினை நிர்ணயம் செய்து பார்த்தோமானால், சம்பா மகசூல் காலத்தில் மட்டும் ஏறக்குறைய 5 லட்சம், 6 லட்சம் டன் இருக்குமோ என்று நான் சந்தேகப்படுகிறேன். மார்க்கெட்டபிள் ஸர்ப்ளஸ் ஸ்டாக்கை நான் குறிப்பிடுகிறேன். ஆனால், அவ்வளவையும் நாம் வாங்க விரும்பவில்லை. ஐந்தாறு லட்சம் டன் வாங்கிவிட்டு, சென்ற வருஷம் அந்த ஜில்லாவில் பற்றாக்குறை ஒரு சில வாரங்களில் ஏற்பட்டது போல, ஏற்பட்டுவிடக்கூடிய நிலைக்குக் கொண்டுபோய்விட நாங்கள் தயாராக இல்லை. அதனால் அந்த மார்க்கெட்டபிள் ஸர்ப்ளஸில் ஒரு பகுதியைத் தான் வாங்குகிறோம். அப்படி, மூன்று, நான்கு லட்சம் டன் வாங்க வேண்டும் என்றால், அதற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் நமக்குத் தெரிந்தவரையில் செய்தோம். பலர் ஆலோசனை சொன்னார்கள். " இதை அரசாங்கமே வாங்கி வைப்பதென்றால் அது கடினமான காரியம், அரசாங்கத்திடம் அவ்வளவு மூலதனம் இருக்க முடியுமா ?" என்றெல்லாம் சொன்னார்கள். அப்போது இருந்த விரைப்படி ஏதோ போதுமான வியாபாரிகளை நியமனம் செய்துவிட்டால் அவர்கள் அப்படியே வாங்கிச் சேமித்து அரசாங்கம் கேட்கும்போது, அரசாங்கம் நிர்ணயம் செய்திருக்கும் தரத்திற்குத் தகுந்த அரிசியைக் கொடுப்பார்கள் என்று பலத்த ஆலோசனையைச் சொன்னார்கள். எங்களுக்குக் கூடச் சந்தேகம் தான். ஒரு லட்சம் டன் வாங்கவேண்டுமென்றால், ஏழு கோடி ரூபாய் ஆகுமே, நான்கு லட்சம் டன் வாங்கவேண்டுமென்று திட்டமிடும் போது அதற்கு 28 கோடி ரூபாய் வேண்டுமே என்று ஆரம்பத்தில், முதல் தடவையாக இருப்பதனால் சற்று பயமாகக் கூட இருந்தது. வியாபாரிகளும் கூட்டுறவு அமைப்பில் உள்ளவர்களும் வாங்கிவிடுவார்கள் என்று ஏராளமான வியாபாரிகளை நியமித்தோம். ஆனால், வியாபாரிகளுக்கு எவ்வளவு சக்தி இருக்கிறது என்பதை ஒரு வாரம், இரண்டு வாரத்தில் பார்த்துவிட்டோம். இந்த மார்க்கெட்டபிள் ஸர்ப்ளஸ் பூராவையும் வாங்கி, தஞ்சை ஜில்லாவில் சேமித்து வைத்து, அரசாங்கம் கேட்கக்கூடிய ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் கொடுக்க அவர்களால் கண்டிப்பாக முடியாது என்பதைப் பார்க்கிறோம். வியாபாரிகள் வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு எப்படி லாபம் வருகிறது ? எவ்வளவு வேகமாக டர்ன் ஓவர் இருக்கிறதோ அதற்குத் தகுந்த லாபம் அவர்களுக்கு இருக்கிறது. ஆகையால் தான் சபையில் இருக்கும் அங்கத்தினர்கள் அடிக்கடி சமீப காலத்தில் பார்த்திருப்பார்கள். தஞ்சை ஜில்லாவில் வாகன் ஷார்ட்டேஜ் இருக்கிறது, போதுமான வாகன் இல்லை என்பதைப் பார்த்திருப்பார்கள். வாகன் ஷார்ட்டேஜ் எப்படி ஏற்பட்டது ? அரசாங்கம் எந்த இடத்திற்கு எவ்வளவு அரிசி போகவேண்டும் என்று நிர்ணயம் செய்திருக்கிறது. அதை எடுத்துச் செல்வதற்கு வேண்டிய ஏற்பாட்டை அரசாங்கம் செய்கிறது. ஆனால், இதற்கு முந்திய வருஷங்களில் அங்கிருக்கும் ஃபார்ம் இகானமி எப்படி இருந்தது என்பதைப் பார்க்கவேண்டும். காவிரியிலிருந்து தண்ணீர்வர வேண்டும். விவசாயி உற்பத்தி செய்யவேண்டும். அறுவடை காலத்தில் ரயில்வே நிறைய வாகன் அனுப்பவேண்டும். அந்த வாகனிலே ஏற்றி தங்கு தடையில்லாமல் ஒரு திசையை நோக்கிப் போய்க்கொண்டிருக்க வேண்டும். நான் இதைச் சில வாரங்களாகக் கவனித்துப் பார்க்கும் போது, சரித்திரத்திலே படித்தது ஞாபகத்திற்கு வந்தது. மார்க்கோ போலோ காலத்தில் ஆசியாவையும் ஐரோப்பாவையும் இணைக்கக்கூடிய வகையில் ஒரு ட்ரேட் ரூட் இருந்ததாகச் சொல்வார்கள். அதன் வழியாகத்தான் வியாபார நிமித்தமாகப் போய்வரக்கூடிய நிலையும், நாகரிகம் பரவக்கூடிய நிலையும் இருந்தது என்று சொல்வார்கள். இங்கே சென்னை ராஜ்யத்தைப் பார்த்தால், இங்கே ஒரு Grand Rice Route இருக்கிறது என்று சொல்லலாம். தஞ்சை ஜில்லாவில் உற்பத்தி செய்யக்கூடிய நெல் எந்தத் திசையை நோக்கிப் போகிறது என்பதைக் கண்டு பிடிக்கப் பெரிய ஆராய்ச்சி தேவை இல்லை. அங்கே உற்பத்தியாகும் நெல் மணச்ச நல்லூருக்குப் போகும். அடுத்து, திண்டுக்கல்லுக்குப் போய், அதிலிருந்து



அடுத்த பகுதிக்கு, திருப்பத்தூருக்குப் போகும். இன்னொரு பகுதி கோயமுத்தூருக்குப் போகும். இன்னும் கடைசியாக இருக்கக்கூடிய ஒரு பகுதி பொள்ளாச்சிக்குப் போய், அதற்குப் பிறகு எப்படியோ போகிறது. ராஜ்யத்தில் இருக்கக்கூடிய ரைஸ் மில்லினுடைய அமைப்பைப் பார்த்தாலும், அந்தப் பாட்டர்ன் தான், இன்னொரு பகுதி திண்டுக்கல்லுக்குப் போய், அங்கிருந்து இன்னொரு திசையில் போய்விடும். (கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் அவர்களின் குறுக்கீடு) கூட்டுறவு அமைச்சர் அவர்கள், " புதுக்கோட்டைக்குப் போவதில்லையா ? " என்று கேட்கிறார்கள். புதுக்கோட்டையும் ஒரு வழி தான். புதுக்கோட்டை வழியாகவும் தான் போகும். போக்குவரத்து அதிகமாக ஏற்படுவதற்கு முன்பு பட்டுக்கோட்டை நிலச்சுவாந்தார்களுக்கு முக்கியமான சந்தை புதுக்கோட்டை சந்தை தான். லாரிப் போக்குவரத்து அதிகமாக ஏற்பட்ட பிறகு புதுக்கோட்டை சந்தை கூட இல்லை. அம்மாதிரி இன்னொரு ரூட். அதனால் ஐந்து லட்சம் டன், ஆறு லட்சம் டன் எந்தத்திசையில் எந்த வேகத்தில் போகிறது என்பது நமக்கு ஞாபகம் இருக்கும். இப்பொழுது வாகன் அதிகமாக வேண்டும், கட்டுப்பாடு இருக்கக்கூடாது, தேக்கம் இருக்கிறது என்றெல்லாம் சொல்லப்படுகிறது. அரசாங்கம் அசந்து போய், இதையெல்லாம் தளர்த்தினால் என்ன ஆகும் என்று பார்க்க வேண்டும். இவ்வளவு கட்டுப்பாடு இருக்கக்கூடிய நேரத்திலேயே எல்லா அதிகாரிகளும் கண்ணை விழித்துக்கொண்டிருக்கும் இந்த நேரத்திலேயே இந்த ட்ரேட் 9–30 a.m.
ரூட் ஓய்ந்ததாக எனக்குத் தெரியவில்லை. சில கனம் அங்கத்தினர்கள்— மதுரை மாவட்டத்தில் இருந்து வரக்கூடியவர்கள் ரொம்பக் கடுமையாகக் கட்டுப்பாட்டை வைத்திருக்கிறீர்களே, இருந்தும் திண்டுக்கல்லில் இருக்கக் கூடிய மில்களின் ஓட்டம் குறையவில்லை, ஓடிக்கொண்டே இருக்கிறது. என்று சொல்கிறார்கள். இது மாதிரி பல இடங்களில் இருக்கிறது. வியாபாரத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு எப்படி, எந்த ரூபத்தில் கொண்டுபோகவேண்டும் என்பது தெரியும். டாக்டர் திரு. நடராஜன் அவர்கள் கூடச் சொன்னார்கள் என்று நினைக்கிறேன். ஐந்து படிக்கு மேல் கொண்டுபோகக்கூடாது என்று தடை விதித்திருப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது என்றார்கள். முன்பு அரசாங்கம் ஒரு க்வின்டால் வரைக்கும் பர்மிட் இல்லாமல் கொண்டு போகலாம் என்பதாக முடிவு எடுத்திருந்தது. இன்றைக்கு என் பத்து லிட்டருக்கு மேல் எடுத்துப் போகக்கூடாது என்று உத்தரவு போட்டிருக்கிறது ? இந்த அரசாங்கத்திற்கு எந்தப் பகுதி மக்களின் மீதாவது கோபமா ? இதை கனம் அங்கத்தினர்கள் நன்றாகப் பரிசீலனை செய்து பார்க்க வேண்டும். நாம் மக்களுடைய நன்மைக்காக எந்த வசதி செய்து கொடுத்தாலும் அதைத் தவறாகப் பலர் உபயோகப்படுத்திக்கொள்ளத் தயங்குவதில்லை. முன்பு ஒரு க்வின்டால் வரைக்கும் பர்மிட் இல்லாமல் கொண்டு போகலாம் என்று சொன்னவுடனே—அறுவடை ஆரம்ப காலத்திலேயே ஏ.டி.ஷி. ரக நெல்லை இருபத்தைந்து தினங்களுக்கு நாளடி, சம்பா அறுவடை விழும் வரையில் க்வின்டால் க்வின்டாலாக பத்தாயிரம் டன் வரைக்கும்— மூட்டை மூட்டையாகக் கூட இல்லை, வாகன் வாகனாக ஏற்றிக்கொண்டு போனார்கள், அவை எங்கே, எப்படி பிடிக்கப்பட்டது என்பதைப் பற்றிய ஆராய்ச்சிக்குப் போகவேண்டாம். அதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். ஆகையால் தான் கட்டுப்பாட்டைப் பொறுத்த வரையில் நாம் தீவிரமாக இருக்க வேண்டும், அதே சமயத்தில் விவசாயிகளுக்குப் பாதகம் ஏற்படக்கூடாது என்ற முறையில் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது.

தஞ்சையில் இருக்கக்கூடிய உபரி நெல்லை, அரசாங்கம் கண்டிப்பாக வாங்கும். ஏஜெண்டுகள், கூட்டுறவு அமைப்புகள் வாங்காவிட்டாலும் கூட அரசாங்கமே தலையிட்டு வாங்கும், அதுவும் இன்றையதினம் அரசாங்கம் நிர்ணயம் செய்திருக்கிற விலை தஞ்சை ஜில்லா விவசாயிகளுக்கு மிகவும் லாபகரமானதாக இருக்கும் என்பதை சட்டசபை அங்கத்தினர்களே ஒப்புக் கொள்வார்கள். உதாரணமாக திரு. தண்டபாணி பிள்ளை அவர்கள்— இப்போது சபையில் இல்லை—எப்போது பார்த்தாலும் விவசாயிகளுக்குக் கொடுக்கப்படுகிற விலை கட்டுபடியாகவில்லை என்றே குறைபட்டுக்கொண்டு சொல்வார்கள். தாங்கள் உற்பத்தி செய்கிற நெல்லுக்கு நல்லவிலை

கிடைக்கவில்லை என்று சொல்வார்கள். ஆனால் இந்த முறை அவர்கள் பேசும்போது கொஞ்சம் நிறைவாகத்தான் இருந்தது. ரூபாய் 28·8 கூட வேண்டாம், 21 ரூபாய் இருந்தால் போதும் என்பதாகக் கூட மன நிறைவாகப் பேசினார்கள். (திரு. கொ. சி. மணி. : அப்படிச் சொல்ல வில்லை.) நான் அப்படிக் குறைக்கப் போவதில்லை. நீங்கள் பயப்பட வேண்டாம். விவசாயிகளுக்குப் பாதகம் இல்லாமல்—அவர்களுக்கு லாபம் அளிக்கக் கூடிய வகையில்—40 கோடி, 50 கோடி ரூபாய் மூலதனத்தைப் போட்டு, நெல்லைக் கொள்முதல் செய்து, சேமித்து வைத்து தேவைப் படுகிற போது கொடுப்பதற்கு தனிப்பட்ட வியாபாரிகள், கூட்டுறவு அமைப்பு கள் ஆகியவற்றால் முடியும் என்று நம்பிக்கொண்டிருப்பதில் பயன் இல்லை என்றே தான் அரசாங்கமே வாங்க வேண்டும் என்பதாக முடிவு செய்யப்பட்டுவிட்டது. மேலும் கொள்முதல் செய்கிற தானியங்களை சேமித்து வைப்பதற்கு போதுமான வசதிகள் ராஜ்யத்தில் இல்லை. ஆகவே தான் கிராஷ் ப்ரொக்கிராம் என்ற அடிப்படையில் தஞ்சை, திருச்சி, செங்கல்பட்டு ஆகிய ஜில்லாக்களில் இரண்டு லட்சம் டன் சேமித்து வைக்கக் கூடிய கோடவுன்கள் கட்டி வருகிறோம். ஒரு பகுதி முடிந்திருக்கிறது. இந்த அறுவடை காலம் முடிவதற்குள் இரண்டு லட்சம் டன் தானியம் சேமித்து வைக்கக் கூடிய கோடவுன்கள் கட்டி முடிந்துவிடும். நான்கு கோடவுன்கள் கட்டிவிடுவதனால் மட்டும் பிரச்சினை தீர்ந்துவிடும் என்று அரசாங்கம் கருதவில்லை. தஞ்சை ஜில்லாவைப் பொறுத்த வரையிலும்—வெளியில் இருக்கக்கூடியவர்கள் சொன்னமாதிரி ராட்சச கோடவுன்கள் இன்னும் பல கட்டலாம். அப்போது தான் விவசாயிகளின் பிரச்சினை தீரும். குறிப்பாக நாங்கள் உற்பத்தி செய்கிற தானியத்தை உடனுக்குடன் பணம் கொடுத்து வாங்கிக்கொண்டுவிடுவதற்கு தக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்பது தான் அந்த ஜில்லா விவசாயிகளின் கோரிக்கை. நல்லவிலை கிடைக்கவேண்டும் என்பது அதோடு இணைந்தது. நாம் நம்முடைய இந்த ஏற்பாட்டை நல்லமுறையில் செயல்படுத்தினாலேயே அந்த விவசாயிகளுக்கு அதிக ஊக்கம் பிறக்கும். அவர்களுடைய பிரச்சினை யும் தீரும்.

கனம் கோசல்ராம் அவர்கள் அதிகாரிகளின் கையில் பொறுப்பை விட்டு விட்டு நாம் சும்மா இருப்பதாகச் சொன்னார்கள். மன்னார்குடியில் கோடவுன் கட்டக்கூடாதா, வேதாரண்யத்தில் கட்டக் கூடாதா என்றார்கள். வேதாரண்யத்தில் கோடவுன் கட்டினால் நெல்லைச் சேமித்து வைக்க முடியாது. உப்பு வேண்டுமானால் சேமித்து வைக்க முடியும். அதோடு அங்கங்கே சிறு சிறு கோடவுன்களாகக் கட்டுவதைவிட பெரிய கோட வுனை ஓரிடத்தில் கட்டினால்—நவீன விஞ்ஞான முறைப்படி தானியங் களைப் பத்திரமாகப் பாதுகாத்து வைக்க முடியும் என்பதாக நிபுணர்கள் சொல்கிறார்கள். ஐம்பதாயிரம் டன் இல்லை. ஒரு லட்சம், இரண்டு லட்சம் டன் என்பதாக ஓரிடத்தில் சேமித்து வைக்கக் கூடிய கோடவுன்கள் கட்டினால் லாபமாகக் கூட இருக்கும்.

அடுத்து தஞ்சை ஜில்லாவில் இருக்கக்கூடிய விவசாயிகளின் கஷ்டத் தைப்போக்க வேண்டுமானால் நவீன நெல் அறைக்கும் இயந்திரங்கள் அந்த ஜில்லாவிற்கு வந்தாகவேண்டும். நெல் அரைக்கும் தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடிய மில்லர்கள் அத்தனைபேரும் நல்ல அரிசி தான் கொடுக்கிறார்கள் என்று நாம் நினைக்கிறோம். எல்லோரும் அப்படிக் கொடுப்பதாகச் சொல்ல முடியாது. அவர்களிலேயே சிலர், "நாங்கள் என்ன மணச்சநல்லூர் அரிசி மாதிரியா கொடுக்கிறோம்" என்று சொல் கிறார்கள். அப்படியானால் சப்-ஸ்டாண்டர்ட் ரைஸ் கொடுக்கக்கூடியவர் களும் இருக்கிறார்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. ஆகவே நல்ல தரமான அரிசி மக்களுக்குக் கிடைக்கவேண்டுமென்றால் நவீன நெல் அரைக்கும் மில் நம் ராஜ்யத்தில் ஏற்படுத்தப்பட்டு ஆகவேண்டும். அந்த அடிப்படையில் இப்போது முன்னோடியாக திருவாரூரில் கூட்டுறவு அடிப் படையில் ஒரு மில் ஆரம்பமாகிறது. அது போன்ற மில்கள் நம் ராஜ்யத்தில் பலயிடங்களில் ஏற்பட்டாகவேண்டும். இது எல்லாம் ஒரு பிரும்மாண்டமான பிரச்சினை. இதனுடைய முக்கியத்துவத்தை உணர்ந்து தான் அரசாங்கமே நேரிடையாக இந்தப் பிரச்சினையில் கவனம் செலுத்து



கிறது. அதன் காரணமாகத்தான் விவசாயிகளை ஆதரிக்கக்கூடிய முறை யில் உள்துறை அமைச்சர் அவர்கள் இந்த மானியக் கோரிக்கையைக் கொண்டு வந்தார்கள். கனம் கோசல்ராம் அவர்கள் கூட இது உணவு அமைச்சர் சம்பந்தப்பட்ட பிரச்சினை இல்லையா, அவரல்லவா கொண்டு வரவேண்டும் என்று ஆட்சேபித்தார்கள். இதுவும் ரசாயன உரம் கொடுப் பது, விதை கொடுப்பது போன்று விவசாயிகளுக்கு ஊக்கமும், ஆதரவும் அளிக்கக்கூடிய பிரச்சினையாக இருக்கிறது. ஆகவே தான் அவர்கள் கொண்டு வந்தார்கள். இந்தத் திட்டத்தின் காரணமாக விவசாயி களுக்கும் ஊக்கம் ஏற்படும். போதுமான உணவு தானியம் நல்ல முறையில் அரசாங்கத்தின் பாதுகாப்பில் இருக்கும். அந்த நம்பிக்கையின் அடிப்படையில் தான் இரண்டு தினங்களுக்கு முன்பாக கனம் அங்கத்தினர் திரு. சீமைச்சாமி அவர்கள் போட்ட கேள்விக்கு பதில் சொல்லும்போது மீண்டும் உணவுப் பிரச்சினை வராமல் பார்த்துக்கொள்ள முடியும் என்று சொன்னேன். உணவு தானியக் கொள்முதல் சம்பந்தப்பட்டவரை தஞ்சை ஜில்லா விவசாயிகள் அளிக்கிற ஒத்துழைப்பைப் பார்க்கிறபோது எனக்கு அந்த நம்பிக்கை இருக்கிறது. அதனால் தான் அவர்களுடைய ஒத் துழைப்புக்கு நன்றி தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதுவும் டாக்டர் நடராஜன் அவர்கள் தன் ஜில்லாவில் இருக்கக்கூடிய பிரச்சினை யைத் தெரிவித்தார்கள். அங்கு என்ன நிலைமை ஏற்பட்டதென்றால் அரிசியை மட்டும் எல்லைவிட்டு எல்லைக்கு அனுப்பினால் போதாது; சாதத்தையே சமையல்செய்து அனுப்பக்கூடிய நிலைமைதான் இருந்தது என்பதையெல்லாம் பத்திரிகைகளிலும் பார்த்தோம். மக்களும் பேசி னார்கள். கன்னியாகுமரி ஜில்லாவிலே இருக்கக்கூடியவர்களுக்கு அதிக மான தொந்தரவு கொடுக்கக்கூடாது என்பதற்காகத்தான் இன்ஃபார்மல் ரேஷனிங் கொடுத்துவிடவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. அதாவது, அரசாங்கமே அங்கேயுள்ளவர்களுக்கு உணவு தானியத்தைக் கொடுப்பதற்கான பொறுப்பை ஏற்றுக்கொள்ளவேண்டும். அப்பொழுது தான் எங்கெங்கே எவ்வளவு தானியம் போகிறது என்பதைக் கணக்குப் பார்க்கமுடியும். ஆகவே, மற்ற எந்த ஜில்லாவுக்கும் இல்லாத ஒரு சலுகை கன்னியாகுமரி ஜில்லாவுக்கு இருக்கிறது. அங்கு இருக்கக்கூடிய வர்களுக்கு இன்ஃபார்மல் ரேஷனிங் கார்டு கொடுத்துவிட வேண்டும். அப்படிக் கொடுத்துவிட்டால் அங்குள்ளவர்கள் அங்கு இருக்கக்கூடிய உபரியை வாங்குவதில் குற்றமில்லை. ஆனால், அப்படி உபரியை வாங்கு வதிலே அதிகச் சிரமங்கள் இருக்குமென்று டாக்டர் நடராஜன் அவர்களும், மற்ற கன்னியாகுமரி ஜில்லாவைச் சேர்ந்த சட்டசபை அங்கத்தினர்களும் முதலமைச்சர் அவர்களிடத்திலே வந்து சொன்னார்கள். அவர்கள் சொன்னதை முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். கம்பல்சரி புரொக்யூர்மெண்ட்க்குப் பதிலாக லேட் லெவி என்று போட்டால் போதும் என்று சொன்னார்கள். ஆகவே, கன்னியாகுமரி ஜில்லாவில் இருக்கக் கூடியவர்கள் இரண்டு விதமான சலுகைகளைப் பெறுகிறார்கள். அவர் களுக்கு இன்ஃபார்மல் ரேஷனிங் முறையில் உணவுதானியம் கொடுப்பது ஒன்று. அதே நேரத்தில் மற்ற மாவட்டங்களில் செய்வது போலவே அங்கேயும் லேட் லெவி மூலம்தான் வாங்குகிறோம். அப்படி இருந்தாலும் கூட, அங்கு செக்போஸ்ட்டுகள் எல்லாம் வைத்து தொந்தரவு செய் கிறார்கள் என்று சொன்னார்கள். மாகினோ அரண் கூடக் கட்டுகிறார்கள் என்று எல்லாம் சொன்னார்கள். அவர்களுடைய வாயிலிருந்தே அந்த வார்த்தை வந்திருக்கிறது. மாகினோ அரண் கட்டப்போவதாக கேரள ராஜ்யப் பத்திரிகைகளிலேகூட விளம்பரப் படுத்தியிருக்கிறார்கள். நாங்கள் அப்படி ஒன்றும் மாகினோ அரண் கட்டவில்லை. அதிகமான அளவுக்கு அதைவிட்டுத் தானியங்கள் போகக்கூடாது என்ற அளவிலே தடை செய் கிறோம். அதைக் கன்னியாகுமரி ஜில்லாவில் இருக்கக்கூடியவர்கள் கஷ்ட மாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். அதேபோன்ற கஷ்டம் வட ஆற்காடு, செங்கல்பட்டு போன்ற ஜில்லாக்களிலும் இருக்கின்றன. ஆனால் அவர்கள் ஒன்றும் அந்தமாதிரிச் சொல்லவில்லை. ஆனால் கன்னியாகுமரி ஜில்லாவிலே அப்படிப்பட்ட ஒரு எரிச்சல் இருக்கிறது. ஏனென்றால் ஒரு குவிண்டால் கதையாக ஏற்பட்டுவிடக் கூடாதே என்பதுதான் அவர்களுக்குப் பயம். அதனால்தான் அந்த ஜில்லாவினுடைய எல்லையைத் தாண்டி விட்டால் லாரி பறிமுதல் போனால்கூட பரவாயில்லை என்று நினைக்கிறார்கள்.

அந்த அளவுக்கு அதிகமான லாபம் அவர்களுக்கு இருக்கிறது. ஆகவே, நான் இந்தச் சட்டசபையிலே சொல்லக்கூடிய உறுதியெல்லாம், அங்கே உள்ளவர்களுக்குக் கஷ்டம் கொடுக்காமல், நல்ல முறையிலே அங்கு இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு, கன்னியாகுமரி ஜில்லா வாசிகளுக்கு நாங்கள் வசதிகள் செய்துகொடுப்போம். இதை டாக்டர் நடராஜன் அவர்களும், மற்ற கன்னியாகுமரி ஜில்லாவைச் சேர்ந்த சட்டசபை அங்கத்தினர்களும் தங்களுடைய பிரச்னையாகக் கருதி அடிக்கடி வலியுறுத்திச் சொல்லி வருகிறார்கள். ஆகவே, அங்கேயுள்ள சங்கடங்களைப் போக்குவதற்கு என்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமென்பதைப் பார்ப்பதற்காக சிவில் சப்ளைஸ் டைரக்டர் அவர்களை அந்த ஜில்லாவுக்குப் போய்வரவேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டிருக்கிறேன். அவர்களும் அங்கே போகப் போகிறார்கள்.

அடுத்தபடியாக, திருநெல்வேலி ஜில்லாவை எடுத்துக்கொண்டால் திரு. கோசல்ராம் அவர்கள் நேற்றுச் சொன்னார்கள். திருநெல்வேலி ஜில்லாவைப் பொறுத்தமட்டில், நீங்கள் கவலையே படவேண்டாம், அங்கு எவ்வளவு கொள்முதல் செய்யவேண்டுமென்று அரசாங்கம் நிர்ணயம் செய்திருக்கிறதோ அந்த அளவுக்கு லெவி முறையிலே நாங்கள் 15,000 டன் வாங்கித் தருகின்றோம் என்று சொன்னார்கள். ஆனால் அது நடைமுறையில் எப்படி எப்படி இருக்கும் என்பதைப் பார்த்துத்தான் சொல்ல முடியும். திருநெல்வேலி ஜில்லாவில் இருக்கக்கூடியவர்களுக்கு இந்த வருஷம் பருவ மழை தவறியதால் ஏற்பட்ட கஷ்டங்கள் எல்லாம் அரசாங்கத்திற்குத் தெரியும். ஆகவே, அங்கே இருக்கக்கூடியவர்களுக்கு, ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புக்கள் கொடுக்கக்கூடிய முறையிலே திட்டங்கள் போடப்படும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

தஞ்சை மாவட்டம், இன்னும் இரண்டொரு மாவட்டங்களைத் தவிர மற்ற மாவட்டங்களில் வாங்கக்கூடிய தானியங்கள் எல்லாம் அந்த மாவட்டங்களுடைய தேவைக்காகத்தான் வாங்கப்படுகின்றன. கன்னியாகுமரி, திருநெல்வேலி, இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களில் வாங்கக்கூடியதெல்லாம் அந்த மாவட்டங்களின் தேவைக்காகவே வைத்துக்கொள்கிறோம். அந்த மாவட்டங்களிலே வாங்கக்கூடிய நெல் வேறு எந்த மாவட்டத்திற்கும் போகாது. நேற்றைய தினம் திரு. கோசல்ராம் அவர்கள் பேசும்பொழுது 10,000 டன் வாங்கித் தருகிறோம் என்று சொன்னார்கள். ஆனால் அரசாங்கம் மாதம் ஒன்றுக்கு 10,000 டன் கொடுக்கவேண்டும் என்றும் சொன்னார்கள். எப்படி வாங்கிக்கொடுக்க முடியும்? திருநெல்வேலி ஜில்லா சென்னை நகரம் மாதிரி இல்லையே. அங்கே உற்பத்தி நடந்து கொண்டுதானே இருக்கிறது. அங்கே பம்புசெட் சாகுபடி, மற்ற சாகுபடி எல்லாம் இருக்கின்றன. ஆகையால் அதையெல்லாம் கணக்குப் பார்த்தால் திருநெல்வேலி ஜில்லாவில் கஷ்டம் இருக்கிறது என்பதை அரசாங்கம் உணர்ந்திருக்கிறது. திருநெல்வேலி ஜில்லாவில் கஷ்டம் இருக்கிறது என்பதைத் தொடர்ந்து நான் சொல்லி வருகிறேன். அதற்காகத்தான் இந்தச் சலுகைகள் எல்லாம் கொடுக்கப்படுகின்றன. ஆகையினால், இந்தச் சந்தர்ப்பத்திலே எல்லா மாவட்டங்களிலும் அங்கங்கே இருக்கக்கூடிய உபரி தானியத்தை வாங்குவதற்கு முயற்சி எடுத்துக்கொண்ட ஜில்லா அதிகாரிகள், அதைத் தொடர்ந்து நிர்வாகத்தைப் பார்த்து வருகின்ற மாநில ரீதியாக உள்ள மற்ற சிவில் சப்ளைஸ் கமிஷனர், மற்றவர்கள் எல்லோரும் நல்ல முறையில் முயற்சி எடுத்துக்கொண்டதற்காக நான் என் பாராட்டுதலைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். விசேஷமாக தஞ்சை ஜில்லா விவசாயிகளுக்கு என்னுடைய பாராட்டுதலைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் அவர்கள் மிகத் தாராளமாகக் கொடுத்தார்கள். அதேபோல், செங்கல்பட்டு, வட ஆற்காடு ஜில்லாவில் உள்ளவர்களும் இப்பொழுது தாராளமாகக்கொடுத்து வருகிறார்கள். இராமநாதபுரத்திலிருந்துகூட திரு. சீமைச்சாமி அவர்கள் இந்தத் தடவை அதிகமான தொந்திரவு கொடுக்கவில்லை. காரணம் அங்கேயிருக்கிற உபரியைத்



தானே வாங்குகிறோம். ஆகவே, எல்லோருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

***கனம் திரு. பூ. கக்கன்** : மதிப்பிற்குரிய கனம் சபாநாயகர் அவர்களே, நேற்றைய தினம் இந்த முக்கியமான, பெருமை பொருந்திய விவசாய மானியத்தின்கீழ் பல அங்கத்தினர்கள் கலந்துகொண்டு சொற்பொழிவு ஆற்றினார்கள். சில நல்ல ஆலோசனைகளும் கூறியிருக்கிறார்கள் என்பதையும் நான் ஒத்துக்கொள்கிறேன். அந்த நல்ல ஆலோசனைகள் எல்லாம் அரசாங்கத்தினால் பரிசீலிக்கப்படும். பரிசீலிக்கப்பட்டு, அதன் மூலமாக பலன் மக்களுக்குக் கிடைக்கும்பொழுது அரசாங்கம் மிகவும் சந்தோஷம் அடையும் என்பதையும் இந்த சந்தர்ப்பத்திலே சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

உணவு உற்பத்தியைப் பொறுத்தமட்டில் நம்முடைய மாநிலத்திலே தொடர்ந்து வெற்றியைக் கண்டுகொண்டு வருகிறோம் என்பதை மதிப்பிற்குரிய அங்கத்தினர்களுக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆனால் ஒவ்வொரு வருடமும் நாம் டார்ஜெட் ஃபிக்ஸ் (Fix) பண்ணும்பொழுது அடைந்திருக்கிற (Achievement) அச்சீவ்மெண்ட்டைப் பார்ப்பதைவிட, மொத்தமாக ஐந்து வருஷங்களிலும் நாம் கொண்டிருக்கிற லட்சியத்தை எவ்வாறு அடையவேண்டுமென்பதைத்தான் பார்க்க வேண்டும். அச்சீவ்மெண்ட் குறைந்துவிட்டால் நாம் ஒன்றுமே செய்யவில்லை என்று சொல்வதில் அர்த்தமேயில்லை. திட்டம் என்பதே ஐந்து வருஷங்களில் எவ்வாறு வெற்றி காணமுடியும், என்ன வெற்றி கண்டிருக்கிறோம் என்பதையெல்லாம் பார்க்கவேண்டும் என்பதுதான். அப்படிப் பார்த்தால் நம்முடைய மாநிலத்திலே உணவு உற்பத்தித் திட்டத்தின்கீழ் 1961-ல் நம்முடைய டார்ஜெட் 3·1 டன் என்று போட்டிருந்தாலும், அச்சீவ்மெண்ட் 2·27 டன் ஆகியிருக்கிறது. 1963–64-ல் பார்க்கும்போது 2·26 என்று நாம் போட்டிருந்தாலும் 2·70 ஆகியிருக்கிறது. கூடுதலாகி இருக்கிறது. பொதுவாகப் பார்க்கும்போது "அச்சீவ்மெண்ட்" ஒரு வருடத்தில் குறைந்திருக்கிறது என்பதை நான் ஒத்துக் கொண்டாலும் இதர வருடங்களில் பொதுவாகப் பார்க்கும்போது திட்ட கால இறுதியில் நாம் போட்ட திட்டம் வெற்றிகரமாக இருக்கும் என்று நம்பலாம். அதிகாரிகளின் ஒத்துழைப்புடனும், பொதுமக்களின் ஒத்துழைப்புடனும் எவ்வளவு தூரம் உணவு உற்பத்தியைப் பெருக்க ஏற்பாடு செய்ய வேண்டுமோ அதைச் செய்ய அரசாங்கம் முன் வரும். எப்போதுமே நினைத்தமாதிரி எதுவும் நடந்து விடாது. நினைப்பதை நடைமுறைக்குக் கொண்டு வர அரசாங்கம் பாடுபடும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

உணவு உற்பத்தியைப் பொறுத்தமட்டும் அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டுமென்றால் பல வழிகளில் ஒத்தாசை தேவையாக இருக்கிறது. மண்வளம் நன்றாக இருக்கவேண்டும்; பருவ மழை நன்றாக இருந்து பாசன வசதி இருக்கவேண்டும். பொறுக்கு விதைகள் நல்ல முறையில் கொடுக்கப்படவேண்டும். சிறந்த விவசாயக் கருவிகளை விவசாயப் பெரு மக்களுக்குக் கொடுக்கவேண்டும். அதே சமயத்தில் பயிருக்கு நோய் வராமல் பயிர்ப் பாதுகாப்பு கொடுக்கவேண்டும். அதே சமயத்தில் விவசாயிகளுக்குக் கடன் உதவி செய்யவேண்டும். விவசாயப் பெருமக்களில் பெரும்பகுதியினர் ஏழை மக்கள்தான். அவர்கள் உற்பத்தி செய்யக் கூடிய தானியத்திற்கு நல்ல விலை கிடைக்கக்கூடிய வகையில் மார்க்கெட்டிங்குக்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டும். இந்த முறையில் அரசாங்கம் விவசாயிகளுக்கு உதவி செய்ய பாடுபட்டு வருகிறது. மண்வளப் பாதுகாப்பைப் பொறுத்தமட்டிலும் நம்முடைய மாநிலத்திலே பல பரிசோதனை நிலையங்கள் ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இதெல்லாம் முன்பு அச்சடித்துக் கொடுக்கப்பட்ட புத்தகத்தில் இருக்கிறது. ஆடுதுறை, கோயம்புத்தூர், கடலூர், கோயில்பட்டி ஆகிய இடங்களில் மண்வளப் பரிசோதனை நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. மேலும் மூன்று இடங்களில், மதுரை, வட ஆற்காடு, செங்கற்பட்டு ஆகிய ஜில்லாக்களில் மண்வளப் பரிசோதனை நிலையங்களை ஏற்படுத்தவேண்டு

மென்று அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது. திருநெல்வேலி மக்கள் கோயில்பட்டிக்கு வந்து மண்ணைப் பரிசோதனை செய்து கொள்ளலாம். அதே போன்று ஒவ்வொரு ஜில்லாவில் உள்ளவர்களும் அவர்களுடைய ஜில்லாவிலேயே உள்ள பரிசோதனை நிலையத்தில் போய்ப் பரிசோதனை செய்து கொள்ள வழி செய்யும் வகையில்நான் தற்போது மேலும் மூன்று இடங்களில், மதுரை, வட ஆற்காடு, செங்கற்பட்டு ஜில்லா ஆகிய இடங்களில் பரிசோதனை நிலையங்களை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டிருக்கிறது. அதை நிறைவேற்ற அரசாங்கம் முன் வரும் என்று இந்தச் சமயத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

பாசன வசதியைப் பொறுத்தமட்டிலும் உணவு அமைச்சர் அவர்கள் மானிய விவாதத்தின்போது சொல்லியிருக்கிறார்கள். நாம் அநேகமாகப் பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களை முடித்து விட்டோம். மத்தியதர, சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை மத்திய சர்க்கார் கொடுக்கின்ற உதவியைக் கொண்டு உணவு உற்பத்தியைப் பெருக்கும் வகையில் கண்மாய்களை ஆழப்படுத்துதல், மடைகளைச் சரி செய்தல், புதிய குளங்களை வெட்டுதல், போன்ற திட்டங்கள் மேற்கொள்ளப்படும். அந்நிய ஆட்சிக் காலத்தில் ஜமீன்தார்கள் கையில் இருந்த நிலப் பகுதியில் இருந்த குளங்கள் எல்லாம் மேடிட்டுக் கிடக்கின்றன. மடைகள் எல்லாம் கூட சரிவர இல்லை. மத்திய சர்க்கார் உதவியைக் கொண்டும் உணவு உற்பத்தி அதிகாரிகளைக் கொண்டும் பஞ்சாயத்து மூலமாகவும் இவற்றை யெல்லாம் எவ்வளவு தூரம் செப்பனிட முடியுமோ அவ்வளவு தூரம் செப்பனிட ஏற்பாடுகளைச் செய்து உணவு உற்பத்தியைப் பெருக்க அரசாங்கம் பாடுபட்டு வருகிறது என்பதை இந்தச் சமயத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மதிப்புக்குரிய சகோதரர்கள் ரசாயன உரங்களைப் போடுவதால் அவ்வளவு முன்னேற்றத்தைக் கண்டுவிட முடியாது என்று சொன்னார்கள். மதிப்புக்குரிய சீமைச்சாமி அவர்களும், கரியமாணிக்கம் அம்பலம் அவர்களும் அவ்வாறு குறிப்பிட்டார்கள். அதை நான் ஒத்துக் கொள்ள முடியாது. ரசாயன உரங்களைப் போட்டதன் காரணமாகத்தான் எல்லா ஜில்லாக்களிலும் நல்ல விளைச்சல் கண்டிருக்கிறது. சட்டசபை அங்கத்தினர்களில் பெரும்பகுதியினர் விவசாயப் பெருமக்கள்தான். ரசாயன உரத்தைப் போடுவதன் காரணமாக உற்பத்தி அதிகரிக்கிறதா அல்லது குறைகிறதா என்பதை முடிவு செய்யும் தீர்ப்பை அவர்களுக்கே விட்டு விடுகிறேன். தஞ்சையில் பாக்கேஜ் ஸ்கீமில் அதிகப்படியாக உற்பத்தியான காரணத்தால் தான் பஞ்ச காலத்தில் டன் டன்னாக அரிசியை மக்களுக்குக் கொடுக்க முடிந்தது. இதையெல்லாம் கனம் அங்கத்தினர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ரசாயன உரத்தால் பலன் இல்லை என்று சொல்லக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சீமைச்சாமி அவர்கள் பஞ்சாயத்து யூனியன் சேர்மனாகப் பணியாற்றினார்கள். அவர்கள் ரசாயன உரத்தால் நன்மை இல்லை என்று கருதி ரசாயன உரங்களை உபயோகப்படுத்தாமலே விட்டு விட்டார்களோ என்ற சந்தேகம் கூட வருகிறது. ரசாயன உரத்தின் மூலமாக அதிக நன்மை கிடைத்திருக்கிறது என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

விவசாயப் பெருமக்களுக்குக் கால்நடை மேய்ச்சல் தரை ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது. "மேய்சல் தரைகளைச் சிலர் ஆக்கிரமித்து விட்டார்கள்; பழச் செடி வைக்க பஞ்சாயத்திலிருந்து எடுத்துக்கொண்டு விட்டார்கள்; அதற்குத் தக்க ஏற்பாடு செய்யவேண்டும்" என்று மதிப்புக்குரிய கரியமாணிக்கம் அம்பலம் அவர்கள் கூறினார்கள் இதைப் பற்றி அச்சடித்துக் கொடுத்திருக்கும் புத்தகத்தைப் பார்த்தாலே தெரியும்.

தழை உர உற்பத்தி திருப்திகரமாக இல்லாமல் இருப்பதைத் தெரிந்து, அதற்கென ஒரு முன்னோடித் திட்டம் குறிப்பிட்ட சில கிராமப் பஞ்சாயத்துக்களில் 1963-64-ல் ஆரம்பிக்கப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட





இடங்களில் ஒவ்வொன்றுக்கும் கிணறு வெட்டவும், பம்பு செட்டுகள் பொருத்தவும் ரூ. 5,500 நீண்ட கால உதவி அளிக்கப்படுகிறது. குறைந்த காலக் கடனாக வருடம் ஒன்றுக்கு ரூ. 1,000 அளிக்கப்படுகிறது. விவசாய மேஸ்திரி ஒருவருடைய சேவையையும் இனமாக அளித்து தழை உர விதைகள் உற்பத்தி செய்யப்படுகிறது. இத் திட்டத்தை மேலும் நீடித்து 1965-66-ல் 0 புதிய இடங்களில் அமுலாக்கப்படும்.

கால்நடைகளுக்குத் தீவனம் கிடைப்பதற்கும் பரிட்சார்த்தமாகச் சில ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள். அவை எல்லாம் சீக்கிரத்தில் அமுலாக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். கால்நடைகள் தீவிரத் திட்டத்தின் மூலமாக சீவேஜ் ஃபார்ம் எங்கெல்லாம் இருக்கிறதோ அங்கெல்லாம் புல் வளர்க்கப்பட்டு நகரத்தில் இருக்கும் மாடுகளுக்கும் நல்ல தீனி கிடைக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இப்போது பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் பொறுப்பை வயதில் முதிர்ந்தவர்கள் ஏற்றுக் கொண்டிருப்பதாகக் குறிப்பிட்டார்கள். நான் பஞ்சாயத்து யூனியன் தலைவர்களைக் கேட்டுக் கொள்வது, கால்நடைகளுக்கு என்று ஒதுக்கப்பட்ட இடங்களில் ஆடுமாடுகளுக்குத் தீனி கிடைக்கும் வகையில் அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டுமென்பதுதான். அந்த நிலங்களையெல்லாம் ாரி செய்து விடுகிறார்கள், பழச் செடி வைத்து விடுகிறார்கள் என்று சொன்னார்கள். மேய்ச்சல் தரைகளில் அந்த மாதிரிப் பழச் செடிகளை வைக்காது நல்ல முறையில் மேய்ச்சலுக்குத் தகுந்தவாறு அவற்றை வைத்துக் கொள்ள முன் வரவேண்டுமென்று இந்தச் சமயத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

நேற்றைய தினம் அங்கத்தினர்கள் பேசும்போது கிணறு வெட்டுவதிலே ரிவர் பம்பிங் ஸ்கீமில் பொதுவாக கிணறு வெட்டுவது பற்றிப் பலர் கூறினார்கள். ஸ்ரீமதி பொன்னம்மாள் அவர்களும் இதர அன்பர்களும் கூறினார்கள். குறிப்பாக, அந்தத் திட்டங்களை எடுத்துப் பார்ப்போமானால் பொதுவாகக் கிணறு வெட்டும்போது நூற்றுக்கு நூறு அதிக லாபம் இல்லாவிட்டாலும் ரொம்ப நஷ்டம் வந்து விடக்கூடாது. உணவு உற்பத்தியில் லாப நஷ்டத்தைப் பார்க்காமல் எவ்வளவு தூரம் விவசாயிகளுக்கு நன்மை செய்யவேண்டுமென்ற முறையிலேதான் பார்க்கிறோம். பொதுவான கிணறு வெட்டும்போது அதிலே அதிகமான தண்ணீர் இருந்தால்தான் பயன்படும். இல்லாவிட்டால் பயன்படாது. எங்கெல்லாம் பயன்படும் முறையிலே இருக்கிறதோ அங்கெல்லாம் கோவாப்பரேட்டிவ் சொசைட்டிஸ் மூலமாக பஞ்சாயத்து அதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். பஞ்சாயத்துக்கள்கூட அந்த மாதிரி நன்மை கிடைக்கும் என்ற வகையில் அந்தப் பொறுப்பை எடுத்துக் கொள்ள முன் வந்தால் அரசாங்கம் உதவி செய்யும். அரசாங்கம் அளிக்கக்கூடிய கடன் உதவிக்கு வட்டி விகிதம் நிர்ணயம் பண்ணியிருக்கிறார்கள். அது அதிகமான வட்டியாக இருந்தால் அதைக்கூடப் பரிசீலிக்கலாம். சர்க்கார் போட்டிருக்கும் 5½ த விகித வட்டியைக் கொஞ்சம் குறைத்தால்கூட நல்லது என்று கனம் முதலமைச்சர் அவர்களை வேண்டிக் கொள்கிறேன்.

வட்டி விகிதாசாரம் பற்றி பரிசீலனை செய்து உணவு உற்பத்தியைப் 10-
பெருக்க அரசாங்கம் முன்வரும். வட்டிக்கு வட்டி வாங்கக் கூடாது a.m.
என்பதுதான் என் அபிப்பிராயம். மதிப்பிற்குரிய சீமைச்சாமி அவர்களும் இதர அன்பர்களும் சொல்லும்போது லட்சிய அளவு போட்டது சரியல்ல என்று சொன்னார்கள். எப்படி ரசாயன உரங்களைப் பெறப் போகிறீர்கள், எப்படி உற்பத்தியைப் பெருக்கப் போகிறீர்கள் என்று கேட்டார்கள். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம், திட்ட வளர்ச்சி என்ற புத்தகத்தைப் பார்த்தால் தெரியும். இரண்டாம் பக்கத்தில் இருக்கிறது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முடிவில் உணவு உற்பத்தியின் அளவு இம் மாநிலத்தில் 53·14 லட்சம் டன்களாகும். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கூடுதல் உணவு உற்பத்தியின் சாதனங்கள் 16·50 லட்சம் டன்கள் வரை இருக்குமென்று எதிர்பார்க்கப்பட்டு திட்ட இறுதியில் உணவு உற்பத்தியின் அளவு 69·64 லட்சம் டன்களாக நிர்ணயிக்கப்பட்டது. இந்த அதிக உற்பத்தி குறித்து புத்தகத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. போது

ா ரசாயன உரங்கள் கிடைக்காததாலும், பாதகமான பருவங்களாலும் ாருவது திட்ட இறுதியில் எதிர்பார்த்த கூடுதல் உணவு உற்பத்தியின் ஊ 13·93 லட்சம் டன்களாக இருக்கும் என்று மதிப்பிடப் றது. பெரிய நீர்ப்பாசனம் ·51 லட்சம் டன்கள், சிறிய நீர்ப்பாசனங்கள் லட்சம், மண்வளப் பாதுகாப்பும் நில அபிவிருத்தியும் ·65 லட்சம், பன உரங்கள் 7·90 லட்சம் என்று முதலில் போட்டிருந்தாலும் 4·30 ம்தான் என்று மறு பரிசீலனை செய்து போட்டிருக்கிறார்கள். இந்த ரத்தையும் முன்னதாகக் காட்டியிருந்தால் நன்றாகயிருக்கும் என்று புகிறேன்.

டாக்டர் பா. நடராஜன் : புத்தகத்தில் 11 பாயின்ட் ஸம்திங்க்தான் க்கிறது.

திரு. கரு. சீமைச்சாமி : மூன்றாவது திட்ட இறுதிக்குள் 11 லட்சம் 'று வைத்துக் கொண்டாலும் நான்காவது ஆண்டில் 7 லட்சம்தான் பத்தியாகிறது. ஒரு வருடத்தில் 4 லட்சம் உற்பத்தியாகும் என்று ர்பார்க்கிறீர்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : முழு விவரத்தையும் கொடுத்து விடுகிறேன். எதிர்பார்த்த உணவு உற்பத்தி 69·64 லட்சம் டன். தற்போது அந்த அளவு 67·07 லட்சம் டன்களாக இருக்கும் என்று மதிப்பிடப்படுகிறது. இந்த அளவிலும் தற்போது எற்பட்டிருக்கும் ரசாயன உரப் பற்றாக்குறை, மற்றும் பாதகமான பருவம் ஆகியவற்றையும் கருத்தில் கொண்டால், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில் மொத்த உணவு உற்பத்தி 65·00 லட்சம் டன்களாக இருக்கும். இது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில் இருந்த உற்பத்தி அளவைக் காட்டிலும் 12·00 லட்சம் டன்கள் அதிகமாகும். 1963-64-ம் ஆண்டு இறுதியில் கூடுதல் உணவு உற்பத்தி சாதனங்களின் அளவு 8·07 லட்சம் டன்களாகும். அதாவது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் இருந்ததை விட மேற்படி ஆண்டின் அளவு 8·07 லட்சம் டன்கள் அதிகமாகும். இதைக் கவனிக்கும்போது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் 65 லட்சம் டன்கள் உணவு உற்பத்தியை அடைவது என்பது கடினம் அல்ல என்று அரசாங்கம் கருதுகிறது. மதிப்பிற்குரிய நடராஜன் அவர்கள் சொன்ன படி மத்திய சர்க்காரிலிருந்து எவ்வளவு தூரம் அம்மோனியம் சல்பேட் போன்ற உரங்கள் பெற முடியுமோ அவற்றைப் பெற்று உற்பத்தியை அதிகமாகப் பெருக்க அரசாங்கம் முன்வரும் என்று தெரிவித்துக் கொள் கிறேன். நமக்குத் தேவையான 5·83 லட்சம் டன் வழங்க வேண்டு மென்று மத்திய அரசாங்கத்தை இந்த அரசாங்கம் கேட்டிருக்கிறது. அதிகமாக வேண்டுமானால் அதையும் கேட்க அரசாங்கம் முன்வரும். மற்ற மாநிலங்களைப் பார்க்கும்போது இந்தியாவிலேயே நம் மாநிலத்தில்தான் இரண்டாவதாக அதிகப்படி உரங்களை உபயோகிப்பது. இந்தியாவில் எக்க ருக்கு சராசரி உபயோகிப்பதைப் பார்க்கும்போது தமிழகத்தில் அதற்கு மூன்று மடங்கு ரசாயன உரத்தை உபயோகித்து வருகிறோம். எவ்வளவுக் கெவ்வளவு இரசாயன உரத்தை உபயோகிக்கிறோமோ அந்த அளவு உற்பத்தியும் அதிகமாகும் என்பதில் சந்தேகமில்லை. ஆகவே அதிகப் படியான ரசாயன உரத்தைப் பெறுவதற்கு இந்த அரசாங்கம் எல்லா நடவடிக்கைகளும் எடுத்து வருகிறது. மத்திய அரசாங்கம் நம்மோடு கூடுமான வரையில் ஒத்துழைக்கிறது. உணவு உற்பத்தியைப் பெருக்க மத்திய அரசாங்கத்திலிருந்து ரசாயன உரம் எந்த அளவு வாங்க முடியுமோ அந்த அளவு வாங்குவதற்கு ஏற்பாடு செய்யலாம். முன்பு நாம்தான் அதை உபயோகிப்பதில்லை என்ற நிலை இருந்தது. இப்போது விவசாயிகள் அதிகமாக ரசாயன உரத்தை உப யோகிக்க முன் வருகிறார்கள். இப்போது விவசாயிகள் எங்களுக்கு ரசாயன உரம் கிடைக்கவில்லையே என்றுதான் சொல்கிறார்கள். ஆகவே ரசாயன உரம் உபயோகித்து உற்பத்தி பெருக்கப்பட்டு வருகிறது. உற்ற சமயத்தில் கிடைப்பதில்லை என்று சில கனம் உறுப்பினர்கள் கூறினார்கள். கிடைத்த வுடன் காலாகாலத்தில் கொடுக்க வேண்டுமென்றுதான் கொடுக்கப்பட்டு வருகிறது. திரு. கரியமாணிக்கம் அம்பலம் அவர்கள் விலை நிர்ணயம்





செய்யவில்லை என்றார்கள். விலை நிர்ணயம் செய்து உடனடியாக கொடுக்க வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் கட்டளை. ஒரு சில இடங்களில் அதிகாரிகள் தவறு செய்வதினால் அது அரசாங்கத்தைப் பாதிக்கிறது. திரு. மணி அவர்கள், அமெரிக்காவிலிருந்து வந்த அன்பர் கள் முதலாளி தொழிலாளி தாரதம்யம் பற்றி சொல்லியிருப்பதாகச் சொன்னார்கள். குத்தகைதாரர்களுக்கு வசதி கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். தொழிலாளிகளின் கஷ்டத்தை நீக்க வேண்டும், தொழி லாளிகள் நிலச்சுவாந்தார்கள் இவர்கள் ஐக்கியமாக இருக்கவேண்டும், உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்றுதான் நிலச் சீர்திருத்தச் சட்டம் செய்ய திட்டமிட்டது. அவர்கள் சொல்வதற்கு முன்பே நாம் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அதன் காரணமாக சில திட்டங்கள் எல்லாம் கொண்டு வரப்பட்டன. குத்தகைதாரர்களுக்கு நியாயமான முறையில் அவர்களது உழைப்பிற்குத் தகுந்த ஊதியம் கிடைக்க அர சாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது. மேலும் செய்ய ஏதுவாக இருக்கிறது. நிறைவேற்றிய சட்டங்கள் சரிவர அமுல் நடத்தப்படுகின்றன. குறைகள் இருந்தால் ஆர்.டி.ஓ.—விடம் பெட்டிஷன் போட வேண்டும். ஆனால் அப்படி சிலர் போடுவதில்லை. நிலச்சுவாந்தாரரும் குத்தகைதாரரும் ஒத்துப் போனால் நாம் என்ன செய்ய முடியும ? சில சமயங்களில் அவர்கள் ஒத்துப் போய்விடுகிறார்கள், நிலம் கிடைக்காதோ என்று. அப்படியிருக்கும் போது நாங்கள் ஒன்றும் சொல்வதற்கில்லை. குறிப்பிட்ட அதிகாரிகளிடம் சென்று அவர்கள் குறைகளை நிவர்த்தி செய்து கொள்ளலாம். காப் பிட்டல் அவுட்லே-யில் ஒதுக்கிய பணம் போதாது என்று மணி அவர்கள் சொன்னார்கள். திட்டம் போடுகிறோம், தொகை முன்னதாகவே செலவாகி விட்டால் இருக்கும் தொகையை வைத்து தொகை ஒதுக்குகிறோம். மேலும் தேவைப்பட்டால் இதர ஹெட்வில் செலவழிக்காமல் இருந்தால் அதிலிருந்து பெற்றுக் கொள்ள வழியிருக்கிறது. ஒரு திட்டம் போட்டு நிதி ஒதுக்குகிறோம். மேலும் நிதி வேண்டுமென்றால் நிதி இலாகாவைக் கேட்டு மேலும் ஒதுக்க அரசாங்கம் முன் வரும்.

கம்போஸ்ட் உரத்தைப்பற்றி திரு. மணி அவர்கள் சொன்னார்கள். குறிப்பாக கழிவுப் பொருட்களை எல்லாம் ஒன்று சேர்த்து வைத்து, அதை உபயோகப்படுத்துவதின் மூலமாக உணவு உற்பத்தியை பெருக்கவேண்டும் என்று தான் நாம் திட்டம் போட்டிருக்கிறோம். பஞ்சாயத்துக்களை நாம் அமைத்ததே உணவு உற்பத்தியை அதிகமாக்கவேண்டும் என்பதற்காகத் தான். குறிப்பாக நமது நாட்டில் பஞ்சாயத்துக்களின் மூலமாக நல்ல முறையில் இது போன்ற கம்போஸ்ட் உரத்தை தயார் செய்யவேண்டும். அதன் மூலமாக உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டும் என்றுதான் அரசாங்கம் திட்டமிட்டு, இது போன்று கம்போஸ்ட் உரத்தை தயார் பண்ணுவதற்கு வழிவகை செய்திருக்கிறது. இதற்காக ஒவ்வொரு பஞ் சாயத்திலும் குழிகள் தோண்டி அவற்றில் கழிவுப் பொருட்களை போட வேண்டும் என்றும், இதை கவனிப்பதற்கு கிராம சகாயக்குகளையும் நியமித் திருக்கிறோம். அது மட்டுமல்ல, பஞ்சாயத்துத் தலைவர்கள், பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள், கமிஷனர்கள் இவர்கள் எல்லோரும் இதைப்பற்றி கவனித்து வருகிறார்கள். இதைக் கவனிப்பதே இல்லை என்று மணி அவர்கள் சொன்னார்கள். இதை கவனிப்பதற்கு என்று இலாகா அளவில், ஸ்தலத்திலேயே அக்ரிகல்சர் எக்ஸ்டென்ஷன் ஆபீஸர் இருக்கிறார். அவர் கவனிக்கவில்லை என்றால் டி.எ.ஓ. இருக்கின்றார். இது தவிர பிளாக் டெவலப்மெண்ட் ஆபீஸர் இருக்கிறார். இது தவிர ஃபீல்ட் மான்யுர் ஆபீஸர் இருக்கிறார். எல்லாவற்றிற்கும் மேலாக ஸ்டேட் கம்போஸ்ட் ஆபீஸர் என்று ஒருவர் இருக்கிறார்கள். இத்தனை பேர்களும் இருக் கிறார்கள். இவர்களை எல்லாம் வைத்து நல்ல முறையில்தான் அரசாங்கம் கவனித்துக்கொண்டிருக்கிறது என்பதை கனம் அங்கத்தினர் மணி அவர் களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் எந்த இடத்தி லாவது சரியாக கவனிக்கப்படவில்லை என்று தெரிந்தால் கனம் மணி அவர்கள் அங்குள்ள பி.டி.ஓ. அவர்களிடம் சொல்லலாம். அவர்களுக்கும் இதில் நிறைய பொறுப்பு இருக்கிறது. இன்னின்ன இடத்தில் இன்னின்ன அதிகாரிகள் கவனிக்கவில்லை என்று குறிப்பிட்டுச் சொன்னால் நான் சந்தோஷம் அடைவேன். அதல்லாமல் ஒரே அடியாக பட்ஜெட் சமயத்தில்

வந்து யாருமே இதைக் கவனிப்பதில்லை என்று சொல்வது சரியல்ல, இதில் கனம் அங்கத்தினர் அவர்களுக்கும் முக்கிய பொறுப்பு இருக்கிறது என்பதை கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி ஜில்லாவில், உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காக பல திட்டங்களை நிறைவேற்றவேண்டும் என்று மதிப்பிற்குரிய சிதம்பரநாத நாடார் அவர்கள் சொன்னார்கள். பி.டப்ளியு.டி. மூலமாக பரிசீலனை செய்து அங்கே பல திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது. கன்னியாகுமரி ஜில்லா நம்முடைய தமிழகத்தினோடு சேர்ந்த பிறகு நல்ல முறையில் அந்த வட்டாரத்தில் பல ஒத்தாசை உதவிகளை செய்து, பல பெரிய திட்டங்களை எல்லாம் செய்து கொடுத்திருக்கிறோம். கண்மாய்களை ஆழப்படுத்துகின்ற விஷயத்தில் நமக்கு பல பெரிய மெஷின்கள் தேவையாக இருக்கின்றன. அவைகளை வாங்குவதற்கு அன்னிய செலாவணி தேவைப்படுகிறது. அன்னிய செலாவணி போதிய அளவு கிடைக்காமல் இருப்பதின் காரணமாக நமக்கு தேவைப்படுகின்ற மெஷின்களை எல்லாம் உடனடியாக வாங்க முடிவதில்லை. ஏரிகளை தூர் எடுப்பதற்கு சில ராட்சஸ மெஷின்களை எல்லாம் வாங்க வேண்டும். இதற்காக அன்னிய செலாவணியை நாம் தேடிக்கொள்ள வேண்டியிருக்கிறது. நமது நாட்டுக்கு வேண்டிய அன்னிய செலாவணியை தேடிக்கொள்வதற்காக, அன்னிய நாட்டுக்கு நமது பொருட்களை அனுப்புகிறோம். தற்போது நமக்கு 50 பவர் டிரில்ஸ் வாங்கவேண்டும் என்பதற்காக மத்திய அரசாங்கத்திடம் கேட்டிருக்கிறோம். மத்திய அரசாங்கத்தில் உணவு அமைச்சராக இருக்கும் நமது மதிப்பிற்குரிய ஸி. சுப்பிரமணியம் அவர்களைப் பார்க்கும்போதெல்லாம் இதை நாங்கள் சொல்லிக்கொண்டிருக்கிறோம். அவர்கள் இந்தியா முழுவதிற்கும் சமமாக நடந்து கொள்ள வேண்டும். நமது மாநிலத்திற்கு மட்டும் அதிகப்படியாக கொடுத்துவிட முடியாது. நமக்கு தேவைப்படுகிற புல் டோஸர், பவர் டிரில்ஸ் இவைகளை எல்லாம் வாங்குவதற்கு மத்திய அரசாங்கம் நமக்கு உதவி புரிந்து கொண்டிருக்கிறார்கள். அதன் மூலம் நமது விவசாயத்தைப் பெருக்குவதற்கு பல நன்மைகள் கிடைக்கும் என்பதை சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்ததாக, மதிப்பிற்குரிய திரு. அர்த்தநாரீசுவர கவுண்டர் அவர்கள், பேசும்போது, விதைப் பண்ணைகளைப்பற்றி குறிப்பிட்டார்கள். சாதாரணமாக விதைப் பண்ணையிலிருந்து விதைகளை கொடுக்கும்போது, அதை நன்றாக பரிசீலித்து, சரியாக முளைக்கிறதா இல்லையா என்பதை பரிசீலனை செய்து பார்த்த பின்னால்தான் விவசாயப் பெருமக்களுக்கு கொடுக்கவேண்டும் என்று அரசாங்கம் கட்டளையிட்டிருக்கிறது. அவர்கள் பொதுவாக சொன்னார்கள். அப்படியில்லாமல், எந்தப் பண்ணையில் யாரிடத்தில் எப்போது வாங்கினார்கள் என்பதைச் சொன்னால் ஏன் அவ்வாறு கொடுக்கப்பட்டது என்பதைப்பற்றி என்னால் விசாரிக்க முடியும் . . . . . .

**திரு. கே. எஸ். அர்த்தநாரீஸ்வர கவுண்டர்:** கனம் சபாநாயகர் அவர்களே, என்னுடைய ஊரின் பக்கத்திலுள்ள அம்மாப்பேட்டை பிர்க்காவில் இருக்கும் பஞ்சாயத்து யூனியனில் ஐந்து மூட்டை விதைகள் வாங்கினேன். அதை 50 செண்ட் நிலத்தில் போட்டும் கூட சரியாக வரவில்லை. இதை நான் என்னுடைய சொந்த அனுபவத்திலிருந்து சொல்கிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன்:** கனம் அங்கத்தினர் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டபோது அந்த விதைப் பண்ணையில் விதைகளை பரிசீலனை செய்து பார்த்தார்களா என்று கேட்கவேண்டும். இதையெல்லாம் நான் நிச்சயமாக விசாரிக்கிறேன். ஏதோ சொல்லி தட்டிக்கழிக்க நான் தயாராக இல்லை. ஆனால் இதை வைத்துக்கொண்டு எல்லா இடத்திலும் இப்படித்தான் இருக்கும் என்று சொல்லிவிட முடியாது. . . .

**புலவர் கா. கோவிந்தன்:** இது ஒரு இடத்தில் மட்டுமல்ல, எல்லா இடங்களிலும் இப்படித்தான் இருக்கிறது.





**கனம் திரு. பூ. கக்கன்:** எல்லா இடங்களிலும் இப்படித்தான் இருக்கிறது என்று சொல்லிவிட முடியாது. ஒன்றிரண்டு இடங்களில் இருக்கிறது என்று குறிப்பிட்டு சொன்னால் அதை நான் விசாரிக்கிறேன். விதை வழங்கும்போது பரிட்சார்த்தமாக பார்த்து பரிசீலனை செய்த பின்னால் தான், அதாவது விதை முளைக்கிறதா இல்லையா என்பதை பார்த்தபின்னால் தான் விதைகள் வழங்கப்படவேண்டும் என்று அரசாங்கம் கட்டளையிட்டிருக்கிறது. ஒருவேளை பஞ்சாயத்துக்கள் தேர்ந்தெடுத்து அனுப்புகின்ற கிராம சகாயக்குகளின் மூலம் ஏதாவது தில்லுமுல்லுகள் ஏற்பட்டிருக்கின்றதா என்பதையும் விசாரிக்கவேண்டும். இப்போது இம்மாதிரியான தவறுதல்கள் ஏற்படக்கூடாது என்று அரசாங்கம் தக்க ஏற்பாடு செய்திருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மதிப்பிற்குரிய அங்கத்தினர்கள் சிலர், ஸீட் கார்ப்பரேஷன் ஏற்படுத்த வேண்டும் என்று சொன்னார்கள். அதைப்பற்றியும் அரசாங்கம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது என்பதை, இந்த சபையில் சொல்லிக்கொள்கிறேன். இப்போது மத்திய அரசாங்கத்தின் மூலமாக கோயம்புத்தூரில் டெஸ்டிங் லாபரட்டரி வைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. உற்பத்தி செய்கின்ற விதைகளை கோயம்புத்தூருக்கு அனுப்பி டெஸ்ட் செய்த பின்னால் தான் விவசாயிகளுக்கு கொடுக்கவேண்டும் என்று அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. முக்கியமாக அரசாங்க விதைப் பண்ணைகளில் உற்பத்தி செய்கின்ற விதைகளை கோயம்புத்தூரிலுள்ள டெஸ்டிங் லாபரட்டரிக்கு அனுப்பிவைத்து பரிசீலனை செய்தபின்னால் தான் இனி விவசாயப் பெருமக்களுக்கு வழங்கப்படும் என்பதைக் கூறிக்கொள்கிறேன். நமது மாநிலத்திற்கு மட்டும் நாம் திட்டமிட்டபடி 210 விதைப் பண்ணைகள் ஏற்படுத்த வேண்டும். அதில் இன்னும் 10 பண்ணைகள் தான் ஏற்படுத்த வேண்டியிருக்கிறது. அரசாங்கம் நடத்துகின்ற எல்லா விதைப் பண்ணைகளும் நஷ்டத்தில் தான் ஓடுகின்றது என்று சொல்லிவிட முடியாது. பல விதைப் பண்ணைகள் லாபத்தில் நடந்து கொண்டிருக்கின்றன. பல விதைப் பண்ணைகள் லாபமும் இல்லாமல் நஷ்டமும் இல்லாமல் நடந்து கொண்டிருக்கின்றன. சர்க்காரிலிருந்து புதிய இடத்தை வாங்கி பண்படுத்தித்தான் விதைப் பண்ணைகளை ஏற்படுத்த வேண்டியிருக்கிறது. அப்படி வாங்கும்போது நிறைய பணம் கொடுக்கவேண்டியிருக்கிறது. முன்னால் லீஸில் எடுத்து நடத்தியதால் நஷ்டம் ஏற்பட்டது. லாபத்தில் நடந்து கொண்டிருந்த இடங்களை எல்லாம் சர்க்காரே அக்வொயர் செய்து எடுத்துக்கொண்டது. நல்ல வசதியுள்ள இடங்களைப் பார்த்துத் தான் எடுக்கிறோம். எங்கெல்லாம் லாபகரமாக ஓடுகிறதோ அங்கெல்லாம் நல்ல முறையில் நடத்தவேண்டும் என்ற எண்ணத்தில் மேலும் பணத்தை செலவு செய்து நிலத்தை வாங்குகிறோம். புதிய இடங்களை வாங்கி பண்ணைகளை ஆரம்பிக்கும்போது ஆரம்பத்தில் ஓரளவு நஷ்டம் தான் ஏற்படுகிறது. மண் சரியாக இருப்பதில்லை. ஆற்றுமண்ணுக்கு சேற்றுமண் வேண்டும் என்று சொல்வது போல், நாம் எடுக்கின்ற நிலத்தில் உடனடியாக லாபம் கிடைத்துவிடுவதில்லை. முதல் வருடத்திலேயே லாபம் கிடைக்க வேண்டும் என்றால் இன்னும் அதிகமான ரூபாய் செலவு செய்யவேண்டும். கூடுமானவரை நல்ல நிலங்களைப் பார்த்துத்தான் சர்க்கார் விதைப் பண்ணைகளுக்கு வாங்கி பண்ணைகளை ஏற்படுத்தி வருகிறோம். சர்க்கார் விதைப் பண்ணைகளைப் பொறுத்த வரையில், இதிலுள்ள அதிகாரிகளை எல்லாம் அழைத்துப் பேசினேன். ஒவ்வொரு ஸீட் பார்ம் மானேஜரையும், டைரக்டர், டெப்யுடி டைரக்டர், இவர்களை எல்லாம் அழைத்துப் பேசினேன். எந்த விதத்திலும் சர்க்கார் விதைப் பண்ணைகள் நல்ல முறையில் நடைபெறவேண்டும், நல்ல தரமான விதைகளை உற்பத்தி செய்யவேண்டும், இதற்காக தனியாக கவனம் செலுத்தவேண்டும் என்று சொல்லியிருக்கிறேன். எடுத்த மாத்திரத்திலேயே எல்லா விதைப் பண்ணைகளும் லாபத்தில் நடந்து விட முடியாது என்பதையும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஏற்கனவே நமது மாநிலத்தில் பல விதைப் பண்ணைகள் நல்ல முறையில் நடந்து வருகின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். ஆரம்ப கட்டத்தில் ஏதாவது கஷ்டங்கள் இருந்தாலும், பின்னால் அத்தனையும் லாபகரமாக நடப்பதற்கு சர்க்கார் எத்தனிக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) . . . . . தனியார் நடத்துகின்ற விதைப் பண்ணைகளைப் பற்றியும் அரசாங்கம் கவனித்துக்கொண்டிருக்கிறது.

அம்மாதிரி தனிப்பட்ட நபர்கள் யார் என்பதைப் பார்த்து, அவர்களை கிராம சகாயக்குகளாக நியமிக்கவேண்டும் என்று அரசாங்கம் தீர்மானித்து, அதற்கான நபர்களை பொறுக்கித் தருமாறு பஞ்சாயத்துகளிடம் சர்க்கார் கோருகிறது. அங்கங்கு இருக்கின்ற பஞ்சாயத்து தலைவர்கள், பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள், இவர்களெல்லாம் பார்த்துத்தான் இன்னின்ன நபர்களை கிராம சகாயக்குகளாக நியமிக்கலாம் என்று சொல்கிறார்கள். அப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களில் சிலர் வேறு வழியில் போய்விடுகிறார்கள். இதைத் தவிர்ப்பதற்காக இப்போது விவசாய இலாகா அதிகாரிகளும் பார்த்து, கிராம சகாயக்குகளை பொறுக்கவேண்டும் என்று அரசாங்கம் அதிகாரிகளைக் கேட்டிருக்கிறது என்பதை இந்த மன்றத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

டிராக்டர்களைப் பற்றி மதிப்புக்குரிய அங்கத்தினர்கள் சிலர் குறிப்பிட்டார்கள். முன்பு சொன்னபடி அதிகமாக வாங்குவதற்கு முயற்சி செய்துகொண்டிருக்கிறோம். வாடகைக்கு சில டிராக்டர்களை விடுகிறோம். சிறு சிறு டிராக்டர்கள் வேண்டுமென்று சில அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். குறிப்பாக, காங்கிரஸ் பொருட்காட்சியில் சில டிராக்டர்கள் வந்திருந்தன. விலை சொற்பமாக இருந்தாலும், உடனடியாக வாங்குவதாக இருந்தால் அன்னிய நாடுகளிலிருந்து வாங்குவதிலே, ஜப்பான் போன்ற நாடுகளிலிருந்து வாங்க ஃபாரின் கரன்ஸி வேண்டியிருக்கிறது. விவசாயிகள் நிறைய ரூபாய் போட்டு வாங்க முடியாது. உச்ச வரம்புச் சட்டம் வந்த பிறகு நிலப் பரப்பு அதிகமாக இல்லாத காரணத்தினாலும், விவசாயிகள் வாங்குவதற்குத் தகுந்த விலையில் பார்க்கவேண்டியிருக்கிறது. ஆனாலும் சொற்ப விலையில் இருக்கிறது என்று வாங்கி விட முடியாது. கடிகாரம் சொற்ப விலையில் கிடைக்கிறது என்று வாங்கி நஷ்டம் அடைகின்றவர்களை நாம் பார்க்கிறோம். நன்றாக உழைக்கக் கூடிய டிராக்டர்களாகப் பார்த்து, அதுவும் முதலில் கொஞ்சமாக வாங்கி, பரிசீலனை செய்துபார்த்து, எந்த டிராக்டர் பயன்படும், எப்படி உழைக்கிறது என்று பார்த்து வாங்குவதற்கு ஏற்பாடு செய்து வருகிறோம் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

காய்கறி உற்பத்தி பற்றிப் பல மதிப்புக்குரிய அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். குறிப்பாக, காய்கறி உற்பத்திக்கு அரசாங்கம் அதிக ஆதரவு கொடுத்து வருகிறது. மதிப்புக்குரிய அங்கத்தினர் அர்த்தநாரீஸ்வர கவுண்டர் அவர்கள் பேசுகிற போது கூட, மேட்டூர் பகுதியில் கத்திரிக்காய் நன்றாக வருகிறது, காய்கறி உற்பத்தியாளர்களுக்குக் கொடுக்கிற சலுகையை அந்த இடத்திற்கும் நீடிக்கவேண்டுமென்று சொன்னார்கள். அவருக்குத் தெரிந்தபடி சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி நகர்களிலும், கும்பகோணம் நகரத்தைச் சுற்றியும், நீலகிரிப் பகுதியிலும் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்து காய்கறி உற்பத்தியை அதிகமாகப் பெருக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். இந்தத் திட்டத்தை நீடிக்கும்போது, மேட்டூர் பகுதிக்கு அந்தச் சலுகை கிடைக்கும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கால்நடைகளைப் பற்றிப் பல அங்கத்தினர்கள் கருத்துக்களைத் தெரிவித்தார்கள். கனம் அங்கத்தினர் சீமைச்சாமி அவர்கள், செயற்கை முறை மூலமாக கருத் தரிக்கும் திட்டத்தினால் அதிக நன்மை காணவில்லை, ரூபாய் அதிகமாகச் செலவு ஆகியிருக்கிறதே தவிர கன்றுகள் அதிகமாகப் பிறக்கவில்லை என்று சொன்னார்கள். ஏற்கெனவே கீ வில்லேஜாகப் பார்த்துத் தான் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தோம். ஆனால் எங்கள் பகுதிக்கு வேண்டும், எங்கள் பகுதிக்கு வேண்டும் என்று ஜனங்களுடைய கோரிக்கை ஜாஸ்தி ஆயிற்று. பசுக்களுக்கு மட்டுமல்ல, எருமைகளுக்கும் செய்தால் நல்லது என்று சொன்னார்கள். இந்தத் திட்டத்தை நல்ல முறையில் அமல் நடத்தவேண்டுமென்று, கால்நடை அபிவிருத்தியை மனதில் கொண்டு ஓரளவுக்கு செலவு வந்தாலும் பரவாயில்லை என்று செய்தோம். இன்ஸெமினேஷன் செய்கிற காலத்தில் எல்லாமே வெற்றிகரமாக ஆகும் என்று சொல்ல முடியாது. அதை நாம் நன்றாகத் தெரிந்துகொள்ள வேண்டும். நமக்குத் தெரியும்,





சில இடங்களில் சில பசுக்கள் கருத் தரிக்கும். இல்லாவிட்டால் இல்லாமல் போய்விடும். இன்ஸெமினேஷன் கொடுத்ததெல்லாம் வெற்றிகரமாக இருக்கும் என்று சொல்ல முடியாது. ஆகையினாலே நல்ல முறையில் கன்றுகள் பிறக்கவேண்டும், நல்ல காளைகளுக்குப் பிறக்கும் கன்றுகள் அதிகமாக ஆகவேண்டும், மாடுகள் தரமாக இருக்கவேண்டும், மாடுகளைத் தரப்படுத்தவேண்டும் என்பது தான் நோக்கம். அதற்குத் தகுந்தபடி செய்து இருக்கிறோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். செலவைப் பற்றிச் சொன்னார்கள். செமன் போடுவதற்கு மட்டும் ஆகக் கூடிய செலவு அல்ல. செலவு பல வகைகளில் ஏற்படுகிறது. குறிப்பாகச் சொல்லப் போனால் சாதனங்கள். . . .

**திரு. கரு. சீமைச்சாமி :** தலைவர் அவர்களே, ஒரு பசுவிற்கு செயற்கை முறையில் கருத்தரிக்க ஆகக் கூடிய செலவு ரூ. 7·50 என்று எஸ்ட்டிமேட். ஆனால் 127 ரூபாய் செலவு ஆகியிருக்கிறது. 127 ரூபாய் செலவு ஆகும் என்றால் இந்தத் திட்டமே தேவையில்லை.

**கனம் திரு. பூ. கக்கன் :** 127 ரூபாய் என்றால், அங்கு தேவையான சாமான்கள் வாங்க வேண்டியிருக்கிறது. அதிகாரிகளுக்குச் சம்பளம் கொடுக்க வேண்டியிருக்கிறது. பரீட்சார்த்தமாகப் பார்க்கிறோம்.

**கனம் சபாநாயகர் :** மொத்தச் செலவை கன்றுக்குட்டிகளின் எண்ணிக்கையைக் கொண்டு வகுத்திருக்கிறார்கள். (சிரிப்பு).

**திரு. கரு. சீமைச்சாமி :** ஆடிட் ரிப்போர்ட்டில் போட்டிருப்பதைத் தான் சொன்னேனே தவிர நானாகக் கணக்குப் போட்டு பார்க்கவில்லை.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவைத் தலைவர் அவர்களே, எல்லாச் செலவுகளையும் கணக்கிட்டு ரூ. 7.50 ஆகும் என்று திட்டம் போடப் பட்டிருக்கிறது. அந்தச் செலவு ரூ. 127 ஆக வளருவானேன் என்பது தான் கேள்வி.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** எத்தனை கன்றுக்குட்டிகள் பிறந்தனவோ அந்த எண்ணிக்கையைக் கொண்டு மொத்தச் செலவை வகுத்துத் தான் 127 ரூபாய் என்று சொல்லியிருக்கிறார்கள்.

**கனம் திரு. பூ. கக்கன் :** மதிப்புக்குரிய தொழில் அமைச்சர் அவர்கள் சொல்லுகிற மாதிரி கன்றுக்குட்டிகளை வைத்து கணக்குப் பார்த்திருப்பார்கள். அப்படிப் பார்க்கும்போது தான் அந்த அளவுக்குச் சொல்லியிருக்கிறார்கள். என்னைப் பொறுத்த மட்டில் கொஞ்சம் செலவு அதிகமானாலும் அரசாங்கம் கால் நடைகளை அபிவிருத்தி செய்யத் தயங்காது என்று சொல்லிக்கொள்கிறேன். அதற்காக நஷ்டத்தில் நடத்தவேண்டுமென்று நான் நினைக்கவில்லை. அதையும் அதிகாரிகள் கவனிப்பார்கள் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

திருமதி குழந்தையம்மாள்: அவர்கள் பேசும்போது ஸ்பேர் பார்ட்ஸ் கிடைக்கவில்லை, மெஷின்ஸ் வேலை செய்யாது ஆங்காங்கு தேங்கிக் கிடைக்கின்றன, ஸ்பேர் பார்ட்ஸ் வர ஏற்பாடு செய்யவேண்டுமென்று சொன்னார்கள். அதை அரசாங்கமும் கவனத்தில் வைத்துக்கொண்டிருக்கிறது. குறிப்பாக நம்முடைய நாட்டிலே அரசாங்கத்தின் சார்பாகவே சில ஸ்பேர் பார்ட்ஸ் பண்ண வேண்டுமென்று நினைக்கிறோம். தனிப்பட்டவர்கள் தயாரிக்க முன் வந்தாலும் சலுகை கொடுத்துச் செய்தால் நல்லது என்று நினைக்கிறோம். டிராக்டர் ஸ்பேர் பார்ட்ஸ் கிடைக்க மத்திய அரசாங்கத்தையும் கேட்டிருக்கிறோம். முதல் தர ப்ரையாரிட்டி கொடுக்க வேண்டுமென்றுகூடக் கேட்டிருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல மதிப்புக்குரிய அங்கத்தினர்கள், டிரில்ஸ், பவர் டிரில்ஸ் வேண்டுமென்று சொன்னார்கள். மதிப்புக்குரிய அப்பாவுத் தேவர் சொன்னார்கள். 50 பவர் டிரில்ஸ் வேண்டுமென்று மத்திய அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறோம். ஃபாரின் எக்ஸ்சேஞ்சு கிடைத்த பிறகு இம்போர்ட் செய்யத் தக்க ஏற்பாடு செய்யப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. பூ. கக்கன்] [23rd March 1965

மதிப்புக்குரிய கோவிந்தராஜுலு நாயுடு அவர்கள் டிராக்டர் பற்றிச் சொன்னார்கள். அதையும் பார்த்துப் பரிசீலனை செய்யப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மதிப்புக்குரிய நாராயணசாமி பிள்ளை அவர்கள் சொல்லும்போது கூட்டுறவு மூலமாக, ரெவின்யூ இலாகா மூலமாகக் கொடுப்பதை விட அக்ரிகல்ச்சுரல் டிபார்ட்மெண்ட் வாயிலாகக் கொடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். கூட்டுறவு வாயிலாகக் கொடுக்க ஏற்பாடு செய்திருப்பதால், அவ்வாறு செய்ய இயலாது என்று சொல்லிக்கொள்கிறேன்.

கடன்களைப் பொறுத்த வரையில் லாங் டெர்ம், ஷார்ட் டெர்ம் லோன்களை கொடுத்து வருகிறோம். மேலும், எவ்வளவு தூரம் விவசாயப் பெருமக்களுக்கு உதவி செய்யவேண்டுமோ அந்த அளவில் கிணறு வெட்ட, மாடு வாங்க, உரம் வாங்க ஒத்தாசை செய்யத் தயாராக இருக்கிறோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மதிப்பிற்குரிய நடராஜன் அவர்களும், மற்றவர்களும் இராப் இன்ஷூரன்ஸ், கால்நடை இன்ஷூரன்ஸ் பற்றி குறிப்பிட்டார்கள். இன்ஷூரன்ஸைப் பொறுத்தவரையில் மத்திய சர்க்கார் முதலில் வழிகாட்டவேண்டும், பிளானிங் கமிஷன் வழி காட்டவேண்டும். நம்முடைய மாகாணத்தைப் பொறுத்தவரையில், கால்நடை இன்ஷூரன்ஸ் பற்றி சர்க்காருடைய ஆலோசனையில் இருக்கிறது, கவனத்தில் இருக்கிறது. "It is under consideration" என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த இன்ஷூரன்ஸ் சம்பந்தமாக மத்திய சர்க்கார் வழி காட்டவேண்டும். நாம் முன் நின்று எடுத்துக்கொள்ள முடியாது. ஏற்கனவே அரசாங்கம் இதைப் பரிசீலனை செய்தது. லாண்டு ரிபார்ம்கமிட்டிக்குக் கூட இதை அனுப்பி வைத்தது. மத்திய சர்க்கார்தான் இதற்குப் பொறுப்பு, அவர்கள்தான் இதற்கு வழி காட்டவேண்டும் என்று முடிவு செய்திருக்கிறார்கள்.

**டாக்டர் பா. நடராஜன் :** இன்ஷூரன்ஸ் மத்திய சர்க்கார் ஸப்ஜெக்ட் ஆனாலும், விவசாயம் நம்முடைய ஸப்ஜெக்ட் அல்லவா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** இன்ஷூரன்ஸுக்கு அவர்களுடைய அனுமதி வேண்டியிருக்கிறது. பொதுவாக நாடு பூராவுக்கும் அவர்கள் அந்தத் திட்டத்தைக் கொண்டு வரும்பொழுது, அந்தத் திட்டம் இங்கேயும் கொண்டு வரப்படும், நமக்கும் அனுமதி வழங்குவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மானிய விவாதத்தின்போது இன்னும் பல அங்கத்தினர்களும் பல ஆலோசனைகள் சொல்லியதற்கு என் நன்றி. நேரம் அதிகமாக இல்லாததின் காரணத்தினால் முடித்துக்கொள்கிறேன். நம்முடைய மாநிலத்தில் விவசாயப் பெருமக்கள் அதிகமாக ஒத்துழைப்புக் கொடுத்து, உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்கு ஆக்கமும், ஊக்கமும் காட்டிவருவதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். விவசாய இலாகா செகரட்டரி, ஸ்பெஷல் செகரடரி, டைரக்டர், மற்றும் விவசாய இலாகா அதிகாரிகளுக்கும் என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER : The question is—

"That the allotment of Rs. 8,72,39,700 under Demand No. XVI—Agriculture be reduced by Rs. 100."

The cut motion was put and lost.

MR. SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 8,72,39,700 under Demand No. XVI—Agriculture."

The Demand was put and carried and the Grant was made.



23rd March 1965]

MR. SPEAKER : The question is—

"That the allotment of Rs. 2,91,79,100 under Demand No. XVIII—Animal Husbandry be reduced by Rs. 100."

The cut motion was put and lost.

MR. SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 2,91,79,100 under Demand No. XVIII—Animal Husbandry."

The Demand was put and carried and the Grant was made.

MR. SPEAKER : The question is—

"That the allotment of Rs. 18,15,100 under Demand No. XXXIX—Capital Outlay on Agicuture be reduced by Rs. 100."

The cut motion was put and lost.

MR. SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs 18,15,100 under Demand No. XXXIX—Capital Outlay on Agriculture."

The Demand was put and carried and the Grant was made.

MR. SPEAKER : The question is—

"That the allotment of Rs. 60,54,41,000 under Demand No. XLVII—Capital Outlay on Schemes of Government Trading, be reduced by Rs. 100."

The cut motion was put and lost.

MR. SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 60,54,41,000 under Demand No. XLVII—Capital Outlay on Schemes of Government Trading."

The Demand was put and carried and the Grant was made.

(5) DEMAND No. I—LAND REVENUE DEPARTMENT.

(6) DEMAND No. IV—STAMPS ADMINISTRATION.

(7) DEMAND No. XXXI—FAMINE RELIEF.

(8) DEMAND No. XXXVII—COMPENSATION TO ZAMINDARS.

THE HON. SRI V. RAMAIAH : Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 98,94,300 under Demand No. I—Land Revenue Department."

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : கனம் தலைவர் அவர்களே, ஐந்து ஏக்கருக்கு குறைவான நிலமுள்ள விவசாயிகளுக்கு நிலவரி இல்லாமலேயே செய்யத் தவறிவிட்டதைப்பற்றி விவாதிக்க, என் பெயரில் கொடுக்கப் பட்டிருக்கும் கீழ்க்கண்ட வெட்டுப் பிரேரேபணையை முன்மொழிகிறேன்.

"That the allotment of Rs. 98,94,300 under Demand No. I --Land Revenue Department be reduced by Rs. 100."

THE HON. SRI V. RAMAIAH : Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move--

"That the Government be granted a sum not exceeding Rs. 35,24,900 under Demand No. IV—Stamps Administration."

திரு. எஸ். முருகையன் : கனம் தலைவர் அவர்களே, கோர்ட்டுகளில் நடக்கும் சிவில் வழக்குகளில் ஏழைகளுக்கு பிரத்தியேகமாக ஸ்டாம்பு கட்டணத்தைக் குறைக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்த, என் பெயரில் கொடுக்கப்பட்டிருக்கும் கீழ்க்கண்ட வெட்டுப்பிரேரேபணையை முன் மொழிகிறேன்.

"That the allotment of Rs. 35,24,900 under Demand No. IV --Stamps Administration be reduced by Rs. 100."

THE HON SRI V. RAMAIAH : Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 6,14,200 under Demand No. XXXI—Famine Relief."

புலவர் கா. கோவிந்தன் : கனம் தலைவர் அவர்களே, வெள்ளத் தாலும், தீயாலும் பாதிக்கப்படும் மக்களுக்கு உதவித்தொகை அளிப்பதில் தாராளமாக நடந்துகொள்ளவேண்டும் என்பதை வலியுறுத்த, நான் கொடுத்திருக்கிற கீழ்க்கண்ட வெட்டுப் பிரேரேபணையை நான் முன் மொழிகிறேன்.

"That the allotment of Rs. 6,14,200 under Demand No. XXXI—Famine Relief be reduced by Rs. 100."

THE HON. SRI V. RAMAIAH : Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 5,00,000 under Demand No. XXXVII--Compensation to Zamindars."

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, ஜமீன்தார்களுக்கு வழங்கும் நஷ்டஈட்டுக்கான தொகையைக் குறைப்பது பற்றி விவாதிக்க, என்னுடைய பெயரில் கொடுக்கப்பட்டிருக்கிற அடியில் கண்ட வெட்டுப் பிரேரேபணையை நான் பிரேரேபிக்கிறேன்.

"That the allotment of Rs. 5,00,000 under Demand No. XXXVII—Compensation to Zamindars be reduced by Rs. 100."

MR. SPEAKER : The Demands and the cut motions are before the House for discussion.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் சபாநாயகர் அவர்களே, இன்றையதினம் விவாதத்தில் இருக்கிற மான்யத்திற்கு என்னுடைய கட்சியைச் சார்ந்த அங்கத்தினர்கள் கொடுத்திருக்கக்கூடிய வெட்டுப் பிரே-



ரேபணைகளை ஆதரித்து நான் இங்கே சில வார்த்தைகள் கூறலாம் என்று நினைக்கிறேன். நிலத்தின் மீது வரி போட்டு, நிலத்தின் பேரில் இருக்கிற பளுவை நாளாவட்டத்தில் அதிகப்படுத்திக் கொண்டே போகின்ற நிலைமை இருக்கிறது. நாட்டிலே விவசாயத்தை ஒரு தொழிலாக அரசாங்கம் கருதாத காரணத்தினால்தான் அடிக்கடி உணவு பற்றுக்குறை ஏற்படுகிறது, விளைச்சலில் நல்ல முன்னேற்றம் காணாமல் இருக்கிறது. எந்தத் தொழிலாக இருந்தாலும் சரி, சர்க்கரைத் தொழிலாக இருந்தாலும் சரி, பருத்தித் தொழிலாக இருந்தாலும் சரி, தேயிலை தொழிலாக இருந்தாலும் சரி, அந்தத் தொழிலில் போட்டிருக்கிற மூலதனத்திற்கு ஏற்ப நல்ல வருமானம் வருகிறதா, லாபம் வருகிறதா என்று பார்த்து, அந்தத் தொழில் கட்டுபடியானால்தான், அந்த குறிப்பிட்ட தொழிலானது முன்னுக்கு வரும் என்பதை அரசாங்கம் உணர்ந்திருக்கிறது. அப்படி உணர்ந்த காரணத்தினால்தான், அந்தத் தொழில்களுக்கு அடிக்கடி "டாரிப் கமிஷன்" அல்லது பாதுகாப்புக் கமிஷன் என்றெல்லாம் போட்டு, அந்தத் தொழில்கள் நசுக்கவிடப்படாமல் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், அரசாங்கம் விவசாயத்தை மட்டும், உற்பத்தித் துறையை மட்டும் இன்னும் ஒரு தொழிலாக கருதுவதாகத் தெரியவில்லை. மூலதனம் போட்டு பயிரிட்டு, அதில் லாபம் கிடைக்கிறதா, கிடைக்கவில்லையா என்று பார்க்காத காரணத்தினால்தான் அடிக்கடி உணவு உற்பத்தியில் பல குறைவுகள் ஏற்படுகின்றன என்பது என்னுடைய கருத்தாகும். நம்முடைய நாட்டிலே நம்முடைய மாகாணத்தைப் பொறுத்த வரையில் விவசாயத்திற்கு ஒரு மந்திரி இருக்கிறார், உணவுக்கு ஒரு மந்திரி இருக்கிறார். இந்த இரண்டும் ஒருவரிடமே இருந்தால் கூட சாலச் சிறந்தது. காரணம், விவசாயமும், உணவு உற்பத்தியும் ஏறக்குறைய ஒன்றை ஒன்று ஒட்டியது.

கனம் திரு. வெ. ராமையா : இப்பொழுது ரெவின்யூ இலாகா மான்யம் விவாதத்தில் இருக்கிறது.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : அதில் இதுவும் வரும். விவசாய சம்பந்தமாக கவனிப்பதற்கு ஒரு கனம் அமைச்சர், உணவு சம்பந்தமாக கவனிப்பதற்கு ஒரு கனம் அமைச்சர் ஆகிய இரண்டு கனம் அமைச்சர்கள் தேவையில்லை. இரண்டிற்கும் ஒரு கனம் அமைச்சர் போட்டாலே நல்ல முறையில் நடக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். விவசாயத்திற்கு நில வரி போடுவதில், யார் போடுவது என்பது இப்பொழுது இடையாது. அரசாங்கம் போடுகிறது, பஞ்சாயத்து யூனியன் போடுகிறது, பஞ்சாயத்து போடுகிறது, இன்னும் எந்தெந்த இலாகா போடுமோ தெரியவில்லை. விவசாயத்தை ஒரு தொழிலாக பாவித்து, அதற்குத் தக்கபடி திட்டமிட்டு வரி விதிப்புக் கொள்கையை ஏற்படுத்திக்கொள்ளாத காரணத்தினால், விவசாய முன்னேற்றம் ஏற்படவில்லை.

ஒரு விவசாயிக்கூலி வேலை செய்யவருகிறார் என்றால், அவருடைய கூலி உணவைமட்டும் பொருத்தது இல்லை. உணவு மட்டும் நிர்ணயித்து விடாது. அவருடைய குடும்பத்திற்கு வேண்டிய எண்ணெய், துணிமணி இவற்றையெல்லாம் பொருத்திருக்கிறது. ஆகவே, அவனுக்கு ரூ. 1¼, ரூ. 1½ கூலி மட்டும் என்று கொடுத்து விட்டால் சரியாகிவிடாது. ஆகவே தான் கூலிக்கு ஆள் கிடைக்காத நிலைமை இருக்கிறது. ஆகவேதான் விவசாயம் முன்னுக்கு வரவில்லை. காரணம் இன்றைக்கு அரசாங்கம் கடைப்பிடிக்கும் வரிக் கொள்கை, நிலத்தைப் பிரித்துக் கொடுக்கும் முறையில் கையாளும் கொள்கை இவைகள்தான் விவசாயத்தைப் பாதிக்கும் நிலையில் இருக்கிறது. லாண்ட் ஸீலிங் கொண்டு வந்தார்கள். நாங்கள் எல்லோரும் வரவேற்றோம். நிலத்தைப் பிரித்துக் கொடுக்கிறோம் என்கிறார்களே, எத்தனை ஏக்கர்களை பிரித்துக் கொடுத்திருக்கிறார்கள் ? எத்தனை ஆயிரம் ஏக்கர்களை பிரித்துக் கொடுத்திருக்கிறார்கள் ? சட்டம் பாஸ் செய்தது எப்பொழுது ? இன்றைக்கு மூன்று நான்கு ஆண்டுகள் ஆகியும், நிலத்தைப் பிரித்துக் கொடுத்திருக்கிறார்களா? இல்லை. ஆகவேதான் விவசாய உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிறது. நிலத்தை வைத்திருப்பவர்கள் விற்க முடியவில்லை. அரசாங்கமும் எடுத்துக்கொள்ள முடியவில்லை, ஆகவே இரண்டுங்கெட்டான் நிலைமை தான் இருக்கிறது.

[திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி] [23rd March 1965

அதோடு மட்டுமல்லாமல், நிலத்திற்கு வரிபோடும் கொள்கை அன்று வெள்ளைக்காரன் செட்டில்மெண்ட் செய்த நிலையிலேயே இருக்கிறது. அன்றைக்கு நஞ்சையாக இருந்தது இன்றைக்கு புஞ்சையாக மாறியிருக்கலாம். அன்றைக்குப் புஞ்சையாக இருந்தது இன்றைக்கு நஞ்சையாக மாறியிருக்கலாம். ஆனால், வரிபோடுவதை மட்டும் அன்றைக்கு இருந்த அடிப்படையிலேயே போட்டுக்கொண்டு இருப்பது என்ன நியாயத்தில் சேர்ந்தது என்று கேட்க விரும்புகிறேன். ஆகையினால், நிலத்தின் தரம் 10 வருஷத்திற்கு ஒரு தடவையாவது பரிசீலித்துப் பார்த்துச் செய்யப்படவேண்டும், அப்படிச் செய்வது விவசாயிகளுக்கும் சர்க்காருக்கும் நலமாக இருக்கும் என்று கருதுகிறேன். அதை இந்த அரசாங்கம் செய்யவேண்டும்.

அதோடு விவசாயிகளுக்கு சில சலுகைகளைச் செய்து கொடுக்கவேண்டும். முன்பு இருந்த வரிச் சுமையோடு 2½ மடங்கு இன்றைக்கு அதிகமாகியிருக்கிறது. அன்றைக்கு ரூ. 8 கட்டினால், சர்சார்ஜ், பஞ்சாயத்து யூனியன் வரி, பஞ்சாயத்து வரி, ஸெஸ், இவை எல்லாவற்றையும் சேர்த்து இப்பொழுது எக்கருக்கு ரூ. 25, 26 என்று ஆகிவிடுகிறது. இந்த நிலை காரணமாக, விவசாயி தனக்கு வேண்டிய பொருள்களை, பிண்ணாக்கு, விவசாய உபகரணங்கள் முதலியவற்றை வாங்கி விவசாயம் செய்வதில் இன்றைக்கு விவசாயிக்கு லாபம் குறைந்து விட்டிருக்கிறது. முன்பெல்லாம் பட்டணங்களிலே உத்தியோகத்திலே இருப்பவர்கள். கிராமங்களில் 10 எக்கர், 20 எக்கர் வாங்கி விவசாயம் செய்யலாம் என்கிற ஆசை இருந்தது. ஆனால், அப்படிப்பட்ட ஆசை இன்றைக்கு இல்லாமல் போய்விட்டது. அதற்குக் காரணம், விவசாயத் துறையில் ரிடர்ன் குறைந்து விட்டதுதான். இன்றைக்கு அவர்களெல்லாம் ஹோட்டல் வைக்கலாமா, சினிமா படம் எடுக்கலாமா, பஸ் வாங்கி விடலாமா, லாரி வாங்கி வைக்கலாமா, வேறு ஏதாகிலும் செய்யலாமா, ப்ரோக்கர் வேலை செய்யலாமா என்று போகிறார்கள். விவசாயத்திலே மூலதனத்தைப் போட, நல்ல லாபம் கிடைக்கும் என்கிற நிலைமை இல்லாததால், அவர்கள் சந்தேகப்படுகிறார்கள். வரி வசூலில் செலவு போக பாக்கி ப்ரோக்கரேஜ் போல்தான் அரசாங்கத்திற்கும் வருகிறது. அந்த முறையில் அதிலும் நல்ல கவனம் செலுத்துவார்கள் என்று கருதுகிறேன்.

அடுத்தபடியாக, வரிவசூல் செய்யும் முறையில் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். பத்து ரூபாய்க்குக் கீழே வரி கொடுப்பவர்களுக்கு ஒரு சலுகை கொடுக்கவேண்டும் என்று 10, 12 வருஷமாகப் பேசிக் கொண்டிருக்கிறோம். மற்ற சில மாநிலங்களில் கொடுத்திருந்தாலும் நம் மாநிலத்தில் அப்படிச் செய்யவில்லை. இப்படிச் சின்ன சின்ன பட்டாதார்கள் இடத்திலிருந்து வசூல் செய்வது மணியக்காரர், மற்றவர்களுக்கு பெரிய தொல்லையாக இருக்கிறது. ஒரு 5 ரூபாய் வரி வசூல் செய்ய அவரிடம் ஐந்து தடவைகள் போக வேண்டியிருக்கிறது. மணியக்காரருக்கும், மற்ற பணியாளர்களுக்கும் பெருந்தொல்லையாக இருக்கிறது. 20, 30, 40, 50 என்று கொடுக்கும் பட்டாதார்கள் என்றால் பரவாயில்லை. ஒன்றேகால் எக்கர் வைத்திருப்பவரிடம் வாங்குவது வேதனையாக இருக்கிறது. அதிலிருந்து வரக்கூடிய வருமானமும் கணிசமானதாக இல்லை. எனக்குத் தெரிந்தவரையில், இப்படிப்பட்டவர்களிடம் வசூலாகும் தொகை மொத்தமாக இன்றைக்கெல்லாம் இருந்தால் 3, 4 கோடிதான் இருக்கும். இதை ஏழைகளுக்குக் கொடுக்கும் வரிச் சலுகையாகக் கொடுத்து விடலாம். இன்றைக்கு இன்கம்டாக்ஸில் 5,000 வரை தள்ளிக் கொடுக்கிறோம். எஸ்.எஸ்.எல்.சி. வரை இனமாகக் படிப்பு என்று சொல்லுகிறோம். இப்படிப்பட்ட சமயத்தில் இந்தச் சின்ன விவசாயிகளிடமிருந்து, 1 எக்கர், 2 எக்கர் என்று வைத்திருக்கும் விவசாயிகளிடமிருந்து ரூ. 5, 10 என்று வசூலிக்காவிட்டால், சலுகையாகக் கொடுத்தால் என்ன என்று கேட்க விரும்புகிறேன். சோஷலிசத்தைப் பற்றிச் சொல்லுகிறோம். நிலச் சீர்திருத்தம் என்று கொண்டு வந்தோம். என்ன நடந்தது? நூறு எக்கர் வரை வைத்திருந்தவர்கள் என்ன செய்தார்கள்! குப்பன், சுப்பன் இவர்கள் பெயரில் எல்லாம் எழுதி வைத்து விட்டு. அவர்களே இன்றைக்கு அவற்றை அனுபவித்து வரும் நிலைமைதான் இருக்கிறது. ஆனால், அதேசமயத்தில் சாதாரண விவ

V211, 31 N65



23rd March 1965] [திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி]

N65-28.6

சாயிகள் இன்றைக்கு முன்னுக்கு வருவதற்காக வரிச் சலுகை கொடுக்கக்கூடாதா என்று கேட்க விரும்புகிறேன். இதை அரசாங்கம் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வரி வசூல் செய்து மணியக்காரர் அல்லது அவருடைய பணியாட்கள் 20, 30 மைல் தொலைவில் உள்ள தாலுகா ஆபீசுக்கு எடுத்துப் போகிறார்கள். கிராமத்தில் இருக்கும் வெட்டியார் எடுத்துப்போகலாம். ஆனால், அவர்கள் போய் வருவதற்கு பஸ்ஸுக்கு அல்லது ரெயிலுக்கு துட்டு உண்டா ? கிடையாது. பஸ்ஸுக்கும் ரெயிலுக்கும் வகையில்லாமல், அவர்கள் நடந்தேதான் போக வேண்டும். தாலுகா ஆபீசுக்குப் போனால் அன்றே வேலை முடிந்து விடுகிறதா ? தாலுகா ஆபீசில் உள்ளவர்கள் பட்டி பாஸ் செய்ய சாயங்காலம் வரை ஆகலாம். அல்லது [illegible]
அங்கே இருக்க வேண்டிய நிலைமை ஏற்படலாம். [illegible]கெல்லாம்
அவர்களுக்கு பாட்டா கிடையாது. இதற்கெல்லாம் யார் [illegible] தருவது?
ஒரு அணு குறைந்தால் தலை போய்விடும். அவர்[illegible] கொடுக்கும்
சம்பளம் போதுமா என்று பார்க்கவேண்டும். ஆ[illegible] இவர்களுக்கு
போக்குவரத்துச் செலவைக் கொடுக்க அரசாங்கம் பரி[illegible]லனை செய்து ஆவன
செய்யவேண்டும்.

64902

அதேபோல நெருப்புப் பிடித்தால், ஒரு [illegible]யாக இருந்தால்
[illegible]யாக இருக்கும் வீடுகள் எரிந்து போய்வி[illegible]றன. ஏதாவது
அவர்கள் அங்கே 100, 50 சேர்த்து வைத்திருந்தார்க[illegible] என்றால் அதுவும்
போய்விடும். தானியங்களைச் சேர்த்து வைத்திருந்தா[illegible] போய்விடுகிறது.
துணிமணிகள் வைத்திருந்தாலும் போய்விடுகிறது. [illegible] அவர்
களுக்கு அரசாங்கம் என்ன கொடுக்கிறது? ரூ. [illegible] கொடுத்தால்
போதுமா ? முப்பது ரூபாயை வைத்துக்கொண்டு என[illegible]
முடியும். பெண்களுக்குப் புடவை வாங்குவது என்றாலே 10, 15 ஆகி
விடும். அதற்குப் பிறகு அவர்கள் சாப்பிடவேண்டும். அதையெல்லாம்
இந்த 30 ரூபாயில் செய்யமுடியுமா? ஆகவே, தீயினால் பாதிக்கப்பட்ட
வர்களுக்கு, நியாயமான நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும். இந்த
30 ரூபாய் என்பது வெள்ளைக்காரன் காலத்தில் நிர்ணயித்ததோ
என்னவோ. இன்றைக்கு இருக்கும் நிலையில் 100 ரூபாயாவது கொடுக்க
வேண்டும். அப்படிக் கொடுத்தால் தான் நல்ல நிலைமை ஏற்பட முடியும்
என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பஞ்சம் வந்துவிட்டால் ஏதோ கூலி வேலை கொடுத்துவிட்டால் போதும்
என்கிற நிலைதான் இன்றைக்கு இருக்கிறது. அதுவல்ல பிரச்னை.
என்ன கொடுக்கவேண்டும் ? அரிசி கொடுக்க வேண்டும். அது போல்
மற்ற சலுகைகள் கொடுக்க வேண்டும். அவர்களுக்கு இன்றைக்கு
இருக்கும் நிலையில் ஒரு ரூபாய் சம்பளம் கொடுத்தால் மட்டும் போதுமா?
நீங்கள் கொடுக்கும் 1½ ரூபாயில் உங்கள் பாசிபிடித்த அரிசியை 1½ படி கூட
வாங்க முடியவில்லை. அப்படி இருக்கும் போது நீங்கள் பஞ்சத்தை
எப்படிச் சரிக்கட்ட முடியும் என்று கேட்க விரும்புகிறேன். நேற்றைக்குப்
பேசும்போது கூட பாசிபிடித்த அரிசியைப் பற்றிச் சொன்னார்கள். நீங்கள்
கொடுப்பது அப்படிப்பட்ட அரிசியாக இருக்கிறது. அரசாங்கம் நெல்
கொள்முதல் செய்வதில் விவசாயத்தில் அனுபவம் உள்ளவர்களைக்
கொண்டு பண்ணினால் பரவாயில்லை. நெல் காய்ச்சி மரமா என்று
கேட்கும் அதிகாரிகள், பச்சை நெல்லை களத்திலிருந்து அப்படியே
வாங்கி வருகிறார்கள். வாங்கி வந்துவிட்டு, காயவைக்கிறார்களா, இல்லை ;
கோடவுனில் போட்டுவிடுகிறார்கள். அது வெகு சீக்கிரமே பாசி பிடித்து,
கருத்து விடுகிறது. அரிசியாகவாவது அரைத்து வைக்கிறார்களா ?
அரிசியாக வைத்தாலும் 15, 20 நாட்களுக்கு மேலாக வைக்க முடியுமா
என்றால், முடியாது. ஆகவேதான் சொல்லுகிறேன், இந்தத் துறைக்கு
இரண்டு அமைச்சர்கள் இருப்பதற்குப் பதிலாக ஒரே அமைச்சராக இருந்
தால், அந்த இலாகாவை நிர்வாகம் செய்வதில், இலாகாவில் இருக்கும்
குறைபாடுகளைத் தவிர்க்க முயற்சி எடுப்பார்கள். ஆகையினால், நான்
கூறிய யோசனைகளையெல்லாம் நன்றாக யோசனை செய்து, நிலமில்லாதவர்
களுக்கு நிலம் கிடைக்க வேண்டிய சீர்திருத்தங்களைச் செய்யவேண்டும்
என்று கேட்டுக்கொண்டு முடிக்கிறேன்.

[illegible]துக
[illegible]முது பல இலாக்காக்கள் மூலமாகவும் சர்க்கார் மூல
[illegible]ம் கடன் வழங்குகிறோம். அம்மாதிரி நாம் கடன் வழங்[illegible]
தில் தனிப் பட்டா இருக்கவேண்டு[illegible]

*திரு. ரா. சுப்பிரமணியம்: சட்ட மன்றத் தலைவர் அவர்களே, ரெவின்யூ அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து சில வார்த்தைகள் கூற ஆசைப்படுகிறேன்.

கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் விவசாயத் துறை மானியத்தில் பேசும்பொழுது, " தஞ்சை ஜில்லா விவசாயிகள் கொஞ்சம் பொறுத்திருந்து நெல்லை விற்கவேண்டும், அப்பொழுது தான் சர்க்கார் இப்பொழுது ஏற்படுத்திக் கொடுத்திருக்கும் விலை பூராவும் அவர்களுக்குக் கிடைக்க வழி இருக்கிறது " என்று அங்குள்ள விவசாயிகளைப் பார்த்துச் சொன்னதாகச் சொன்னார்கள். உண்மையிலேயே இப்பொழுது மூட்டைக்கு ரூ 22.51 விலை நிர்ணயித்திருக்கிறோம். ஆனால், தஞ்சை ஜில்லாவில் இப்பொழுது 20 ரூபாய்க்குத்தான் விற்கிறார்கள். என்றால், அவர்களுக்கு விற்கக்கூடிய அவசியம் இருக்கிறது. காரணம் என்னவென்றால், இப்பொழுது உடனடியாக அவர்கள் கூட்டுறவு டிபார்ட்மெண்டிலே வாங்கிய பணத்தைக் கட்டவேண்டும். சர்க்காரிலே வாங்கிய பணத்தை கட்டவேண்டும். அத்துடன் கூட கிஸ்தியையும் கட்ட வேண்டும். ஆகையால் தான் அவர்கள் உடனடியாக இந்த நெல்லை விற்கவேண்டியதாக இருக்கிறது. அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல், பெரிய விவசாயிகளாக இருந்தால் நெல்லைப் பாதுகாத்து வைத்திருந்து, கொஞ்ச நாள் கழித்து விற்க வசதி இருக்கிறது. ஆனால், சில்லறை மிராசுதார்கள் எல்லாம் அம்மாதிரி விற்கவும் முடியவில்லை. அத்துடன்கூட, கடன்களைத் திருப்பிக் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் இருப்பதாலும், கிஸ்தி கட்ட வேண்டிய நிர்ப்பந்தம் இருப்பதாலும், இதை உடனடியாக விற்கவேண்டிய ஒரு நிர்ப்பந்தம் ஏற்பட்டு விடுகிறது. இப்பொழுது கிஸ்தியை பிப்ரவரி மாதத்திலிருந்து வசூல் செய்கிறார்கள். இந்தக் கிஸ்தி வசூலிப்பதை இன்னும் ஒரு மாதம் தள்ளிப் போட்டால் சாதாரண சிறு விவசாயிகளுக்கு மிகவும் நலமாக இருக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். மார்ச் 20-ந் தேதிக்கு மேல் அவர்கள் வசூல் செய்வார்களானால், இம்மாதிரியான ஒரு கஷ்டம் அவர்களுக்கு இருக்காது. ஏற்கனவே ஜனவரி மாதத்திலேயே கிஸ்தி வசூல் செய்துகொண்டிருந்தோம். அப்பொழுது வசூல் செய்வதிலே இருந்த கஷ்டங்களை எடுத்துச்சொல்லியதன் காரணமாகத்தான், இப்பொழுது பிப்ரவரி மாதத்தில் வசூல் செய்து கொண்டிருக்கிறார்கள். கடந்த எட்டு வருஷங்களாக இந்த முறை இருந்து வருகிறது. இதிலும் கஷ்டம் இருக்கிறது. ஆகையால்தான் இதை நன்றாகத் தீவிரமாகப் பரிசீலனை செய்து மார்ச் 15-ந் தேதிக்கு மேல் கிஸ்தி வசூல் செய்ய முடியுமா என்பதை அவர்கள் யோசிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

கிஸ்தி வசூல் செய்யும்போது, இப்பொழுது பிப்ரவரி மாதத்தில் வசூல் செய்யலாம் என்றால், பிப்ரவரி 1-ந் தேதியே வந்து நிர்ப்பந்திக்கிறார்கள். அம்மாதிரியான குறை இல்லாமல், மார்ச் மாதத்திலே வசூல் செய்யலாம் என்று இருந்தாலும்கூட, மார்ச் 20-ந் தேதிக்கு மேல் 31-ந் தேதிக்குள் கொடுத்துவிடவேண்டும் என்று நாம் தீர்மானம் செய்தால் அதன் மூலம் விவசாயிகள் நல்ல பலனை அடைவார்கள் என்று நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஏற்கனவே 1930-ம் ஆண்டில் செட்டில்மெண்ட் நடந்தது. அதன் பிறகு செட்டில்மெண்ட் நடக்கவில்லை. இதன் காரணமாக என்ன நடந்துகொண்டு வருகின்றன என்பதை நாம் கவனித்தால், அநேக இடங்களில் அந்தக் காலத்தில் இருபோக விவசாயம் பண்ணின நிலங்களெல்லாம் இப்பொழுது ஒரு போக விவசாய நிலமாக இருக்கிறது. அப்பொழுது ஒரு போகமாக இருந்தது இப்பொழுது இரு போகமாக இருக்கிறது. அப்பொழுது இரு போகமாக இருந்த நிலத்தில் இப்பொழுது ஒருபோகம் போட்டாலும் கூட இரு போக வாய்தாவை வசூல் செய்துகொண்டு வருகிறார்கள். இந்தக் கஷ்டங்கள் இருக்கின்றன. ஆகவே, ரீ-செட்டில்மெண்ட் செய்தோ அல்லது ரீ-ஸர்வே செய்தோ எப்படியாவது இம்மாதிரியாக இருந்து கொண்டிருக்கும் தொந்தரவுகளைப் போக்குவதற்கு வேண்டிய வசதி செய்யவேண்டுமாய் நான் கேட்டுக் கொள்கிறேன்.



அடுத்தபடியாக, விவசாய வருமான வரியைப் பற்றி ஒரு சில வார்த்தை கூற விரும்புகிறேன். விவசாய வருமான வரியைப் பொறுத்த வரையில், ஏற்கனவே நாம் உச்ச வரம்புச் சட்டம் கொண்டுவருவதற்கு முன்னால் இந்த விவசாய வருமான வரி இருந்தது நியாயமானது. நாம் உச்ச வரம்புச் சட்டம் கொண்டு வரக்கூடிய இந்தத் தருணத்தில் விவசாய வருமான வரியை இன்னும் நீடித்துக்கொண்டே போவது நல்லதா என்று அமைச்சரவை கவனிக்கவேண்டுமாய் நான் கேட்டுக் கொள்கிறேன். விவசாய வருமான வரியின் மூலமாக அதிகமாக நமக்கு வருவாய் வந்துவிடவில்லை. ஏதோ $1\frac{1}{4}$ கோடி ரூபாய் வரும் என்றால் அதை வசூலிப்பதற்கு $13\frac{1}{2}$ லட்சம் முதல் 14 லட்சம் ரூபாய் வரையில் செலவழிக்கிறோம். அத்துடன் கூட, ' விவசாய வருமான வரி ' என்று நான் குறிப்பிடும்போது முக்கியமாக நெல் பயிர் செய்யும் நிலங்களைத்தான் நான் அதிகமாக வற்புறுத்துகிறேன். மலைத் தோட்டங்களைப் பற்றி அரசாங்கம் எப்படி நிர்ணயித்தாலும், மலைத் தோட்டத்தைப்பற்றி எனக்கு அதிகமாகத் தெரியாது. ஆகையால், நெல் விளைவிக்கக்கூடிய இடங்களைப் பொறுத்த வரையில், விவசாய வருமான வரியை நாம் போக்குவதற்கு உடனடியாகத் தீவிர முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாய வருமான வரி கொஞ்சமாக இருந்தாலும்கூட, அதனால், விவசாயிகள் கஷ்டம் அனுபவிக்கிறார்கள். ' கம்பவுண்டு ' செய்து கொள்ளலாமே என்று சொல்வார்கள். 'கம்பவுண்டு' செய்துகொள்ளக் கூடிய சட்டத்தையும் வருஷா வருஷம் நீடித்துக்கொண்டே போகிறோம். அதனுடைய தாத்பர்யம் என்னவென்றால்— என்றைக்காவது ஒரு நாள் இந்தச் சட்டத்தை எடுத்துவிடத்தான் போகிறோம், விவசாய வருமான வரியை ரத்து செய்யப் போகிறோம் என்று தான் நான் நினைக்கிறேன். அம்மாதிரி இருந்தால் அதைச் சீக்கிரமாகவே எடுத்துவிடும்படியாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

ரீ-ஸர்வே செய்வதிலே 50 சத வீதம் விவசாயி கொடுக்கவேண்டும் என்று இருக்கிறது. ஐம்பது சத வீதம் விவசாயியும், 50 சத வீதம் மத்திய அரசாங்கமும் கொடுக்கிறது என்றாலும், விவசாயி 50 சத வீதம் கொடுக்கவேண்டுமென்று இருப்பது மிகவும் சங்கடமான காரியம் என்று தான் நான் நினைக்கிறேன். அதைக் குறைக்க வேண்டும். இருபத்தைந்து சத வீத அளவுக்காவது அதைக் குறைக்க முடியுமா என்பதை அரசாங்கம் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று நான் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, விவசாயிகள் சம்பந்தமாக நாம் பல சட்டங்களைக் கொண்டுவந்துகொண்டே இருக்கிறோம். பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம், நியாயவாரச் சட்டம், உச்ச வரம்புச் சட்டம் இப்படியெல்லாம் கொண்டு வந்திருக்கிறோம். நாம் இந்தச் சட்டங்களைக் கொண்டுவரும்போதெல்லாம் நல்ல நோக்கத்துடன் தான் கொண்டுவருகிறோம். என்றாலும், நாம் எந்த நோக்கத்திற்காகக் கொண்டுவந்தோமோ அதை முறியடிப்பதற்காக வசதியுள்ளவர்கள், நிலச்சுவான்தார்கள், இப்படிப்பட்ட கும்பல்களெல்லாம் சதி செய்துவிடுகிறார்கள். ஆகையால், நாம் எந்தச் சட்டம் போட்டாலும் கூட, அதன் முழுப் பலனை விவசாயிகள் அனுபவிக்க முடியவில்லை. அம்மாதிரியான காரணத்தால் இப்பொழுது உச்ச வரம்பு சட்டம் வந்திருக்கிறது. உச்ச வரம்பு சட்டத்திற்காக ஆங்காங்கு உச்ச வரம்பு அதிகாரிகளை நியமித்து இப்பொழுது புள்ளி விவரங்களையெல்லாம் சேகரம் செய்துகொண்டிருக்கிறார்கள். நல்ல முறையில் வேலை நடந்துகொண்டிருக்கிறது. இந்த வேலை தீவிரமாக்கப்படவேண்டும். தீவிரமாக்கி உடனடியாக உச்ச வரம்புச் சட்டத்தைக் கொண்டுவருவோமானால் அதன் மூலமாகவும் நல்ல நன்மைகள் ஏற்படும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாம் இப்பொழுது பல இலாக்காக்கள் மூலமாகவும் சர்க்கார் மூலமாகவும் கடன் வழங்குகிறோம். அம்மாதிரி நாம் கடன் வழங்கக்கூடிய நேரத்தில் தனிப் பட்டா இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

[திரு. ரா. சுப்பிரமணியம்] [23rd March 1965

கூட்டுப் பட்டாவாக இருப்பதால் அவர்களுக்குக் காலா காலத்தில் அவர்கள் கோரிய கடனை வாங்க முடிவதில்லை. ஆகையால், கூட்டுப் பட்டாவாக இருப்பதையெல்லாம் யார் யார் எங்கெங்கு விரும்புகிறார்களோ அவர்களுக்கெல்லாம் தனிப் பட்டாவாகச் செய்து கொடுப்பதற்குப் போதுமான கவலை எடுத்துக்கொண்டு உடனடியாக அதை முடிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அம்மாதிரி தனிப் பட்டாவாகக் கொடுத்துவிடுவோமானால், காலா காலங்களில் கூட்டுறவு சொஸைட்டி மூலமாக அவர்கள் உரம் வாங்குவதற்கும் சர்க்காரிலிருந்து கடன் வாங்குவதற்கும் போதுமான வசதி ஏற்படும். ஆகையால், இந்த அம்சங்களைக் கவனித்து அமைச்சரவை இதற்குப் பரிகாரம் காணவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அத்துடன் கூட, எந்த ஒருவன் நிலம் வாங்கினாலும்கூட, பட்டா மாறுதல் விஷயமாக அதிக நாள் ஆகிறது. பட்டா மாறுதல் செய்ய கால தாமதம் இருப்பதைக் குறைத்து, நிலம் வாங்கிவிட்டால் உடனடியாகவே அவர்களுக்குப் பட்டா மாறுதலைச் செய்வதற்கு வேண்டிய அக்கறை எடுத்துக்கொள்ளவேண்டும். கர்ணம், மணியக்காரர், தாசில்தார் போன்றவர்களுக்கு உடனடியாக சர்க்கார் உத்தரவு போடவேண்டும். " குறிப்பிட்ட காலவரையறைக்குள் அல்லது, இத்தனை நாட்களுக்குள் நீங்கள் பட்டா மாறுதல் செய்துகொடுத்துவிட வேண்டும் " என்று சர்க்கார் அவர்களுக்கு உத்தரவு இட வேண்டும். அம்மாதிரி செய்தால் கூடுமானவரையில் அவர்களுக்கு நலமாக இருக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நான் குறிப்பிட்ட அம்சங்களையெல்லாம் அமைச்சர் அவர்கள் கவனித்து ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கின்றேன். வணக்கம்.

**திரு. முனு ஆதி** : சட்டமன்றத் தலைவர் அவர்களே, உணவு அமைச்சர்
11-00 a.m. கொண்டு வந்திருக்கிற மானியக் கோரிக்கையின் மீது எங்கள் கட்சியின் சார்பில் கொடுத்திருக்கிற வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நீண்டகாலமாக நாங்கள் நிலத் தீர்வையை ரத்து செய்ய வேண்டுமென்று காரண காரியங்களைக் காட்டிக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். எப்படி மதுவிலக்குச் சட்டத்தைக் கொண்டு வந்து அதனால் கிடைத்துவந்த வரியை ரத்து செய்துவிட்டு விற்பனை வரியைப் போட்டுக் கொண்டோமோ, அதுபோல நிலத்தீர்வையை ரத்து செய்துவிட்டு வருமான வரியையும், விற்பனை வரியையும் இன்னும் கொஞ்சம் தீவிரமாகச் செயல்படுத்தினால் இப்போது கிடைப்பதைப்போல இரட்டிப்பாகக் கிடைக்கக் கூடும். நிலவரியை ரத்து செய்யவேண்டும் என்பது எங்கள் நாட்டில் இருந்து பலகாலமாகக் கேட்டுக்கொள்ளப்பட்டு வருகிற நியாயமான கோரிக்கை. இதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்திக் கொள்கிறேன். உணவுப் பிரச்சினைதான் இந்த நாட்டுக்கு முக்கியம். உணவுப் பிரச்சினையை நாம் வெற்றிகரமாக சமாளிக்கவேண்டுமென்றால் உணவு உற்பத்தி செய்கிற விவசாயிகளுக்கு ஊக்கமும், ஆக்கமும், உற்சாகமும் கொடுக்கக் கூடிய வகையில், மிகக் குறைந்த வருமானமே தந்து கொண்டிருக்கக் கூடிய நிலத்தீர்வையை ரத்து செய்துவிடவேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்கிறேன். அப்படிச் செய்வது சமதர்மத்தை நோக்கிச் செல்கிற இந்த அரசாங்கத்திற்கு நல்ல பெயர் ஏற்படுத்தும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து எங்கள் தொகுதியை எடுத்துப் பார்த்தால் நிறைய புறம் போக்கு நிலங்கள் இருக்கின்றன. அங்கே அதிகமான பேர்கள் குடிசை போட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஜனப்பெருக்கத்தின் காரணமாகவோ, வேறு எந்தக் காரணமாகவோ அந்த புறம்போக்கு நிலங்களில் பல காலமாகக் குடிசை போட்டுக் கொண்டிருக்கிற ஏழை மக்களுக்கு இதுவரை நிரந்தரமாக அவர்கள் அங்கே இருக்க வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. 1953-ம ஆண்டு ஒரு குழுவை நியமித்து அது இந்தப் பிரச்சினையைப் பரிசீலனை செய்து பார்த்து புறம்போக்கு நிலங்களில் இந்தமாதிரி



23rd March 1965] [திரு. முனு ஆதி]

குடிசை போட்டுக் கொண்டிருக்கிறவர்களுக்குப் பட்டா வழங்க வேண்டும் என்பதாக உத்தரவு கொடுக்கப்பட்டது. இருந்தும் இதுவரை தாம்பரம் வட்டாரத்தில் ஆயிரக்கணக்கானவர்கள் குடிசை போட்டுக் கொண்டு பலகாலமாக இருந்து வருகிற இடங்களில் கூட பட்டா வழங்காமல் டெம்பரரியாகத்தான் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு உட னடியாகப் பட்டா வழங்க வேண்டும். பட்டா வழங்குவதில் தாமதம் ஏற்பட்டாலும் மேற்கொண்டு பல குடிசைகள் அங்கே தோன்றாமல் தடுப்ப தற்கு வேண்டிய நடவடிக்கையாவது மேற்கொள்ள வேண்டும். காரணம் புதுக்குடிசைகள் தோன்றிக்கொண்டே இருந்தால், வெகுகாலமாகக் குடி யிருப்பவர்கள் நிலைமையும் சிக்கலாகப் போகும்.

அடுத்து கிராமங்களில் இருக்கிற பஞ்சாயத்து குளங்களைக் கூடச் சிலர் கட்டிக்கொண்டு தங்களுடைய சொந்த சாகுபடிக்குப் பயன்படுத்தி வரு கிறார்கள். அதேசமயம் ஆடுமாடுகள் தண்ணீர் குடிப்பதைக் கூடத் தடை செய்கிறார்கள். குறிப்பாக என்னுடைய தொகுதியில் பீர்க்கை என்ற கிராமத்தில் உள்ள பஞ்சாயத்து குளங்களைத் தனிப்பட்டவர்கள் கட்டிக் கொண்டு ஆடுமாடுகள் தண்ணீர் குடிப்பதைக் கூடத் தடை செய்வது பற்றி அதிகாரிகளிடம் நானே புகார் கொடுத்துள்ளேன். இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளப்படவில்லை. கிராமங் களுக்குச் சொந்தமான குளம், குட்டைகளை இந்தமாதிரி தனிப்பட்டவர்கள் கட்டிக்கொள்வதை உடனடியாகத் தடை செய்து, கிராமங்களுக்குப் பொது வாகப் பயன்படும்படியாகச் செய்யவேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள் கிறேன்.

மூன்றாவதாக என்னுடைய தொகுதியில் உள்ள தரமணி என்ற கிராமம் நீண்டகாலமாகப் பாரம்பர்யம் பெற்றிருக்கிற ஒன்றாகும். அங்கே வாழ்ந்து கொண்டிருந்த 300 குடும்பங்களை, சர்க்கார் அங்கே ஒரு தொழிற்பள்ளி ஆரம்பிக்க வேண்டும் என்பதற்காக அப்புறப்படுத்தினார்கள். இன்றையதினம் அவர்களை அப்புறப்படுத்திவிட்டு அங்கே ஒரு ஐ.ஐ.டி. ஏற்படுத்தியிருக்கிறோம். இந்த ஐ.ஐ.டி.-ஐ ஏற்படுத்துவதற்காகத்தான் இந்த இடத்தில் குடியிருந்த 300 குடும்பத்தார்களை அரசாங்கம் அங்கே இருந்து அப்புறப்படுத்தி குடியிருப்பதற்கு வேறு இடத்தைக் காட்டினார்கள். இப்போது அரசாங்கம் காட்டிய இடத்தில் தான் குடியேறியிருக்கிறார்கள். இருந்தும் இந்த இடமும் கூட அவர்களுக்கு நிரந்தரமாக வசிக்க உப யோகப்படாது, ஆகவே இங்கே இருந்தும் காலி செய்தாகவேண்டும் என் பதாக அதிகாரிகள் அவர்களுக்குத் தொல்லை கொடுக்கிறார்கள். முன்பு இருந்த இடத்தைவிட்டு, அரசாங்கம் காட்டிய இந்த இடத்திற்கு வந்து, இன்று எடுத்துக்கொண்டு தங்களுக்கு எத்தனையோ கஷ்டங்கள் இருந் தாலும் இதை இருப்பிடமாக்கிக்கொள்ள முயற்சிசெய்து கொண்டிருக்கும் போது, மறுபடியும் இங்கே இருந்து இவர்களை அப்புறப்படுத்த ரெவின்யூ அதிகாரிகள் முயற்சி செய்வதை அரசாங்கம் தடை செய்தாக வேண்டும். மேலும் ஐ.ஐ.டி.-க்காரர்கள் இப்போது இவர்கள் மயானத்திற்குப் போகக் கூடிய பாதையையும் அடைத்து வேலிபோட்டுவிட்டார்கள். வேறு வழி யாகப் போக முடியாது அந்தப் பாதையில் உள்ள தனிப்பட்டவர்கள் அந்த அடைத்துவிட்டார்கள். இவர்களுக்கு மயானத்திற்குப் போக பாதை விடுவதினால் ஐ.ஐ.டி.-க்காரர்களுக்கு எவ்வித இடைஞ்சலும் ஏற்பட இட மில்லை. ஆகவே இவர்களுக்கு மயானத்திற்குப் போகப் பாதையும் முன் போல விடுவதற்கு அரசாங்கம்—தொழில் அமைச்சர் அவர்களையும் நமது உணவு அமைச்சர் அவர்கள் கலந்து கொண்டு—உத்தரவு போட வேண்டு மாறு கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு சென்னைக்கு வரவேண்டு மென்றாலும் பல மைல்கள் சுற்றிக்கொண்டு வரவேண்டியதாகஇருக்கிறது! அப்படி ஐ.ஐ.டி.-க்காரர்கள் வேலி போட்டுவிட்டார்கள். அதனால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிற அந்தத் தரமணி கிராமத்து 300 குடும்பத்தார்களும் மத்திய அரசாங்க அமைச்சர்கள் முதல் நம்முடைய அரசாங்கத்து பல விதமான அதிகாரிகள் வரை பல மனுக்கள் கொடுத்திருக்கிறார்கள். இது பற்றி பெரிய பைலே வைத்து இருக்கிறார்கள். முன்பு இருந்த இடத்தை விட்டு அப்புறப்படுத்தப்பட்டு, அரசாங்கம் காட்டிய இடத்திலேயே இப்போது இருந்து வருகிறபோது மறுபடியும் இங்கே இருந்து அப்புறப்படுத்தப்படுவது

என்றால் மிகவும் பரிதாபத்திற்குரியதாகும். ஆகவே இவர்கள் இப்போதுள்ள இடத்தில் நிரந்தரமாக இருக்க ஏற்பாடு செய்து தருவதோடு, மயானத்திற்குப் போக பாதையும், சென்னைக்கு வர நேர்பாதையும் தர ஐ.ஐ.டி.-க்காரர்களைக் கேட்டுக்கொள்ளவேண்டும். அதற்குத் தக்க உத்தரவு போட வேண்டுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து முத்திரைத்துறை நிர்வாகத்தில் இருக்கிற இடங்களில் எங்கே சென்றாலும் ஸ்டாம்ப் வெண்டார்கள் இருப்பது இல்லை. வழக்கு மன்றத்திற்குப் போவது என்றால், கோர்ட் பீஸ் நான்கணா ஸ்டாம்பு ஒட்ட வேண்டுமென்றால் கூட—எங்கேயோ பல மைல்கள் தள்ளி தம்முடைய சொந்த வீட்டில் ஸ்டாம்பு வைத்து விற்றுக்கொண்டிருக்கிறவரைத் தேடித்தான் போகவேண்டியதாக இருக்கிறது. ஆகவே அலுவலகங்களுக்கு அருகில் அங்கங்கே ஸ்டாம்ப்வெண்டார்களை அதிகம் ஏற்படுத்தித்தரவேண்டும் என்பதாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து திருவலஞ்சேரி, அகரம் போன்ற இடங்களில் தனிப்பட்டவர்களுடைய நிலத்தை ராணுவத்தினரின் உபயோகத்திற்காக எடுத்துக் கொண்டு பதினாறு ஆண்டுகள் ஆகப்போகின்றன. இருந்தும் இன்று வரை அவர்களுக்கு நியாயமாகக் கொடுக்கக் கூடிய நஷ்ட ஈட்டுத் தொகை கூடக் கொடுக்கப் படவில்லை. இல்லை என்றாலும் அவர்கள் கோர்ட்டுக்குப் போக முடியும். ஒருவிதத் தகவலும் இல்லாமல் இருக்கிறது. உடனடியாக அவர்களுக்குச் சேரவேண்டிய நியாயமான நஷ்டஈட்டைக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அதிக ஜனத்தொகை உள்ள நகராட்சி மன்றங்களிலாவது உடனடியாக பையர் ஸ்டேஷன் ஏற்படுத்தித்தந்தாக வேண்டும். குறிப்பாக தாம்பரத்தை எடுத்துக் கொண்டால் 55 ஆயிரம் ஜனத்தொகைக்கு மேலாக இருக்கிறது. அங்கே பெருவாரியான வீடுகள் குடிசைகள் தான். திடீரென்று நெருப்பு பிடித்துக் கொண்டால் சென்னையில் இருந்து பயர் சர்வீஸ் வருவதற்குள் பாதித் தாம்பரம் போய்விடும். ஆகவே தாம்பரம் நகராட்சி மன்றத்தில் ஒரு பையர் ஸ்டேஷன் ஏற்படுத்தித்தர வேண்டுமாறு கேட்டுக்கொண்டு, தரமணி கிராமத்து 300 குடும்பத்தார்களுக்கும் இப்போது குடியிருக்கிற இடத்திலேயே நிரந்தரமாகக் குடியிருப்பதற்கான ஒரு பாதுகாப்பையும், மயானத்திற்குப் போவதற்கான வழியையும் ஏற்படுத்தித் தரவேண்டுமாறு கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. ஆர். எஸ். ஆறுமுகம்** : கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, நமது ரெவின்யூ அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற மானியத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன் நிலச்சீர்திருத்தச் சட்டம் வந்த காரணத்தினால் ஏழை விவசாயிகள். நன்மை அடைந்திருக்கிறார்கள். ஒரு காலத்தில் நிலத்திலிருந்து எச்சமயத்திலும் வெளியேற்றப்படக் கூடிய நிலை இருந்தது. அதை மாற்றி நிலத்திலிருந்து வெளியேற்ற முடியாத பாதுகாப்பை நாது அரசாங்கம் அளித்திருப்பதன் காரணமாக இன்றையதினம் விவசாய மக்களிடையே உணவு உற்பத்தி செய்வதில் ஊக்கமும், உற்சாகமும் ஏற்பட்டு இருக்கிறது. நமது சர்க்கார் இத்தகைய சட்டங்களைக் கொண்டு வந்திருப்பது ஏழை விவசாயிகளுக்கு ஒரு வரப்பிரசாதம் என்றே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இருப்பினும் ஒன்றிரண்டு இடங்களில் இந்தச் சட்டங்கள் நல்லமுறையில் அமுல் செய்யப்படுவதில்லை என புகார் இருக்கிறது. இதையும் சர்க்கார் கவனிக்கவேண்டும். ஜமீன்—இனம் ஒழிப்புக்கள் குடியானவர்களுக்கு நல்வாழ்வுக்கான சட்டம். ஆனால் சில இனம்தார்கள் சர்க்கார் பின்னால் சட்டம் கொண்டு வருவதை உத்தேசித்து முன்கூட்டியே விவசாயிகளுக்குத் தொந்தரவு கொடுக்கும்படியான காரியங்கள் பலவற்றைச் செய்து வந்திருக்கிறார்கள். ஜமீன் ஒழிப்பு காரணமாக விவசாயிகளுக்கு நன்மையும் ஏற்பட்டு நிலத்தில் உரிமையும் ஏற்பட்டு இருக்கிறது. சமீபத்தில் மைனர் இனம் ஒழிப்பு சட்டம் வந்தது. இந்த இனம்தார்களினால் [illegible]



விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டு வந்தார்- அபிப்ராயம். ஆகவே, 30
யில் வல்லவன் கோட்டை கிராமம் இருக்கிறது. [illegible]மான வரியை விதித்தால்
விவசாயிகளில் பெரும்பாலோர்களை அடிக்கடி தி[illegible] குறிப்பாக 5 ஏக்கர்
லாம். காரணம் என்னவென்று கேட்டால் அவர்க[illegible] வசூலிக்கும்போது,
ஏதாவது வழக்குத் தொடர்ந்து இருக்கிறார் என்று [illegible]தற்கு வேண்டிய
இப்படி பல வழக்குகள் போட்டு விவசாயிகளுக்குப் பல[illegible]க்கொள்கிறேன்.
கொடுத்து வந்திருக்கிறார்கள். இப்போது இந்தச் சட்டம் [illegible]கர் ஒன்றுக்கு
எப்படி எப்படி எல்லாமோ விவசாயிகளிடம் இருந்து எழுதி[illegible]படுகிறது.
வதாகத் தெரிகிறது. ஆகவே வல்லவன்கோட்டை கிராம விவசா[illegible]த்திரம்
இந்தச் சட்டத்தினால் நன்மை ஏற்படும்படியாக அதிகாரிகள் [illegible]ங்கு
நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்ளவேண்டுமென்றும் இந்த சட்ட[illegible]ல
வல்லவன் கோட்டைக்கு அமுலுக்கு வர உடனடியாக அரசாங்கம் உத்தரவு
போடவேண்டும் என்றும் பணிவாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து புறம்போக்கு நிலங்களை ஏழைகளுக்கு ஜாரி செய்து கொடுக்கிற
பொறுப்பு சர்க்காருக்கு இருக்கிறது. ஆயினும் புறம்போக்கு நிலங்கள்
சீக்கிரமாக ஜாரி செய்து கொடுக்கப்படுவதில்லை. வெள்ளைக்காரன் காலத்
தில் தாமதமானால் அர்த்தமுண்டு. இப்போது தாமதம் செய்வதிலே
அர்த்தமில்லை. என்னுடைய தொகுதியில் அயூப்கான்புரம் என்ற
கிராமம் இருக்கிறது. அங்கே இருக்கிற ஏழை மக்கள் குடியிருப்புக்காக
புறம்போக்கு நிலத்தை ஜாரி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டார்கள்.
அந்த பஞ்சாயத்திலும் அப்படி அவர்களுக்குக் கொடுப்பதிலே ஆட்சேபனை
இடையாது என்று தெரிவித்தார்கள். அங்கு வந்திருந்த ரெவின்யூ அதி
காரிகளும் அவ்வாறு கொடுப்பதிலே தடைகள் இல்லை என்று சொல்லி
விட்டுச் சென்றார்கள். ஏழு வருடங்கள் ஆகின்றன. நான் இதுபற்றி
ஆர்.டி.ஓ. தாசில்தார்களைப் பார்க்கும்போது கேட்காத நாள் கிடையாது.
இருப்பினும் அந்தப் பேப்பர் அடிக்கடி காணாமல் போய்விடுகிறது. இந்த
மாதிரியாக ஒரு கிராமத்திலே உள்ள ஏழை மக்களுக்குக் குடியிருப்பு
நிலத்தை ஜாரி செய்வதற்காக, அதுவும் புறம்போக்கு நிலத்தை ஜாரி
செய்வதற்கு ஏழு ஆண்டுகள் காலதாமதம் ஆகவேண்டுமா? இதை
யெல்லாம் சர்க்கார் நல்ல முறையில் கவனித்து ஏழைகளுக்கு நிலத்தை
ஜாரி செய்து கொடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

களக்குடி என்ற கிராமத்திலே ஒரு வாசகசாலை புறம்போக்கு நிலத்தில் ஏற்படுத்தவேண்டுமென்று அங்குள்ள மக்கள் கேட்டார்கள். அதுவும் புறம்போக்கு நிலம்தான். அவர்கள் கேட்டு ஐந்து ஆண்டுகள் ஆகின்றன. வாசக சாலை கட்டுவதற்காக கல், சுண்ணாம்பு எல்லாம் கொண்டுவந்து சேர்த்திருக்கிறார்கள். ஐந்து ஆண்டுகள் ஆகிவிட்டன. அதிகாரிகள் பலர் பார்த்தாகிவிட்டது. இன்னும் நிலம் ஜாரி செய்து கொடுக்கப்படவில்லை. இதையெல்லாம் அரசாங்கம் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பாலாமடை என்ற கிராமத்திலே இரண்டு ஹரி
ஜனங்கள் குடியிருப்பு மனைக்கு நிலம் கேட்டார்கள். அதுவும் புறம்
போக்கு நிலம்தான், அவர்கள் கேட்டு ஐந்து ஆண்டுகள் ஆகியும்கூட இன்னும்
கவனிக்கப்படவில்லை. இப்படியே எத்தனை வேண்டுமானாலும் சொல்லிக்
கொண்டே போகலாம். புறம்போக்கு நிலத்தை ஜாரி செய்வதற்கு இவ்
வளவு காலதாமதம் தேவையா? ஆகவே சர்க்கார் இதைக் கவனித்து
புறம்போக்கு நிலங்களை ஜாரி செய்வதில் காலதாமதத்தை தவிர்த்து ஜாரி
செய்துகொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பல ஜில்லாக்களில், பல கிராமங்களில் பஞ்சமத் தரிசு நிலங்கள் ஒதுக்கப்பட்டு இருக்கின்றன. ஆனால் அந்த நிலங்கள் பல இடங்களில் ஹரிஜனங்களுக்கு இன்னும் ஜாரி செய்யப்படவில்லை. ஜில்லாக்கள்தோறும் இந்த புகார்கள் இருந்து வருகின்றன. எனவே அந்தக் காலத்தில் எந்த நிலங்களை யெல்லாம் பஞ்சமத் தரிசு நிலங்களாக ஒதுக்கியிருக்கிறார்களோ அந்த நிலங்களையெல்லாம் உடனடியாக ஜாரி செய்துகொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அந்த வட்டாரத்தில் மாடி வீடெல்லாம் இடையாது. எங்கு பார்த்தாலும் குடிசைதான். ஆகவே, தீ பிடித்து விட்டால் ஒரே சமயத்தில் 100 குடிசைகள் எரிந்து விடும். இப்போது வரி சம்பந்தப்பட்ட மானியமானாலும், கள்ளக்குறிச்சி வட்டாரத்தில் ஒரு தீயணைக்கும் படையை வைத்தால் நலமாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் ஓமந்தூரார் காலத்திலே ஓடைப் புறம்போக்கு, ஏரிப் புறம்போக்கு, சர்க்கார் தரிசு நிலங்கள் ஆகியவற்றையெல்லாம் அந்த ஏழை மக்களுக்காக ஒதுக்கி வைத்திருந்தார்கள். ஏழைக் குடியானவர்கள், இந்துக்களானாலும், ஹரிஜனங்களானாலும்சரி, யார் விண்ணப்பத்தாலும்சரி, அந்தப் புறம்போக்குகளை அவர்கள் ஏழைகளாக இருந்தால் அவர்களுக்கே கொடுத்துவிட வேண்டுமென்று அமைச்சரவையைக் கேட்டுக் கொள்கிறேன். பட்டாண்டு காலமாக கனம் ஹரிஜன நல இலாகா அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் பணியாற்றி வருவதன்மூலம் எந்த ஏழை மக்களையும் கவனிப்பதில்லை என்பது பரவலாகத் தெரிகிறது.

**கனம் திரு. பூ. கக்கன் :** அமைச்சர் நல்ல முறையில் கவனிப்பதாகத் தெரிகிறதா அல்லது கவனிக்கவில்லை என்று தெரிகிறதா ?

**திரு. தா. சின்னசாமி :** ஹரிஜனங்களைக் கவனிப்பதில்லை என்று தெரிகிறது. எந்த வித உதவியும் செய்யவில்லை என்று பரவலாகத் தெரிகிறது.

**கனம் திரு. பூ. கக்கன் :** கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்வது முழுப் பூசணிக்காயைச் சோற்றுக்குள் மறைப்பதுபோல் இருக்கிறது.

**திரு. தா. சின்னசாமி :** நான் சொல்வது அப்படி அல்ல. எந்த ஏழைகளையும் கவனிப்பதில்லை. எந்த ஏழை நிலம் சம்பந்தமாக அடமான விண்ணப்பத்தைத் தாக்கல் செய்தாலும் அது கவனிக்கப்படுவதில்லை. இப்போது தாசில்தார்கள் அதிகமாக இருக்கிறார்கள். ஹரிஜன நல இலாகாவில் ஒரு தாசில்தார், ரெவின்யூ இலாகாவில் ஒரு தாசில்தார், இப்படி எத்தனையோ பேர் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் இந்த ஏழைகளுடைய கோரிக்கைகளைக் கவனிப்பதில்லை. ஆகையால் கனம் அமைச்சர் அவர்கள் எங்கள் வட்டாரத்தில் இந்த ஏழைகளுக்கு உபகாரம் செய்ய வேண்டுமென்று நினைத்தால் அவர்களுக்கு ஏரிப் புறம்போக்கு, ஓடைப் புறம்போக்கு, தரிசு நிலங்கள் ஆகியவற்றை அவர்களுக்குக் கொடுக்கவேண்டும். அவ்வாறு கொடுத்தால் தங்களுடைய பெயர் நன்றாக இருக்கும். ஜனநாயக ஆட்சிக்கும், ஏழைகள் சர்க்கார் என்பதற்கும் எடுத்துக்காட்டாக இருக்குமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

எங்கள் பகுதியில் ஏரிகள் எல்லாம் தூர்ந்து போயிருக்கிறது. ஆனால் வரி வாங்குவதில்மட்டும் கெடுபிடியாக இருக்கிறார்கள். பஞ்சாயத்து ராஜ்யத்தில் எந்த ஒரு வேலையை எடுத்துக்கொண்டாலும் ஆறு மாதத்திலிருந்து ஐந்து வருஷம் வரை ஆகும்போல் தெரிகிறது. நாங்கள் போய் கூட்டு மன்றத்தில் "ஏரிகளை ஆழப்படுத்தவேண்டும்; வாய்க்கால்களை வெட்டவேண்டும்; குடியானவர்களுக்குக் கிணறுகளை வெட்டப் பணம் கொடுக்க வேண்டு"மென்று சொன்னால் "உங்கள் அமைச்சரைப் போய்க் கேளுங்கள்" என்று சொல்கிறார்கள். இப்போது பார்டரைத் தாண்டி நெல் போவதைத் தடுக்க கண்காணிப்பு இருக்கிறது. கூலி வேலை செய்யக்கூடிய மக்கள் 5 படி, 10 படி அரிசியைத் தங்களுடைய சாப்பாட்டுக்காகக் கொண்டு சென்றால்கூட அந்த டிவிஷன் ரெவின்யூ இன்ஸ்பெக்டர் பிடித்து அரிசியைப் பிடுங்கிக்கொண்டு போய்விடுகிறார். ஆனால் அந்த அரிசி சர்க்காரிடம் சேர்க்கப்படவில்லை. இந்த ஏழை மக்களுக்கும் அந்த அரிசியை விற்றுப் பணம் கொடுக்கவில்லை. ஏதோ காட்டில் கள்ளர்களைப் போல் திடீரென்று ஜீப்பில் வந்து அரிசியைப் பறித்துக்கொண்டு போய் விடுகிறார்கள். ரகசியமாக சி.ஐ.டி.போட்டு அந்த ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களையும் மற்றவர்களையும் கண்காணிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்கு அனுமதி கொடுத்த சபாநாயகர் அவர்களுக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

---



*** திரு. ஏடி. ஏ. பி. சவுந்தரவேல் சேர்வை :** கனம் சபாநாயகர் அவர்களே இன்றைய ரெவின்யூ மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். பொதுவாக, நமது தேசத்திலே, நமது தமிழ் நாட்டிலே ஜமீன் ஒழிப்புச் சட்டம் ஒன்றைக் கொண்டு வந்தோம். அநேக ஜமீன்களையும், எஸ்டேட்டுகளையும் நாம் எடுத்துக்கொண்டோம். ஜமீன்களை எடுத்த பிறகு, குறிப்பாக செட்டில்மெண்ட் அதிகாரிகளை நியமித்து, சர்வே இலாகாக்களை ஏற்படுத்தி சர்வே செய்யப்பட்டது. இப்போது மதுரை மாவட்டத்தில் போடி தொகுதியைப் பொறுத்தவரையில் 10 ஆண்டுகளாக சர்வே செய்யாமலே சர்வே இலாகா இயங்கிக் கொண்டு வருகிறது. செட்டில்மெண்ட் நடவடிக்கைகள் முடிந்ததாகத் தெரியவில்லை. நல்ல முறையில் சர்வே செய்யப்பட்டிருப்பதாகவும் தெரியவில்லை. சர்வே செய்யப்பட்ட நிலங்களை யார் விவசாயம் செய்கிறார்களோ அவர்களுடைய பெயரில் இல்லாமல் யார் யாருடைய பெயர்களில் எல்லாமோ இருக்கின்றன. நல்ல முறையில் அந்த இடங்களையெல்லாம் சர்வே செய்து யார் அந்த நிலங்களை அனுபவிக்கிறார்களோ அவர்களுக்கே நிலத்திற்கான பட்டா கிடைக்க ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது உற்பத்தி பெருக வேண்டுமென்ற நிலை நாட்டிலே இருக்கிறது. இந்த நிலையில் விவசாயம் செய்யக்கூடிய நிலங்கள் அத்தனையையும் சரிவரக் கணக்கெடுத்து அவர்களுடைய அனுபவத்தில் உள்ள நிலங்களுக்கு அவர்களுக்கே பட்டா வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பட்டா வழங்குவதிலே சில பிரச்சினைகள் சர்க்காரிலே இருந்து கொண்டிருக்கிறது. பல சட்டங்கள் போடப்பட்ட காரணத்தால் சட்டத்திற்குப் புறம்பாக அந்த ஏழை விவசாயிகள் அனுபவிக்கிறார்கள் என்ற நிலை இல்லாது அந்த நிலங்களை அவர்களுக்கே பட்டா செய்து கொடுக்க ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஜில்லா கலெக்டர்களைப் பொறுத்தவரையில் மதுரை ஜில்லாவில் மாத்திரம் இரண்டு ஆண்டுகளில் நான்கு கலெக்டர்கள் மாற்றப்பட்டிருக்கிறார்கள். ஒரு ஜில்லாவைப் பொறுத்த அளவு ஒரு கலெக்டர் இரண்டு ஆண்டாவது அந்த ஜில்லாவிலே வேலை செய்தால்தான் அந்த ஜில்லாவிலுள்ள நடவடிக்கைகள், முக்கியமான பிரச்சினைகள் எல்லாவற்றையும் பார்த்து ஆராய்ந்து வேலைகள் செய்வதற்கு ஏதுவாக இருக்கும். ஜில்லா கலெக்டர்களையும், ஆர்.டி.ஓ.-க்களையும் அடிக்கடி மாற்றாமல் அவர்கள் வேலையைச் செய்வதற்கு ஆவன செய்யவேண்டும்.

தண்ணீர்த் தீர்வை விதிக்கப்படுவதில் ஏழை விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஜமீன் ஏரியாக்களில் சரியாக சர்வே செய்யாத காரணத்தால் சொந்த நிலத்திலுள்ள தண்ணீரை எடுத்துப் பாய்ச்சுகின்றவர்களுக்குக் கூடத் தண்டத் தீர்வை விதிக்கப்படுகிறது. உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்ற நிலைமையில் விவசாயிகளுக்கு தண்டத் தீர்வையை விதிக்காமல் நியாயமான தீர்வையை மட்டும் விதிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**கனம் திரு. வெ. ராமையா :** கனம் அங்கத்தினர் சொல்வது மலை அடிவாரத்தில் இருந்து வருகின்ற ஊற்றுத் தண்ணீரைப் பற்றியா ?

**திரு. ஏடி. ஏ. பி. சவுந்தரவேல் சேர்வை :** சொந்த நிலங்களில் இருந்து வரும் ஊற்றுத் தண்ணீரைப் பயன்படுத்தி விவசாயம் செய்யக்கூடியவர்களுக்கு அந்தத் தீர்வை விதிக்கக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

செட்டில்மெண்ட் நடவடிக்கைகளைப் பொறுத்து காட்டு இலாகா அதிகாரிகளுக்கும், செட்டில்மெண்ட் அதிகாரிகளுக்கும் இடையே நல்ல தொடர்பை ஏற்படுத்தி ஜமீன் பிராந்தியங்களிலுள்ள, மலைப் பிரதேசங்களில் உள்ள நிலங்களை எல்லாம் நன்றாகப் பரிசீலனை செய்து விவசாயம் செய்யக்கூடிய விவசாயிகளுக்கே அந்த நிலங்களை ஒப்படைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

*** திரு. பி. ஜெயராஜ் :** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இன்று நம் ரெவின்யூ அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற ரெவின்யூ
11-30 a.m. மான்யத்தை ஆதரித்து என் கருத்துக்களைச் சொல்ல முன் வருகிறேன். மிகப் பழமையான இலாகாவாகிய ரெவின்யூ இலாகாவின் நிலத் தீர்வை மூலம் வருகிற வருமானம் அதிக வருமானமாக இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதிகமான தீர்வை இருந்தாலும்கூட அத்தகைய நிலையில் நாம் விவசாயிகளுக்கு எந்த அளவிற்கு நன்மை செய்து கொடுக்க வேண்டும் என்பதை அரசாங்கம் கவனித்து ஆவன செய்துகொண்டு வருகிறார்கள். இருப்பினும் விவசாயிகளின் முன்னேற்றத்திற்காக உற்பத்தி பெருக வேண்டும் என்பதற்காக நம் அரசாங்கம் பல திட்டங்கள் மூலம் நல்ல முறையில் அணைக்கட்டுகள் கட்டி நல்ல வசதிகளைச் செய்து கொடுப்பதின்மூலம் தஞ்சை ஜில்லாவில் கடந்த பத்து ஆண்டுகளில் விவசாய உற்பத்தி பெரும் அளவிற்கு பெருகியிருக்கிறது. விவசாயிகளும் தொழிலாளர்களும் நல்வாழ்வு வாழவேண்டும் என்பதற்காக பல திட்டங்கள் இடப்பட்டிருந்தாலும் ஒரு சில இடங்களில் விவசாயிகள் விவசாய உற்பத்தியைப் பெருக்கும் வாய்ப்பு தடைப்பட்டிருக்கிறது. இதை நான் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். சமீபத்தில் இதை நான் அமைச்சர் அவர்களிடம் நேரில் தெரிவித்திருக்கிறேன். கடந்த ஐந்தாண்டுகளாக தண்ணீர் தேங்கும் இடத்தை ஒரு தனி நபர் ஆக்கிரமித்து வைத்துக்கொண்டிருப்பதின் காரணமாக 800 ஏக்கர் பாசனம் தடைப்பட்டிருக்கிறது. ஆர்.டி.ஓ., கலெக்டர், இவர்கள் எவிக்ஷன் செய்தார்கள். சர்க்காரும் எவிக்ட் செய்திருப்பார்கள் என்று நம்புகிறேன். எண்ணூறு ஏக்கர் நிலத்தை ஒரு தனி நபர் ஆக்கிரமித்து வைத்திருக்கிறார். அவர் எவிக்ஷன் செய்யப்பட்டு மறுபடியும் விவசாயம் செய்துகொண்டிருக்கிறார். சென்ற ஆண்டு மகசூலைக் கைப்பற்றி விட்டார்கள். இந்த ஆண்டு விட்டு விட்டார்கள். ஆகவே தனிப்பட்ட நபர் ஆக்கிரமித்து வைத்திருக்கும் நிலத்தை எடுத்து விவசாயிகளுக்கு சௌகரியம் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் கொண்டு வந்தார்கள். அதன் காரணமாக பண்ணையாள்களுக்கு ஒரு பாதுகாப்பு, ஒரு நிவாரணம் கிடைத்தது. ஆனால் 1955-க்கு முன் தஞ்சை ஜில்லாவில் எவ்வளவு பண்ணையார்கள் இருந்தார்கள். இப்போது எவ்வளவு பண்ணையாட்கள் இருக்கிறார்கள் என்று கணக்கு எடுத்துப் பார்த்தால் வரவர பண்ணையாட்களின் எண்ணிக்கை அங்கு குறைந்து வருகிறது என்பதைப் பார்க்க முடியும் என்பதை நான் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இன்று நிலத்திலிருந்து உழைக்கும் பண்ணையாட்களை வேலையிலிருந்து அப்புறப்படுத்துகிற வாய்ப்புக்கள் இருக்கின்றன. அவர்கள் வேலை செய்யவில்லை என்றால் 300 ரூபாய் கொடுத்து அவர்களை வெளியேற்றி விடலாம் என்று சட்டத்தில் இருக்கிறது. ஆனால் பணம் கொடுக்காமலேயே பண்ணையாட்கள் இன்று வெளியேற்றப் படுகிறார்கள். அதிகப்படியான பண்ணையாட்களை இந்த பத்து ஆண்டுகளில் வெளியேற்றியிருக்கிறார்கள். 60—40 என்ற நல்ல திட்டத்தை சர்க்கார் கொண்டு வந்தார்கள். அதனால் விவசாயிகளுக்கும் மிராசுதார்களுக்கும் நல்ல சுமுகமான உறவு ஏற்பட்டது. அந்தச் சட்டப் பிரகாரம் விவசாயிகள் பெறுகிறார்களா, அப்படிப் பெற்று அந்நிலம் அவர்கள் கையில் இருக்கிறதா என்று பார்த்தால் பெரும் பகுதி விவசாயிகள் நிலத்திலிருந்து அப்புறப் படுத்தப்பட்டிருக்கிறார்கள். அளக்கிற நெல்லுக்கு ரசீது கொடுப்பதில்லை. மிராசுதார்களுக்கும் அவர்களுக்கும் அப்படி ஒரு ஏற்பாடு இருக்கிறது. மிராசுதாரர்கள் விவசாயிகளை அப்புறப்படுத்த நினைத்தால் நெல்லை பெற்றுக்கொண்ட பிறகு எல்லா நெல்லையும் அளக்கவில்லை என்று ரெவின்யூ கோர்ட்டில் கேஸ் போட்டு விவசாயிகளை அப்புறப்படுத்துகிறார்கள். பத்து வருடங்களுக்கு முன்பு எவ்வளவு பேர்கள் இருந்தார்கள், இப்போது எவ்வளவு பேர்கள் சாகுபடிதாரர்களாக இருக்கிறார்கள் என்று கணக்கு எடுத்துப் பார்த்தால் உண்மை விளங்கும். ஆகவே நாம் ஏற்படுத்தியிருக்கிற சட்டங்கள் விவசாயிகளுக்கு நன்மை பயக்கிற அளவில் செயல்படுகிறதா என்பதை அரசாங்கம் கண்காணிக்கவேண்டும். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வெள்ளத்தால், புயலால், மழையால் ஏற்பட்ட சேதங்கள் காரணமாகப் பெரும பகுதி விவசாயிகளுக்குக் குத்தகை நெல் அளக்க முடியவில்லை.



எங்கு பார்த்தாலும் விளைச்சல் குறைவு ஏற்பட்டது. அதன் காரணமாக பல கேஸ்கள் ரெவின்யூ கோர்ட்டில் போடப்பட்டு பல விவசாயிகள் அப்புறப்படுத்தப் பட்டிருக்கிறார்கள். நெல் அளக்கவில்லை என்றால் விவசாயிகளை அப்புறப்படுத்தலாம் என்றிருக்கிறது. ஆக, நெல் அளக்க முடியாத காரணத்தினால் விவசாயிகள் அப்புறப் படுத்தப்படுகிறார்கள் ஆகவே பண்ணையாட்களை அப்புறப்படுத்தாமல், 60—40 முறைப்படி நல்லமுறையில் கிடைக்கிறதா என்றும் பார்த்து அவர்களை அப்புறப் படுத்தாமல் இருப்பதற்கு என்ன வழி என்று பார்த்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கோவில் நிலங்கள் சாகுபடி செய் பவர்களுக்கு, மழை பெய்தாலும் வெள்ளம் வந்தாலும், தள்ளுபடி செய்வதே இடையாது. அதன் காரணமாக பல மகாநாடுகள் போட்டு, பல கூட்டங்கள் போட்டு அமைச்சர் அவர்களுக்கு பல மகஜர்கள் அனுப்பப் பட்டிருக்கின்றன. கோவில் நிலங்களுக்குச் சட்டத்திலிருந்து விதிவிலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இதுபற்றி அரசாங்கத்திற்கு தெரிவித்தாலும் எந்தக் காரணமாக இருந்தாலும் தள்ளுபடியோ, நிவாரணமோ கோவில் நிலங்களை சாகுபடி செய்பவர்களுக்கு கொடுப்பதில்லை. அதையும் அரசாங்கம் கவனிக்க வேண்டும். ஆகவே தஞ்சை ஜில்லாவில் விவசாயிகள் பாதிக்கப்பட்டால், சாகுபடிதாரர்கள் பாதிக்கப் பட்டால் அதை அரசாங்கம் கவனித்து அவர்களுக்கு பாதுகாப்பு கொடுத்தால்தான் அவர்கள் நல் வாழ்வு வாழ வழி ஏற்படும். முத்திரைத்தாள் சம்பந்தமாக நிலத்தின் விலையைக் குறைத்து பத்திரத்தாள்கள் வாங்குகிறார்கள். இதனால் அரசாங்கத்திற்கு வரும் வருமானம் குறைகிறது. சாசன விலையைக் குறைத்துப் போட்டு பத்திரத்தாள் வாங்குகிறார்கள். அதனால் சர்க்காருக்கு வரும் வருமானம் குறைகிறது. ஆகவே அரசாங்கம் அதையும் கவனித்து விவசாயிகளுக்கு நல் வாழ்வு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*** திரு. பி. வி. சீராமுலு :** கனம் தலைவர் அவர்களே, நில வரி மான்யக் கோரிக்கை மீது என் கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்திய துணைக்கண்டத்தில் கிட்டத்தட்ட எல்லாம் விவசாயக் குடும்பங்களாக இருக்கிற காரணத்தினால் நில வரியை எடுத்து விட வேண்டும் என்பது தான் என் அவா. மொத்தத்தில் இந்த மாநிலத்தில் கிட்டத்தட்ட நிலவரி யாக வசூலாகும் பணம் ஆறு கோடிக்கு சற்று அதிகமாகத்தான் இருக்கிறது. அது மட்டுமல்ல. அதற்கு ஆகும் செலவு என்னவென்றால் கிட்டத்தட்ட 3½ கோடி ரூபாய்க்கு மேல் செலவாகிறது. மீதி இரண்டே முக்கால் கோடிதான் நிலவரி மூலம் நம் சர்க்காருக்கு அதிகமாக கிடைக்கிறது. ஆனால் அடுத்து வரும் ஐந்தாண்டுத் திட்டத்தில் மத்திய சர்க்காரிலிருந்து கிட்டத்தட்ட மூன்று அல்லது நான்கு ஏக்கர்களுக்கு குறைவாகவுள்ள நிலங்களுக்கு நில வரி இருக்காது என்று திட்டமிட்டதாக கேள்விப்படு கிறேன். அதேபோல் இருந்தால் அதை நாம் வரவேற்க வேண்டியது தான். ஐந்து ஏக்கருக்கு மேல் நிலவரி வசூல் செய்தால்தான் ஓரள விற்கு சிறிய நிலச்சுவாந்தார்களுக்கு அது பயன்படும். மொத்தத்தில் இப்போதிருக்கும் நில வரி, நீர் கூலியைப் பார்க்கும்போது நல்ல விவசாயி, நல்ல பகுதியில் இருக்கும் நிலச்சுவான்தார் கட்ட வேண்டிய பணத்தைப் பார்க்கும்போது நில வரி 15 ரூபாய் என்று வைத்துக்கொண்டால் ரூ. 27·50 கொடுக்க வேண்டியிருக்கிறது. கல்வி வரி 3 ரூபாய், சர்சார்ஜ் ரூ. 1·70, யூனியன் டாக்ஸ் ரூ. 6·75 என்று கிட்டத்தட்ட ஒரு போகத்திற்கு ஒரு ஏக்கருக்கு ரூ. 27·95 பைசா என் பகுதியில் கட்ட வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதற்கு அப்புறம் நீர்க்கூலி. கே.ஆர்.பி. பகுதியில், ஆனால் அதற்கும் செஸ் வரி, கல்வி வரி, சர்சார்ஜ், யூனியன் டாக்ஸ் எல்லாம் கட்டவேண்டியிருக்கிறது. இரண்டையும் கட்டினால் ஒரு போகத்திற்கு ரூ. 25·90 ஆகிறது. அதையும் சேர்த்தால் 70 ரூபாய் இந்த கே.ஆர்.பி. பகுதியில் வாங்கிக்கொண்டிருக்கிற நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. 1955-ம் ஆண்டு இந்த கே.ஆர்.பி. கட்டி முடிக்கப் பட்டது. பிறகு அதாவது 1965-வது ஆண்டு வரையில் அதாவது பத்து ஆண்டு காலமாக ஒரு நீர்க்கூலி மட்டும் புஞ்சை நிலங்களுக்கு வசூல் செய்து வருகிறார்கள். ஆனால் ஏரியின் கீழ் உள்ள ஆயக்கட்டுதாரர் களிடமிருந்து முன்னால் ஒரு நீர்க் கூலிதான் வசூல் செய்து கொண்டிருந்

தாரர்கள். இப்போது 1962-வது வருடத்தில் இந்த மாநில சர்க்கார் இந்த மன்றத்தில் உருவாக்கிய ஒரு சட்டத்தின் மூலம் [illegible] வருடத்திற்கும் சேர்ந்து இன்னொரு நீர்க்கூலியை வசூல் செய்யவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விதம் சர்க்கார் உத்தரவுப்படி ஏழு ஆண்டு காலத்திற்கு பாக்கியை வசூல் செய்யவேண்டும் என்று சொல்லும்போது, ஒரு ஏக்கருக்கு எவ்வளவு தொகை கொடுக்க வேண்டியிருக்கிறது என்பதை நாம் பார்க்கவேண்டும். இந்த கே.ஆர்.பி. பகுதியில் இருக்கும் பகுதி பின்தங்கிய [illegible] பகுதிதான். இதில் நான் நேற்று சொன்னது போன்று, சுமார் 4,000 ஏக்கர் வரை ஸீலேஜ் வாட்டர் நிலங்களாக இருக்கின்றன. இப்படிப்பட்ட இடத்திலிருந்துதான் அரசாங்கம் வந்த ஏழு ஆண்டு காலத்திற்கு நீர்க்கூலியை வசூல் செய்யவேண்டும் என்று சொல்லியிருக்கிறது. ஆனால் 62-வது வருடத்தில் இந்தச் சட்டம் உருவாக்கப்பட்டிருக்கின்ற காரணத்தால், 62-வது ஆண்டு முதல், 65 வரையிலும் பாக்கியை கொடுப்பதற்கு அங்குள்ள விவசாயிகள் தயாராக இருக்கிறார்கள். ஆனால் 1955-வது ஆண்டிலிருந்து இன்று வரையிலும் பாக்கியை கொடுக்க வேண்டும் என்று சொல்லும்போது, அங்குள்ள ஒரு ஏக்கருக்கு ஆயிரம் ரூபாய் விலை கிடைக்கும் என்றால் பாக்கியாக இருக்கும் நீர்க்கூலி மட்டும் 700, 800 ரூபாய் இருக்கும். அதோடு இந்த 700 ரூபாய் பாக்கியை கொடுக்க வேண்டியது யார் என்று பார்க்கும்போது, நேற்றுவரையிலும் யார் நிலத்தை வைத்திருந்தாலும் கவலையில்லை. அந்த நிலத்தை வைத்திருக்கும் மிராசுதாரிடமிருந்து யார் இன்று வாங்கினார்களோ அவர்கள்தான் இந்த நீர்க்கூலியை கொடுக்கவேண்டும் என்று விதியில் சொல்லப்பட்டிருக்கிறது. இப்படியிருந்தால் ஒன்றிரண்டு ஏக்கர் நிலத்தை வைத்துக் கொண்டிருப்பவன் வாழ முடியுமா என்பதை கேட்க ஆசைப்படுகிறேன். ஆகவே தயவுசெய்து, இந்தச் சட்டத்தை உருவாக்கிய காலத்திலிருந்து அதாவது 1962-லிருந்து இந்த நீர்க்கூலியை வசூல் செய்தால் மிகவும் நலமாக இருக்கும் என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

உரவிலையைப் பொறுத்தளவில், உரத்தின் விலை இப்போது அதிகமாக இருக்கிறது. நெல் விலையோ குறைவாக இருக்கிறது. எங்களுடைய பகுதியில் இருக்கும் நிலங்கள் ஸீலேஜ் வாட்டர் உள்ளதாக இருப்பதால் மதிப்பு மிகவும் குறைவாக இருக்கிறது. இந்த இன்னல்களுக்கிடையில் நிலவரியையும் கொடுக்கவேண்டும் என்று சொல்லும்போது விவசாயி மிகவும் பாதகம் அடையக்கூடிய நிலைமையில் இருக்கிறான். அதோடு, நாம் எப்படி ஒரு வியாபாரிக்கு 50 ஆயிரம் ரூபாய் வரை சேல்ஸ் டாக்ஸ் இல்லாமல் விதிவிலக்கு கொடுத்திருக்கிறோமோ அதே போல் ஐந்து ஏக்கர்கள் வரை நிலவரி இல்லை என்கின்ற நிலைமையை ஏற்படுத்தவேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து. அதோடு ஐந்து ஏக்கர்களுக்கு மேல் உள்ளவர்களுக்கு, இன்கம்டாக்ஸ் முறையில் வரி போடுவதாக இருந்தால் நிச்சயமாக 3 கோடி ரூபாய்க்கு மேல் அரசாங்கத்திற்கு வருமானம் வரும். லாண்ட் இன்கம்டாக்ஸ் என்று போட்டிருப்பதில், கிடைக்கின்ற வருவாயைக் கொண்டு இதிலுள்ள அதிகாரிகளுக்கு சம்பளம் கொடுப்பதற்கே போய்விடுகிறது. ஆகவே லாண்ட் டாக்ஸ் என்றில்லாமல், இன்கம்டாக்ஸ் என்ற முறையில் வசூல் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

***திரு. என். வி. வேணுகோபாலகிருஷ்ணசாமி:** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மான்யத்தை வரவேற்று சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். என்னுடைய திருநெல்வேலி ஜில்லாவில் இந்த ஆண்டு பருவ மழை தவறியதால் கோவில்பட்டி, சங்கரன்கோவில், நாங்குநேரி முதலிய பகுதிகளில் உள்ள விவசாயிகள் எல்லாம் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். முதலில் லேசாக மழை பெய்தவுடன் இருந்த விதைகளை எல்லாம் நிலத்தில் கொண்டு போய் போட்டாகிவிட்டது. இப்போது மழை இல்லாததினால் அது அப்படியே அழிந்து போய்விட்டது. இப்போது விவசாயிகள் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதைப்பற்றி கனம் அமைச்சர் அவர்[illegible] பலமுறை சொல்லியிருந்தோம். இந்தப் பகுதியிலுள்ள





விவசாயிகளுக்கு எல்லாம் தீர்வை வஜா செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டோம். நேரில் போய் பார்வையிடுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். உடனே ரெவின்யூ போர்டு மெம்பர் அவர்களை அனுப்பினார்கள். அவர்களும் வந்து பாதிக்கப்பட்ட இடத்தையெல்லாம் சுற்றிப்பார்த்தார்கள். இதுவரையிலும் என்ன செய்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை. அங்குள்ள எல்லா நஞ்சை, புஞ்சை நிலங்களுக்கெல்லாம் தீர்வை வஜா செய்து கொடுக்கவேண்டும் என்று மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு அங்குள்ள மக்களுக்கு இப்போது எந்தவிதமான வேலை வாய்ப்பும் இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். மழை இல்லாமல் கிணற்றில் தண்ணீர் இல்லாமல் இருப்பதால், வேறு எந்தவிதமான மகசூலையும் விடுவதற்கு வழியில்லை. ஆகவே அங்குள்ள மக்களுக்கு பஞ்ச நிவாரண வேலைகளை கொடுக்கும் முறையில் எதாவது வேலை வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பல புதுக் குளங்கள் வெட்டுவதற்கு பரிசீலனை செய்து முடிந்திருப்பதாக தெரிகிறது. கண்மாய்களை புதுப்பிப்பதற்கும் ஸாங்ஷன் செய்திருப்பதாக தெரிகிறது. ஆகவே இந்த வேலைகளை உடனடியாக ஆரம்பித்து, வேலையில்லாமல் இருக்கும் எங்கள் பகுதி மக்களுக்கு வேலை கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கோவில்பட்டி, திருநெல்வேலி ஜில்லாவில் ஒரு பெரிய நகரம். இப்போது முனிசிபாலிடியாக இருக்கிறது. ஐம்பதாயிரம் மக்கள் தொகை கொண்ட நகரமாக இருக்கிறது. இந்த இடத்திற்கு தீ அணைக்கும் படை இப்போது கிடையாது. ஆகவே கோவில்பட்டியில் ஒரு தீ அணைக்கும் படையை நிறுவ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு விவசாய வருமான வரி என்று போட்டிருக்கிறார்கள். அதன் மூலம், விவசாயிகள் கணக்குகளை எழுதி சர்க்காரிடம் காண்பிக்க வேண்டும். இது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஆனால் இதை கம்பௌண்ட் செய்யலாம் என்றும் இருக்கிறது. அதற்கும் கணக்கு எழுதி அனுப்பி சாங்ஷன் செய்த பின்னால் தான் கம்பௌண்ட் செய்து கொள்ளமுடியும். இதற்கு ஆறு மாத காலம் ஆகும். இதற்காக தலை நகரத்திற்கு போய்வர மிகவும் கஷ்டமாக இருக்கிறது. எப்போது நாம் நிலத்திற்கு உச்சவரம்பு செய்து விட்டோமோ அப்போதே விவசாய வருமான வரியை நீக்கிவிடவேண்டும். இதை சர்க்கார் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பல நண்பர்கள், ஐந்து ஏக்கர்கள் வரையுள்ள நிலங்களுக்கு எந்த விதமான வரியும் இருக்கக்கூடாது என்று சொன்னார்கள். இதை நானும் ஆதரிக்கின்றேன். நமது நாட்டு மக்களுக்கு பல நல்ல காரியங்களை செய்ய வேண்டும் என்றுதான் அரசாங்கமும் விரும்புகின்றது. ஆனால் செய்வதை உடனடியாக செய்தால் நலமாக இருக்கும். அதன் மூலமாக உற்பத்தியை பெருக்குவதற்கு நாம் வழி செய்தவர்களாக ஆவோம் என்பதை தெரிவித்துக்கொண்டு இந்த மான்யத்தை வரவேற்றுக்கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

***திரு. எஸ். முத்துலிங்கம்:** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் ரெவன்யூ அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மான்யத்தின் மீது எங்கள் கட்சிக்காரர்கள் கொடுத்திருக்கும் வெட்டுப்பிரேரணைகளை ஆதரித்து சில கருத்துக்களை நான் சொல்ல ஆசைப்படுகிறேன். சர்க்கார் புறம்போக்கு நிலங்களை நிலமில்லாதவர்களுக்கு அடமானம் செய்து கொடுக்கும்போது, சில புறம்போக்கு நிலங்களை ஏலம் போட்டுத்தான் அடமானம் செய்து கொடுக்கிறார்கள். ஏலம் போடுவதால், பெரிய பணக்காரர்களுக்குத்தான் இந்த நிலங்கள் போய்ச் சேருகின்றன. அவர்கள் எந்த நிலத்தையும் விடுவதில்லை. இதனால் நிலம் இல்லாதவர்களுக்கு நிலம் கொடுக்கவேண்டும் என்கின்ற நிலைமை நடைமுறையில் இல்லை. நிலம் இல்லாதவர்களுக்கு நிலம் தருவது என்கின்ற திட்டத்திற்கும்

பொருள் இல்லாமல் போய்விடுகிறது. ஆகவே ஏலம் போட்டு தரும் முறையை கைவிட வேண்டுமென்று நான் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சில புறம்போக்கு நிலங்களை சிலர் நீண்டகாலமாக பயிர் செய்து அனுபவித்து வருகிறார்கள். ஆனால் ஏதோ சில காரணங் களுக்காக அந்த நிலங்கள் அடமானம் செய்து தரப்படுவதில்லை. அதற்கு மாறாக ஆண்டு தோறும் அபராதத் தீர்வை, தண்டத்தீர்வை முதலியவை வசூல் செய்கிறார்கள். தண்டத்தீர்வை வசூல் செய்து விடுவதால் மட்டும் பிரச்சனை தீர்ந்துவிடாது. அந்த நிலம் அடமானம் செய்து தரக்கூடாது என்று எப்போது நிலைமை இருக்கிறதோ அப்போது அதில் இருக்கின்ற வர்கள் வெளியேற்றப்படவேண்டுமே தவிர அபராதத் தீர்வை விதிக்கக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து தீர்வை விதிக்காத புறம் போக்கு நிலத்தை பஞ்சாயத்து தீர்மானம் போட்டு, ஒப்புதல் கொடுத்து அதை எடுத்து நிலமில்லாதவர்களுக்கு கொடுக்கவேண்டும் என்றால் அதுவும் முடியாது. அதற்கு பஞ்சாயத்துச சட்டத்தை திருத்தவேண்டும். அவ்விதம் திருத்தப்பட்டால்தான் தீர்வையில்லாத புறம்போக்கு நிலங்களை எடுத்து நிலமில்லாதவர்களுக்குப் பஞ்சாயத்துக்கள் அடமானம் செய்து கொடுக்க முடியும் என்கின்ற நிலைமை இருந்து கொண்டிருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே அந்தச் சட்டத்தை உடனடியாகக் கொண்டு வந்து நிறைவேற்றி வைக்க வேண்டுமென்று மிகவும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக வீடுகள் தீப்பற்றி எரியும்போது சொந்த மனையில் இருந்தால்தான் நஷ்ட ஈடு கொடுக்க முடியும் என்றும், புறம்போக்கு மனையில் கட்டப்பட்டிருக்கக் கூடிய வீடுகள் தீப்பற்றி எரியும்போது அவர் களுக்கு ஏற்பட்ட நஷ்டங்களை சர்க்கார் கொடுக்க முடியாது என்றும் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. ஆகவே இதை மாற்றி எல்லா வீடுகளுக்கும், வேற்றுமை காட்டாமல் நஷ்ட ஈடு தரப்படவேண்டும் என்றும், தீயினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அதிகமான தொகை கொடுத்து ஆதரிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக எங்கள் பகுதியில், அதாவது வந்தவாசித் தொகுதியைச் சேர்ந்த பகுதியில் அநேக கிராமங்களில் ஓலைகளால் வேய்ந்த வீடுகள்தான் அதிகமாக இருக்கின்றன. அந்த வீடுகள் தீப்பற்றி எரியும் நேரத்தில் 30 மைல் அல்லது 50 மைல்களிலிருந்துதான் தீயணைக்கும் படையினர் வந்து சேர வேண்டியிருக்கிறது. இங்கிருந்து ஃபோன் செய்தாலும் அவர்கள் வந்து சேர அரை மணி அல்லது ஒரு மணி ஆகி விடுகிறது. அதற்குள் வீடுகள் அனைத்தும் சாம்பலாகி விடுகின்றன. அந்தப் பகுதியிலுள்ள பெருவாரியான மக்களுக்கு நன்மைகள் ஏற்படவேண்டு மானால் வந்தவாசியில் தீயணைப்பு நிலையத்தை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக நில விற்பனை மூலம் கைமாறி பல வருஷங்கள் ஆகி யும்கூட பட்டா மாற்றுவது கிடையாது. பட்டா மாற்றத்தைச் செய்ய அரசாங்கம் வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எங்கள் பகுதியிலுள்ள சர்க்கார் புறம்போக்கு நிலங் களை ஏழை ஹரிஜன மக்கள் நீண்ட நாட்களாக அனுபவித்துக்கொண்டு வருகிறார்கள். அந்த நிலங்களைப் பட்டா செய்து கொடுப்பதில் கால தாமதம் ஏற்படுகிறது. ஏழை ஹரிஜனங்களுக்கு உடனடியாகப் பட்டா செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

* **திருமதி அ. கிருஷ்ணவேணி :** மதிப்புக்குரிய சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் ரெவினியூ மான்யக் கோரிக்கையை ஆதரித்துச் சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன்.

பெரியகுளம் தாலூகா, குன்னூர் கிராமம் வைகை அணையினால் பாதிக் கப்பட்டிருக்கிறது. மழை காலத்தில் பெருவாரியான வெள்ளம் பெருக் கெடுத்து வரும் காரணத்தினால் தண்ணீர் தேங்கி நிற்கிறபடியால்



அங்குள்ள பெண்கள் மலஜலம் கழிப்பதற்குக்கூட வசதி இன்றியும், ஆடுமாடுகள் நிற்கக்கூட இடம் இன்றியும், சுகாதார வசதி இல்லாமலும் மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். மேலும் நமது கனம் காமராஜ் அவர்கள் முதன் மந்திரியாக இருந்த போது அவர்களும், மற்றும் எல்லா அமைச்சர்களும் குன்னூர் வழியாகப் போகும் போது குன்னூர் கிராமத்தையும் பார்த்திருக்கிறார்கள். வேறு இடத்திற்கு மாற்ற ரெவின்யூ இலாகா மூலமாக இடமும் தேடிப் பல ஆண்டுகள் ஆகியும் குன்னூர் கிராமத்திற்கு விமோசனம் கிடைக்கவில்லை. ரெவின்யூ அதிகாரிகளைக் கேட்டால் பி.டபிள்யூ. டி. என்ஜினீயர்களுக்குப் போயிருக்கிறது என்றும், பிரதம என்ஜினீயரைக் கேட்டால் ரெவின்யூ டிபார்ட்மெண்ட்டில் தாமதம் என்று சொல்லியும் காலம் கடந்து வருகிறது. தயவு செய்து அங்குள்ள ஏழை மக்களின் நலனைக் கருதி உடனடியாக அந்தக் கிராமத்தை அப்புறப்படுத்துவதற்குச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க துரிதப்படுத்தி, கனம் அமைச்சர் அவர்களை குன்னூர் கிராமத்தில் உள்ள ஏழை மக்களின் கஷ்டத்தை அறிந்து, கூடிய சீக்கிரம் வேறு இடத்திற்குப் போய்க் குடியிருப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் கிராம அதிகாரிகளுக்கும், சிப்பந்திகளுக்கும் மேலிடங்களுக்குப் போகும்போது அவர்களுக்குத் தகுந்த பிரயாணப் படி கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

* **திரு. கேஆர். ஆர் எம். கரியமாணிக்கம் அம்பலம் :** மதிப்புக்குரிய சட்ட மன்றத் தலைவர் அவர்களே, ரெவின்யூ அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கும் ரெவின்யூ மானியத்தின் மீது எதிர்க்கட்சிகள் கொண்டு வந்திருக்கிற வெட்டுப் பிரேரணையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

எனது தொகுதியாகிய திருவாடானை தாலூகாவில் இந்த வருஷம் பருவ மழை தவறியதன் காரணமாகப் பெரும் பகுதி அங்கு பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. அங்கு இந்தப் பஞ்சம் ஏற்பட்டிருக்கின்ற நிலையிலும் இன்னும் கெடுபிடி வரி வசூல் குறைந்தபாடாக இல்லை. வரி வசூலுக்காக விவசாயிகளைத் தொந்தரவு செய்து கொண்டிருக்கிறார்கள். அங்கு வரி வஜா செய்யவேண்டுமென்று நான் முன்பே கேட்டுக்கொண்டிருக்கிறேன். இன்னும் வரி வஜா செய்யப் படவில்லை. திருவாடானை தாலூகாவின் பஞ்ச நிலையைப் பற்றி இந்த ரெவின்யூ மான்யத்தின் மீதான அறிக் கையில் ஒரு வரிகூடக் குறிப்பிடாதது மிகவும் வருந்தத் தக்கது. அங்கு கஷ்டப்படுகிறவர்களுக்கு வரி கெடுபிடி வசூலை நிறுத்த வேண்டும், பஞ்ச நிவாரண வேலைகளை மேற்கொள்ளுவதற்கு ஏதுவாகப் பல வேலைகளை ஆரம்பிக்க வேண்டும். விவசாயிகள் எங்கு பார்த்தாலும் கஷ்ட நிலையில் தான் இருக்கிறார்கள். விவசாயிகள் மேம்பட்டு விட்டார்கள் என்று சொல்வதற்கில்லை. பல புனைகளிலே வரி போட்டுத் தொந்தரவுக்குள்ளாக்கி இருக்கிறார்கள். அவர்கள் பெரும் பகுதி கடன் பட்டிருக்கிறார்கள். கடன் படாத விவசாயியே எந்த ஊரிலும் இருக்க முடியாது. அந்த மாதிரி நிலையில் இருக்கிறார்கள் . . . (கனம் திரு. வெ. ராமையா : எந்தத் தாலூகாவில் ?) எல்லா இடத்திலும் அப்படித்தான். ஒருவாறு புதுக்கோட்டைப் பகுதியில் இருக்கிறார்களோ என்னவோ தெரியாது. விவ சாயிகள் விவசாயத்தை நல்ல முறையில் செய்யவேண்டும். அவர்களுக்கு இருக்கிற கஷ்டம் பண முறைதான். நில வரி கொடுப்பதற்கே கஷ்டப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே உணவுப் பஞ்சத்தைத் தீர்க்க விவ சாயிகளுக்கு ஏதாவது நன்மைகள் செய்தாக வேண்டும். திரும்பத் திரும்ப அவர்களுக்கு வரி போட்டு உபத்திரவப்படுத்தக் கூடாது. ஆகவே நில வரியை ரத்து செய்யவேண்டும், நில வரியே இருக்கக் கூடாது. அப்போதுதான் நல்ல முறையில் பாடுபட்டு உற்சாகமாக உணவுப் பஞ்சத்தைத் தீர்ப்பார்கள் என்று சொல்லிக்கொள்கிறேன்.

ஜமீன் முறை ஒழிந்து விட்டது. ஜமீன்தாரி காலத்தில்தான் விவசாயிகள் மிகவும் கஷ்டப்பட்டார்கள் என்று நினைத்தால் இப்போது போடுகின்ற வரியை நினைத்தால் மிகவும் கொடுமையாக இருக்கிறது. காங்கிரஸ்

காரர்கள் எல்லாம் ஜமீந்தார்கள் மிகக் கொடியவர்கள், விவசாயிகளை உறிஞ்சி வருதல் செய்கிறார்கள் என்று பிரசாரம் செய்தார்கள் அந்தக் காலத்திலே. நானும் கூடத்தான் சேர்ந்து செய்தேன். இப்போது பார்த்தால் அவர்களை நல்லவர்களாக ஆக்கிவிட்டோம். இன்றைக்குப் பார்த்தால் பல முனைகளில் வரி. * * * * ஆகவே, விவசாயிகளுக்குப் போடுகிற வரியை அறவே ரத்து செய்தால்தான் நாம் ஜமீன்தார்களைக்காட்டிலும் நல்ல முறையில் விவசாயிகளுக்கு நன்மை செய்தோம் என்ற நிலைமை ஏற்படுமே தவிர, வரி போட்டுக் கொண்டே போனால் விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, அதை ரத்து செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது எங்கு பார்த்தாலும் ரெவின்யூ இலாகாவில் கையாடல் அதிகமாக இருக்கிறது. அது ஒழிந்தபாடில்லை. அதை ஒழிப்பதற்கு நல்ல முறையில் நடவடிக்கை எடுத்துக் கொள்ளவில்லை என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். அவர்கள் மீது கேஸ் போட்டால் " பைலே " காணாமல் போய் விடுகிறது, அடிக்கட்டுகளே காணாமல் போய்விடுகிறது. அந்த வேலையை உஷாராகச் செய்கிறார்கள். சில பேர்கள் சர்க்காருக்கு வேண்டியவர்களாக இருப்பதால், பைலே சுத்தமாகக் காணாமல் போய் விடுகிறது. ஆகவே, கேஸ் போட்டாலும் அவர்கள் அகப்படுவதில்லை. எங்கள் தாலூகாவில் அதுமாதிரி நடந்திருக்கிறது. ஏதாவது ரிகார்டு இருந்தால் தானே அகப்பட்டுக் கொள்வார்கள். அந்த மாதிரி நிலை ரொம்ப அதிகமாக இருக்கிறது. ராசிங்கமங்கலம் என்ற ஒரு கிராமம் இருக்கிறது. அங்கே கிராம முன்சீப் சுமார் 30,000 ரூபாயைக் கையாடியிருக்கிறார். 6 மாதமாக இதைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். கையாடல் ரசீது அனுப்பியிருக்கிறார்கள். எல்லாம்இருக்கிறது. ஆனால் அவர்கள் மீது நடவடிக்கை இல்லை. ஏனென்றால் ஒரு பெரிய காங்கிரஸ்காரருக்கு அவர் சொந்தக்காரராம். ஆகையினால் அவர் மீது நடவடிக்கை எடுக்கவில்லை. நடவடிக்கை எடுக்காமலே போய் விடுமோ என்று அங்குள்ள பொது மக்கள் அஞ்ச வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே, உடனே இதற்கெல்லாம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை)

ஜமாபந்தி காலத்தில் கிராம முன்சீப், கர்ணம் ஆகியோர்களுக்கு அதிகத் தொல்லை ஏற்படுகிறது. ஜமாபந்திக்கு ஆபீஸர்கள் ரிகார்டுகள் சுமந்து கொண்டு வருவதற்குக்கூட இவர்கள் பணம் கொடுக்க வேண்டும். அவர்களுக்கு ஏற்படுகிற எல்லாச் செலவுகளையும் இவர்கள்தான் ஏற்றுக் கொள்ளவேண்டும். எத்தனையோ தடவை இதைப்பற்றி இந்த மன்றத்தில் எடுத்துக் கூறியிருக்கிறேன். கர்ணம், கிராம முன்சீப் தங்களுடைய நிலத்தை விற்று செலவு பண்ணவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. அதனால்தான் கையாடல் வருகிறது என்று நினைக்க வேண்டியிருக்கிறது. அதிகமாகச் செலவு செய்யவேண்டிய நிலை இருப்பதினால், அவர்கள் அங்கு போய் கையாடல் செய்யவேண்டிய நிலை ஏற்படுகிறது என்றுதான் நினைக்க வேண்டியிருக்கிறது. ஜமாபந்தி நேரத்தில் அவர்களுக்கு ஏற்படுகிற ஏராளமான செலவைத் தவிர்க்க வேண்டும். ஜனநாயகத்தில் இதெல்லாம் நியாயம் இல்லை. இதனால் லஞ்சம் அதிகமாவதற்கு வழி வகைகள் ஏற்படும். இந்த வருஷம் ஜமாபந்தி நேரத்திலாவது கர்ணம். கிராம முன்சீப்பிடம் வாடிக்கை வசூலிக்காமல் இருப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். எங்கள் பகுதியில் ஒவ்வொருவரும் ரூ. 150 கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. ஆனால் இவர்கள் வெளியே சொல்ல மாட்டார்கள். ஏனென்றால், நடவடிக்கை எடுத்து விடுவார்களோ என்ற பயம். இம்மாதிரிக் கஷ்டங்கள் கிராம முன்சீப், கர்ணம் ஆகியோர்களுக்கு இருக்கின்றன. அவற்றை நிவர்த்தி செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

...பட்டா மாறுதல் விஷயமாகச் சொல்லப்பட்டது. நேரடியாகப் பட்டா ஒவ்... வொருவருக்கும் கிடைப்பது கிடையாது. பட்டா மாறுதலுக்கு மனுக்கொடுத்... தால், 5 மாதங்களுக்கு மேலும் அந்த பேபர் பெண்டிங்காக இருக்கிறது. ... பட்டா மாறுதலுக்கு மனுக் கொடுத்தால், அது எத்தனை நாட்களுக்குள் ... செய்யப்பட வேண்டும் என்று டயம் நிர்ணயிக்கப்பட வேண்டும்.

* * * * Expunged as ordered by the Chair.





அப்பொழுது தான் விவசாயிகளுக்குக் காலாகாலத்தில் பட்டா கிடைக்கும். விவசாயிகள் நிறைய செலவு செய்தால் ஒழிய, சும்மா பட்டா வாங்கிவிட முடியாத நிலைமை இருக்கிறது. சில இடங்களில் இருக்கிற அதிகாரிகளைத் தவிர, மற்ற இடங்களில் பட்டா மாறுதல் மிகவும் கஷ்டமாக இருக்கிறது. அதனால் லோன் வாங்கமுடியவில்லை. மற்றச் சிரமங்களும் இருக்கின்றன. இதை நிவர்த்தி பண்ணவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. எம். தண்டாயுதபாணி :** கனம் சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த மான்யக் கோரிக்கைகளை ஆதரித்து, வரவேற்று, எனது கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். குறிப்பாக நிலத்திற்கு நாம் விதித்திருக்கிற தீர்வையைப் பார்த்தால், ஒரு விவசாயியிடம் இவ்வளவு நிலம் இருக்கிறது என்று இருந்தால், அதற்கு இத்தனை ரூபாய் கிஸ்தி அவனிடமிருந்து வசூல் செய்ய வேண்டும் என்று நாம் நிர்ணயித்திருக்கிறோம். ஆனால், அந்த முறையிலே பல குறைபாடுகள் இன்று இருந்து வருகின்றன. தற்பொழுது இந்த மன்றத்தில் பல அங்கத்தினர்கள் நில வரியை ரத்து செய்ய வேண்டுமென்று கோரினார்கள். நில வரியை ரத்து செய்யவேண்டுமா, ரத்து செய்ய வேண்டாமா என்று பரிசீலனைக்கு நாம் போவதற்கு முன்னால், தற்பொழுது நாம் விதித்திருக்கும் நிலவரி ஒழுங்கான முறையில் வசூலிக்கப்படுகிறதா என்பதை நாம் பரிசீலனை செய்து பார்க்க வேண்டும். இதற்கான முழு அதிகாரத்தை நாம் கிராமக் கர்ணிகர்களிடம் ஒப்படைத்திருக்கிறோம். ஜில்லாவாரியாக, தாலுகா வாரியாக வேறுபட்ட நிலையிலே தீர்வையை, கிஸ்தியை நாம் நிர்ணயித்திருக்கிறோம். தஞ்சை ஜில்லாவைப் பொறுத்தவரையில் எடுத்துக் கொண்டாலும், கூட, பழைய டெல்டா பகுதிக்கு ஒரு நிர்ணயமும், புதியதாக பாசனம் பெற்றிருக்கிற பட்டுக்கோட்டை, ஒரத்தநாடு பகுதிகளுக்கு ஒரு நிர்ணயமும் செய்திருக்கிறோம். பழைய டெல்டா பகுதிகளுக்கு அஸெஸ்மெண்டு என்ற ஒன்றை நிர்ணயம் செய்து, அதிலேயே ஸெஸ், சர்ஜார்ஜ் இவைகளைச் சேர்த்து வசூல் செய்வதற்கு வழி வகை செய்திருக்கிறோம். ஆனால், புதிய பாசனம் பெற்ற பட்டுக்கோட்டை, ஒரத்தநாடு பகுதிகளுக்கு நிலத் தீர்வை தனியாக ஏகர் ஒன்றுக்கு ரூ. 1.50, தண்ணீர்த் தீர்வை ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 10, அதற்கு ஸெஸ் தனியாக, ஸர்ஜார்ஜ் தனியாக என்று எல்லாவற்றையும் நாம் கூட்டிப் பார்க்கும்பொழுது, ரூ. 22 குறைந்த அளவுக்கு ஒரு ஏகருக்கு என்று நிர்ணயம் செய்யப்பட்டு வசூல் செய்யப்படுகிறது. ஆண்டுதோறும் ஒரு விவசாயி ஒரு ஏகருக்கு ரூ. 22 தான் கிஸ்தி கட்டவேண்டும் என்ற நியதி இருக்கிறதா என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். நிச்சயமாக அந்த நிலை இல்லை. கர்ணிகரிடத்தில் அந்தப் பொறுப்பை நாம் ஒப்படைத்திருக்கிற காரணத்தினால், ஆண்டு தோறும் மாறுபட்ட நிலை ஏற்படுகிறது. கடந்த ஆண்டு ஒரு ஏகர் நிலத்திற்கு ஒரு விவசாயி ரூ. 22 கிஸ்தி செலுத்தினால், மறு ஆண்டு ரூ. 30 என்று நிர்ணயம் செய்துவிடுகிறார்கள். கர்ணிகர்களிடத்தில் கேட்கக்கூட அவர்களுக்குச் சக்தி இல்லை. விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கிற இந்தச் சிக்கலை நிச்சயம் நிவர்த்தி செய்ய வேண்டும். இத்தனை நிலம் உள்ள விவசாயி ஆண்டு ஒன்றுக்குத் தண்ணீர்த் தீர்வை, நிலவரி, ஸர்ஜார்ஜ், ஸெஸ் எல்லாவற்றையும் சேர்த்து இத்தனை ரூபாய் செலுத்த வேண்டும் என்று ஜில்லாவாரியாக நாம் நிர்ணயம் செய்து பிரசுரித்து வெளியிட்டால் கூட நலமாக இருக்கும். விவசாயிகளுக்கு இது ஒரு பெரிய தீராத தலைவலியாக இருந்துவருகிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, விவசாய வருமான வரியைப்பற்றி இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். சட்டமன்றத்தில் பொது உடைமைக் கட்சி அங்கத்தினர் திரு. சுப்பையாவைத் தவிர மற்ற அத்தனை பேர்களுக்கும் விவசாய வருமான வரியை ரத்து செய்து விடவேண்டுமென்பதில் மாறுபட்ட கருத்து இருக்க முடியாது என்று நினைக்கிறேன். நில உச்சவரம்புச் சட்டம் வருவதற்கு முன்பாக நாம் விவசாய வருமான வரியை நிர்ணயம் செய்தோம். குறைந்த அளவு 30 ஏக்கர் என்று நாம் குறைத்து ... பிற்பாடு. நிலத்திலிருந்து வருகின்ற வருவாய் எவ்வளவு குறைவாக

இருக்கிறது. எல்லாவற்றையும் சேர்த்துப் பார்க்கும் பொழுது, வருகிற வரி வாய்க்கும். செலவைக் குறைப்பதற்கான வழிகளைக் காண வேண்டுமென்பது என்னுடைய கருத்து. அது மட்டுமல்ல (கனம் திரு. வெ. ராமையா : அறிக்கை கொடுத்திருக்கிறோம். அதில் பார்த்தால் தெரியும்). வாய்க்கால் வெட்டுவது அல்லது கம்புவுண்டு செய்து நீர் வருவதற்கு வேண்டும் என்று நியதி ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. 1962-ல் நிலவரி உயர்த்தப் பட்ட பொழுது, விவசாய வருமான வரியை அகற்றுவோம் என்று சட்டமன்றத்தில் பல உறுப்பினர்கள் வற்புறுத்தினார்கள். இதைப் பரிசீலனை செய்து விவசாய வருமான வரியை நீக்குவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

குறிப்பாக, "டேங்கர் ஜூன்" கிராமங்களுக்குக் காம்பென்சேஷன் வழங்கப்படுகிறது. அப்படி "டேங்கர் ஜூன்" கிராமங்களுக்கு காம்பென்சேஷன் வழங்குவதற்கு ஒரு குறிப்பிட்ட நேரத்துக்குள் அவர்கள் வேண்டும், அதற்குப் பிறகு காம்பென்சேஷன் கேட்டு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது அவர்களுக்குரிய அந்தத் தொகை வழங்கப் படமாட்டாது என்று ஒரு நிபந்தனை இருக்கிறது. அதைக் கூடச் சற்றுத் தளர்த்தி எல்லோருக்கும் வழங்க வேண்டும் என்ற ஒரு நிலையை ஏற்படுத்தியிருக்கிறோம். அதிலும் ஒவ்வொரு வருஷமும் அதிக காலதாமதமும் ஏற்படுகிறது. 1962-ம் ஆண்டிலிருந்து இன்னும் காம்பென்சேஷன் தொகை கிடைக்கவில்லை. அது உடனடியாகக் கிடைப்பதற்கு வழிவகை செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. ம. கமலநாதன் :** பெருமதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மானியக் கோரிக்கையின் மீது கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரிக்கிறேன். நிலத்தினுடைய தரம், வளம், உற்பத்தி ஆகிய பொருள்களை அதனுடைய விலை என்ற அடிப்படையில் அந்த காலத்திலே ஒரு பங்கு நிலவரியாக விதிக்கப்பட்டு இதுவரை வசூலிக்கப்பட்டு வருகிறது. 1937-ல் இருந்த அரசாங்கம் எதிர்காலத்தில் "ரீ-செட்டில்மெண்ட்" செய்வதில்லை என்ற ஒரு முடிவு எடுத்து, நமது அரசாங்கமும் அதைப் பின்பற்றி வருகிறது. 1937-ம் ஆண்டில் அமைந்த சட்டத்தை இயற்றி, அதைப்பின்பற்றி வருகிற அரசாங்கம் 1963-ல் நிலவரித் திருத்தச் சட்டத்தை இயற்றியபொழுது நில வரியை அதிகப்படுத்தினார்கள். முன்பு நில வரித் தீர்வை ஏற்படுத்திய நேரத்தில் பல பல அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு, விதிக்கப் பட்டிருக்கிறது. நிலத்தினுடைய தரம் அன்று போல இல்லை இன்று. சில நிலங்களின் தரம் உயர்ந்திருக்கிறது. அதே நேரத்திலே சில நிலங்களுடைய தரம் குறைந்தும் இருக்கிறது. அதே போல, வளமும், அதே போல மற்றமற்ற அம்சங்களும் முன்னைக் காட்டிலும் இப்பொழுது மாறி இருக்கிறது. இந்த நிலையில் பழைய நில வரியே இப்பொழுதும் வசூலிக்கப் படுவதில் பல பல சிக்கல்கள் தோன்றியிருக்கின்றன. பல பல பாதகங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இப்படிப்பட்ட நிலையில் சர்க்கார் ஏன் ரீ-செட்டில்மெண்ட் செய்யாமல் இருக்கிறார்கள் என்பது புரியவில்லை. இன்றைக்கு—பலர் பாதிக்கப் படும் சூழ் நிலை இருக்கிறது. ஆகவே ரீ-செட்டில்மெண்ட் செய்ய வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ரீ-செட்டில்மெண்ட் செய்ய முயற்சிகள் எடுக்கப் பட்டன என்றும், அந்த முயற்சி திடீரென்று கைவிடப் பட்டது என்றும் அறிகிறேன். என்ன காரணம் என்று தெரியவில்லை. இன்றைக்கு ஜமீன்கள் ஒழிக்கப் பட்டுவிட்டன. அவை யெல்லாம் ரயத்துவாரி நிலங்களாக மாற்றப்பட்டுவிட்டன. என்றாலும், இன்றும், அங்கே எஸ்டேட் மானேஜர் அலுவலகம் இருந்து கொண்டிருக்கிறது. அதற்கு என்ன அவசியம் என்று தெரியவில்லை. அவற்றை யெல்லாம் தாசில்தார் அலுவலகத்தோடு சேர்த்து விடவேண்டும். ஜமீன்கள் ஒழிந்த பிறகு அந்த எஸ்டேட் மானேஜர் ஆபீஸ் இன்னும் எதற்காக இருக்க வேண்டும் என்பதைப் பரிசீலிக்க வேண்டும். ஜமீன்கள் ஒழிக்கப்பட்டும் இனாம் எஸ்டேட்டுகள் ஒழிக்கப்படவில்லை. இன்னமும் குடி வாரம், மேல



வாரம் இவை யெல்லாம் இருப்பதால் விவசாயிகள் மிகவும் அவதிக்குள்ளாகிறார்கள். அவர்களால் அந்த நிலத்தை விற்க முடியவில்லை. இனாம் எஸ்டேட் விவசாயிகள் பல கஷ்டங்களுக்கு உள்ளாகிறார்கள். கடன்கள் வாங்க முடியவில்லை. கிராமங்களில் உள்ள ஏரிகளைப் பழுது பார்க்க முடியவில்லை. அப்படி விவசாய மக்கள் பல தொல்லைகளுக்கு ஆளாகிறார்கள். வருவாய்த் துறையில் ஈடு பட்டிருக்கும் அதிகாரிகள் என்று இருக்கும் போது இந்த எஸ்டேட் மானேஜர்கள் எதற்காக என்று தெரியவில்லை. இவற்றைத் தொடர்ந்து வைத்துக் கொண்டிருப்பதைப் பார்த்தால், அமைச்சரவைக்கு இப்படிப் பட்டவர்களுக்கு வேறு வேலை கொடுக்கத் தெரியாமல்தான் இப்படியே வைத்திருக்கிறார்களோ என்று நினைக்க வேண்டியிருக்கிறது.

இந்தச் சந்தர்ப்பத்திலே, பஞ்சாயத்து யூனியனுக்கு வரி வசூல் செய்யும் வேலையைக் கொடுக்கும் பிரச்சினை முன்பு எழுந்தது. தயவு செய்து அந்த வேலையை அவர்களிடம் கொடுக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**கனம் திரு. வெ. ராமையா:** வரியை வேண்டாம் என்று சொல்லவில்லையே ?

**திரு. ம. கமலநாதன் :** வரியைக் கொடுத்தால் வேண்டாம் என்று சொல்லவில்லை. வரியை வசூல் செய்வதைத்தான் கொடுக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். கிராமாதிகாரிகளைப்பற்றிப் பேசும்போதெல்லாம், அமைச்சர் அது நிதானித்து, கூர்ந்து பார்க்க வேண்டிய விஷயம் என்று சொல்லுகிறார்கள். அவர்களுடைய சம்பளத்தைக் கூட்டுக் கொடுப்பதால் அவர்களுக்குத் திருப்தி ஏற்பட்டுவிடாது என்கிறார்கள். அவர்கள் வேலை பார்ப்பது கவுரவத்திற்குத்தான் என்று சொல்லுகிறார்கள். பரம்பரை பாத்தியம் போய்விட்டது. சுப்ரீம் கோர்ட்டுத் தீர்ப்பிற்குப் பிறகு. அத்துடன் கவுரவமும் தானாகவே போய்விட்டது. கிராம அதிகாரிகளுடைய நிலையை ஆராய்ந்து அவர்களை முழு நேர ஊழியர்களாக, சம்பளம், படி இவையெல்லாம் போட்டுக் கொடுத்து வசூல் வேலையில் அவர்களை ஈடுபடுத்த வேண்டுமே ஒழிய, போலிக் கவுரவத்தைக் காட்டி அவர்களுக்கு எந்தவிதமான ஊதிய உயர்வும் கொடுக்காமல் இருப்பது வருந்தத்தக்கது . . . . . .

**கனம் திரு. வெ. ராமையா :** போன வருஷம் அவர்களுக்கு சம்பள உயர்வு கொடுத்த பிறகும்கூட இதே கருத்துத்தானா அங்கத்தினருக்கு ?

**திரு. ம. கமலநாதன் :** அதற்கு முன்பு அவர்களை எல்.டி.ஸி.-கள் போல அமைத்து முழு நேர ஊழியர்களாக மாற்றி வைக்க வேண்டும் என்கிற பணியில் ஈடுபட்டிருந்தார்களே அதைப்பற்றிச் சொல்ல வந்தேன்.

தாசில்தார், வருவாய்த் துறையில் அக்கறை காட்டும் அதிகாரி, பஞ்சாயத்து யூனியன் கமிஷனர், தாசில்தார் இருவருக்கும் சம்பளம் ஒன்றே தான். ஏதாவது வித்தியாசம் காட்ட வேண்டாமா ? தாசில்தாருடைய சம்பளத்தை உயர்த்த வேண்டும். யாருடைய சம்பளத்தையும் குறைக்க வேண்டும் என்று சொல்லவில்லை. ஆனால், அந்த வேலையில் ஈடுபட்டிருக்கும் தாசில்தார்களுக்கு மதிப்பு ஏற்பட தாசில்தார்களுடைய சம்பளத்தை உயர்த்த வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

தீயினால் பாதிக்கப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்படும் நஷ்டஈடு போதவில்லை. அப்படிப்பட்டவர்களுக்கு உடனடியாக வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டுமென்றால், ஏதோ 10 ரூபாய் கொடுத்துவிட்டால், நிவாரணம் அளித்துவிட்டோம் என்று சொல்லிவிட முடியாது. அதோடு நஷ்டஈடு பெற்றுக் கொடுக்கும் முறையில், 1,000 ரூபாய்க்கு அதிகமாக இருந்தால், கலெக்டருடைய உத்தரவு வாங்கித்தான் கொடுக்கவேண்டும் என்று இருக்கிறது. கொடுப்பவர் ஆர்.டி.ஓ.-வாகவோ அல்லது ஒரு ஐ.ஏ.எஸ். ஆபீசராகவோதான் இருப்பார்கள். நஷ்டஈடு தொகை அதிகமாக இருந்தாலும், 1,000 ரூபாய் என்றாலும் அவர்களே கொடுத்துவிட்டு,

பின்னல் ராடிபிகேஷன் வாங்கிக்கொள்ளலாம் என்று செய்ய வேண்டும் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அந்த வகையில் விதியைத் தளர்த்தி ஆவன செய்யவேண்டும் என்று கூறிக் கொண்டு, என் உரையை முடிக்கிறேன்.

* SRI R. PONNAPPA NADAR: Mr. Deputy Speaker, Sir, I rise to support the Demand moved by the Hon. the Revenue Minister and I woud like to say a few words with regard to the peculiar conditions obtaining in our district. So far a land revenue in the Kanyakumari district is concerned, we are paying basic land revenue. I am afraid whether there is any legal sanction for the levy of this basic tax in view of the decision of the Supreme Court, but, anyway we are paying it without any murmur. Now, there is another disparity that is noticed so far as agricultural income-tax is concerned. In the Shencottah taluk and Kanyakumari district assessment is made as per the Travancore-Cochin Agricultural Income-tax Act. According to that Act, any landholder having an income of Rs. 3,000 is liable to pay agricultural income-tax, whereas under the Madras Agricultural Income-tax Act, 1955, persons who are possessing 12.50 standard acres or more will have to pay agricultural income-tax and the minimum that has been fixed is Rs. 3,600. Thus there is disparity in the assessable limit between the Travancore-Cochin Act and the Madras Act. I request that this disparity may kindly be removed.

Another fact which I wish to bring to the notice of the Hon. Minister is that on account of the civil supplies works, the revenue work is suffering. So far as our district is concerned, the intergration of the Deputy Tahsildars, Tahsildars and the Deputy Collectors has not been finalised. On account of that, there is difficulty experienced by the service personnel who have been transferred from the Travancore-Cochin State. For instance, a Tahsildar, who has been promoted as Deputy Collector, is drawing the very same pay for the past 5 years. His services have not been regularised and he is drawing the pay of the Tahsildar, though he has been working as Deputy Collector. Such anomalies must be removed and I request the Hon. Minister to take immediate steps. Similarly, in the case of Deputy Tahsildars and Tahsildars, their annual lists have not yet been finalised. Another fact, which I would like to bring to the notice of the Minister, is that for Civil supplies work, Tahsildars from other districts have been imported into Kanyakumari district and they have been placed above the Travancore-Cochin personnel, overlooking their rightful claims and seniority. This has caused heart-burning and I request that the matter may be reconsidered. So far as the Civil Supplies Department is concerned, here is much difficulty. Recently one incident has happened in Kanyakumari. The present District Supply Officer is on leave and the reason that is attributed is that he has to account for Rs. 16,000 on account of demurrage charges because there was inordinate delay in the removal of wagon loads of rice and paddy sent to Kanyakumari district. On account of that Rs. 16,000 has been sustained as loss





and that has to be paid. Things like this happen because the regular revenue staff are asked to carry on the Civil Supplies work also and there is a lot of difficulty and the public are also aggrieved by it, as revenue appeals and other matters could not be carried on effectively. That is a matter which may be looked into. Sir, Kanyakumari district is a small district with a limited number of staff and if their rightful claims and district seniority are overlooked, that will cause great hardship to them. The Civil Supplies Department should be separated from the Revenue Department so that they can attend to the Civil Supplies work all the 24 hours, rather than doing part-time duty on revenue work and part-time duty on Civil Supplies work. I once again request that the Hon. Minister may be pleased to consider these aspects of the question, so that the service conditions of the District Revenue Staff are fixed in the light of the peculiar conditions obtaining in that district. With these words, Sir, I concluded my speech.

திரு. கி. இரா. சம்பந்தம்: *கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மானியத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல நான் ஆசைப்படுகிறேன். விவசாயிகளிடத்திலிருந்து நாம் வரி வாங்கிக் கொண்டிருக்கிறோம். வரியையும் முன்பு இருந்ததைவிட இப்பொழுது அதிகமாக உயர்த்தி வாங்கிக்கொண்டிருக்கிறோம். இருந்தபோதிலும், விவசாயிகளுக்கு வேண்டிய வசதிகள் சரியாகச் செய்துகொடுக்கப்படவில்லை. விவசாயிகள் பாசனம் செய்யும்போது, எங்காவது அடைத்துப் பாசனம் செய்தாலும்கூட, அதைத் தடுக்க தாசில்தாருக்கு ஏற்கெனவே அதிகாரம் இருந்தது. யார் தகாத முறையில் அடைத்துப் பாசனம் செய்தாலும், அதைத் தடுப்பதற்கான வாய்ப்பு முன்பு இருந்தது. ஆனால், இப்பொழுது தாசில்தாருக்கு அந்த மாதிரியான அதிகாரம் இல்லை. யார் செய்கிறார்கள் என்று தெரியாத முறையில் அதிகமாக வந்தால் பாய முடிகிறதே தவிர, யாரும் கட்டுப்படுத்துவதில்லை. இல்லாத சமயங்களில் எல்லாம் முன்னே இருக்கிறவர்கள் அடைத்துப் பாசனம் செய்துவிடுகிறார்கள். அதைக் கட்டுப்படுத்தக்கூடிய அதிகாரம் யாருக்கு இருக்கிறது என்றே தெரியவில்லை. தாசில்தாரிடம் சொன்னால் அவரும் கவனிப்பதில்லை. பி.டபிள்யூ.டி. இன்ஜினீரிடம் சொன்னால் அவரும் செய்வதில்லை. யார் செய்கிறார்கள் என்றே தெரியாத நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. அதை நல்ல முறையில் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

ஆங்காங்கு இருக்கும் புறம்போக்கு நிலங்களை நல்ல முறையில் சாகுபடி செய்வதற்கு ஊக்கம் அளிக்க வேண்டும். அவை தரிசாகவே கிடக்கின்றன. தஞ்சாவூர் தாலுக்காவில் உள்ள தரிசு நிலங்கள் அப்படியே திடல் மாதிரி கிடக்கின்றன. நான்கு பக்கங்களிலும் தண்ணீர் இருக்கிறது. அதை மறைத்துப் பாசனம் செய்வதற்கு வகை செய்யலாம். கிணறு வெட்டி பாசனத்திற்குக் கொண்டுவந்தால் நலமாக இருக்கும். தஞ்சை தாலுக்காவில் அப்படிப்பட்ட தரிசு நிலங்களை நல்ல பாசனத்திற்குக் கொண்டுவரக்கூடிய வாய்ப்பு ஏராளமாக இருக்கிறது என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தஞ்சை ஜில்லாவில் இருக்கும் இனாம் நிலங்கள் இன்னும் ரயத்துவாரியாக மாற்றப்படாத நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. அது எப்போதுதான் முடியப்போகிறதோ தெரியவில்லை. நிலம் சாமி பேரால் இருந்து கொண்டிருக்கிறது. சாகுபடி செய்பவன் விவசாயி. அவரே லேவாதிப் பணம் கட்டிக்கொண்டிருக்கிறார். சாகுபடி செய்துகொண்டிருக்கிறார். சாமி தூக்குவது, கோயிலுக்குப் பால், தயிர் கொடுப்பது இம்மாதிரி பழக்கங்கள் இருந்து கொண்டுவருகின்றன. ஆனால்,

இப்பொழுது வரியையும் அதிகமாகக் கேட்கிறார்கள், கோயிலுக்குக் கொடுக்க வேண்டிய நெல்லையும் அதிகமாகக் கொடுக்க வேண்டும் என்று தொந்தரவு செய்கிறார்கள். இதை நிவர்த்தி செய்வதற்கு எந்தவிதமான வாய்ப்பும் இல்லை; ரிகார்டும் இல்லை. ஆனால், இவர்கள் கிஸ்தி பணம் கட்டுகிறார்கள், சாகுபடியும் செய்கிறார்கள். இந்த இரண்டு உரிமையும் இருப்பதை வைத்து, ரீ-ஸர்வே செய்யும்போதோ, ரீ-செட்டில்மெண்ட் செய்யும்போதோ, அவர்களுக்குப் பட்டா போட்டுக் கொடுக்க ஆவன செய்ய வேண்டும். இல்லாவிட்டால், சாமி பேரிலாவது பட்டா போட்டுக் கொடுத்து, இவர்களுக்கு நஷ்டஈடு ஏதாவது கொடுத்தாலும் சரி. இரண்டில் ஒரு ஏற்பாடும் செய்யாத காரணத்தால், அவர்களுடைய நிலைமை இரண்டுங் கெட்டானாக இருக்கிறது. அவர்கள் இன்றைக்குக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

நிலத்திற்கு உச்ச வரம்பு கொண்டுவந்துவிட்ட பிறகு, விவசாய வருமான வரிக்கு இடமே இல்லாத நிலைமை இருக்கிறது. அதற்காக "Army of Officers" ஐ வைத்துக் கொண்டு, அவர்களுக்குச் சரியான வேலையும் கொடுக்க முடியாத நிலைமையில் அந்தத் திட்டம் இருந்து கொண்டிருக்கிறது. விவசாய வருமான வரி என்று சொல்லும்போது, தேயிலைத் தோட்டத்தையும் காப்பித் தோட்டத்தையும் நான் சொல்லவில்லை. அவர்கள் அதிகமான நிலப் பரப்பளவை வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். அவர்களிடத்திலிருந்து விவசாய வருமான வரி வசூல் செய்து கொள்ளலாம். ஆனால், நெற்பயிர் சாகுபடி செய்யக்கூடியவர்களைப் பொறுத்த வரையில், உச்சவரம்புச் சட்டம் வந்துவிட்ட பிறகு, நிலப் பரப்பு அதிகமாக ஒருவரிடம் இல்லை. ஏதோ கோயில் நிலங்களைத் தவிர, தனிப்பட்டவர்களிடம் அதிகமான நிலப் பரப்பு இல்லை. ஆகையால், தேயிலை, காப்பித் தோட்டங்களைப் பொறுத்து விவசாய வருமான வரி வைத்துக் கொண்டுவிட்டு, நெல் போன்ற பயிர்களைப் பொறுத்து விவசாய வருமான வரியை எடுத்துவிட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

தென்னாற்காடு மாவட்டத்தில் "ஆர்ட்டீஷியன் வெல்ஸ்" களிலிருந்து தண்ணீர் எடுத்து விவசாயம் செய்து கொண்டிருந்த நிலைமை இருந்தது. நெய்வேலித் திட்டம் வந்தவுடன் மின்சாரத்திற்காகவும், நிலக்கரியை எடுப்பதற்காகவும் தண்ணீர் இறைத்துக் கொண்டிருப்பதன் காரணமாக ஆர்ட்டீஷியன் வெல்ஸ்களிலிருந்து வரக்கூடிய ஊற்றுக்கள் நின்றுபோய், மின்சார வசதியை வைத்துக் கொண்டு சாகுபடி செய்யக்கூடிய நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. அங்கெல்லாம் கம்பவுண்டு பண்ணி எல்லா வரியையும் வாங்கிவிடுகிறார்கள். சாகுபடி ஆகிறதோ இல்லையோ கவலைப் படுவதில்லை. பாசனத்திற்கு வசதி செய்து கொடுக்கவில்லை. அவன் எப்படியோ கரண்ட் வைத்து கிணற்றைத் தோண்டி தண்ணீர் இறைத்தாலும் கூட அதற்கும் வரியைத் தள்ளுபடி செய்யாமலேயே வசூல் செய்யும் நிலைமை இருப்பதை மாற்றியமைக்க வேண்டும், அவர்களுக்கு வசதி செய்து கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன். (கனம் திரு. வெ. ராமையா: கனம் அங்கத்தினர் எதைக் குறிப்பிடுகிறார்?).

கம்பவுண்டு செய்து தீர்வை வசூல் செய்கிறார்கள். சாகுபடி செய்கின்ற விவசாயிகளிடமிருந்து இரண்டு போகத்திற்கான வரியையும் வசூல் செய்து விடுகிறார்கள். ஒரு போகம் பயிர் செய்து, இன்னொரு போகம் பயிர் செய்யாமல் விட்டுவிட்டாலும் அதற்கும் வரி கொடுக்கும் நிலைமை இருந்து வருகிறது. அதையும் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

* திரு. நா. இராசாங்கம்: சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே. இன்று நடந்து வருகிற நில வரி மானியக் கோரிக்கை மீது எழுந்துள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.



நில வரி என்பதை வைத்துத்தான் பல ஆட்சிகள் நடந்து வந்திருக்கின்றன. இப்பொழுதும் நம் ஆட்சியும் அதையே தொடர்ந்து நடத்தி வருகிறது. நில வரி நாளுக்கு நாள் அதிகப்படுகிறதா, குறைகிறதா என்பதைப்பற்றி இப்பொழுது பேச்சு அல்ல. நிலத்திற்கு வரியே இல்லாமல் செய்து விட்டால் என்ன என்பதைப்பற்றித்தான் நாம் ஆராய வேண்டியவர்களாக இருக்கிறோம். நிலத்திற்கு நன்றி செலுத்த வேண்டும் நாமெல்லோரும். நிலத்திலே எத்தனையோ திட்டங்கள் வகுத்து எத்தனையோ காரியங்கள் செய்து நிலத்திலிருந்து வருமானத்தைப் பெருக்கிக் கொண்டிருக்கிறோம். நில வரி என்பது மிகவும் குறைவானதாக இருக்கிறது. நிலத்தை வைத்துக் கொண்டுதான் எல்லாக் காரியங்களையும் செய்ய வேண்டும். நில வரி இலாக்கா ஏற்பட்ட காலத்திலிருந்து இன்றுவரைக்கும் தாய் இலாக்காவாகவும், தலைமை இலாக்காவாகவும் இருந்து, சர்க்காரிலுள்ள அத்தனை இலாக்காக்களுக்கும் "பேரண்டல் டிபார்ட்மெண்ட்" டாக இருக்கிறது. ஆகவே, அந்தத் தலைமையின் கீழே தான் எல்லாம் நடந்தாக வேண்டும். ரெவினியூ இலாகாவில் பணி புரிகின்றவர்களுக்குக் கொடுக்கும் சம்பளத்தின் அளவுக்காவது நில வரி இருக்கிறதா என்பது சந்தேகமே. ஆனால், ரெவினியூ அதிகாரிகளும், ரெவினியூ இலாகாவும்தான் எல்லாவற்றிற்கும் பொறுப்பாக நடத்தும் கொள்ளக்கூடிய நிலை இருந்து கொண்டிருக்கிறது. ரெவினியூ அதிகாரி தலையிடாமல் எந்த இலாகாவும் நடக்க முடியாது. ஆகையால், அது பொதுவான ஒரு இலாக்காவாகும். அந்த முக்கியமான இலாகாவில் வசூலிக்கக்கூடிய அந்த நில வரியை நீக்கிவிட வேண்டும் என்பது என்னுடைய கோரிக்கை ஆகும். மொத்தமாக நீக்குவது கடினமாக இருந்தாலும், 25 ரூபாய்க்குக் குறைவாகக் கிஸ்தி செலுத்துகிற அந்த விவசாயிகளுக்காவது கட்டாயம் நில வரியை நீக்கியாக வேண்டும். அதிகமாக நில வரி செலுத்துகிறவர்களுக்கு விவசாய வருமான வரி விதிக்கக் கூடாது. நில வரியோடு விவசாய வருமான வரியையும் விதிக்கும்போது, விவசாயிகளுடைய முயற்சி எல்லாம் குன்றிவிடுகிறது. சர்க்காரின் மீது நல்ல அபிப்பிராயம் கொள்ள வேண்டுமென்று விரும்புகிறவர்கள்கூட, இந்தவிதமான வரி விதிப்புகளின் காரணமாக, சர்க்காரிடத்தில் நல்ல அபிப்பிராயம் கொள்ள முடியாமல்தான் வரிகளைக் கொடுக்கிறார்கள். ஒத்துழைப்பு இல்லாமல்தான் கொடுக்கிறார்கள். விவசாயிகளுடைய ஒத்துழைப்புப் பூரணமாக இந்த அரசாங்கத்திற்கும் இந்த நாட்டுக்கும் கிடைக்க வேண்டுமென்றால், விவசாய வருமான வரியை எடுத்துவிட வேண்டும். அத்துடன்கூட, 25 ரூபாய்க்குக் குறைந்து நில வரி செலுத்துகிறவர்களைப் பொறுத்த வரையில் நில வரியை நீக்கிவிட வேண்டும். இந்த இரு ஏற்பாடுகளையும் செய்துவிட்டால், உணவு உற்பத்தி பெருகி நாட்டில் நல்ல பல நிலைமைகள் உண்டாவதற்கு வழி ஏற்படும் என்று தெரிவித்துக் கொள்கின்றேன்.

அடுத்து, நிலச் சீர்திருத்தம் செய்வதாகச் சொல்லி லாண்டு ஸீலிங் செய்தோம். ஸீலிங் கொண்டுவந்ததைத் "நிலச் சீர்திருத்தம்" என்று கொள்ள முடியாது. நிலச் சீர்திருத்தம் எப்பொழுது ஏற்படும் என்று நமக்குத் தெரியவில்லை. ரீ-செட்டில்மெண்ட் செய்வார்களா என்று பல காலமாக எதிர்பார்த்தும் இன்னும் ரீ-செட்டில்மெண்ட் ஆகவில்லை. ரீ-சர்வேயாவது நடக்குமா என்று பார்த்தால் அதுவும் நடக்கவில்லை. ரீ-சர்வே இவையெல்லாம் சரியாகச் செய்தால் ஒழிய நாம் நிலத்திலே பல சீர்திருத்தங்களைக் காண முடியாது. இப்பொழுது லாண்டு ஸீலிங் என்று சொல்லிவிட்டோம். நாம் உச்ச வரம்புச் சட்டத்தைக் கொண்டு வந்த பின் தவிர அதற்குமேல் பாக்கி 12 P
இருக்கக்கூடிய நிலங்கள் எங்கே இருக்கின்றன என்றே யாருக்கும் தெரியாது. அதிகாரிகளுக்கும் கூடத் தெரிந்திருக்காது. ஆகவே ரீ-செட்டில்மெண்டு செய்தாக வேண்டும். நிலத்தில் விளைந்து வருகிற தானியங்களை விவசாயிகளிடம் இருந்து வாங்கிக் கொள்வதில் ஆட்சேபணை இல்லை. ஆனால் இப்படி வாங்கும்போது விவசாயிகளுக்கு எந்தவிதமான தொல்லையும் கொடுக்கக் கூடாது. சர்க்கார் என்பது யார்? பொது ஜனங்களுடைய பிரதிநிதிகளாகிய நாம்தான் இன்றைக்குச் சர்க்காரை நடத்துகிறோம். ஆகவே சர்க்கார், சர்க்கார் என்ற பெயரைச் சொல்லி மக்களுக்குத் தொல்லை விளைவிக்கக் கூடாது. இன்றைய தினம் நாம் விவசாயிகளுடைய அன்பைப் பெறாமல் விட்டுவிடுகிறோம். அவர்களுடைய அன்பைப் பெற

வேண்டுமென்றால் முக்கியமாக 25 ரூபாய்க்குக் குறைவாக நிலவரி கட்டுகிறவர்களுக்காவது நிலவரியை ரத்து செய்தாக வேண்டும். அடுத்து நில வருமான வரியை ரத்து செய்தாக வேண்டும்.

அடுத்து பருவ மழை தவறிவிட்டதன் காரணமாக தென்னாற்காடு மாவட்டத்தில் விளைச்சல் இல்லை. குறிஞ்சிப்பாடி, குள்ளஞ்சாவடி, காடாம்புலியூர் ஆகிய இடங்கள் மிகவும் வறண்ட பகுதி. பெருமாள் ஏரிப் பிரதேசத்தைத் தவிர மற்ற இடங்கள் மிகவும் மோசமாகிவிட்டன. அந்த இடங்களுக்கு வரி வஜா செய்யவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

பண்ணையாள் பாதுகாப்புச் சட்டத்தைக் கொண்டு வந்த காரணத்தினால் பல நன்மைகள் ஏற்பட்டுள்ளன என்பது உண்மை. அதே சமயத்தில் பல தீமைகளும் ஏற்பட்டு இருக்கின்றன. இதற்கு நிலச்சுவாந்தார்கள் மட்டும் பொறுப்பில்லை. தொழிலாளர்களுக்கும் கூடப் பொறுப்புண்டு. பொதுவாக தஞ்சாவூர் பண்ணையாள் சட்டத்தை எங்கள் பகுதிக்கும் விஸ்தரிக்க வேண்டும் என்று கோரிய நாங்கள் அந்தச் சட்டம் விஸ்தரிக்கப் பட்டபோது அடைந்த தொல்லைகளை நாங்கள்தான் அறிவோம். பொதுவாக சட்டத்தின் பலனை அனுபவிக்க வேண்டுமென்றால் நிலச்சுவாந்தார்கள், விவசாயிகள் ஆகியவர்களிடையே ஒரு சமரச உணர்ச்சி நிலவும்படியாகச் செய்ய வேண்டும். அவர்களுக்குள் ஒரு ஒற்றுமையை ஏற்படுத்தவும் இந்த அரசாங்கம் ஆவன செய்ய வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. பி. பழனிசாமி:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, ரெவின்யூ மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். நமது ரெவினியூ அமைச்சர் அவர்கள் கொண்டு வந்த மானியத்தில் அநேகம் பேர் பலவிதமான அபிப்பிராயங்கள் சொன்னார்கள். குறிப்பாக எதிர்க்கட்சிக்காரர்கள் நில வரியையே எடுத்துவிட வேண்டும் என்பதாகத் தெரிவித்தார்கள். பழங்காலம் தொட்டு இந்த நாட்டில் இருந்து வரக்கூடிய ஒரு பழக்கம் அரசனுக்கு ஆறில் ஒரு பாகம் செலுத்துவது என்பது. வரி கட்டுவதையே ஒரு கௌரவமாக நினைக்கக் கூடிய மக்கள் இந்த நாட்டு மக்கள். பட்டா இருந்து வரி செலுத்தவில்லை என்றால் அதை இழிவாகக் கருதிக் கொள்ளக்கூடிய மனப்பான்மை உள்ளவர்கள் கூட இருக்கிறார்கள். ஆகவே நில வரியை ரத்து செய்வதை நான் ஆதரிக்கவில்லை. புஞ்சையாக இருந்தால் 14 காசில் இருந்து 85 காசு வரைக்கும், நஞ்சையாக இருந்தால் 85 காசில் இருந்து 14 ரூபாய் வரைக்கும் வரி செலுத்தும்படியாக தரம் பிரித்து வைத்திருக்கிறோம். இது மிகவும் குறைந்த தொகைதான். ஆகவே இதை ரத்து செய்ய வேண்டாம் என்பதாகத் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு கொஞ்சம் கூட பூமி இல்லாத எத்தனையோ லட்சக் கணக்கான ஏழை மக்கள் இந்த நாட்டில் இருக்கிறார்கள். நிலம் உள்ளவர்கள் கொஞ்சம் வரி செலுத்துவதனால் ஒன்றும் கெட்டுப் போய்விடாது. ஆகவே கட்டாயம் நில வரி இருக்க வேண்டும் என்பதாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக சுதந்திரத்திற்குப் பின்னால் இந்த நாட்டில் பஞ்சம் வருவதற்கு இடமே இல்லை. முன்பெல்லாம் திடீர் திடீர் என்று பஞ்சம் வருவதுண்டு. இப்போது உணவுப் பிரச்சினை வேண்டுமென்றே சிருஷ்டிக்கப் படுகிறது. நாம் இப்போது உணவுக் கட்டுப்பாடு செய்திருக்கிறோம். ஆகவே எந்த எந்தப் பகுதியில் பஞ்சம் ஏற்படுவதற்குரிய வாய்ப்பு இருக்கிறதோ அந்தப் பகுதிகளுக்குச் சர்க்கார் போதுமான தானியத்தை முன்கூட்டியே கொண்டு போகத் தயாராய் இருக்க வேண்டும். உணவு தானியங்களை சீரான முறையில் சப்ளை செய்ய வேண்டும் என்பதற்கு நடவடிக்கை எடுத்தாலும் நடைமுறையில் சிக்கல்கள் இருக்கின்றன. டவுன்களில் எல்லாம் குடும்ப ரேஷன் கார்டு முறை கொடுக்கப்பட்டு ஒழுங்கான முறையில் அரிசி கொடுக்கப்படுகிறது. ஆனால் கிராமங்களில் இந்தவிதமான ஏற்பாடு இடையாது. ஆகவே நிச்சயமாக கிராமங்களில் ஒருவிதமான பஞ்ச நிலை வரத்தான் போகிறது. இன்றைக்கு ஒரு விவசாயக் கூலி வேலை செய்து விட்டு இரண்டு ரூபாய் சம்பளம் பெற்று வருகிறபோது அரிசி வாங்கிச் சாப்பிடக்கூடிய நிலையில் இல்லை. சோளம், கம்புதான் வாங்கிச் சாப்பிடு



கிறார்கள். அநேகமாகக் கிராமங்களில் கஷ்டமான நிலையேதான் நீடிக்கிறது. (கனம் திரு. வெ. ராமையா : அப்படி ஒன்றும் வராது) கனம் அமைச்சர் அவர்கள் வராது என்று சொல்கிறார்கள். வராது இருக்க வேண்டுமானால் நகரங்களில் செய்துள்ளது போல கிராமங்களிலும் போதுமான பாதுகாப்பு அளிக்கத் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து குறிப்பாக நம் நாட்டில் அநேக புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றன. கோவில் சம்பந்தமான பூமிகள் இருக்கின்றன. உச்ச வரம்புச் சட்டத்தினால் கிடைத்துள்ள பூமிகள் இருக்கின்றன. அவை எல்லாம் சரியானபடி பிரயோசனப்படவில்லை. அதுபற்றித் தக்க கவனம் செலுத்தப்படாமல் இருப்பதால் விளைச்சல் குறைவுபடுகிறது. தொன்று தொட்டு இந்த நாட்டில் தாழ்த்தப்பட்ட மக்கள், ஹரிஜன மக்கள் விவசாய வேலையே செய்து கொண்டு வருகிறார்கள். பலருக்குப் பூமியே இடையாது. ஆகவே இம்மாதிரி உள்ள நிலங்களை நிலம் இல்லாத தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, ஹரிஜன மக்களுக்குச் சாகுபடி செய்ய ஜாரி செய்து கொடுக்க வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. சி. வே. வேலப்பன்:** கனம் சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சிகளின் சார்பில் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து—குறிப்பாக நிலவரி மானியத்தின் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நிலவரி என்று சொல்லும்போது எனக்கு முன்பாகப் பேசிய அங்கத்தினர்கள் அதன் மூலம் குறைவாகத்தான் வருகிறது, 20, 25 ரூபாய்க்கு மேல் இல்லை, அதை ரத்து செய்ய வேண்டும் என்றார்கள். பொதுவாக நிலவரியைப் பற்றி நான் கடந்த மூன்று ஆண்டுகளாகச் சொல்லி வருகிறேன். அதை ஒழுங்குபடுத்த வேண்டும் என்பதாக அதில் உள்ள குறைபாடுகளை எல்லாம் எடுத்து புள்ளி விவரங்களோடு சொல்லிவந்தும்கூட இதுவரை கனம் அமைச்சர் அவர்கள் திட்டவட்டமான பதில் எதுவும் கூறவில்லை. நான் ஒவ்வொரு முறையும் சொல்லி வருகிறேன். என்னுடைய குற்றச்சாட்டுகளுக்கு சரியான பதில் கொடுப்பதே இல்லை. எவ்வித நடவடிக்கையும் இதுவரை நான் சொன்ன முறையின்மீது எடுத்துக்கொள்ளப்படவும் இல்லை. நான் சொல்கின்ற புள்ளி விவரங்கள் சரியானதா, இல்லையா, அரசாங்கம் என்னுடைய கோரிக்கையை ஏற்றுக்கொள்ளுமா, கொள்ளாதா என்பதைப்பற்றி இன்றைய தினமாவது திட்டவட்டமாகக் கூறவேண்டும் என்பதாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிலவரி போடுகிறபோது சிறிய விவசாயிகள் பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்வதுதான் உசிதமாக இருக்கும். அதை வசூலிக்கின்ற அதிகாரிகளும் விவசாயிகளுக்குத் தொல்லை இல்லாமல் விவசாயிகளின் கையில் பணம் நிற்கக்கூடிய காலத்தில் அதை வசூலிக்க வேண்டும். கிட்டத்தட்ட சம்பா அறுவடை நடக்கிற சமயத்தில்—பிப்ரவரி, மார்ச் மாதத்தில், விவசாயிகளிடம் இருந்து நில வரியை வசூல் செய்தால் மிகவும் நன்றாக இருக்கும். அதோடு அவர்கள் எவ்வளவு பணம் கட்ட வேண்டும் என்பதற்கு ஒரு மாதம் முன்பாகவே நோட்டீஸ் கொடுக்கப்பட வேண்டும். மின்சாரக் கட்டணம் இரண்டு ரூபாய் கட்டுவதற்குக்கூட அவர்கள் எத்தனை ரூபாய் கட்ட வேண்டும் என்பதற்கு ஒரு மாத நோட்டீஸ் கொடுக்கிறார்கள். இருநூறு, முந்நூறு வரி கட்டுகிற விவசாயிகளுக்குக்கூட தாங்கள் எவ்வளவு கட்டவேண்டும் என்பது முன்கூட்டியே தெரிவதில்லை. திடீரென்று வந்து இவ்வளவு பணம் கட்ட வேண்டும் என்பதாக அதிகாரிகள் தொந்தரவு கொடுக்கிறார்கள். ஆகவே போதுமான அவகாசம் கொடுத்து, எவ்வளவு ரூபாய் கட்ட வேண்டும் என்பதற்கு நோட்டீஸ் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்பதாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து முக்கியமாக நிலவரி என்று சொல்கிறபோது என்னுடைய பகுதியில் காவேரியிலும், காவேரியின் பிரிவு வாய்க்கால்களிலும் தண்ணீர் எடுத்து விவசாயம் செய்கிறவர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 200 ரூபாயில் இருந்து 400 ரூபாய் வரையிலும் தீர்வை வசூலிக்கப்படுகிறது. இதற்குக் காரணம் விவசாயிகள் தவறு செய்துவிட்டார்கள் என்று சொல்ல முடியாது. அரசாங்கம் மேட்டூர் அணை கட்டிய காலத்தில் விவசாயிகளுக்கு இவ்வளவு

தண்ணீர் கொடுப்பதாக உறுதி கொடுத்திருந்தார்கள். ஜேடர்பாளையம் அணை கட்டியபொழுது 235 க்யூசெக்ஸ் வாட்டர் கொடுக்கப்பட்டது. விவசாயிகள் விவசாயத்தை எவ்வளவு விருத்தி செய்யமுடியுமோ அவ்வளவு விருத்தி செய்வதற்குப் பாடுபட்டிருக்கிறார்கள். 1958-ல் ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அந்த உத்தரவில் விவசாயிகள் தண்டத் தீர்வை கட்டாமல் இருப்பதற்கு இப்போது விவசாயம் செய்து கொண்டிருக்கக்கூடிய இடங்களுக்குப் பாசன வசதி அளிப்பதை ரெகுலரைஸ் செய்வதாக—பர்மிட் வழங்குவதாகச் சொன்னார்கள். கீழ் உள்ள அதிகாரிகள் சரியான முறையில் நடவடிக்கை எடுத்துக் கொள்ளாததன் காரணமாக—ஐந்தாண்டுகள் கழித்துத் தண்டத் தீர்வை பத்து மடங்காகப் போட்டார்கள். நானே கனம் அமைச்சரிடம் வந்து ஸ்டே வாங்கிப் போனேன். இப்போது அந்த ஸ்டேயையும் நீக்கிவிட்டு தண்டத் தீர்வை வசூலிக்கிறார்கள். அதை ரத்து செய்ய வேண்டும். அது நமது அரசாங்கத்தின் நிர்வாகக் கோளாறே தவிர விவசாயினுடைய தவறு அல்ல என்பதை இந்தச் சமயத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக விவசாயத்திற்கு, நெல்லுக்காகவும், கரும்புக்காகவும் அரசாங்கம் நிறைய உதவித் தொகைகளை வழங்குகிறது. உதவித் தொகைகள் வேண்டாமென்று கருதி தங்களுடைய செலவிலேயே மற்றவர்கள் பாதிக்கப்படாத அளவில் அதாவது டெயில் எண்டில் உள்ள விவசாயிகள் பாதிக்கப்படாத அளவில் தண்ணீரைப் பிரித்துப் பாசனம் செய்கின்ற விவசாயிகளுக்கு அரசாங்கம் விடுகின்ற தாக்கீது 20 மடங்கு தண்டத் தீர்வை. அதை கனம் அமைச்சர் அவர்கள்கவனித்து அந்தத் தண்டத் தீர்வையை நீக்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஜேடர்பாளையம் அணைக்கட்டிலிருந்து ராஜா வாய்க்கால் வரை தண்ணீர் செல்கிறது. அதற்குத் தண்டத் தீர்வை. ஆனால் அதே அணைக்கட்டிலிருந்து கரூருக்குத் தண்ணீர் செல்கிறது. அங்கே தண்டத் தீர்வை கிடையாது. இப்படி ஒரே தண்ணீருக்கு ஒரு இடத்தில் தண்டத் தீர்வை, இன்னொரு இடத்தில் தண்டத் தீர்வை கிடையாது. ஆகவே, அரசாங்கம் ஒரு காரியத்தைச் செய்கின்றபொழுது ஒழுங்காகச் செய்ய வேண்டும், மிகவும் நல்ல முறையில் செய்ய வேண்டும், விவசாயிகள் அரசாங்கத்தின் மீது நம்பிக்கை வைக்கக்கூடிய முறையில், அரசாங்கம் நல்ல முறையில் இதனைச் செய்கின்றது என்று அவர்கள் கருதுகின்ற அளவுக்குச் செய்ய வேண்டும். நான் இதுவரை பல விண்ணப்பங்கள் கொடுத்திருக்கிறேன். அவற்றிற்குப் பதில் கிடைக்கவில்லை. ஆகவே, கனம் அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்பொழுது அதற்கான பதில்களையும் அளிப்பார் என்று எதிர் பார்த்து நான் என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*திரு. ஏ. ஆறுமுகம்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, உணவுத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கக்கூடிய இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று ஆதரித்து, பாராட்டிப் புகழ்ந்து, என்னுடைய கருத்தினைச் சொல்ல விரும்புகிறேன். உணவுத் துறை அமைச்சர் அவர்கள் அந்த இலாகாவை ஏற்றுக் கொண்டு விட்டபிறகு இப்பொழுது நம் மந்திரியிலே புதிய அமைச்சராகக் காட்சியளித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த நாட்டிலே இருக்கிற உணவுப் பஞ்சத்தைப் போக்கி, உணவு இல்லாத குறையை நீக்கிவிடுவார் என்ற நம்பிக்கை மக்கள் மத்தியிலே இருந்து வந்திருக்கிறது. அந்த வகையிலே இந்த மாநிலத்தைச் சேர்ந்தவன் என்ற முறையிலே, வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்தவன் என்ற வகையிலே வட ஆற்காடு மாவட்டமும் தங்களுக்கு உதவி புரியும், உணவுக் கஷ்டத்தைப் போக்குவதற்குத் துணைசெய்யும் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, பாலாறு பாசன விதியை ரத்து செய்து கொடுத்தீர்களானால், உணவு உற்பத்தியைப் பெருக்குகின்ற வகையிலே இப்பொழுது இரண்டாவது இடத்தை வகித்துவரும் வட ஆற்காடு மாவட்டம், அதை மீறி மாநிலத்திலேயே முதலாவதாக, தஞ்சை மாவட்டத்தையும் மீறுகின்ற நிலைக்கு வந்துவிடும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த சபையிலே மின்சார இலாகாவைப் பாராட்டுவதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன்.



MR. DEPUTY SPEAKER : I would like to remind the Hon. Member that this is land revenue Demand.

SRI A. ARUMUGAM : Yes, Yes. உணவுப் பிரச்னையைப் பெருக்குகின்ற வகையிலே தாராளமாக மின்சாரத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த நிலையிலே அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதலை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்த படியாக ஒரே ஒரு விஷயத்தை மட்டும் சொல்லிக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

நம்முடைய நாட்டிலே, நம்முடைய மாநிலத்திலே இருக்கின்ற நிலங்களைப் பல பிரிவுகளாகப் பிரித்து, அதாவது பஞ்சமர் தரிசு நிலம், தீர்வை ஏற்படாத தரிசு நிலம், தரிசு நிலம் என்று பல பிரிவுகளாகப் பிரித்து இருக்கிறோம். இவை சம்பந்தமாகக் கணக்கப் பிள்ளைகள் சொல்வதுதான் வேதவாக்காக இருக்கிறது. பெரிய ஐ.ஏ.எஸ்., அல்லது ஐ.சி.எஸ். அதிகாரியாக இருந்தால்கூட அவரும் இந்தக் கணக்கப் பிள்ளைகள் சொல்வதைத்தான் ஏற்றுக்கொள்கிறார். அந்த நிலைமைதான் இன்று இருந்து வருகிறது. கிராமங்களிலே கணக்கப் பிள்ளைகள் போன்றவர்கள் கிராம மக்களை ஏமாற்றிக் கொண்டு வருகின்ற நிலையை மாற்றி சரியான புள்ளிவிவரங்களைச் சேகரிப்பதில் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வடாற்காடு மாவட்டம், செங்கம் தாலுகாவில் ஏராளமான பஞ்சமர் தரிசு நிலங்கள் இருக்கின்றன. அவைகளைக் கவனிப்பதற்காக தற்போது ஒரு ஸ்பெஷல் டெபுடி தாசில்தார் இருக்கிறார். மீண்டும் வேறு ஒரு டெபுடி தாசில்தாரையாவது போட்டு, அவைகளை இரண்டு வருஷங்களுக்குள் அடமானம் செய்து கொடுப்பதற்கு வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு நான் என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. க. தா. பெருமாள் ராஜு : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நமது உணவு அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கும் இந்த ரெவின்யூ மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். இப்பொழுது கோவை ஜில்லாவிலே கோபி தாலுகா, அரக்கன் கோட்டை சேனலில் அத்தாணிபெருமுகை பிரிவு வாய்க்கால் இருக்கிறது. நமது அமைச்சர் அவர்கள் பி.டபிள்யூ.டி., உணவு இரண்டையும் பார்த்து வருவதால் நான் இதை இப்பொழுது இங்கே சொல்ல விரும்புகிறேன். அது சுமார் பத்து வருஷங்களாக இருந்து வருகிறது. ஆனால் இன்னும் அங்கேயுள்ள விவசாயிகளுக்கு டெம்பரிரயாகத்தான் வாட்டர் டிக்கட்ஸ் கொடுத்துவருகிறார்கள். அதைப் பெர்மனண்ட்டாகக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இதில் தாமதம் ஏற்பட்டால் அவர்கள் தண்டத் தீர்வை கொடுக்கவேண்டி இருக்கிறது. அதற்காக அப்பீல் செய்ய வேண்டிய கஷ்டங்கள் இருக்கின்றன. ஆகவே, இதை கனம் அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து அவர்களுக்குப் பெர்மனண்ட் வாட்டர் டிக்கட்ஸ் கொடுப்பதற்கு வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவதாக, கோபி, பவானி போன்ற தாலுகாவிலே உள்ள நிலங்கள் எல்லாம் இரண்டு வருஷத்திற்கு முன்பே ரீசர்வே செய்யப்பட்ட நிலங்கள். ஆனால் அவைகளுக்கு இன்னும் பட்டா வழங்கப்படவில்லை. அவர்களுக்கு உடனடியாகப் பட்டாக் கொடுத்தால்தான் அவர்கள் நில அடமான பாங்குகளிலே பணம் வாங்குவதற்கு வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இப்பொழுது நாம் தீர்வை வசூல் செய்து கொண்டிருப்பது வருஷத்திற்கு ஒரு தடவைதான். பல இடங்களில் நாம் இரண்டு போகங்கள் வைத்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே, இரண்டு போகங்கள் உள்ள இடங்களில் ஒரு போகம் செப்டம்பரிலும், இன்னொரு போகம் மார்ச்சு மாதத்திலும் வருகிறது. ஆகவே, இந்தத் தீர்வை வசூல் செய்வதை வருஷத்திற்கு இரண்டு தடவைகளில் வசூல் செய்தால் நலமாக இருக்கும். தீர்வை இப்பொழுது 5 பங்கு அல்லது 6 பங்கு ஆகியிருக்கிறது.

ஆகவே விவசாயிகள் ஒரே தடவையில் கட்டுவதற்குக் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, அவர்கள் இரண்டு தடவைகளில் தீர்வையைக் கட்டுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தாளவாடி பிர்க்காவில், மலைப் பிரதேசமாக இருப்பதால், அங்கு ஏராளமாகப் புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றன. அவைகள் எல்லாம் பட்டாக் கொடுக்கப்படாத நிலங்களாக இருக்கின்றன. கீழ்நாட்டுக்காரர்கள் அங்குச் சென்று அந்த நிலங்களைப் பயன்படுத்துகின்ற சூழ்நிலை உருவாகியிருக்கிறது. அங்கு இருக்கின்ற ஜனங்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பவர்கள். அவர்களுக்கு நல்ல முறையிலே அந்த நிலங்களைக் கொடுத்தால் அவர்கள் நல்ல முறையிலே பயன்படுத்திக் கொள்வார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்காக நமது சர்க்கார் ஒரு தனிச் சட்டம் இயற்றினால்கூட நலமாக இருக்கும் என்பதைச் சொல்லிக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. செ. மாதவன் :** மதிப்பிற்குரிய சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, நிலவரி வேண்டுமா அல்லது வேண்டாமா அல்லது நிலத்தின் மீதுள்ள வரிப் பளுவைக் குறைக்கவேண்டுமா அல்லது வேண்டாமா என்பது கொள்கைப் பிரச்னை. நம்முடைய அமைச்சரவை அதைப்பற்றி இறுதியாக என்ன சொல்ல இருக்கிறது என்பதை நாங்கள் எதிர்ப் பார்க்கிறோம். ஆளும் கட்சியாகிய காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வருவதற்கு முன்பேயே நிலத்தின் மீது உள்ள வரிப் பளுவைக் குறைக்க வேண்டுமென்று மாநாட்டிலே தீர்மானம் போட்டிருக்கிறார்கள். காங்கிரஸ் அக்ரேரியன் ரீஃபார்ம்ஸ் கமிட்டியிலே போட்டிருக்கிறார்கள். இதற்குப் பின்னாலே இன்றைக்கு ஆட்சிக்கு வந்துவிட்ட பிறகு, 1950-ஆம் ஆண்டு அரசாங்கத்தால் ஒரு குழு இதற்காக நியமிக்கப்பட்டது. அந்தக் குழுவிலும் இது பரிசீலிக்கப்பட்டது. ஆனால், இதுவரை நிலத்தின் மீதுள்ள வரிப்பளு குறைந்திருக்கிறதா என்றால் இல்லை. அமைச்சர் அவர்கள் உரையிலே முன் பக்கத்திலே ஒரு கருத்து, உரையின் பின் பக்கத்திலே அதற்கு முரண்பட்ட கருத்து. நிலவரியை விட நிலத்தின்மீது எத்தனை சதவீதம் மற்ற வரிகள் போடப்பட்டிருக்கின்றன என்பதைப் புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. இது கிட்டத்தட்ட 100 சத வீதம் போடப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட முரண்பட்ட வாதங்கள் நம்முடைய சர்க்காரால் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. இதனால் என்ன தொல்லைகள் ஏற்படுகின்றன என்பதை அரசாங்கம் சிந்திக்க மறுக்கிறது. நிலவரி பாக்கியைப் பார்த்தால் தெரியும். நிலவரி பாக்கி ரூ. 1,47,00,000 என்று இருக்கிறது. இதில் குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து 50 சத வீதம் பாக்கி வர வேண்டியிருக்கிறது. ஏன் மற்ற மாவட்டங்களைக் காட்டிலும் இராமநாதபுரம் மாவட்டத்திலே மாத்திரம் 50 சத வீதம் நிலவரி பாக்கி இருக்கிறது. இந்த நிலை ஏன் ஏற்பட்டது ? வரி வசூலிப்பதிலோ அல்லது வரி போடுவதிலோ சில தவறுகள் ஏற்படுகின்றன. அந்தத் தவறுகள் இதற்குக் காரணம் என்பதை நாங்கள் பலமுறை சொல்லி வந்திருக்கிறோம். ஜமீன் ஒழிப்பு வந்தபொழுது செக்ஷன் 23 போட்டோம். அந்த 23 போட்டதால் பல கஷ்டங்கள் ஏற்பட்டன. அந்தக் கஷ்டங்களினால் வந்த தேக்கம் தான் இன்றைக்கும் இந்த நிலவரி வசூலாகாத நிலையை உருவாக்கி வருகிறது. இராமநாதபுர மாவட்டத்தின் பாக்கியை வைத்தே இந்த முடிவுக்கு வந்து விடலாம். அதைப் பரிசீலித்துப் பழைய பாக்கிகளை வசூலிப்பதில் இந்தச் சர்க்காருடைய கொள்கை என்ன? ஜமீன்தார்களிடத்திலிருந்து இவற்றை எடுத்துக் கொள்ளும்போதே இவ்வளவு பாக்கி இருந்ததா? அதற்குப் பின்னாலே வர வேண்டிய பாக்கியா? இதிலே எந்தக் கொள்கையை இந்த அரசாங்கம் செயல்படுத்தப் போகிறது? இதிலே ஏற்பட்ட தவறு என்ன? எதனால் பாக்கிகள் ஏற்பட்டன? இவற்றை யெல்லாம் அரசாங்கம் மறு பரிசீலனை செய்ய வேண்டும். நில வரித் துறைக்கு 1954-ம் ஆண்டில் 76 லட்சம் ஒதுக்கப்பட்டது. 1965-ம் ஆண்டில் 98 லட்சம் கொடுக்கிறோம். ஆனால் அந்த இலாகாவிலே இப்படிப்பட்ட வரி பாக்கி இருக்கிறதே! அதற்குள்ள அடிப்படைக் காரணம் என்ன? அந்தக் காரணத்தைப் புரிந்துகொள்ள நம்முடைய அமைச்சர் அவர்கள் முற்படுவார்களா?





வரி வசூலிக்கும் முறையிலே சில புதுக் கொள்கைகளைப் புகுத்துகிறார்கள். உதாரணமாக, கர்ணம் வசூலிக்கும் போது அல்லது ஹெட்மென் வசூலிக்கும்போதும் அவர்களுக்குக் கமிஷன் கொடுக்கிறார்கள். அவர்களை ஊக்குவிப்பதற்காக அவர்களுக்குக் கமிஷன் கொடுப்பதாகச் சொன்னார்கள். அவர்களை ஏஜெண்டுகளாக ஆக்கினார்கள். அந்தக் கொள்கைகூட சரியில்லை என்று என்னால் முடிவு செய்யப்பட்டு அவர்களுக்குக் கமிஷன் கொடுப்பது 1962-ம் ஆண்டோடு நிறுத்தப்பட்டது. அதை மீண்டும் கொடுப்பதா வேண்டாமா என்பது கொள்கைப் பிரச்னை. அந்தக் கொள்கைப் பிரச்சினையில் இந்த அரசாங்கம் இன்னும் முடிவுக்கு வரவில்லை. இந்த இரண்டு ஆண்டுக் காலமாக என்ன நிலைமை? யாருக்கும் தெரியாது. அதிகாரிகளுக்கும் தெரியாது. அமைச்சர்களுக்கும் தெரியாது. கிட்டத்தட்ட 2¼ லட்சம் ரூபாய் சட்ட விரோதமாகக் கொடுக்கப் பட்டிருக்கிறது. இதை அரசாங்கம் எப்படிச் சரிக் கட்டப் போகிறது? இதைப் பற்றிய விளக்கமே இல்லை. இப்படிப்பட்ட நிலையில் கொள்கையை ஒப்புக்கொள்ளக் காலதாமதம் ஆகிறது.

ஆர். ஆர். வில்லேஜஸ் இருக்கிறது. அதிலே வசூலிக்கக் கூடியதில் ஒரு பகுதியைச் சர்க்காருக்கும், ஒரு பகுதியை லாண்ட் ஓனர்சுக்கும் கொடுக்கிறார்கள். பாக்கிக்கு வட்டி வாங்குகிறார்கள். ரெவின்யூ ரெகவரி ஆக்ட்படி வட்டி வாங்குகிறார்கள். இதைப் போல் 2 லட்சம் ரூபாய் பாக்கியை வஜா செய்திருக்கிறது இந்த அரசாங்கம். ஆர்.ஆர். வில்லேஜ் விவசாயிகளிடமிருந்து தள்ளுபடி செய்யும் ரூபாய் 2 லட்சம் ரூபாய். இந்த முறையைப் மறுபரிசீலனை செய்ய வேண்டும். இந்த நில வரியைப் பொறுத்த வரையிலே மாறுதல் செய்ய வேண்டுமா என்பதைப் பற்றி பரிசீலிக்கவேண்டும்.

வில்லேஜ் ஆபீசர்ஸ்-ஐப் பொறுத்தவரை இன்னும் ஒரு முடிவுக்கு வர இந்தச் சர்க்கார் தயங்குகிறது. காபினட் சப்-கமிட்டி போட்டோம்; பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம் என்று சொல்கிறார்கள். பல முறை இப்படிச் சொல்லிவிட்டார்கள். இன்னும் கூட அதைப் பற்றி ஒரு முடிவு தெரிவிக்கப்படவில்லை. ஏன் இப்படிப்பட்ட நிலை? 1949-ம் ஆண்டுக்குப் பின்னால் அவர்களுடைய நிலை சந்தேகமாக இருந்து வந்தது. இப்போது இந்தியத் தலைமை நீதிமன்றம் தீர்ப்புக் கொடுத்து விட்டது. என்ன அடிப்படையில் அவர்களை வைக்க வேண்டும்? அவர்களுடைய நிலை என்ன? அவர்களுடைய சம்பளம் என்ன? அவர்களுடைய உரிமை என்ன? ஒரு முடிவு எடுக்க ஏன் பயப்படுகிறார்கள்? அவசரமாக ஒரு முடிவை எடுக்காமல் " சிந்தித்துக் கொண்டிருக்கிறோம் " என்று இதைத்தான் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் " அவர்கள் எல்லாம் கவுர உத்தியாகஸ்தர்கள் ; சம்பளத்திற்காக வேலை செய்யவில்லை, கவுரவத்திற்காக வேலை செய்கிறார்கள் " என்ற வாதத்தைத் தொடர்ந்து கடந்த மூன்று ஆண்டுகளாக இந்த மன்றத்திலே பேசிக் கொண்டிருக்கிறார்கள். உண்மை நிலை அதுவா? அதைப் பற்றிக் காங்கிரஸ் கட்சி அங்கத்தினர்களே எடுத்துக் காட்டினார்கள். ஜமீன்தார்கள் காலத்தில் இருந்த நிலையிலும், வெள்ளைக்காரன் காலத்தில் இருந்த நிலையிலும் " கவுரவத்திற்காக " என்ற ஆசை இருந்திருக்கலாம். இன்று அவர்கள் தங்களுடைய பிழைப்புக்கே வேறு வேறு காரியங்களைச் செய்ய வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சி அங்கத்தினர்களே எடுத்துச் சொன்னார்கள். பட்டா மாறுதலுக்குப் பணம் கொடுக்க வேண்டும். " லஞ்சம் " என்ற வார்த்தையை உபயோகப்படுத்தினால் " லஞ்சம் லஞ்சம் " என்று பேசுகிறார்களே என்று கூறுவார்கள். இது லஞ்சம் இல்லையா? அவர்களுடைய நிலையைப் பற்றி உடனடியாக இந்த அரசாங்கம் ஒரு முடிவைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வரியை நேரடியாகவே பஞ்சாயத்துக்கு ஒப்படைக்கலாமா அல்லது வசூலித்ததற்குப் பின்னால் வருமானத்தைப் பஞ்சாயத்துக்குக் கொடுக்கலாமா ? இதை ஒரு பிரச்சினையாக நீண்டகாலமாக ஆலோசித்து வருகிறார்கள். ஆறு கோடி ரூபாய் வருமானம் என்று பெருமையாகச்

சொல்லியிருக்கிறார்கள். அந்தக் காலத்தில் இருந்த வருமானத்தில் இது தான் முக்கியமான வருமானம். இப்போது அப்படி அல்ல. நூற்று அறுபத்து எட்டு கோடி ரூபாய்க்கு மேல் திட்டம் போடக்கூடிய சூழ் நிலையில் இந்த வரி ஆறு கோடி ரூபாய் அளவுக்கு இருக்கிறது. இந்த நில வரியைப் பஞ்சாயத்துக்களுக்குக் கொடுத்து விடலாம் என்ற முடிவுக்கு வரவண்டும். அப்படி ஒரு முடிவுக்கு வந்ததற்குப் பின்னுலே பஞ்சாயத்து வருமானம் பெருவதற்கு ஆலோசனை இருக்குமானுல் அது பற்றியும் இன்றைக்கு இந்தச் சர்க்கார் முடிவுக்கு வரவில்லை. காங்கிரஸ் கட்சியிலேயே இது பற்றிப் பரிசீலிக்கப்பட்டது. வில்லேஜ் கம்யூனிடி மானேஜ்மெண்ட் என்ற முறையில் நில வரி நிர்வாகத்தைக் கொடுக்க வேண்டும், அதற்காக ஏற்பாடு செய்ய வேண்டுமென்ற பிரச்சினையைப் பல முறை வற்புறுத்தியிருக்கிறார்கள். ஆனுல் இதுவரை முடிவுக்கு வரவில்லை.

கர்ணம் அல்லது வில்லேஜ் ஆபீசர்ஸ் ரெக்கார்டைப் பொறுத்தவரை லீகல் ரெகார்ட்ஸ் அல்ல. ஆனுல் அது இன்றைக்கும் நீதி மன்றத்தில் பயன்படுத்தப்படுகிறது. ரெக்கார்டுகளில் உள்ள குழப்பத்தின் காரணமாக பல பேர் நீதி மன்றத்திற்குச் சென்று தோல்வி அடைந்து பணத்தைப் பாழாக்கும் நிலை இருக்கிறது. அன்றைக்கு வெள்ளைக்காரன் காலத்தில் இருந்த நிலைமையே இன்றும், சுதந்திரம் கிடைத்த பிறகும் இருக்க வேண்டுமா ? யாருடைய நிலம் யார் பெயருக்கு இருக்க வேண்டுமோ அவருக்குப் பட்டா கொடுக்க வேண்டும். செட்டில்மெண்ட் நடந்து ரி-சர்வே செய்யப்படுகிறது. என்று அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் காலத்தில் போர்டு ஸ்டாண்டிங் ஆர்டர் படி ஜமாபந்திக்கு ஜமாபந்தி மாற்ற வேண்டுமென்று செய்தார்கள். இன்றைக்கு என்ன நிலைமை? தன்னுடைய நிலம் எங்கே இருக்கிறது. எந்த சர்வே நம்பரில் இருக்கிறது என்பதே தெரியவில்லை. ஏழை விவசாயிகள் அதைத் தெரிந்துகொள்ள முடியாத நிலை இருக்கிறது. இதை யெல்லாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். மற்ற வர்களையெல்லாம் வசூலிப்பதற்கு டிமாண்டு நோட்டீஸ் கொடுக்கிருர்கள். இதற்குக் கொடுப்பதில்லை. இவ்வளவு வரி பாக்கிக்குக் காரணம் சர்வே நம்பர் இல்லாததால் சிலர் வரி கட்ட மறுக்கிறார்கள். என்றைக்காவது " நீ இவ்வளவு வரி கட்டவேண்டும் " என்று நோட்டீஸ் அனுப்பக்கூடிய சூழ்நிலை இருந்ததா? இன்றையதினமும் அதே சூழ்நிலைதான் இருந்து கொண்டிருக்கிறது.

குறைந்த அளவு நிலம் உள்ளவர்களுக்கு வரி வஜா செய்ய வேண்டு மென்று கொள்கைப் பிரச்சினை வருகிறது. அதைப் பற்றிக் காங்கிரஸ் கமிட்டியில் தீர்மானம் போட்டிருக்கிறார்கள். சர்க்கார் அமைத்த கமிட்டி யோசனை கூறியிருக்கிறது. ஒரு எக்கர், அரை எக்கர் வைத்திருப்பவர்கள் தங்களுடைய விவசாயத்திலே வருமானம் இல்லையென்று சொன்னுல் அவர்களுடைய கதி என்ன? நிச்சயம் அவர்கள் வரி கட்டித் தான் ஆகவேண்டும். விவசாய வருமான வரி அப்படிக் கட்டியாக வேண்டுமா என்ருல் இல்லை. தொழில் வரி அப்படிக் கட்டியாக வேண்டுமா என்ருல் இல்லை. இந்த நில வரியைப் பொறுத்தவரைதான். நிலம் வைத்திருந் தாலே வரி இருக்கிறது. ஆகவேதான் குறைந்த அளவு நிலமுள்ள வர்களுக்கு வரிச் சலுகை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதிலே பத்து ரூபாய் கட்டக் கூடியவர்களுக்கு வரி விலக்கு என்ருல் சர்க்காருக்கு ஏற்படக்கூடிய நஷ்டம் ஒரு கோடி ரூபாய்தான். முப்பது ரூபாய் வரை கட்டக்கூடியவர்களுக்கு வரி விலக்கு என்ருல் மூன்று கோடி ரூபாய்தான் சர்க்காருக்கு நஷ்டம். நூற்றுஅறுபத்தெட்டு கோடி ரூபாய்க்குத் திட்டம் போடுகின்ற சர்க்காருக்கு இந்த மூன்று கோடி ரூபாய் ஒரு பெரிய நஷ்டம் அல்ல. இதைக் கொள்கை அளவிலே பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பார்ஷியல் ரெமிஷன் கொடுக்கக்கூடிய வகையிலேயும் பரிசீலிக்கலாம். 25 சத வீதம், 50 சத வீதம் ரெமிஷன் கொடுப்பது பற்றி மைசூர் அரசாங்கம் பரிசீலித்தது. நாமும் அவ்வாறு பரிசீலனை செய்து விவ சாயிகளுடைய வரிப் பளுவைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





வெள்ளைக்காரன் காலத்தில் நில வரியை முக்கியமான வரியாகக் கருதினுன். நிலம் விளையாத சமயத்தில் வரி போட்டதால் ஏழை விவ சாயிகள் ஜமீன்தார்கள் காலத்தில் போராடினுர்கள். உடனே சட்டம் கொண்டு வரப்பட்டது. நிலம் விளையாதவர்களுக்கு ரெமிஷன் கொடுக்க லாம் என்று போர்டு ஸ்டாண்டிங் ஆர்டர் இருக்கிறது. இந்த விதி எப்படி செயல்படுகிறது என்று பரிசீலிக்க வேண்டும். அந்த விதியை நாம் எப்படி மாற்ற வேண்டுமென்பதைப் பற்றிப் பரிசீலிக்க மறுக்கிறார்கள். 1950-ம் ஆண்டு சர்க்கார் அமைத்த கமிட்டியில் நல்ல யோசனைகளைச் சொல்லியிருக்கிறார்கள். ஸ்டாச்சுடரி பேசிசில் விளையாத நிலங்களைப் பொறுத்த வரை அந்த விவசாயிகளுக்கு ரெமிஷன் கொடுக்க அரசாங்கம் தயங்கக் கூடாது. மற்ற இனங்களில், விற்பனை செய்தால்தான் வரி வாங்குகிறார்கள். வருமானம் வந்தால்தான் வரி வாங்குகிறார்கள். அந்த மாதிரி விளையாத நிலங்களுக்கு ரெமிஷன் கொடுக்க இந்த அரசாங்கம் தயங்கக்கூடாது. தற்போது இருக்கின்ற நிலையில் விளையாத நிலமா என்று பார்க்க தாசில்தாரை அனுப்புகிறார்கள். நிலத்திலுள்ள கதிரை அறுத்த பிறகு விளைந்ததா, விளையாததா என்று கண்டு பிடிக்க முடியாது. கலெக்டர் அவர்களே வந்து பார்க்கிறார். அவர் விளைந்திருக் கிறது என்று சொல்கிறார்; விவசாயி விளையவில்லை என்று சொல்கிறார். இந்த நிலை இருக்கக் கூடாது. பார்ஷியல் ரெமிஷன் உண்டா இல்லையா என்பது இன்று வரை சர்ச்சைக்குரியதாக இருக்கிறது. இதைப் பற்றித் தெளிவாக இந்த அரசாங்கம் முடிவு எடுக்க வேண்டும்.

அதிகாரிகள் சொல்லுகிறார்கள். இந்தக் கண்மாயில் மற்றவர்களுக்கு விளைந்திருக்கிறதே, உனக்கு ஏன் விளையவில்லை, நீ நன்ருக உழைத் 1-P. திருந்தால் விளைந்திருக்கும் என்று சொல்லுகிறார்கள். இது ஒரு வாதமா ? விவசாயக் குடும்பத்தில் பிறந்த அமைச்சர் அவர்களுக்கு இதிலுள்ள கஷ்டங்கள் தெரியும். கடைசிக் கோடி வரையில் தண்ணீர் இருந்தால்தான் விளையும். ஆகவே இதுபற்றி பரிசீலித்து ரெமிஷன் லெவலில் போர்ட் ஸ்டான்டிங் ஆர்டரைத் திருத்தி சரியாக வைக்க வேண்டும். ஓமந்தூரார் காலத்தில் கூட இதைப் பரிசீலித்திருக்கிறார்கள். கமிட்டியிலும் சொல்லியிருக்கிறார்கள். அதை எல்லாம் படித்துப் பார்த்து அமைச்சர் அவர்கள் இதுபற்றிய ஒரு தெளிவான கொள்கையை வகுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஸ்டாம்ப் அட்மினிஸ்ட்ரேஷன் பற்றி அமைச்சர் அவர்கள் கூறுவது ஆச்சர்யமாக இருக்கிறது. ஸ்டாம்ப் நிர்வாகத்தை அரசாங்கம் ஒரு வருமானமாகக் கருதுகிறதா? நீதி மன்றங்களைப் பொறுத்த அளவிற்கு நீதி செலுத்துவது ஆட்சியின் கடமை. இந்தக் கொள்கையில் அரசாங்கத்தின் நிலை என்ன? இந்தியன் லா கமிஷன் இதுபற்றி விளக்கியிருக்கிறது. நம் அமைச்சர் அவர்கள் சொல் கிறார்கள், உயர் நீதிமன்றத்தோடு கலந்து பேசினேம் என்று. யாரைக் கலந்தார்கள் ? என்ன சொன்னுர்கள்? கமிட்டி போட்டார்களா? தெளிவு இல்லை. அவர்கள் உரையில் கலந்தோம், என்ற வார்த்தை தான் இருக்கிறது. மொகலாயர் சாம்ராஜ்யத்தில் இலவச நீதி வழங்கப் பட்டது. அதற்கு முன்பு இந்து சாம்ராஜ்யத்தில் இலவச நீதி வழங்கப் பட்டது. வெள்ளைக்காரன் இந்த நாட்டுக்கு வந்த பின்னர் தான் இந்த வரி மூலம், ஸ்டாம்ப் மூலம் வரி வசூலித்து நீதியை விலைக்கு விற்கக் கூடிய நிலை இந்த நாட்டில் உருவாகியது. இந்தச் சட்டம் வந்தபோது லார்ட் மெக்காலே இருந்தார்கள். அவர்கள் இதுபற்றி தெளிவாகச் சொன்னுர்கள். நீதியை விற்பது சரி அல்ல என்று. அது கொள்கைக்கு முரண்பட்டது. இது இருக்கலாம் என்ற வாதம் செய்யப்பட்டால் அந்த வாதம் ஃப்ரிவிலஸ் லிட்டிகண்ட், வேண்டுமென்று ஒன்றுக்கும் உதவாத உதவாக்கரை வழக்குகளை நடத்துபவர்களைத் தண்டிக்கத்தான் இந்த ஒரு சட்டம் கொண்டு வருகிறோம் என்று லார்ட் மெக்காலே பேசி இருக்கிறார்கள். இந்த அரசாங்கம் அதை யோசித்ததா ? நீதியைப் பெற வரும்போது வருமானம் வர வேண்டுமென்று கொள்கை வெள்ளைக்காரனுல் இந் நாட்டில் புகுத்தப்பட்டது. 1870-ல் கோர்ட் பீஸ் ஆக்ட் கொண்டு வரப் பட்டது. அந்தச் சட்டத்தை நாம் எடுக்காவிட்டாலும் அந்தச் சட்டத்தை மாற்றி நீதிக்கு அதிகமாகச் செலவு வரும் நிலையை இந்த அரசாங்கம் உற்பத்தி செய்யலாமா ? பின்னுல் 1955-ல் அந்தச்

சட்டத்தை மாற்றியிருக்கிறார்கள். அதன் விளைவு என்ன ? அமெரிக்கா நாட்டில் இப்படியிருக்கிறதா ? இங்கிலாந்து தேசத்தில் இப்படியிருக்கிறதா? வெள்ளைக்காரன் இந்த நாட்டில்தான் அதை உருவாக்கினானே தவிர அவர்கள் நாட்டில் இப்படியிருக்கிறதா? சென்னை உயர்நீதி மன்றத்தில் தலைமை நீதிபதியாக இருந்த ஒருவர் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். என் நாட்டிலிருந்து இந்தியா நாட்டிற்கு வந்தவுடன் நீதிக்குச் செலவாகும் செலவைப் பார்க்கும்போது, ஒரு கட்சிக்காரன் நீதி பெற செலவு செய்யும் தொகையைப் பார்க்கும்போது, ஸ்டாம்ப் ட்யூட்டி, கோர்ட் பீஸ் இவற்றைப் பார்க்கும்போது பயங்கரமாக இருக்கிறது. இந்த நிலை எங்கள் நாட்டில் இல்லை என்று கூறியிருக்கிறார்கள். இது 1944-ல். அதற்குப் பின்னர் 1955-ல் சட்டத்தை மாற்றி இன்று அதிகமாக வசூலிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். விளக்கம் சொல்கிறார்கள் அமைச்சர் அவர்கள், நீதி நிர்வாகம் நடத்துவதற்கான செலவை ஈடுகட்டுவதற்காகத்தான் இது என்று. அது உண்மை அல்ல என்று எடுத்துக் கூற ஆசைப்படுகிறேன். கிரிமினல் ஜஸ்டிஸ் வேறு சிவில் ஜஸ்டிஸ் வேறு. சிவில் ஜஸ்டிஸுக்குத் தான் தொகை கட்டுகிறார்கள் கட்சிக்காரர்கள். க்ரிமினல் ஜஸ்டிஸ் வழங்கும் கடமை சர்க்காருக்கு இருக்கிறது. ஆகவே அதற்கு ஏற்படும் செலவை சிவில் ஜஸ்டிஸ் பெற வருகிறவர்களிடமிருந்து ஈடுகட்டுவது என்பதை அரசாங்கம் தன் கொள்கையாகப் பாவிக்கிறதா ? இது சரியா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆகவே க்ரிமினல் ஜஸ்டிஸ் வேறு, சிவில் ஜஸ்டிஸ் வேறு என்று மாற்றி சிவில் ஜஸ்டிஸுக்கு ஆகும் செலவை மட்டும் தான் எடுத்துக் கொள்ள வேண்டும். நீதி நிர்வாகத்திற்காகச் செலவிடும் பணத்தை எல்லாம் அரசாங்கம் ஸ்டாம்ப் ட்யூட்டி மூலம் வாங்குவது என்பது சரியல்ல. இதை இந்தியன் லா கமிஷன் தெளிவாகக் கூறியிருக்கிறது. ஆகவே இந்தச் சட்டத்தை அரசாங்கம் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

**கனம் திரு. வெ. ராமையா :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இன்றைய விவாதத்தைத் தொடங்கிவைத்துப் பேச முன்வந்த அங்கத்தினர் நேற்றையதினம் நடந்த விவாதம் தொடர்ந்து நடக்கிறது என்று நினைத்தார்களோ என்று சந்தேகம் எழுகிறது. உணவுப் பிரச்னை முதற்கொண்டு தொடர்ந்து பல்வேறு பிரச்னைகள் பற்றி கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். உணவுப் பிரச்னையில் இருந்து தீ அணைக்கும் படை வைக்கக் கூடிய கோரிக்கை வரை இருக்கக் கூடிய எல்லாக் கோரிக்கைகளையும் அரசாங்கம் பரிசீலனை செய்யும். இப்போது ரெவின்யூ இலாகா என்று சொல்லி விட்டால் நான் தெரிந்து கொண்ட வரை ஒரு வேலையோடு நின்று விடுவதற்கு இல்லை. அரசாங்கமும் சரி, பொது மக்களும் சரி, மாவட்ட கலெக்டரிடமிருந்து மாவட்டத்தில் நடக்கிற எல்லாக் காரியங்களையும் எப்படி எதிர்பார்க்கிறார்களோ அதேபோல் ரெவின்யூ இலாகா கோரிக்கை வரும்போது பேச சந்தர்ப்பம் கிடைத்தவுடன் எல்லா அங்கத்தினர்களும் தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்வதில் ஆச்சரியப்படுவதற்கில்லை. இருந்தாலும் ஒவ்வொரு அங்கத்தினரும் சொன்ன கருத்துக்களுக்குத் தனித்தனியாகப் பதில் சொல்வதற்கு முன்பு இரண்டொரு முக்கியமான பொதுவான விஷயங்களில் அரசாங்கத்தின் நிலை குறித்து சில விவரங்கள் கூற விரும்புகிறேன். குறிப்பாக இன்று தமிழ்நாட்டில் பொதுவாகப் பருவ மழை எங்கு பார்த்தாலும் நன்றாக இருந்தாலும் தென் ஜில்லாக்களில் பருவ மழை தவறியதால் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அதிலும் விசேஷமாகத் திருநெல்வேலி ஜில்லாவில் பெரும் பகுதியில் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. ராமநாதபுரம் ஜில்லா எப்போதுமே கஷ்டத்திற்குரிய ஒரு ஜில்லா. அங்கு இந்த வருஷம் ஏற்பட்ட நிலை எப்படியிருக்கிறது என்றால் தங்கள் உழைப்பால், உற்சாகத்தால் விவசாயிகள் சிறிது முன்னேற்றம் அடைந்திருக்கக்கூடிய அருப்புக்கோட்டை போன்ற பகுதிகளிலும் இந்த வருடம் மழை இல்லாததால் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. கிழக்கு ராமநாதபுரம் ஜில்லாவில் கஷ்டம் இல்லை என்று சொல்லவில்லை. நில வரிக் கொள்கையை நிர்ணயிக்கும்போது கிழக்கு ராமநாதபுரத்தில் உள்ள நிலையை அடிப்படையாக வைத்து ஒரு முடிவுக்கு வர வேண்டும் என்ற வார்த்தை திரு. மாதவன் அவர்கள் எழுப்பினார்கள். நில வரியை நீக்குவ





தால் மட்டும் அங்குள்ள கஷ்டத்தை நிவர்த்தி செய்துவிட முடியாது. உண்மையிலேயே அது ஒரு பின்தங்கிய பகுதி. அங்குள்ள பின்தங்கிய நிலைமை அந்த மாவட்டத்தோடு நின்று விடவில்லை. தொடர்பாக கிழக்கு ராமநாதபுரம், அரந்தாங்கி, புதுக்கோட்டை, மருங்காபுரி என்று போகிறது. ஜமீன் பகுதிகளாகப் போய்க் கொண்டிருக்கிறது. ஏன் என்று தெரியவில்லை. பின்தங்கிய பகுதிகளில் உள்ள மக்களின் கஷ்டத்தை உணர்ந்து அவர்களுக்கு விசேஷமாகப் பல வாய்ப்புகளை உண்டு பண்ணிக் கொடுக்க வேண்டும். அவர்களுக்கு ஆதாரங்கள் கொடுக்க வேண்டும், தொழில் துறையில் முன்னேற்றம் ஏற்படுத்த வேண்டும். அந்த முறையில் தான் அங்குள்ள பின்தங்கிய நிலைமை ஓரளவு உயரும் என்பது என் கருத்து. அதற்கு வேண்டிய விசேஷ கவனம் செலுத்த ராஜ்ய அரசாங்கம் முயற்சிக்கிறது. ப்ளானிங் கமிஷன் கூட ஒரு ஆலோசனையைச் சொல்லி வருகிறார்கள். ஒரு மாநிலத்தில் எங்கெங்கு பின்தங்கிய நிலை இருக்கிறதோ, எங்கெங்கு பின்தங்கிய பகுதிகள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் ஒரு விசேஷ ஏற்பாடுகள், முயற்சிகள் எடுக்க வேண்டுமென்ற முறையிலே அந்தப் பிராந்தியங்களில் உள்ள கஷ்டத்தை உணர்ந்து அவற்றை நீக்க அரசாங்கம் முயற்சி எடுக்கும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்த வருடம் திருநெல்வேலி ஜில்லாவில் ஏற்பட்டிருக்கக் கூடிய எதிர்பார்க்காத கஷ்டத்தைப் போக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறது. ரெவின்யூ போர்டிலிருந்து ஒரு போர்ட் அங்கத்தினர் அந்த வட்டாரத்திற்குச் சென்று பார்த்து அரசாங்கம் என்னென்ன செய்ய வேண்டும் என்பதற்குச் சிபார்சுகள் செய்திருக்கிறார்கள். அதை எல்லாம் காலாகாலத்தில் நல்ல முறையில் பரிசீலனை செய்து அங்கு நிவாரண வேலைகள், இன்னும் வரி வஜா போன்றவைகள் என்னென்ன செய்ய வேண்டுமோ அதில் அரசாங்கம் ஒரு முடிவிற்கு வரும் என்ற உறுதியை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நிவாரண வேலைகள் என்று சொல்லும்போது, பல கருத்துக்களை திரு. மாதவன் அவர்களும் மற்ற பல கனம் அங்கத்தினர்களும் சொன்னார்கள். ஏதோ டிரெடிஷனாக இருந்து கொண்டிருக்கும் ஃபாமின் வொர்க் சம்பந்தப்பட்ட வரையில் என்னென்ன செய்யப்படும் என்பதற்கு அறிக்கை வைத்திருக்கிறார்கள். இவைகள் எல்லாம் ஆக்கவேலைகளுக்குப் பயன்படுமா, வேலையில்லாமல் இருக்கும் மக்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்குமா என்கின்ற ஒரு நிலைமையை நாம் பார்க்க வேண்டியிருக்கிறது. ஏதோ வேலை வாய்ப்பு மட்டும் ஏற்படுத்திக் கொடுத்துவிட்டால் போதும், இருக்கின்ற பஞ்சத்தை மட்டும் தாண்டிவிட்டால் போதும் என்கின்ற நிலை மட்டும் இருக்கக் கூடாது. நாம் முன்பு வைத்திருந்த கொள்கைப்படி ஃபாமின் ரிலீஃப் மெஷர்ஸ் என்ற அடிப்படையில் எப்போதும் தொடர்ந்து செய்து கொண்டிருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. ஏனென்றால் மாகாணத்தில் பொதுவாக எங்கு பார்த்தாலும் அபிவிருத்தி வேலைகள், அணைக்கட்டு வேலைகள் இவைகள் எல்லாம் நடந்து கொண்டிருக்கின்ற காரணத்தால், இதற்காகக் கொடுக்கப்படும் நிவாரண வேலைகள் எல்லாம் ஃபாமின் என்ற வார்த்தையில் வர வேண்டுமா என்கின்ற சந்தேகத்தைக் கூட கம்யூனிஸ்ட் தலைவர் திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் முன்பு ஒரு தடவை இங்கு குறிப்பிட்டார்கள். பொதுவாக ராஜ்யத்தில் இருக்கும் ஃபாமின் வேலைகள் என்று சொல்லும்போது, அது ஆக்க வேலைகளுக்கும் பயன்படக்கூடிய அளவில் இருக்க வேண்டும் என்ற நினைப்பில தான். குறிப்பாக இந்த வருடம் திருநெல்வேலி ஜில்லாவில் விவசாயிகளுக்குப் பலன் அளிக்கக் கூடிய வகையில், வேலைகள் தொடங்க வேண்டும் என்று நினைத்து, அதற்காகச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு கலந்து அரசாங்கம் ஒரு முடிவு எடுத்து தக்க ஏற்பாடுகளைச் செய்யும் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஃபாமின் வேலைகள் என்று சொல்லும்போது, வெறும் நிலவரியை மட்டும் வஜா செய்துவிடுவதல்ல, நிலவரி வஜா செய்து விடுவதில் மட்டும் எல்லாம் தீர்ந்து விடாது என்பதை இந்தச் சபைக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். நிலவரி வஜா செய்யும் போது நிலமிருக்கும் ஒரு சிலருக்கு மட்டும்தான் பலன் ஏற்பட முடியும். வரிவஜா செய்து விடுவதால் அரசாங்கம் ஏதோ ஒரு பெரிய காரியத்தைச் செய்து விட்டதாக நினைத்துக் கொண்டிருப்பது நல்லதல்ல. அதே நேரத்தில்

நிலமில்லாத ஏழை மக்கள் வாழ்க்கையை நல்ல முறையில் நடத்திச் செல்வதற்கும், நாம் மற்ற வேலைகளை உண்டு பண்ண வேண்டும். அதற்கும் அரசாங்கம் முயற்சி எடுக்க வேண்டும். அந்த முறையில் அரசாங்கம் என்னென்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமோ அதையெல்லாம் செய்யும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எந்த இடத்தில் என்னென்ன கஷ்டங்கள் வந்திருக்கின்றன, என்னென்ன நஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதையெல்லாம் கவனித்து அரசாங்கம் தக்க நடவடிக்கைகளை எடுக்கத் தயங்காது என்பதை இச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்கிறேன். இதெல்லாம் அரசாங்கத்தின் நிதி நிலைமையை பெருமளவுக்குப் பாதிக்காது என்பதை நான் மனப்பூர்வமாக உணருகின்ற காரணத்தால் தான் இதை நான் சொல்ல முன் வருகிறேன்.

அடுத்தபடியாக இங்கு பேசப்பட்டது, தீ விபத்து ஏற்படும்போது, அதில் பாதிக்கப்படுகின்றவர்களுக்கு கொடுக்கப்படும் நிவாரணம் போதாது என்றும், இதற்காகக் கொடுக்கப்படும் தொகையை அதிகப்படுத்த வேண்டும் என்றும் சொல்லப்பட்டது. இதைப்பற்றி அரசாங்கம் தொடர்ந்து பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. சென்ற சட்டசபைக் கூட்டத்தில் நான் பேசும்போதும், என்னுடைய கருத்தைத் தெரிவித்தேன். ஏதோ தீ விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு 30 ரூபாய், 40 ரூபாய் என்று கொடுத்துவிடுவதால் மட்டும் தீ விபத்துக்குள்ளானவர்கள் முன்னேற்றம் அடைந்துவிடமாட்டார்கள். முப்பது, 40 என்று கொடுப்பதை விட அவர்கள் மறுவாழ்வு வாழ்வதற்குத் தகுந்த முறையில் அரசாங்கம் உதவி செய்து கொடுக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து. அவர்கள் திரும்பவும் தங்கள் வாழ்க்கையை நடத்துவதற்குரிய பொருட்களை வாங்கிக் கொள்வதற்கான உதவிசெய்து கொடுக்க வேண்டும் என்கின்ற முறையில் அரசாங்கம் கவனம் செலுத்திக் கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இயற்கையின் கொடுமையின் காரணமாகவும், மழையில் ஏற்படுகின்ற சேதத்தின் காரணமாகவும் பாதிக்கப்பட்டவர்களுக்குப் கொடுக்கப்படும் உதவியைப் பொறுத்த வரையில், 30, 40 என்று கொடுக்கப்படுவதை இப்போது சமீபத்தில் நாம் மாற்றியிருக்கிறோம். அண்மையில், தனுஷ்கோடியில் ஏற்பட்ட புயல் காரணமாகப் பாதிக்கப்பட்டவர்களுக்குக் குறைந்தது 100 ரூபாயாவது கொடுக்க வேண்டும் என்று அரசாங்கம் முடிவு செய்தது. எந்தெந்த அளவுக்கு நிலைமைக்குத் தகுந்தவாறு கொடுக்க வேண்டும் என்பதை அரசாங்கம் பரிசீலனை செய்து பார்த்து, உதவி செய்து வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கென்று எந்தவிதமான உச்சவரம்பும் ஏற்படுத்த வேண்டிய தேவையும் அரசாங்கத்திற்கில்லை. இதற்காக அரசாங்கம் தக்க கவனம் செலுத்திவரும் என்பதையும் சொல்லிக் கொள்கிறேன்.

சென்ற வருஷமும் அதற்கு முன்னதாகவும், கூட்டுப் பட்டா அனேக இடங்களில் இருக்கின்ற காரணத்தால் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன என்று சொல்லப்பட்டது. இதில் என்னென்ன கஷ்டங்கள் இருக்கின்றன என்பதை அறிந்து உடனே தீர்த்துவிட முடியுமா என்று அரசாங்கம் பரிசீலனை செய்து பார்த்தது. இது ஏதோ உடனடியாகப் பேப்பரில் ஆர்டர் போட்டுத் தீர்த்துவிட முடியாது. பூமியில் போய் பார்த்து, எங்கே பிரிக்க வேண்டும் என்பதைப் பார்த்து இந்தப் பிரச்னையைத் தீர்க்கவேண்டும். இதற்கு ஏராளமான சர்வேயர்கள் தேவைப்படுகிறார்கள். கழிந்த வருடத்தில் எல்லாம் போதுமான சர்வேயர்கள் இல்லாமல் இருந்ததின் காரணமாகக் காலதாமதம் ஏற்பட்டது. இதைக் குறைந்த அளவில் சில குறிப்பிட்ட ஜில்லாக்களிலாவது தீர்த்து வைக்க வேண்டும் என்று நினைத்து குறிப்பிட்ட மூன்று ஜில்லாக்களில்—அதிகமாக சர்வேயர்களையும் செயின் மென்களையும் நியமனம் செய்து, இதற்காகத் தனியாக வேண்டிய அதிகாரிகளையும் நியமனம் செய்து—செங்கற்பட்டு, தஞ்சாவூர், திருச்சி—இந்த மூன்று ஜில்லாக்களிலும் வேலைகள் நடந்து கொண்டு வருகின்றன. இவ்விதம் எங்கெங்கு கஷ்டம் இருக்கிறதோ அங்கெல்லாம் அதிகாரிகளை நியமனம் செய்து இந்தப் பிரச்னையைத் தீர்த்து வைப்பதில் அரசாங்கத்திற்கு எந்தவிதமான கஷ்டமும் இராது. நாம் நிலங்களை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று சொல்லும்போது, அதற்காகப் பணம் தேவைப்படும்போது,



பட்டாவைக் காட்டித்தான் பணம் வாங்க வேண்டியிருக்கிறது. ஆகவே கூட்டுப் பட்டா என்றிருப்பதைப் பிரிக்கவேண்டியது மிக அவசியம் என்பதை அரசாங்கம் உணருகிறது. அதற்காக என்னென்ன செய்ய வேண்டுமோ அதையெல்லாம் அரசாங்கம் செய்ய முன்வரும், இப்போது முன்னோடியாக அரசாங்கம் மூன்று ஜில்லாக்களில் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. மேலும் எங்கெங்கு தேவையோ அங்கெல்லாம் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மற்றொரு முக்கியமான விஷயம், புறம்போக்கு நிலங்களை அஸைன்மெண்ட் செய்து கொடுப்பதில் பல கஷ்டங்கள் இருப்பதாகச் சொல்லப்பட்டது. நிலம் இல்லாத ஏழை விவசாயிகளுக்குப் புறம்போக்கு நிலங்களைக் கொடுக்க வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு ஜில்லாவிலும் விசேஷ அதிகாரியைப் போட்டு, குறிப்பிட்ட காலத்திற்குள், இந்த அளவுக்கு அஸைன்மெண்ட் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். ஆனால் அஸைன்மெண்ட் துரிதமாக நடைபெறவில்லை என்கின்ற குற்றச்சாட்டையும் சொன்னார்கள். எனக்கு வந்து கொண்டிருக்கும் தகவல்களையும் கணக்குகளையும் பார்க்கும்போது, தொடர்ந்து இந்த வேலையில் பல தாசில்தார்கள் ஈடுபட்டு கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பது தெரிகிறது. நாம் செய்து கொடுப்பதைவிட இன்னும் தேவை அதிகமாக இருக்கிறது. ஆக்கிரமிப்பு அதிகமாக இருக்கின்ற இடங்களில், ஆக்கிரமிப்பு செய்திருக்கின்றவர்களைக் காலி செய்து மற்றவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று வரும்போது பல சர்ச்சைகள் வருகின்றன. குறிப்பாக நிலம் அடமானம் செய்து கொடுக்கின்ற விஷயத்தில், ஒவ்வொரு குறிப்பிட்ட காலத்திற்கும் எந்த அளவுக்கு இந்த வேலை நடந்து கொண்டிருக்கிறது என்பதற்குத் தொடர்ந்து கணக்குகள் வந்துகொண்டிருக்கின்றன. அவைகளைப் பார்க்கும்போது, தொடர்ந்து இதில் அதிகாரிகள் கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பது தெரிகிறது. இதில் மேலும் வேண்டிய கவனம் செலுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கான எல்லா முயற்சிகளும் எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். கனம் திரு. முத்துலிங்கம் அவர்கள் புறம்போக்கு நிலங்களை ஏலம் செய்து கொடுக்கிறார்கள் என்றும் அந்த முறையை ரத்து செய்யவேண்டும் என்றும் சொன்னார்கள். இதை சம்பந்தப்பட்ட இலாகா அதிகாரிகள் கவனிப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எந்த இடத்தில் இம்மாதிரி நடக்கிறது என்பதை எழுதிக் கொடுக்கும்பட்சத்தில், ஏன் இந்த முறையில் கொடுக்கப்படுகிறது என்பதைப்பற்றி விசாரிக்க அதிகாரிகள் முன்வருவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, சில கனம் அங்கத்தினர்கள் சொன்ன விஷயங்களுக்குப் பதில் சொல்லலாம் என்று நினைக்கிறேன். விசேஷமாக திரு. சுப்பிரமணியம் அவர்கள் தம்முடைய பிரசங்கத்தில் முக்கியமாக, ரெவின்யூ இலாகா சம்பந்தப்பட்ட வரையில், உணவைப் பெருக்குவதில் தஞ்சை ஜில்லாவில் விவசாயத்தில் இருக்கின்ற கஷ்டத்தை எடுத்துச் சொன்னார்கள். விவசாயிகள், குறிப்பாக, சிறிய விவசாயிகளுக்கு தங்கள் நெல்லை அவசரமாக விற்க வேண்டிய நிலைமை இருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்டிப் பேசினார்கள். அறுவடையானவுடனேயே நெல்லை விற்க வேண்டியிருக்கிறது. நெல்லை விற்றுத்தான் நிலவரி கட்ட வேண்டும், அரசாங்கத்திலிருந்து ஏதாவது கடன் வாங்கியிருந்தால் அதைக் கட்ட வேண்டும். இப்படி பலவித தேவைகள் ஏற்படுகின்றன. நான் கொடுத்திருக்கின்ற அறிக்கையைப் பார்த்தால், அரசாங்கம் நிலவரியை இந்த நேரத்தில் வசூல் செய்வதற்குக் காரணம், இந்த நேரத்தில் விவசாயத் தொழில் இராது, விவசாயிகளிடத்தில் பணமும் இப்போதுதான் இருக்கும். நிலவரியைக் கட்டுவதற்கும் சுலபமாக இருக்கும் என்ற நினைப்பில்தான் இவ்விதம் வசூல் செய்து வருகிறார்கள். இதில் வேறு ஏதாவது நன்மை செய்ய முடியுமா என்று பார்க்கின்ற நேரத்தில் விவசாயிகள் தங்கள் பொருட்களை அவசரம் அவசரமாக விற்றுவிட வேண்டிய நிலைமை ஏற்படுகிறது என்று சுட்டிக்காட்டியதை யொட்டி, அவ்வாறு அவசரம் அவசரமாக விற்க வேண்டியது அவசியம்தானா என்பதைப்பற்றி பரிசீலனை செய்ய

வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறேன். தஞ்சை ஜில்லாவுக்கு மட்டுமல்ல, எல்லா ஜில்லாக்களையுமே மனதில் கொண்டு, இந்த நிலவரி வாங்குவதை ஒரு மாதம் அல்லது இரண்டு மாதம் தாண்டி வசூல் செய்தால் அரசாங்கத்திற்கு ஏதாவது நஷ்டம் வருமா, அதனால் ஏதாவது கஷ்ட நஷ்டங்கள் இருக்கிறதா என்று ரெவின்யூ இலாகா பரிசீலனை செய்யும். அதற்கு வேண்டிய முயற்சியை இந்த இலாகா எடுத்துக் கொள்ளும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதற்கு அடுத்தபடியாக மொத்தமாகச் சொன்ன கருத்து, திராவிட முன்னேற்றக் கழகத்தினரும் சரி, மற்றவர்களும் சரி, நிலவரியை அடியோடு தள்ளிவிட வேண்டும், இல்லையென்றாலும்—ஒவ்வொருவர் ஒரு குறியீட்டைச் சொன்னார்கள்—25 ரூபாய் நிலவரி கொடுக்கிறவர்களுக்குத் தள்ளிவிடலாம் என்று சில அங்கத்தினர்கள் சொன்னார்கள். இன்னும் சில அங்கத்தினர்கள் ஏழை விவசாயிகள் என்ற பெயரால் ஐந்து ஏக்கர் வரையில் தள்ளுபடி செய்யலாம் என்று எடுத்துச் சொன்னார்கள். இந்த நிலவரியைத் தள்ளி விட வேண்டும், அல்லது குறிப்பிட்ட சிறு விவசாயிகளுக்காவது தள்ளிவிடவேண்டும் என்ற கருத்து நீண்ட காலமாகப் பரிசீலனையில் இருந்து வருகிறது. ஆனால் இதைச் சொல்லும் போது ஒன்றை மட்டும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். தொடர்ந்து சரித்திர ரீதியாகப் பார்த்தால் யார் யார் இடத்தில் நிலம் இருந்ததோ, பூமி இருந்ததோ, அவர்கள் அரசாங்கத்திற்கு வரி செலுத்த மறுத்ததே கிடையாது. அவர்கள் அதை உரிமையாகக் கருதித்தான் வந்திருக்கிறார்கள். மற்ற வரிகளைக் கொடுப்பதிலே டிமிக்கி கொடுத்தாலும் கொடுக்காவிட்டாலும், நிலவரி கொடுப்பதில் அதை அவர்கள் உரிமையாகப் பாவித்து வருகிறார்கள். புலவர் அவர்கள் தலையாட்டுவதைப் பார்த்தால் அப்போது ஆறில் ஒரு பங்கு வரி கொடுத்தார்கள். இன்றைய தினம் மொத்த வருமானத்தில் கணக்குப் போட்டுப் பார்க்கும்போது ஆறில் ஒரு பங்கு அல்ல, இந்த வருஷ நிலைமையைப் பார்க்கும்போது 5 சதவிகிதம்தான் மொத்தம நில வரியாக வருகிறது. இந்த நிலவரியை விட்டு விட்டால் அவர்களுக்கு அந்த நிலத்தில் உள்ள உரிமை போய்விடுமோ என்று நினைக்கிறார்கள். விவசாயிகளை எடுத்துக் கொண்டால் தங்கள் பெயரில் பட்டா இல்லை என்றால் ரொம்பப் பேர்கள் கவலைப்படுகிறார்கள். கூட்டுப் பட்டா என்று இல்லாமல் தனிப் பட்டா ஏன் வேண்டுமென்று கேட்கிறார்கள்? அவர்களுக்கு அது இருந்தால் உரிமை இருக்கிறது என்று நினைக்கிறார்கள். நிலவரியைத் தள்ளிவிட வேண்டும், தள்ளிவிட வேண்டும் என்று சொல்கிறவர்கள் இன்னொன்றை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். நிலம் இருக்கின்றவர்களைவிட நிலம் இல்லாதவர்கள் மிக அதிகமாக இருக்கிறார்கள். நிலம் உள்ளவர்களுக்கும் நிலம் இல்லாதவர்களுக்கும் ஒரு வித்தியாசம் இருக்கவேண்டுமென்றுதான் நிலவரி இருக்கிறது. ஆகையால் இந்த முறையிலே பார்த்தால் இது ஒன்றும் பெரிய பளுவான வரியாக இல்லை. அந்த முறையில் பார்க்கும்போது கனம் அங்கத்தினர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொன்னார்கள் "நீங்கள் எல்லாம் சோஷலிஸத்தைப் பற்றிப் பேசுகிறீர்களே, இந்த நில வரியைத் தள்ளிவிட்டால் என்ன?" என்று. சோஷலிஸம் பேசும்போது நிலம் இல்லாதவர்களும் இருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்த்தால் நிலம் இருக்கின்றவர்களுக்கு நிலவரி போடுவது சரியாகத்தான் இருக்கிறது. சோஷலிஸம் என்றால் அவரவர்கள் சக்திக்குத் தக்கபடி கொடுக்க வேண்டும் என்பதில் ஒன்றும் தவறு இல்லை. ஆகையால் இது கொள்கைக்கோ லட்சியத்திற்கோ புறம்பாவது அல்ல என்று சொல்லிக் கொள்கிறேன்.

நிலத்தில் இன்னும் மற்ற வரிகளைப் போடுகிறார்கள் என்று சொல்லும் போது என்னென்ன காரணத்திற்காகப் போடுகிறோம் என்று ஒவ்வொரு ஸென்ஸையும் எடுத்துப் பார்த்தால் விளங்கும். இரண்டு தினங்களுக்கு முன்பு இதே சட்ட சபையில் சொன்னார்கள், பகல் உணவுக்காக ஏன் ஸ்பெஷல் ஸர்சார்ஜ் போடக் கூடாது என்று. பெரும்பாலும் நிலத்தின் மீது போடப்படும் வரியின் மீது போட வேண்டுமென்றுதான் ஆலோசனை சொல்லியிருக்கிறார்கள். நாம் நினைக்கின்றபோது ஏதாவது ஒரு காரி



யத்தைச் செய்ய வேண்டுமென்பதற்காக எப்படியேனும் அதற்குத் தேவையான பணத்தைக் கண்டுபிடிக்கும் கட்டத்தில் இருக்கிறோம். அப்போது அந்த நேரத்திற்கு ஸர்சார்ஜ் போட வேண்டுமென்று சொல்லிவிட்டு, இப்போது வரும்போது நிலவரியைத் தள்ளிவிட வேண்டுமென்று சொல்லுகிறார்கள். எப்படியிருந்த போதிலும் நிலவரியைப் பொறுத்த வரையில் நிலவுடைமைக்காகச் செலுத்த வேண்டும், அது உரிமை என்று நினைக்கின்ற நிலை ஒரு பக்கம் இருந்தாலும், எந்த வரியை எடுத்துக் கொண்டாலும் எதற்காகப் போடுகிறோம் என்று சட்ட சபையில் சம்மதம் பெற்றுத்தான் போட்டிருக்கிறோம். ஆகவே, இதைப் பொறுத்த வரையிலே இது நீடித்து இருக்கும் என்பதிலே எந்தவிதச் சந்தேகமும் யாருக்கும் வேண்டாமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கனம் அங்கத்தினர், எனக்குப் பின்னால் இருக்கிற அங்கத்தினர் அவர்கள், தஞ்சை ஜில்லாவில் இருக்கிறவர்களுக்கு அக்ரிகல்ச்சுரல் இன்கம்டாக்ஸைத் தள்ளிவிட வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். நான் தெரிந்து கொண்ட வரையில் அக்ரிகல்ச்சுரல் இன்கம்டாக்ஸ் போய்விடும் என்று நினைப்பதற்கு இடம் கிடையாது. ஏனென்றால் இப்போது இருக்கக்கூடிய அபிவிருத்தி வேலைகள் எல்லாவற்றையும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். இந்த மான்யக் கோரிக்கை, நான் கேட்பதே ரொம்பக் குறைவான பணம். சில லட்சக் கணக்கில்தான் இந்த மான்யம் இருக்கிறது. இதிலேயே 100 ரூபாய் குறைக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். மற்ற மான்யங்களை எடுத்துக் கொண்டால் கோடிக் கணக்கில் இருக்கின்றன. ஆனால் இங்கே சொன்ன கோரிக்கைகளைப் பார்த்தால், அவைகளையெல்லாம் நிறைவேற்றிக் கொடுக்க 2—3 கோடி ரூபாய் வேண்டும். ஒவ்வொருவரும் ஃபயர் ஸ்டேஷன் வேண்டுமென்று சொன்னார்கள். என் மான்யம் சம்பந்தப்பட்டதாக இல்லாவிட்டாலும் ஃபயர் ஸ்டேஷன் எல்லாம் வைக்க வேண்டுமென்றால் எத்தனையோ கோடி ரூபாய் வேண்டும். அக்ரிகல்ச்சுரல் இன்கம்டாக்ஸ் என்று இன்கம் மீது போடும் வரியை, மற்ற வருமானத்தவர் கொடுக்கிறார்களே அதேபோலக் கொடுக்க என்ன கஷ்டம் இருக்கிறது என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. நில உச்சவரம்புச் சட்டம் அமலுக்கு வந்த பிறகு இதைப்பற்றி பரிசீலிக்க வேண்டுமென்ற கருத்து இருக்கிறது. பிறகு பரிசீலனை செய்தாலும் இன்றைக்குள்ள நிலையில் இது இருக்கும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

கனம் அங்கத்தினர் ஏ. கே. சுப்பையா அவர்கள் பேசும்போது தஞ்சை ஜில்லாவிலே நிலம் இல்லாத விவசாயிகள், விவசாயம் இல்லாத காலத்தில் படும் கஷ்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். உண்மையிலேயே அந்த ஜில்லாவிலே அறுவடை முடிந்ததிலிருந்து தண்ணீர் வரும் வரையில் விவசாயத் தொழிலாளிகளுக்கு வேலை வாய்ப்பு குறைவாக இருக்கிறது. ஆகையால் தான் நீர்ப்பாசன மான்யக் கோரிக்கை மீது பேசுகிறபோது நான், உணவு உற்பத்தியைப் பெருக்குவது ஒரு புறம் இருக்க, மனித சக்தியை உபயோகப்படுத்தி விவசாயத் துறையில் அதிகமாக வேலைகளைச் செய்ய வேண்டுமென்று வற்புறுத்திக் கூறியது சபைக்கு ஞாபகம் இருக்கும். அந்த முறையில் அவர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்பட விவசாயத்தில் என்ன என்ன செய்யவேண்டுமோ அதை அரசாங்கம் செய்யும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

1962-63, 1963-64-ல் தஞ்சை ஜில்லாவிலே வெள்ளத்தினால் கடலோரப் பகுதியில் அதிகமாகச் சேதம் ஏற்பட்டது. அப்படிச் சேதம் ஏற்பட்ட நிலையில் பல விவசாயிகள், பாதிக்கப்பட்ட குத்தகைதாரர்களை நிலச் சொந்தக்காரர்கள் குத்தகை பாக்கியைக் கொடுக்கவில்லை என்று நிலத்திலிருந்து அப்புறப்படுத்துகிறார்கள் என்ற கருத்தை கனம் அங்கத்தினர் ஜெயராஜ் அவர்கள் சுட்டிக் காட்டிச் சொன்னார்கள். சென்ற தடவை வெள்ளத்தினால் ஏற்பட்ட நிலைமையைப் பார்வையிடும்போது அந்த மாதிரிக் கஷ்டம் இருக்கக்கூடாது என்று தஞ்சை ஜில்லாக் கலெக்டரிடம் நான் கூறி வந்தது ஞாபகத்தில் இருக்கிறது. அதையும் மீறி கஷ்டம் ஏதாவது இருக்கும் பட்சத்தில் கலெக்டர் அவர்களும் மற்ற அதிகாரிகளும் போதிய பாதுகாப்புக் கொடுப்பார்கள் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. வெ. ராமையா] [23rd March 1965

இன்னொரு கருத்து அவர்கள் சொன்னது, அவர்கள் தொகுதியில் பாசனத்தை ஆக்கிரமிப்பு செய்து அதனால் அரசாங்கம் போட்ட உத்திரவைக் கூட மீறி ஆக்கிரமிப்பாளர் விவசாயம் செய்து கொண்டு வருகிறார்கள் என்று சொன்னார்கள். அதையும் அரசாங்கம் கவனிக்கும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

கனம் அங்கத்தினர் வேலப்பன் அவர்கள் அவர்களுக்கு இருக்கக்கூடிய வருத்தத்தை அல்லது கஷ்டத்தைச் சொன்னார்கள். நான் இரண்டு வருஷம் தொடர்ந்து புள்ளிவிவரம் கொடுத்தேன், தக்க பதிலை அமைச்சர் சொல்லவில்லை என்று சொன்னார்கள். அது உடனடியாகச் சேகரம் செய்து சொல்லக்கூடிய புள்ளிவிவரம் அல்ல. ஏனென்றால் இது இரண்டு வருஷப் பிரச்னை அல்ல. கிட்டத்தட்ட 15 வருஷமாக அந்த வட்டாரத்தில் இருக்கக் கூடிய பிரச்னை. அதாவது தண்ணீரை அதிகமாகப் பயன்படுத்தி கீழே இருக்கக் கூடிய பாசனதாரர்களுக்குக் கஷ்டம் ஏற்படக்கூடிய நிலைமை. ஆகையால் பம்ப்செட் வைக்கக்கூடாது என்று தடை செய்து பெனல்ட்டி போட வேண்டுமென்ற பிரச்னை. ஒரு முறை அல்ல, பலமுறை பரிசீலனை செய்து இறுதியாக 2—3 வருஷங்களுக்கு முன் அப்போது இருந்த முதல் அமைச்சரையும் வைத்துக் கொண்டு, நடந்தது எல்லாம் போக இனிமேல் என்ன நடக்க வேண்டுமென்று ஒரு அண்டர்ஸ்டாண்டிங்குக்கு வந்தார்கள். அதையும் மீறி இன்னும் தொடர்ந்து ஆக்கிரமிப்பு நடந்துகொண்டிருக்கிறது. நான் இந்தச் சபையின் மூலமாகச் சொல்லக்கூடியதெல்லாம், முன்பு ஏற்பட்டிருந்த நிலைமை, பிற்பாடு ஏற்பட்ட நிலைமை, எப்படி அவர்களுக்கு விதி விலக்கு கொடுக்க முடியும் என்பதையெல்லாம்
1-30 p.m. தொடர்ந்து அரசாங்கம் பரிசீலனை செய்யும் என்பது ஆகும். கனம் தண்டாயுதபாணி அவர்கள் பேசும்பொழுது, நிலவரி ஒரு முகப்படுத்தப்பட்டு ஒரு விவசாயி வருஷா வருஷம் எவ்வளவு வரி கொடுக்கவேண்டும் என்று ஒரு நிலை திட்டவட்டமாகத் தெரிய வேண்டும் என்ற கருத்தைச் சொன்னார்கள். வருஷத்திற்கு வருஷம் அவர்கள் கொடுக்கக்கூடிய டிமாண்டு நோட்டீஸில் வித்தியாசம் இருக்கிறது என்று சொன்னார்கள். அதில் ஏன் அந்தமாதிரி வித்தியாசம் ஏற்படுகிறது என்பதை இந்த இலாகா பரிசீலனை செய்யும் என்பதை கனம் அங்கத்தினர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அந்த அங்கத்தினர் இன்னொரு கருததையும் சொன்னார்கள். பட்டுக் கோட்டை பகுதியில் நிலவரி வேறாகவும், தணணீர்த் தீர்வை வேறாகவும், இன்னும் மற்ற வரிகள் வேறாகவும் கூட்டிப் போடுகிறார்கள். டெல்டா பகுதியில் இருப்பது போல ஒரேயடியாக அஸெஸ்மெண்டு போடவேண்டும் என்று தெரிவித்தார்கள். கனம் அங்கத்தினர் நிலைமையை நன்றாகத் தெரிந்து கொண்டிருப்பார்கள் என்று நினைக்கிறேன். ஏதோ சட்ட சபையில் சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொன்னார்கள் என்று எண்ணுகிறேன். பட்டுக்கோட்டை பகுதிக்கு காவேரித் தண்ணீர் போகிறது. அங்கே "ரி-செட்டில்மெண்டு" இல்லை. புஞ்சை நிலம் என்று கருதப் பட்டு, தண்ணீர் தீர்வை தனியாக வசூலிக்கப்படுகிறது. அங்கே "ரி-செட்டில்மெண்டு" ஏற்படுமேயானால், நிலத்தின் தரம், விளைச்சலின் தரம் இவைகளின் அடிப்படையில் வரி விதிக்கப்பட்டால், அப்பொழுது நிச்சயம் வித்தியாசம் இருக்கும், இப்பொழுது போடுவதைவிட வரி அதிகமாகப் போய்விடும். கனம் அங்கத்தினர் திரு. ராஜாங்கம் கூட குறிப்பிட்டுச் சொன்னார்கள். "ரி-செட்டில்மெண்டு" வேண்டுமென்று சொன்னார்கள். நான்கூடக் கேட்கிறேன் "ரி-செட்டில்மெண்டு" வேண்டுமென்று. ஏனென்றால் அரசாங்கத்திற்கு அதன் மூலம் லாபம் இருக்கும். வரி கூட இருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை.

MR. DEPUTY SPEAKER : May I know how long will the Hon. Minister take to finish his speech?

THE HON. SRI V. RAMAIAH : Sir, I may take five minutes.

MR. DEPUTY SPEAKER : I think the House has no objection to sit till 1-40 p.m.



23rd March 1965]

கனம் திரு. வெ. ராமையா: சென்ற ஆண்டு இந்தச் சபையில் "லேண்ட் அஸெஸ்மெண்டு பில்"-ஐ பிரேரேபித்துப் பேசும்பொழுது "ரி-செட்டில்மெண்டு" இல்லாததினால் அரசாங்கத்திற்கு வரவேண்டிய அதிக வருமான வரி ஸ்தம்பித்துப் போய் இருக்கிறது என்று சொன்னேன். "ரி-செட்டில்மெண்டு" ஏற்படுத்தினால் விலைவாசியினுடைய அடிப்படையில் நிலத்தினுடைய தரத்தை நாம் நிர்ணயம் செய்தால், அப்படி மதிப்பிடப்படுகிற வரி அதிகமாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. "ரி-செட்டில்மெண்டு" செய்தால், 20 வருஷங்களுக்கு முன்பு விலைவாசி எப்படி இருந்தது, இப்பொழுது விலைவாசி எப்படி இருக்கிறது என்று பார்க்கும்பொழுது, அப்பொழுது இருந்ததை விட இப்பொழுது விலைவாசி உயர்ந்திருப்பதன் காரணத்தினால் நிலவரி நிச்சயம் உயரும். ஆனால், ரி-செட்டில்மெண்டு செய்யவேண்டாம் என்று விட்டதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. அதனால் வரி உயர்ந்து விடுமோ, விவசாயிகளுக்குத் தொந்தரவு ஏற்படுமோ என்பது மட்டும் காரணமல்ல. அவர்களுக்கு இதனால் அதிகச் சிரமம் ஏற்பட்டு இப்பொழுது இருக்கக்கூடிய ஆக்க வேலைகள் தடைபட்டுவிடுமோ, நமது சக்தி வேறு பக்கத்தில் போய் விடக் கூடாது என்பதும் காரணம் தான். அதனால், விவசாயிகளுக்கு நஷ்டம் இல்லை என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி கிருஷ்ணவேணி அம்மாள் அவர்களுடைய தொகுதியைப் பற்றிச் சொன்னார்கள். சென்ற தடவை ஆண்டவனால் கைவிடப்பட்ட ஆண்டிப்பட்டி தொகுதி என்று சொன்னார்கள். அம்மையார் அவர்கள் இந்த மான்யத்தில் பேசி, அவர்களுடைய தொகுதி கைவிடப்படமாட்டாது என்ற உறுதியை வாங்கிக் கொள்வதோடு மட்டுமல்லாமல், கூனூர் கிராமப் பிரச்னையைப் பற்றியும் சொன்னார்கள். அதில் இருக்கக்கூடிய கஷ்டத்தைச் சொன்னார்கள். எனக்கு ஞாபகம் இருக்கிறது, அரசாங்கம் இது விஷயமாக ஒரு முடிவுக்கு வந்திருக்கிறது. அவர்களுக்கு மாற்று இடம் கொடுக்க வேண்டும் என்று முடிவு எடுத்திருக்கிறோம். எங்கேயோ சுகாதார இலாக்கா டைரக்டர், அல்லது மற்ற அதிகாரிகள் வேறு ஒரு கருத்தைச் சொல்லி, அதிலே கொஞ்சம் தாமதம் ஏற்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன். அந்தக் கிராமப் பிரச்னை அவர்கள் விரும்புவதுபோல முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது என்பதை மட்டும் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொண்டு, இருந்தாலும், என்ன கஷ்டம் இருக்கிறது என்பதைத் தொடர்ந்து பரிசீலனை செய்து, அவர்களுக்கு வேண்டிய உதவியைச் செய்ய முடியும் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

கனம் அங்கத்தினர் திரு. பொன்னப்ப நாடார், அவர்கள் பகுதியில் இருக்கக்கூடிய நிலையைப்பற்றிச் சொன்னார்கள். அவர்கள் பகுதியில் பேஸிக் டாக்ஸ் என்ற ஒரு டாக்ஸ் இருக்கிறது, அது எவ்வளவு தூரம் சட்டத்திற்கு உட்பட்டது, எவ்வளவு தூரம் சட்டத்திற்கு விரோதமானது என்ற சர்ச்சைக்கு உள்ளே போகாவிட்டாலும், சொல்ல வேண்டுமென்பதற்காக அந்தக் கருத்தைச் சொல்லிவிட்டு, அதற்கு அடுத்தபடியாக அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய "அக்ரிகல்சரல் இன்கம்டாக்ஸ்" நிலை குறித்துச் சொன்னார்கள். கனம் அங்கத்தினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும் என்று நினைக்கிறேன். ராஜ்யத்தில் மற்ற பகுதிகளில் போடக்கூடிய நிலவரியைப் போல ஒரு வரி அங்கே கிடையாது. நிலவரி அங்கு எப்படி இருக்கிறது என்றால், Basic tax plus agricultural tax is more or less equivalent to Madras Land Tax. அதை அவர்களே ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அங்கு இருக்கக்கூடிய "அக்ரிகல்சரல் இன்கம் டாக்ஸை" ராஜ்யத்தின் மற்ற பகுதிகளில் இருக்கக் கூடிய அக்ரிகல்சரல் இன்கம் டாக்ஸோடு ஒப்பிட்டு பார்ப்பதற்கு நியாயம் இல்லை. திரும்பவும் சொல்லுகிறேன், அந்தப் பகுதியில் Basic tax plus agricultural income-tax is more or less a package tax, so far as land tax is concerned. ராஜ்யத்தில் மற்ற பகுதிகளில் இருக்கக்கூடிய "அக்ரிகல்சரல் டாக்ஸ்" நிலைமையும், திருவாங்கூர்-கொச்சிப் பகுதியில் இருக்கக்கூடிய "அக்ரிகல்சரல் டாக்ஸ்" நிலைமையும் ஒன்றாக இல்லை. நிச்சயம் வித்தியாசம் இருக்கிறது. அங்கே இன்னும் ரையத்வாரி செட்டில்மெண்டு, ரி-செட்டில்

[திரு. வெ. ராமையா] [23rd March 1965

மென்று ஏற்படவில்லை. அங்கே அம்மாதிரி ஏற்பட்ட பிறகு, இங்கு இருக்கக் கூடிய வரிகளெல்லாம் அங்கு அமுலுக்கு வந்த பிற்பாடு, அப்பொழுது பார்த்தால் இங்கே இருக்கக்கூடிய லாண்டு டாக்ஸும், அக்ரிகல்சரல் டாக்ஸும் அங்கேயும் அமுலில் இருக்கும் என்பதில் சந்தேகமே வேண்டாம். இப்பொழுது அது விரைவிலே வரப் போகிறது. ஜமீன் ஒழிப்பு, மற்ற நிலச் சட்டங்களெல்லாம் அமுலுக்கு வந்தவுடன், இதுவும் வந்துவிடும் என்ற ஒரு நிலையை மட்டும் சொல்லிக்கொள்கிறேன்.

திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் இன்னொரு கருத்தையும் சொன்னார்கள். நிலவருவாய்த் துறை அதிகாரிகள் "சிவில் சப்ளைஸ்" வேலைகளில் ஈடுபடக் கூடிய காரணத்தினால், நிலவருவாய்த்துறை வேலைகள் கொஞ்சம் தாமதப்படுகிறது, தேக்கம் ஏற்படுகிறது என்று கூறினார்கள். சட்டசபை அங்கத்தினர்கள் நில வருவாய்த் துறை சம்பந்தமாகப் பேச வேண்டுமென்று விரும்பினாலும், உணவு, "பைர் ஆக்ஸிடெண்ட்ஸ்", மற்றபடி தங்களுடைய மனதில் ஓடுகிற எல்லாக் கருத்துக்களையும் இந்த மான்ய விவாதத்தின்போது எடுத்துச் சொல்வதற்கு பயன்படுத்திக்கொண்டார்கள். ரெவின்யூ இலாகா ஜில்லா ரீதியாக இருக்கும்பொழுது, எதாவது சமுதாயத்தில் ஒரு கஷ்டம் வந்தால், உடனே தன்னுடைய அன்றாட வேலைகளை விட்டுவிட்டு, கலெக்டர்களும் சரி, மற்ற ரெவின்யூ இலாகாவைச் சேர்ந்த அதிகாரிகளும் சரி மக்களுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய கஷ்டங்களை நிவர்த்தி செய்வதற்கு அதி தீவிரமாக முயற்சி எடுத்துக் கொள்கிறார்கள். எங்கேயாவது தீவிபத்து ஏற்பட்டுவிட்டால், தீயணைப்புப் படை அங்கு போனாலும், போகாவிட்டாலும், ரெவின்யூ டிவிஷனல் ஆபீஸர் அந்த இடத்தில் இருப்பார், அப்படி இருக்க வேண்டியது அவருடைய கடமையாகும். எங்கேயாவது புயல் அடித்துவிட்டால், எந்தவிதமான கஷ்டத்தையும் பொருட்படுத்தாமல், லாபமா, நஷ்டமா என்று பார்க்காமல் உடனே அந்த இடத்திற்கு ரெவின்யூ டிவிஷனல் ஆபீஸர் அல்லது தாசில்தார் வேறு யாரும் போய்ச் சேருவதற்கு முன்னால் போய்ச் சேருகிறார்கள். தனுஷ்கோடியில் புயல் ஏற்பட்டபொழுது, ராமனாதபுரம் மாவட்டம் ரெவின்யூ டிவிஷனல் ஆபீஸர் கால்நடையாகவே பல மைல்கள் நடந்து தனுஷ்கோடிக்குப் போய் சேர்ந்த முதல் அதிகாரி என்ற முறையில் போய்ச் சேர்ந்தார் என்றால், அது அவர்களுடைய கடமை உணர்ச்சியையும், இந்த இலாகாவினுடைய பொறுப்பையும் எடுத்துக்காட்டுகிறது. அதுபோல் சமுதாயத்தில் ஒரு குழப்பம் வரும்பொழுது அன்றாட வேலைகளை ஒதுக்கி வைத்துவிட்டு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்கிறார்கள். சமீபத்தில் உணவுப் பிரச்னை ஏற்பட்ட காலத்தில் ரெவின்யூ இலாகாவைச் சேர்ந்தவர்கள் அத்தனை பேர்களும் எவ்வளவு வேகமாக நடவடிக்கை எடுத்துக் கொண்டார்கள் என்பதை இந்தச் சபை நிச்சயம் மறந்திருக்காது. சமீபத்தில் ஏற்பட்ட கலவரங்களின்போதும், ரெவின்யூ இலாகா அதிகாரிகள் எவ்வளவு தூரம் பொறுப்புடன் நடந்து கொண்டார்கள் என்பது எல்லோருக்கும் நன்கு தெரியும். தனுஷ்கோடியில் புயல் ஏற்பட்டபொழுது, அப்பொழுது காரியதரிசியாக இருந்த திரு. கார்த்திகேயன் அவர்கள் அங்கே நேரில் சென்று 10 தினங்கள் தங்கி நிவாரண வேலைகளை நேரிடையாகக் கவனித்தார்கள் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. குறிப்பாக இந்த இலாகாவினர் சமுதாயத்தில் முன்னேற்றம் காணுவதற்கு கடமையையும் பொறுப்பையும் ஏற்று, வேறு வேலைகளில் ஈடுபடுவதில் நஷ்டம் ஏற்பட்டால் கூட, அதையும் தாங்கிக் கொண்டு, அவர்களுடைய வேலைகளையும் கவனித்துக் கொள்கிறார்கள் என்பது குறித்து என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு வந்திருக்கக்கூடிய மான்யக் கோரிக்கைகளெல்லாம் லட்சக் கணக்கில் தான் இருக்கிறது. அதற்கு முன்னாலெல்லாம் கோடிக்கணக்கான ரூபாய்களுக்கு மான்யம் கோரப்பட்டது. நேற்று கூட ரூ. 40 கோடி, 50 கோடிக்கு மான்யம் கோரப்பட்டது. இந்த இலாகாவுக்குத் தான் லட்சக்கணக்கில் மான்யம் கோரப்படுகிறது. இவ்வளவு நல்ல தொண்டு செய்யக்கூடிய இந்த இலாகாவுக்கு ரூ. 100 குறைத்துக் கொடுக்காதிருக்கும்படி எதிர்க்கட்சித் தலைவர் அவர்களையும், மற்றவர்களையும் கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.



23rd March 1965]

MR. DEPUTY SPEAKER: The question is—

"That the allotment of Rs. 98,94,300 under Demand No. I—Land Revenue Departmena be reduced by Rs. 100."

The cut motion was put and lost.

MR. DEPUTY SPEAKER: The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 98,94,300 under Demand No. I—Land Revenue Department."

The Demand was put and carried and the Grant was made.

MR. DEPUTY SPEAKER: The question is—

"That the allotment of Rs. 35,24,900 under Demand No. IV—Stamps Administration be reduced by Rs. 100."

The cut motion was put and lost.

MR. DEPUTY SPEAKER: The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 35,24,900 under Demand No. IV—Stamps Administration."

The Demand was put and carried and the Grant was made.

MR. DEPUTY SPEAKER: The question is—

"That the allotment of Rs. 6,14,200 under Demand No. XXXI—Famine Relief be reduced by Rs. 100."

The cut motion was put and lost.

MR. DEPUTY SPEAKER: The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 6,14,200 under Demand No. XXXI—Famine Relief."

The Demand was put and carried and the Grant was made.

MR. DEPUTY SPEAKER: The question is—

"That the allotment of Rs. 5,00,000 under Demand No. XXXVII—Compensation to Zamindars be reduced by Rs. 100."

The cut motion was put and lost.

MR. DEPUTY SPEAKER: The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 5,00,000 under Demand No. XXXVII—Compensation to Zamindars."

The Demand was put and carried and the Grant was made.

MR. DEPUTY SPEAKER. The House will now adjourn and meet again at 8-30 a.m. to-morrow. 1-4 p.m.

The House then adjourned.

## V—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A. Statutory Rules and Orders.

*Nil.*

### B. Reports, Notifications and other papers.

* 78. *Speech by Hon. Minister for Home on Demands XVI—Agriculture and XXXIX—Capital Outlay on Agriculture (Tamil).*

* 79. *Policy Note on Demand XVIII—Animal Husbandry (Tamil).*

* 80. *Policy Note on Demand XLVII—Capital Outlay on Schemes of Government Trading—Madras Dairy and Milk Project (Tamil).*

* 81. *Policy Note on Demand XXXVII—Compensation to Zamindars (Tamil).*

† 82. *Policy Note on Demand I—Land Revenue (Tamil).*

† 83. *Speech by Hon. Minister for Food on Demand I—Land Revenue (Tamil).*

† 84. *Policy Note on Demand XXXI—Famine Relief (Tamil).*

† 85. *Policy Note on Demand IV—Stamps Administration (Tamil).*

† 86. *Speech by Hon. Minister for Food on Demand IV—Stamps Administration (Tamil).*

64902

V211,31 N65

N65.28.6

* Circulated to Members on 20th March 1965.

† Circulated to Members on 22nd March 1965.